# அமைதிக்கால நாட்டிடைச் சட்டம்

இர. வை. த[illegible]

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—550

# அமைதிக்கால நாட்டிடைச் சட்டம்

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்
**இர. வை. தனபாலன்,** *எம்.எல்.,*
*இளநிலைப் பேராசிரியர்,*
*சட்டக் கல்லூரி, சென்னை.*

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1973

T.N.T.B.S. (C.P.) No. 550

© Tamil Nadu Text Book Society

# INTERNATIONAL LAW IN PEACE TIME

R. V. DHANAPALAN

*Price Rs. 5-10*

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

*Printed by*

**REX Printers,**
**Madras-4.**

# அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி. ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணி புரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான '**அமைதிக்கால நாட்டிடைச் சட்டம்**' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **550** ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **585** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

# முன்னுரை

1. சட்டக் கல்லூரியில் நாட்டிடைச் சட்டம் பயிலும் மாண வர்க்குப் பயன்படும் வண்ணம், சென்னைப் பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்தையொட்டி, நாட்டிடைச் சட்டம் என்னும் இத் தமிழ் நூலை எழுதியுள்ளேன். எனினும் நாட்டிடைச் சட்டத் தைப் பற்றி அறிய விழையும் மற்றப் பொதுமக்களுக்கும் இந் நூல் பயன்படும் என்று நம்புகின்றேன்.

2. இந் நூலில் நாட்டிடைச் சட்டத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றியும், அதற்கும் தனி மனிதனுக்கும் உள்ள தொடர்பு பற்றியும், அதன் இயல்பு பற்றிய பல்வேறு கொள்கை களையும், நாட்டிடைச் சட்டத்திற்கும் உள்நாட்டுச் சட்டத் திற்கும் உள்ள வேறுபாடு பற்றியும், தூதியல், நாட்டிடை அமைப்புகள் போன்ற பல்வேறு கூறுகளைப் பற்றியும் என்னுடைய திறமைக்குட்பட்டு எளிய நடையில் விளக்கி யுள்ளேன். குறிப்பாகத் தற்போது நாட்டிடைச் சட்டத்தில் முக்கியத்துவம் பெற்று வரும் தன்முடிவுரிமை (Self determination) பற்றியும் ஒரு பகுதி இணைத்துள்ளேன். தமிழகச் சட்டத் துறையின் ஆட்சி மொழி ஆணைக் குழுவினர் வெளியிட் டுள்ள சட்டச் சொல் அகராதியில் கூறியுள்ள தமிழ்ச் சட்டச் சொற்களை இந் நூலில் பயன்படுத்தியுள்ளேன். தேவையான இடங்களில் புதிய சட்டச் சொற்களை நானே தமிழில் மொழி யாக்கம் செய்து கையாண்டுள்ளேன்.

'வினையே ஆடவர்க் குயிரே' என்றும், 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்றும் கூறி அதைச் செயலிலும் நிலை நாட்டிய பண்டைத் தமிழ் மக்கள் ரோம், கிரீசு முதலிய ஐரோப்பிய நாடுகளுடனும், மலேயா, சீனு, பர்மா, தாய்லந்து முதலிய ஆசிய நாடுகளுடனும் வாணிப உறவு கொண்டிருந்தனர் என்றும், இந்தியாவில் இமயம் வரை வடபுலத்தில் அமைந்த நாடுகள் பலவற்றையும் இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றையும் போரில் வென்றனர் என்றும் வரலாறு நமக்கு உணர்த்துகிறது. எனவே, இந் நாடுகளோடு தகுந்த வாணிப அரசியல் உறவுகளை நெறிப்படுத்த ஏற்ற

நாட்டிடைச் சட்டத்தைத் தமிழ் மொழி கொண்டிருந்தது. எனினும் காலப் போக்கில் பல காரணங்களால்—குறிப்பாக வரலாற்றுக் காரணங்களால் இந் நிலை மாறியது. ஆகவே நாட்டிடைச் சட்டம் தமிழ்நாட்டிற்குப் புதியதன்று. தவிர இந்திய மொழிகளிலேயே சொல் வளமும், பொருள் வளமும், தொன்மையும் மிக்க தமிழ் மொழியால் நுண்ணிய நாட்டிடைச் சட்டக் கருத்துகளைத் திண்ணிய முறையில் கூற இயலும் என்பதற்கு என் இம் முயற்சியும் ஓர் சான்றாக அமையும் என நம்புகிறேன்.

**இர. வை. தனபாலன்**

## பொருளடக்கம்

### பகுதி I


பக்கம்

1. நாட்டிடைச் சட்டம் சட்டம் ஆகுமா? .... 1
2 நாட்டிடைச் சட்டத்தின் அடித்தளம் .. 6
3. நாட்டிடைச் சட்டத்தின் மூலங்கள் .... 9
4. நாட்டிடைச் சட்டத்திற்கும் நாடுகளின் உள்நாட்டுச் சட்டத்திற்கும் உள்ள தொடர்புகளும் வேறுபாடுகளும் .... 17
5. நாட்டிடைச் சட்டம்—தொகுத்தல் .... 27


### பகுதி II—பிரிவு (i)


6. நாடுகளை அங்கீகரித்தல் .... 32
7. உலக நபர்களிடையே வாரிசுரிமை .... 43
8. நாடுகளின் வகைகள் .... 46
9. நடுநிலையாக்கப்பட்ட நாடுகள் ... 53
10. புனித நாடு .... 56


### பிரிவு (ii)


11. உலக நபரத்துவம் .... 58
12. தற்பேணுதல் .... 64
13. இடையீடு .... 67
14. தன்முடிவுரிமை .... 73


### பிரிவு (iii)


15. நாடு என்ருல் என்ன? .... 78
16. ஆள் நில ஆதிக்கம் .... 83
17. நாட்டுப் பொறுப்பு .... 94

பக்கம்

18. ஆள் நிலம் .... 105
(அ) ஆறுகள்
(ஆ) கால்வாய்கள்
(இ) கடல் இடுக்குகள்
(ஈ) விரிகுடாக்களும் வளைகுடாக்களும்
19. எல்லையோரக் கடல் ... 120
20. கரையொட்டிய கடல் ... 124
21. நாட்டின் கோன்மைக்குரிய மற்றப் பகுதிகள் ... 127
22. வசதியுரிமை ... 130
23. வான் மண்டலமும் கோளுற்றலும் ... 133

## பகுதி III

24. நாட்டிடைச் சட்டத்தில் நாடும் மக்களும் ... 140
25. அயலார் ... 147
26. அடைக்கலம் ... 150
27. மீட்டொப்படைத்தல் ... 153
28 மனித உரிமைகளும் அடிப்படை விடுதலைப்பாடுகளும் ... 162

## பகுதி IV

29. நாடுகள் தங்களிடையே உறவு கொள்வதற்கான உறுப்புகள் ... 166
(1) நாட்டிடைச் சட்டத்தின்கீழ் நாடுகளது ஆட்சித் தலைமையின் நிலை
(2) தூதியல்
(i) அம்பாசிடர்கள்
(ii) வாணிபத் தூதர்கள்

## பகுதி V

30. உடன்படிக்கைகள் ... 180

## பகுதி VI

31. உலக நாடுகள் மன்றம் ... 195
32. உலக அமைப்புகளும் ஐ. நா. அமைப்பும் ... 202
33. ஐக்கிய நாடுகள் அமைப்பு ... 206
List of Cases Quoted ... 218
Bibliography .... 221
கலைச்சொற்கள் .... 222

## பகுதி I

# 1. நாட்டிடைச் சட்டம், சட்டம் ஆகுமா?

## (Law of Nations vs. Law)

நாடுகளிடையே எழும் உறவுமுறைகளை நெறிப்படுத்தும் வளமை சார்ந்த உடன்படிக்கை வழியான விதிமுறைகளையே நாட்டிடைச் சட்டமென ஒப்பன் ஹெய்ம் கூறுகிறார். இவை சட்டப்படி கட்டுப்படுத்துபவையென நாடுகளால் கருதப்படுகின்றன. அவைகளில் சில பகுதிகள், உதாரணமாக, தூதரகங்களின் உரிமை, உடன்படிக்கைகள்பற்றிய விதிகள், விதிவிலக்கின்றி எல்லா நாடுகளையும் கட்டுப்படுத்துகின்றன. அவை பொதுவான நாட்டிடைச் சட்டம் என்று கூறப்படும். சில நாடுகளிடையே மட்டும் வழங்கும் சில விதிகளைத் தனிமுறை வட்டார நாட்டிடைச் சட்டம் (Regional International Law) எனக் கூறலாம். ஆனால், மிக அதிகமான நாடுகள் பின்பற்றக் கூடிய விதிகளை (Body of Rules) பொது நாட்டிடைச் சட்டம் (General International Law) எனக் கூறலாம். அவைகளுக்கு உதாரணமாக, 1856ஆம் ஆண்டுப் பாரீஸ் நகரத்து அறிவிப்பைக் கூறலாம். அது முழுமையான நாட்டிடைச் சட்டமாகும். நாடுகளின் உறவுமுறைகளைப் பொதுவாக நெறிப்படுத்துவதுதான் நாட்டிடைச் சட்டம். என்றாலும், நாடுகள் தவிர உலக அமைப்புகளும் (International Organisations) ஓரளவு தனிப்பட்டவர்களும்கூட இந் நாட்டிடைச் சட்டத்தின்படி சில கடமைகளும் உரிமைகளும் கொண்டவர்களாவார்கள்.

பழங்காலத்திலும், இடைக்காலத்திலும் நாட்டிடைச் சட்டத்தின் பொருள் வேருகக் கருதப்பட்டது. இது கிறித்துவ நாகரிகத்தின் விளைவாகும். இது இடைக்காலத்தின் பிற்பகுதியில் வளரலாயிற்று. ஆனால் 1625ஆம்ஆண்டு 'De Jure Bellie Ac Pacis' என்ற நூலை வெளியிட்ட டச்சு நாட்டு அறிஞர் ஹ்யூகோ

குரோஷியஸ் (Hugo Gurotious) அவர்கள்தாம் நாட்டிடைச் சட்டத்தின் தற்கால வளர்ச்சிக்கு வித்திட்டவராவார்.

நாட்டிடைச் சட்டத்தின் இயல்புபற்றிப் பண்டைக் காலத்திலிருந்தே கருத்து வேறுபாடு நிலவி வந்துள்ளது. நாட்டிடைச் சட்டம் நாட்டைக் கட்டுப்படுத்தும் தன்மை உடையதன்று என்றும், ஒழுக்கநெறிக்குமட்டும் கட்டுப்பட்ட நடப்பு விதி எனவும் சட்ட வல்லுநர் வலியுறுத்தியுள்ளனர். சென்ற நூற்றாண்டில் ஆஸ்டினும் அவரைப் பின்பற்றுவோரும் அதையே அறிவுறுத்தினர். அவர்கள் அரசியல் கோன்மையால் வகுக்கப்பட்டு நிலைநிறுத்தப்படும் மனித வாழ்வு நெறி விதிகளின் தொகுப்பே சட்டம் எனக் கூறினர். எனவே, நாட்டிடைச் சட்டம் சமகோன்மைபெற்ற நாடுகளுக்கிடையே எழும் உறவுமுறைகளை நெறிப்படுத்தும் விதிமுறைகளானபடியால் நாடுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்ற சட்டமாகக் கருதப்படமாட்டாது. ஏனெனில், இக் கோன்மையுடைய நாடுகளுக்கு மேலேயிருந்து மேற்கூறிய விதிகளைச் செயலாக்கக்கூடிய கோன்மையுடைய அரசியல் அதிகாரம் பெற்ற அமைப்பு எதுவுமில்லை. ஆகவே, நாட்டிடைச் சட்டம் நாடுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றதன்று என்று சொல்லப்படுகின்றது. சட்டத்திற்கான ஆஸ்டினின் விளக்கம் சரியானதன்று. அது ஒரு நாட்டிலுள்ள எழுத்து வடிவிலுள்ள அல்லது சட்டமன்றத்தால் இயற்றிய சட்டத்தை மட்டுமே குறிக்கும். அது எழுதப்படாத அல்லது வழக்கத்தால் நிலைபெற்ற சட்டவிதிகளைச் சட்டமாக ஏற்றுக்கொள்வதில்லை. இவ் வுலகில் எழுதப்பட்ட சட்டத்தை மட்டுமேயுடைய ஒரு நாடோ சமுதாய அமைப்போ (Community) கிடையாது. எங்கும் எழுத்துவடிவில் உள்ள சட்டத்துடன் வழக்கத்தால் நிலைபெற்ற சட்டமும் இணைந்திருக்கின்றது. சட்டமென்பது கோன்மை பெற்ற அரசியல் அதிகாரத்தினால் செய்யப்பட்டு நிலைநிறுத்தப்படும் விதிதான் எனக் கூறுவோரும் வழக்கத்தால் நிலைபெற்ற சட்டவிதிகள் இருப்பதை மறுப்பதில்லை. இயற்றிய சட்டத்தைப் (Enacted Laws) போலவே நெடுநாளாக நிலவிவரும் நடைமுறைச் சட்டத்தையும் நீதிமன்றங்கள் ஏற்றுச் செயல்படுவதால் அரசின் மறைமுகமான ஒப்புதலையும் பெற்றுவிட்டன என்று கூறுவோரும் உளர். ஆனால், அது கற்பனையல்லாது வேறொன்றுமில்லை. ஏனெனில், இவ்வாறு அரசின் இசைவைப் பெறுவதற்கு முன் அவை சட்டமாகக் கருதப்படாவிட்டால் அவற்றை ஏற்க நீதிமன்றங்களுக்கும் அதிகாரமில்லை.

ஆகவே, சட்டத்திற்கான சரியான விளக்கம் என்ன வென்றறிய ஒழுக்கநெறியையும் (Moral Rules) சட்டத்தையும் ஒப்பிட வேண்டியது அவசியம். ஒழுக்கநெறி மனிதனின் மனச்சாட்சியில் பிறந்தது. சுதந்திர உணர்வோடு மனச் சாட்சியின்படி நடவாது மற்ற அதிகாரத்தினுல் கட்டுப் படுத்தப்படும் செயல் ஒழுக்கநெறியென்ற அமைப்பின் முன் மதிப்பற்றுப் போய்விடும். ஆனுல், சட்டத்தின் முதன்மையான இயல்பு புறத்தே அமைந்த அதிகாரத்தினுல் நிலைநிறுத்தப் படுவதாகும். ஒழுக்கநெறி விதிகளைப் (Moral Rules) போலவே சட்டவிதிகளும் மனச்சாட்சிக்குப் பொருந்துவதாயின் ஒழுக்கநெறி விதிகளைச் செயலாக்க மனச்சாட்சியாகிய அதிகாரமே போதும். சட்டவிதிகளைச் செயலாக்க புற அதிகாரத்தினுல்தான் முடியும்.

ஆகவே, ஒழுக்கநெறி விதியாவது ஒரு சமூகத்தின் பொது வெளி அங்கீகாரத்தைப் பெருததால் மனச்சாட்சிக்குத்தான் பொருந்தும். ஆனுல், சட்ட விதியானது அதே சமூகம் பொதுவாக ஏற்றுக்கொண்டதன் காரணமாக ஒரு புற அதிகாரத்தினுல் நிலைநிறுத்தப்படுவதாகும். ஒழுக்கநெறி களாலும், சட்டத்தினுலும் ஏற்பட்ட விதிகள் இல்லாமல் எந்தச் சமூகமும் இருந்ததில்லை. எந்தப் பழங்குடியினை ஆராய்ந்து பார்த்தாலும் அதில் அது கடைப்பிடித்தொழுகிய விதிகளிற் சில மனச்சாட்சிக்குப் பொருந்துவதாகவும் மற்றச் சில சமூகத்தின் பொதுவான உடன்பாட்டால் நிலைநிறுத்தப்படுவதாகவும் அமைந்துள்ளன. முந்தியவை ஒழுக்கநெறிகளென்றும், பிந்தியவை சட்டமென்றும் கூறப்படும். சமூகத்தில் சட்டத்தைப் பற்றி ஏதாவது கேள்வி எழுமாயின் நீதிமன்றமில்லாமல் அச் சமூகமே அதை விசாரிக்கும். காலப்போக்கில் அத் தொன்மை வாய்ந்த குடியினர் நாடாக மாறுகின்றனர். அப்போது வாழ்க்கையின் தேவைகளுக்கும், மாறிவரும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப அக் குடியே சட்டங்கள் அனைத்தையும் தோற்றுவிக்க முடிவதில்லை. ஆகையால்தான் ஒவ்வொரு நாட்டிலும் சட்டங் களை இயற்றுவதற்குச் சட்டமன்றங்களும், அதை நிர்வகிக்க நீதி மன்றங்களும் தோன்றலாயின. சட்டங்களை ஆக்கும் அதிகா ரத்தைச் சட்டமன்றங்கள் சமூகத்தின் பொது உடன்பாட்டால் தான் பெற்றன என்று கொள்வதே பொருத்தமாகும். இங் கிலாந்து நாட்டில் நாடாளுமன்றம் இயற்றிய சட்டம் சட்டமாகக் கருதப்படுவதற்கான காரணம் சமூகத்தின் பொது உடன் பாடேயாகும். அந்த நாடாளுமன்றம் சட்டத்தை இயற்றும் அதிகாரம் எழுதாததும், நெடுநாளாக நிலவி நிலைத்துவிட்ட விதியினடிப்படையில் எழுந்ததாகும்.

ஆகவே, சட்டம் சமூகத்தின் ஒப்புதலுடன் புற அதிகாரத்தால் நிலைநிறுத்தப்படுவதாகும். சமூகத்தினிடையே மனித நடவடிக்கைகளுக்கான விதிகளின் தொகுப்பே சட்டம் எனக் கூறலாம். சட்டம் அமைவதற்குத் தேவையானவை மூன்று: முதலில் மக்கள் சமுதாயம் ஒன்றிருக்க வேண்டும். இரண்டாவதாக, அந்தக் குடியினரின் மனித ஒழுகலாறுகளுக்கான விதிகள் இருக்க வேண்டும். மூன்றாவதாக, அச் சமூகத்தின் பொது அனுமதியோடு புற அதிகாரத்தால் அவ் விதிகள் நிலை நிறுத்தப்படவேண்டும்.

இப்பொழுது நாட்டிடைச் சட்டம் சட்டம்தானா? என ஆராய்வோம். முதலில் மக்கள் சமுதாயம் ஒன்றிருக்க வேண்டும். அப்படியானால் எல்லா நாடுகளிலும் பரவியுள்ள அனைத்துலக சமூகம் என்று ஒன்று இருக்கிறதா என்று பார்ப்போம். நாகரிகமடைந்த நாடுகளைப் பொறுத்தமட்டில் உண்டு என்றே கூறப்பட வேண்டும். அறிவியலும் கலையும் எல்லா நாடுகளிலும் பரவியுள்ளபடியால் பல நாட்டு மக்களிடையே கருத்து மாற்றங்கள் தோன்றியுள்ளன. அவைகளை வேளாண்மை, தொழில், வாணிகம் முதலியவற்றில் காணலாம். நாடுகளுக்கிடையேயான வாணிகம்தான் கடல்களுக்கிடையேயும் ஆறுகளுக்கிடையேயும் கப்பற் பயணத்தை வளர்த்தது. நாட்டிடை வாணிகம்தான் கண்டங்களையும் நாடுகளையும் இணைக்கக்கூடிய இருப்புப் பாதைகளைத் தோற்றுவித்தது. அதைப்போலவே நாடுகளுக்கிடையே அஞ்சல் - தந்தி, வானொலித் தந்தி முதலியன தோன்றலாயின.

இவைகளுடன் உலக நாடுகள் மன்றம் (League of Nations), ஐக்கிய நாடுகள் (U.N.), உலகத் தொழிலாளர் நலக்குழு போன்ற பல அமைப்புகளை ஏற்படுத்தியதோடு உலக சமுதாயம் நாட்டிடை நீதிமன்றத்தை ஹேக் நகரில் அமைத்துள்ளது.

ஒவ்வொரு நாடும் கோன்மை பெற்ற நாடாக இருப்பினும் அவைகளுக்கு மேலாக அனைத்துலக மேலாண்மை நாடு என்று சொல்லக்கூடிய ஒன்று இல்லாவிட்டாலும் அவைகளுக்கிடையே சக்திவாய்ந்த ஒன்றிய நிலை ஒன்று—அதாவது அவைகளின் பொதுநலம்—இருக்கின்றது. ஆகவே, முதல்விதி உண்மையில் இருக்கிறது. இரண்டாவது விதி யாராலும் மறுக்க முடியாதது. பல ஆண்டுகளாக நாடுகளுக்கிடையேயான விதிகள் பல வளரலாயின. அவைகள் வழக்கத்தால் நிலை பெற்ற நடைமுறை விதிகளாகும். பிறகு 1856ஆம் ஆண்டுப்

பாரிஸ் நகரத்து அறிவிப்பு, 1899—1907 ஆண்டுகளில் தரைச் சண்டைபற்றிய தி ஹேக் ஏற்புவிதிகள் என்பனபோலப் பல தோன்றலாயின. அதே போல, மூன்றுவது விதியும் நிறை வேற்றப்பட்டுள்ளது. நாடுகளாலான சமூகத்தின் அனுமதி யோடு புற அதிகாரத்தால் நிலைநிறுத்தக் கூடிய நிலையில் அந்த விதிகள் உள்ளன. முன்னேற்றமடைந்த மக்களின் ஒருமித்த கருத்துப்படி நாட்டிடைச் சட்டம் புற அதி காரத்தால் செயலாக்கப்படவேண்டும் என்பதாகும். அதற்கு வேண்டிய பொது அதிகார அமைப்பு இல்லாத காலத்தில் நாடுகள் சட்டத்தைத் தாங்களாகவே ஏற்றுக்கொண்டு செய லாக்க வேண்டும். தொல்லையுற்ற நாட்டிற்கு மற்ற நாடுகள் தாங்களாகவே உதவிப்பணி புரிதல் போன்றவை மூலமாக நாட்டிடைச் சட்டம் செயலாக்கப்படுகின்றது. நாடுகளின் இன்றியமையாத உரிமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டால், போரே இறுதியான ஆயுதமாகும் என்ற கருத்து வழங்கி வருகின்றது. மேலும், நாட்டிடைக் கூட்டமைப்பு ஆகிய ஐ. நா. அமைப்பின் ஏற்புவிதிகள் தம்முடைய முக்கிய கடமைகளாகிய பணிகளுக்கு ஏற்படும் எதிர்ப்புகளை முறியடிப்பதற்கான ஓர் அமைப்பை ஏற்படுத்திச் சட்டவிதிகளை நிலைநிறுத்துவதை வழக்காற்று விதி யாக, அங்கீகரிக்கப்பட்ட கொள்கையாக வைத்துள்ளது. நாட்டிடைச் சட்டத்தை நிலைநிறுத்தப் பல நாடுகளின் அரசிற்குமேல் மேலாண்மைகொண்ட மைய அரசு இல்லாத காரணத்தால் நாட்டிடைச் சட்டம் வலிவில்லாததாக இருப் பினும், வலிவில்லாத சட்டமும் சட்டந்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நடைமுறையில் நாட்டிடைச் சட்டம் சட்டமாகவே கருதப் படுகின்றது. பல்வேறு நாடுகளின் அரசுகள் சட்டபூர்வமாக வும் அறநெறியின்படியும் நாட்டிடைச் சட்டத்தால் கட்டுப் பட்டவையாகக் கருதுகின்றன. பல்வேறு நாடுகள் தங்களுக் கிடையே ஏற்படுத்திக் கொள்கின்ற ஒப்பந்தங்கள் நாட்டி டிடைச் சட்டத்திற்கு நாடுகள் கட்டுப்பட்டவையே என்பதை வலியுறுத்துகின்றன.

# 2. நாட்டிடைச் சட்டத்தின் அடித்தளம்

## (Basis of International Law)

ஒரு சமுதாயத்தினர் பொதுவான உடன்பாட்டோடு புற அதிகாரத்தினுல் நிலைநாட்டப்படும் ஒழுக்கலாற்று விதிகளின் தொகுப்பே சட்டம் எனக் கண்டோம். அப்படியானுல் அங்குள்ள 'பொதுவான உடன்பாடு' (Common Consent) என்ருல் என்ன?

சமூகத்திலுள்ள தனிப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் அச் சட்டத்தின் எல்லா இயல்புகளையும் ஏற்கிருர்கள் என்ருல் அப்படிப்பட்ட பொது அனுமதியை உணர்த்திக்காட்ட முடியாது. சமுதாயத்தில் மக்கள் பிறந்து சமுதாயத்தோடு இணைந்து வாழ்ந்து மடிகின்ற வர்கள். அதனுல் சமுதாயத்தின் உறுப்பினர்கள் தொகை கூடினுலும் குறைந்தாலும் சமுதாயம் மாருமல் நிலைத்து இருக்கின்றது. பெரும்பான்மையினரின் இசைவைப் 'பொது உடன்பாடு' எனக் கொள்ளலாம். சிறுபான்மை மக்கள் பொது உடன்பாட்டை மீறினுல் அதைக் கருத்தில் கொள்ள வேண்டுவதில்லை. எழுதப்பட்டதும், எழுதப்படாததுமான எல்லாச் சட்டங்களுக்கும் பின்னணியில் வழக்கமும்,பொது உடன்பாடும் இருக்கின்றன.

நாட்டிடைச் சட்டத்தின் வழக்க விதிகள் எல்லா நாடுகளின் பொது உடன்பாட்டின் அடிப்படையில் வளர்ந்தன. முதலில் வழக்காறுகள் (Usages) எனத் தோன்றிக் காலப் போக்கில் வழக்கு விதிகளாக மாறின என்பதைக் காண்போம். பல நாடுகளுக்கிடையே ஏற்படும் தொடர்புகள் சில நாட்டிடை நடப்புகளுக்கான (Conduct) விதிகளைத் தோற்றுவித்தன. ஒவ்வொரு வழக்காறும் காலப்போக்கில் வளர்ச்சி

பெற்றதாகும். அவற்றைக் காலப்போக்கில் அனைத்து நாடு களும் பின்பற்றத் தொடங்கின. இடைக்காலத்தின் இறுதி முதல் நாட்டிடை உறவுகளுக்குச் சில விதிமுறைகளின் தேவையை நாடுகள் உணரத் தொடங்கின. இயற்கைச் சட்டம் பற்றி எழுதுவோர் (Writers on Law of Nature) மத, ஒழுக்க நெறி, பகுத்தறிவு மற்றும் வரலாறு ஆகியவற்றின் அடிப்படை யில் சில விதிகளை அமைத்தனர். ஆனால், 1625ஆம் ஆண்டு ஹ்ஹ்யூகோ குரோஷியஸ் எழுதிய நூலே(De Jure Bellie Ac Pacis) ஹ்யூ நாட்டிடைச் சட்டத்தின் பிற்கால வளர்ச்சிக்கு முறை யான அடித்தளமாகியது என்று கூறினால் மிகையாகாது. 19ஆம் நூற்றாண்டில் வழக்கமும் வழக்காறுகளும் போது மானவையல்ல, எனக் கருதப்பட்டதால், எதிர்காலத்தில் நாட்டிடை நடவடிக்கைகளுக்குப் புதிய விதிகள் தோன்ற லாயின. இக் காரணங்களால் பல நாட்டு ஏற்புவிதிகளும் (Conventoins), வழக்கத்தால் நிலைபெற்ற விதிகளும் (Customary Laws) பரவலாக வளர்ச்சிபெற்றன.

புதிய நாடுகள் தோன்றி நாடுகளின் கூட்டுக் குடும்பத்தில் இணைந்தபோது அக் காலத்தில் இருந்த நாட்டிடை நடப்பு களுக்கான விதிமுறைகளை ஒப்புக்கொண்டதாகக் கருதப்படும். இந்த விதிகள்தாம் கட்டுப்படுத்தும், இந்த விதிகள் கட்டுப் படுத்தா என எந்த நாடும் வாதிட முடியாது. ஒவ்வொரு புதிய நாடும் உலக அரங்கில் மலரும்போது இருந்த எல்லா விதி களுக்கும் அந் நாடு கட்டுப்பட்டதாகும். இச் சட்ட விதிகளின் தொகுப்பை அனைத்து நாடுகளின் பொது அனுமதியின் அடிப் படையில்தான் மாற்றலாமே யொழியத் தனிப்பட்ட சில நாடு களால் தன்னிச்சையாக மாற்ற இயலாது.

நாடுகளின் பொது அனுமதியின்பேரில் உருவாவதுதான் நாட்டிடைச் சட்டம் என்கின்ற பொழுது அச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்ட பொருள்களும் நாடுகளேயாகும். அதாவது நாட்டிடைச் சட்டம் பல நாட்டுக் குடிமக்களைப்பற்றியதன்று. ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு நாடும் தரவேண்டிய உரிமைகள் நாட்டிடைச் சட்டத்தின்கீழ்த் தரப்படுவதல்ல. அவை உள் நாட்டுச் சட்டத்தின்கீழ்தான் அளிக்கப்படுகின்றன. கடமை களும் அதுபோன்றே உள்நாட்டுச் சட்டத்தின்கீழ்தான் ஏற் படுகின்றன. எனவே, நாடுகள்தாம் நாட்டிடைச் சட்டத்தின் உட்பொருள்களாகும். நாடுகள்தாம் நாட்டிடைச் சட்டத்தின் பொருள்கள் எனும்போது அதன் வரையறைகளை நாம் அறிய வேண்டுவது அவசியமாகிறது. நாடுகள்தாம் நாட்டிடைச்

சட்டத்தை உண்டாக்கின. அச் சட்டமும் நாடுகளின் உரிமைகள், கடமைகள் ஆகியவற்றைப் பற்றியதுதான்; அந் நாடுகளின் குடிகளது உரிமைகளைப் பற்றியதோ கடமைகளைப் பற்றியதோ அன்று. நாடுகளின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதுதான் நாட்டிடைச் சட்டம் என்றால், நாட்டின் அங்கமாக இருக்கும் மக்களது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் உள்நாட்டுச் சட்டமாகும் (Municipal Laws). கடற் கொள்ளையர்களை உள்நாட்டுச் சட்டங்கள் உட்படுத்தா. இதுபோன்ற செயல்கள் நாட்டிடைச் சட்டத்தின் கீழ் வரும்; போரில் ஈடுபட்டிருக்கும் சமூகங்களின் உரிமைகளும் கடமைகளும் இச் சட்டத்தின்கீழ் வரும். டான்சிக் (Danzic) **நீதிமன்றங்களின் அதிகார வரம்புபற்றிய ஆலோசனைக் கருத்தில்** (Advisory Opinion) கூறியுள்ளது போல, ஒப்பந்தங்களின்மூலம் நாடுகள் தனிப்பட்டவர்களுக்கு உரிமைகளையும் கடமைகளையும் நேரடியாகத் தரலாம். நெடுநாள்களாகவே வழக்கமாக நிலைபெற்ற நாட்டிடைச் சட்டத்தின் வழக்கு விதிகள் போர்க்காலத்தில் இரு பிரிவிலும் உள்ள வீரர்கள் போர்பற்றிய விதிகளுக்கு உட்பட்டவர்கள் எனவும், மீறினால் தண்டிக்கப்படுவார்கள் எனவும் கூறுகின்றன. சில நாடுகள் தங்களுடைய அமைப்புகளில் சர்வதேசச் சட்டத்தை நாட்டுச் சட்டங்களில் ஒன்றாக வைத்துள்ளன. சில நேரங்களில் உள்நாட்டுத் தீர்ப்பாயங்கள் (Courts), நாட்டிடை அமைப்புகள், ஒன்றியங்கள் போன்றவைகளை நாட்டிடை நபர்களாக அங்கீகரிக்கின்றன. **ஐ.நா-வில் பணியாற்றும்போது துன்புற்றதற்கு இழப்பீடு கோரும் வழக்கில்** (Advisory Opinion in the Case concerning reparations for injuries suffered in the Service of the United Nations) நாடுகள்மட்டுமே நாட்டிடைச் சட்டத்தின் பொருள்கள் என்ற வாதத்தை உலக நீதிமன்றம் ஏற்கவில்லை. மேலும், தனது தீர்ப்பில் எக்காரணங்களுக்காக ஐ. நா. உண்டாக்கப்பட்டதோ அவைகளை நிறைவேற்றுவதற்கு ஐ.நா. நாட்டிடை நபரத்துவம் பெற்றிருப்பது இன்றியமையாதது என்றும் கூறியுள்ளது. அதைப் போலவே உலக அஞ்சல் ஒன்றியம் (Universal Postal Union), உலக உடல்நல அமைப்புப் போன்றவைகளும் நாட்டிடை நபரத்துவம் பெற்றுத் தாமே நாட்டிடைச் சட்டத்தின்கீழ்ச் செயல்படுபவையாகும்.

கோன்மை பெற்ற நாடுகள் என்ற முறையில் நாடுகளின் பொது அனுமதியின்பேரில் நாட்டிடைச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளதால், நாட்டிடைச் சமூகத்திலுள்ள ஓவ்வொரு நாடும் சமத்துவ நாடாகத்தான் கருதப்படும்.

# 3. நாட்டிடைச் சட்டத்தின் மூலங்கள்

## (Sources of International Law)

ஓர் உள்நாட்டுச் சட்டத்தைப்பற்றி ஏதேனும் ஐயம் எழுமேயானால், இயற்றப்பட்ட சம்பந்தப்பட்ட உள்நாட்டுச் சட்டத்தைப் புரட்டிப் பார்த்துத் தெளிவு பெறலாம். ஆனால், நாட்டிடைச் சட்டத்தை ஒட்டி ஐயமெழுமேயானால் அந்த ஐயத்தைப் போக்கிக்கொள்ளும் பொருட்டு, தெளிவு விளக்கம் பெற உடனடியாகவும், நேரடியாகவும் தகவல் தரக்கூடிய இயற்றப்பட்ட சட்டங்கள் எதுவுமில்லை. நாட்டிடைச் சட்டம் வளரக் காரணமாக அமைந்த மூலங்களை ஆய்ந்து பார்ப்பதன் வாயிலாகவோ, நாடுகளிடையே வழங்கிவரும் நடைமுறை வழக்கத்தை ஆய்வதன் மூலமாகவோதான் அந்த ஐயப்பாடுகளைப் போக்கிக்கொள்ள இயலும். சில வேளைகளில் எழும் கேள்விகளுக்கு மேற்கூறிய இரண்டு வகையாலுமே தெளிவு பெறுவது இயலாமல் போவதுண்டு. அங்கெல்லாம் கருத்து வேற்றுமைகளும் சிக்கல்களும் எழுவதுண்டு.

மேற்கூறிய நாட்டிடைச் சட்டத்தில் உள்ள குறையைப் போக்கும் பொருட்டு அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு சட்டத்தொகுப்பைத் தோற்றுவிக்கும் முயற்சி பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நாடுகளாலும், பல்வேறு உலக அமைப்புகளாலும் மேற்கொள்ளப்பட்டு, அம் முயற்சியில் ஆங்காங்கே ஒருசில தலைப்புகளில் மட்டுமே வெற்றியுடன் தொகுக்க முடிந்தது. எனவே, நாட்டிடைச் சட்டத்தை முழுவதுமாகத் தொகுக்கும் முயற்சி இன்னும் முற்றிலும் வெற்றி பெறவில்லை. அனைத்து உலக நாடுகளையும் கட்டுப்படுத்தும் வகையில் சட்டம் இயற்றும் தனி மேலாண்மைத் தன்மையும், கோன்மையும் கொண்டு உலக நாடுகளை உள்ளடக்கிய மைய மேல் அரசு (Central World Government) எதுவும் தோன்று

வதாகவும் தெரியவில்லை. ஆக, இக் காரணங்களால் இன்னும் நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களின் வாயிலாகவே அதை யொட்டி யெழும் ஐயங்களுக்குத் தெளிவு காணவேண்டிய நிலை யில் இருக்கின்றோம்.

நீண்ட நெடுங்காலமாக எவற்றையெல்லாம் சட்ட மூலங் களாகக் கருதலாம் என்கின்ற அடிப்படைக் கருத்திலேயே வேறு பாடு நிலவிவந்தது. ஆனால், இன்று பொதுவாக ஐந்து வகை களை, நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களாக ஏற்கலாம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன :

1. வழக்கம் (Custom)
2. உடன்படிக்கைகள் (Treaties).
3. நீதிமன்றங்கள் அல்லது இசைவுத் தீர்ப்பாயங் களின் தீர்ப்புகள் (Decision of Judicial or Arbitral Tribunals)
4. சட்டவல்லுநர்களின் ஆராய்ச்சிக் கருத்துகள். (Juristic Works)
5. அனைத்து உலக அமைப்புகள் அல்லது அங்கங்களின் தீர்மானங்கள் அல்லது உறுதிக்கருத்துகள் (Decisions or Determinations of the Organs of International Institutions).

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த மூலங்கள் உலக நீதிமன்றத்தைத் தோற்றுவித்துள்ள அமைப்புச் சட்டத்திலும் (Statute of International Court of Justice) பிரிவு 38 முதல் பாராவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதில் கூறுவதாவது உலக நீதிமன்றம் தன்முன் வரும் வழக்குகளைக் கீழ்க்கண்ட சட்ட மூலங்களில் காணப்படும் நாட்டிடைச் சட்ட விதிகளின் அடிப்படையிலே நிர்ணயிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

1. உலக அரங்கில் நாடுகள் செய்துகொள்ளும் உடன் படிக்கைகள் (இவைகள் உலக நாடுகளின் மாநாட்டு ஏற்பு விதிகளையும் உள்ளடக்கியதாகும்— (International Treaties).

2. நாடுகளுக்கிடையே சட்டத்தின் தன்மையைப் பெற்று விட்டதற்குச் சான்றாகச் சொல்லக் கூடிய உலக வழக்கங்கள் (International Custom as evidence of a General Practice accepted as Law).

3. நாகரிகமடைந்த அரசியல் அமைப்புடன் விளங்கும் நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ள பொதுவான சட்டநெறிக் கொள்கைகள் (The General Principles of Law recognised by Civilized Nations).

4. பல்வேறு நாட்டின் சட்டத்தில் தேர்ச்சிபெற்ற பெரும் அறிஞர்கள் ஆய்வுரைக் கருத்து விளக்கங்களையும் நீதிமன்றத் தீர்ப்புகளையும் மேற்கூறிய மூலங்களுக்குத் துணைமூலமாகக் கொண்டு சட்டவிதிகளை நிர்ணயிக்கப் பயன்படுத்தலாம் (Judicial decisions and the teachings of the most highly qualified Publicists of the various countries as subsidiary means for the determination of Rules of Law).

1. **வழக்கம்** (Custom)

நாட்டிடைச் சட்டம் நாடுகளின் பொது ஒப்புதலையே அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. அந்தப் பொது ஒப்புதல் எக்காரணங்களால் நடைமுறைக்கு வந்ததோ அவையெல்லாம் நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களாகும். தனி மனிதனைப் போலவே நாடும் அதன் ஒப்புதலை நேரடியான அறிவிப்பின் மூலமாகவோ, மறைமுகமான நடவடிக்கைகள் மூலமாகவோ தரலாம். ஆகவே, நாட்டிடைச் சட்டத்தின் முதன்மையான மூலங்கள் இரண்டு என முன்னமே கண்டோம். அதாவது நாடுகள் தங்கள் வெளிப்படையான ஒப்புதலைத் (express consent) தெரிவித்து ஏற்படுத்திக்கொள்ளும் உடன்படிக்கைகள் மற்றும் உட்கிடையான ஒப்புதலைத் (implied consent) தெரிவித்துக்கொள்ளும் வகையில், சட்ட விதியைப் போன்றே நாடுகள் வழங்கிவரும் உலக வழக்கத்தைத் தாமும் நடைமுறையில் ஏற்று நடப்பது வழக்கு விதி எனப்படும்.

நாட்டிடைச் சட்டத்திற்கு மட்டுமன்றிப் பொதுவாகவே எல்லாச் சட்டங்களுக்கும் வழக்கு விதிகள் முதன்மையான மூலமாகும். வழக்கம் (custom) வழக்காற்றிலிருந்து (usage) மாறுபட்டது. ஆனால் வழக்கத்திற்கும், வழக்காற்றுக்கும் உள்ள வேறுபாடு அளவில்தானே தவிர தன்மையில் அல்ல. ஆனால், சட்டத்தில் இவை வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட செயல்நிகழ்வு நாடுகளில் ஒழுகலாற்றில் நியாயமெனக் கருதப்பட்டுச் சட்டத்தின் வலிவுடன் தொடர்ந்து நாடுகளால் நடைமுறையில் ஏற்று ஒழுகப்படுமானால், அச் செயல்நிகழ்வுகளையே சட்ட வல்லுநர்கள் வழக்கம் எனக் கூறுகின்றனர்.

இத்தகைய சட்டத்தின் பாதுகாப்பைப் பெருமல் வெறும் செயல்நிகழ்வுகளாக மட்டுமே நின்றுவிடுமாயின் வழக்காறு என்று கூறுகிருர்கள். எப்பொழுது இவ் வழக்காறுகள் பொது நடைமுறையில் சட்டத்தின் வலிவுடன் பரவலான அங்கீகாரத்தையும் பெற்றுச் செயல்படத் தொடங்குகின்றனவோ அப்பொழுது வழக்கங்களாக மாறுகின்றன. எங்கே வழக்கம் தொடங்குகிறதோ அங்கே வழக்காறு முடிவடைகிறது. சுருக்கமாகச் சொன்ஞல் வழக்காறுகள் எப்பொழுது சட்டத்தின் வலிவைப் பெறுகின்றனவோ அப்பொழுது அவை வழக்கங்களாக மாறிவிடுகின்றன. அண்மையில் கொடுக்கப்பட்டுள்ள நாட்டிடைச் சட்டங்களின் பெரும்பகுதி ஏற்கெனவே நடைமுறையிலிருந்த வழக்கு விதிகளேயே உள்ளடக்கியுள்ளது.

**வெஸ்ட் ரேண்ட் சென்ட்ரல் கோல்டு மைனிங் கம்பெனி எ. மன்னர்** (West Rand Central Gold Mining Co. vs. R) வழக்கின் தரப்பினர் எவரேனும் தமது உரிமையைக் குறிப்பிட்ட நாட்டிடைச் சட்ட வழக்கு விதியையொட்டி எழுவதாக வாதிடுவார்களேயாஞல், அவ் வழக்குவிதி உலக நாடுகளின் பெரும்பாலான நாடுகளால் சட்டவிதியாக ஏற்கப்பட்டு வழங்கி வரப்பட்டாலொழிய அதனே நாட்டிடைச் சட்ட வழக்கு விதியாக நீதிமன்றம் ஏற்காது என்று தீர்ப்பளித்தது.

**போர்ச்சுக்கல் நாட்டிற்கும் இந்தியாவிற்குமிடையே இந்திய ஆள்நிலப் பரப்பின்மேலான வழியுரிமை வழக்கில்** (Right of passage over Indian Territory case) உலக நீதிமன்றம் குறிப்பிட்ட இரு நாடுகளுக்கு இடையே மட்டும் ஒரு குறிப்பிட்ட நடைமுறை விதி ஏற்கப்பட்டு நடைமுறையில் சட்டமாக ஏற்கப்பட்டு வந்திருக்குமாஞல், அது குறிப்பிட்ட அந்தத் தரப்பினரைக் கட்டுப்படுத்தக் கூடிய வழக்கு விதியைத் தோற்றுவிக்கக்கூடும் என்று கூறியுள்ளது.

**தி ப்பேகத் ஹேபஞ** (The Paquete Habana) வழக்கில் அமெரிக்கத் தலைமை நீதிமன்றமும், லோட்டஸ் வழக்கில் (Lotus case) உலக நிலை நீதிமன்றமும் 'வழக்கு விதி' பற்றி விரிவாக ஆய்ந்து கருத்துத் தெரிவித்துள்ளன.

## 2. உடன்படிக்கைகள் (Treaties)

உடன்படிக்கைகள் நாட்டிடைச் சட்டமூலங்களை யொட்டி இரண்டாவதாக முக்கியத்துவம் பெறுகின்றன. உடன்படிக்கைகள் இரண்டு வகைப்படும்.

1. சட்டங்களை உருவாக்கும் உடன்படிக்கை.
2. நாடுகளிடையே கடப்பாட்டு ஒப்பந்தங்களுக்காகச் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கை.

1. **சட்டங்களை உருவாக்கும் உடன்படிக்கை** (Law Making Treaties): இவ்வகை உடன்படிக்கைகளுக்கு உலகத்தின் பெரும் பாலான நாடுகள் தரப்பினர்களாக இருக்கும். பெரும்பாலான நாடுகள் கூடி அவ் வுடன்படிக்கையின் கூற்றுகளுக்கு ஒப்புவ தால் அவ் வுடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ள விதி சட்டத் தின் தன்மையைப் பெறுகின்றது. இவ்வகையில் 257 உடன் படிக்கைகள் 1864 முதல் 1914 வரை உண்டான 50 ஆண்டு களுக்குள் உருவாக்கப்பட்டுள்ளன. சட்டங்களை உருவாக்கும் உடன்படிக்கைகள் என்பதன்மூலம் அவ் வுடன்படிக்கைகள் உலகு அனைத்திற்கும் எஞ்ஞான்றும் பொருந்தக்கூடிய நாட்டி டைச் சட்டத்தை உருவாக்குவதாகப் பொருள் கொள்ள இயலாது. சட்டத்தை உருவாக்கும் உடன்படிக்கைகளிலும் இருவகை உண்டு. முதலாவதாக, உலகு அனைத்திற்கும் பொருந்தக்கூடிய நாட்டிடைச் சட்டத்தைத் தோற்றுவிக்கும் உடன்படிக்கைகள். இதற்கு ஐ.நா-வின் சாசனத்தை எடுத்துக் காட்டாகக் கூறலாம். இரண்டாவதாக, பொதுத்தன்மையுடன் கூடியதாகவோ பொதுவான விதிகளை வெளிப்படுத்துவ தாகவோ மட்டும் அமையும் உடன்படிக்கைகள்.

**வடகடல் கண்டத்திட்டு வழக்கு** (North Sea Continental Shelf Case): இவ் வழக்கு 1969ஆம் ஆண்டு உலக நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது. தீர்ப்பின் சாரமாவது 'உலகில் பெரும்பாலான நாடுகள் மாநாடு கூடி இசைவு தெரிவித்தன என்ற ஒரே காரணத்திற்காக அம் மாநாடு ஏற்ற விதிகள், மாநாட்டில் சேராத நாடுகளையும் கட்டுப்படுத்தத் தக்க நாட்டிடைச் சட்ட விதிகளைப் போன்றவை என்று கருதக் கூடாது.' அந்த விதிகள் அம் மாநாட்டிற்குத் தரப்பு நாடுகளல் லாத நாடுகளையும் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் அந்த நாடு தானும் அந்த விதிகட்குக் கட்டுப்படுவதாக வெளிப்படை யாகத் தன் விழைவினைத் தெளிவுபடுத்தி ஏற்கவேண்டும் என்று கூறிக் கண்டத்திட்டுப்பற்றிய 1958ஆம் ஆண்டின் ஜெனீவா மாநாட்டின் ஏற்புவிதிகளைப் பின்னால் தரப்பு நாடல்லாத ஜெர்மன் கூட்டுறவுக் குடியரசு ஏற்றுக்கொள்ளாத காரணத்தி னால் அவ் விதிகள் ஜெர்மன் கூட்டுறவுக் குடியரசு (German Federal Republic) நாட்டைக் கட்டுப்படுத்துமென்று கூற இயலாது என்றும் கூறியது.

**2. கடப்பாட்டு ஒப்பந்த உடன்படிக்கைகள்** (Treaty Contracts): சாதாரணமாக, இவ்வகை உடன்படிக்கைகள் நாட்டிடைச் சட்ட நேரடி மூலங்களாகக் கருதப்படுவதில்லை. இருந்தாலும் சில வேளைகளில் அவை நாட்டிடைச் சட்ட விதிகளை உருவாக்க உதவுவதாகக் கருதப்படுகின்றன.

(அ) சில நாடுகளுக்கிடையே சில குறிப்பிட்ட விதிகளுக்குட்பட்டுச் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கைகள் மற்ற நாடுகளாலும் தொடர்ந்தும், மீண்டும் பின்பற்றப்பட்டு அதே விதிகளில் உள்ளடக்கி உடன்படிக்கைகள் செய்துகொள்ளப் படுமானால், அதன் காரணமாக அவ் விதிகள் பொதுத் தன்மை பெற்று நாட்டிடைச் சட்ட வழக்குவிதி என்ற தகுதியையும் பெறுவதுண்டு. உதாரணமாக, 19ஆம் நூற்றூண்டில் மீட்டு ஒப்படைத்தல் உடன்படிக்கைகளை நாடுகள் தங்களுக்கிடையே தனித்தனியே செய்துகொண்டன. உடன்படிக்கைகள்தாம் தனித்தனியே தவிர அவற்றின் கருப்பொருள் ஒன்றுகவே அமைந்தது ஆகையால், மீட்டொப்படைத்தல் நாடுகளின் தனிப் பிரச்சினையாக இருந்த நிலைமாறி நாட்டிடைச் சட்டத்தில் தற்போது முக்கியமான பகுதியெனும் தகுதியைப் பெற்று விட்டது.

(ஆ) சில வேளைகளில் முதலில் இரண்டோ அதற்கு மேற்பட்ட நாடுகளோ ஏற்றுக்கொள்ளும் உடன்படிக்கைகளின் விதிகளை, பின்னர்ப் பெரும்பாலான நாடுகள் தாமும் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்வதாலும் பின்பற்றுவதாலும் அத்தகைய விதிகளும் நாளடைவில் நாட்டிடைச் சட்ட வழக்கு விதியாக மாறுவது உண்டு.

(இ) சில வேளைகளில் தாமாக உருவாகி வரும் விதிகள் நாடுகளுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்படும் ஒப்பந்த உடன்படிக்கைகளில் ஏற்றுக் கையாளப்படுவதால், அவையும் காலப்போக்கில் நாட்டிடைச் சட்ட விதியாவதுண்டு.

**3. நாகரிகமடைந்த அரசியல் அமைப்புடன் விளங்கும் நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ள, பொதுவான சட்டநெறிக் கொள்கைகள்** (The General Principles of Law recognised by Civilized Nations)

நாட்டிடைச் சட்டத்தில் போதுமான அளவு வேகமான முன்னேற்றமும், வளர்ச்சியும் இல்லாமையால் சில இடங்களில் சட்ட வெறுமையோ, இடைவெளியோ ஏற்படுவதுண்டு. அது போன்ற நேரங்களில் நாடுகளிடையே செயல்படுகிற நீதி

மன்றங்களும் நியாயக் குழுக்களும் எந்த விதியைப் பின் பற்றுவது என்ற சிக்கல் எழக்கூடும். அவ் வேளைகளில் உதவுவதற்காகத்தான் உலக நீதிமன்றத்தின் அமைப்புச் சட்டம் மேற்கூறியுள்ள நாகரிகமடைந்த அரசியல் அமைப்புடன் விளங்கும் நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ள பொதுவான சட்ட நெறிக் கொள்கைகளை உலக அரங்கு நீதிமன்றங்கள் பின் பற்றலாம் என்று கூறி வழிவகை செய்துள்ளது.

இதன்மூலம் உலக நாடுகளில் நாகரிகமடைந்த பெரும்பான்மையான நாடுகள் தங்கள் உள்நாட்டுச் சட்டத்தில் என்னென்ன சட்டநெறிகளைப் பொதுவாகக் கையாண்டு வருகின்றனவோ அவ் விதிகளை நாட்டிடைச் சட்ட விதிகளாகக் கருதலாம் என்பதே இதன் கருத்து.

இதற்கு உதாரணம் சார்சாவ் பேக்டரி வழக்கு (Chorzow Factory Case). இவ் வழக்கில் நாடுகளின் உள்நாட்டுச் சட்டத்தில் வழங்கிவரும் மறுதீர்ப்புத் (Res Judicata) தடைக் கொள்கை செயல்படுத்தப்பட்டது.

அதேபோல் உள்நாட்டுச் சட்டங்களில் மட்டுமே மாற்றமர் அடைமான உரிமைக் கொள்கையும் (Principle of Subrogation) நாட்டிடைச் சட்டத்தில் தற்போது இடம் பெற்றுள்ளது.

### 4. சட்டவல்லுநரின் ஆய்வுரைக் கருத்துகள்

இவ்வகை மூலங்கள் உலக நீதிமன்ற அமைப்புச் சட்ட 38ஆவது பிரிவின்கீழ்த் துணைமூலங்கள் ஆகும். எங்கு வெளிப்படையான, நேரிடையான நாட்டிடைச் சட்டவிதிகள் இல்லையோ அங்கெல்லாம் மற்ற மூலங்களின் துணைகொண்டு அவ் விதியை அறியமுற்படுவது உண்டு. சில வேளைகளில் அம் முறையிலும் தோல்வியுறுவது உண்டு. அவ் வேளைகளில் நாட்டிடைச் சட்டத்தை ஆய்ந்தறிந்து உணர்ந்த வல்லுநர் கூறும் கருத்துகளைக் கொண்டு தற்காலத்தில் நிலவும் வழக்க விதிகளையும் எதிர்காலத்தில் வரக்கூடிய வழக்குவிதிகளையும் அறியலாம். கூறப்போனால் நாட்டிடைச் சட்டமே ஒருசில பெரும் சட்டச் சான்றோர்களின் சிந்தனைத் தெளிவின் தத்துவச் சாரமே ஆகும். இதற்கு உதாரணமாக ஹ்யூகோ குரோஷியஸ், விக்டோரியா, வேட்டல், சாக்கே (Hugo Gurotious, Victoria, Vattal and Zouche) போன்ற நாட்டிடைச் சட்ட வல்லுநர்களின் சட்டப் பணியைக் கூறலாம்.

**5. பல்வேறுபட்ட நீதிமன்றங்கள், நியாயக் குழுக்களின் தீர்ப்புகள்**

இவைகளும் மேற்கூறிய 38ஆவது பிரிவின்படி நாட்டிடைச் சட்டத்தில் துணை மூலங்களாகும்.

இங்கிலாந்து நாட்டுப் பொதுநெறிக் கொள்கைப்படி (Common Law) நீதிப் பேராயங்கள் (Highest Forum) வழங்கும் தீர்ப்புகளை அதே தன்மையுடன் கூடிய வழக்குகள் தம்முன் எதிர்காலத்தில் வரும்போது அந்த நீதிமன்றங்களும் அதன் கீழ்ச் செயல்படும் நீதிமன்றங்களும் பின்பற்றியே முடிவு செய்ய வேண்டும். இந்தக் கொள்கை நாட்டிடைச் சட்டத்தில் வெளிப்படையாக ஏற்கப்படவில்லையென்றாலும் உலக அரங்கில் செயல்படும் நீதிமன்றங்களும் நியாயக் குழுக்களும் ஒன்றையொன்று பின்பற்றியே தீர்ப்பை வழங்கும் வழக்கத்தை மேற்கொண்டிருப்பதால், இத் தீர்ப்புகளின் அடிப்படையாகவும் சில பொதுநெறிகள் தோன்றுவதுண்டு. அவை நாளடைவில் நாட்டிடைச் சட்ட விதிகளாகவும் மாறலாம். இதேபோல் பல்வேறு நாடுகளிலுள்ள உள்நாட்டு நீதிமன்றங்களும் குறிப்பிட்ட பொருள்பற்றி ஒரே சட்டநெறியின் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்குமானால், அத்தகைய பொதுத்தன்மை பெற்ற சட்டநெறிகளும் நாளடைவில் நாட்டிடைச் சட்டத்தின் தன்மையைப் பெறலாம்.

# 4. நாட்டிடைச் சட்டத்திற்கும் நாடுகளின் உள்நாட்டுச் சட்டத்திற்கும், உள்ள தொடர்புகளும், வேறுபாடுகளும்

நாடுகளின் நீதிமன்றங்களும் நாட்டிடைச் சட்ட வழக்கறிஞர்களும் (International Lawer) நாடுகளுக்கிடையேயான தீர்ப்பாயங்களும் (International Tribunals) பெரும்பான்மையான சமயங்களில் குறிப்பிட்ட சிக்கல் நாட்டிடைச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டதா அல்லது நாடுகளின் உள்நாட்டுச் சட்டத்துக்குட்பட்டதா, என்று நிர்ணயிக்க வேண்டிய கடமைகளுக்குள்ளாயின. அந்த சிக்கல்கள் சிலசமயம் தங்கள் நுண்ணிய தன்மையால் நாட்டிடைச் சட்டத்திற்குட்பட்டதா, நாடுகளின் உள்நாட்டு சட்டத்திற்குட்பட்டதாவென்று நிர்ணயிப்பதில் பெரும் பிரச்னையை தோற்றுவித்தன. எனவே அவற்றைப் பற்றி அறிவது இங்கே சால்புடைத்து.

இதனையொட்டி இரு வேறு வகையான சிந்தனைப் பிரிவினர் உண்டு. (Schools of Thought) இவர்கள் இரு பொருள் வாதத்தினர் (Dualists) எனவும், ஒரு பொருள் வாதத்தினர் (Monists) எனவும், இருவகைப்படுவர். இவர்களின் கருத்து வேறுபாட்டின் ஆதிக்கத்தை நாட்டிடை நிலை நீதிமன்றத்தின் சில தீர்ப்புகளில் கூடக் காணலாம். இவ் விரு கொள்கைகளில் எதுவுமே நடைமுறையில் நாட்டிடைச் சட்டத்தின் செயலாக்கத்திற்குப் பெரிதும் உதவுவதாகத் தெரியவில்லை.

ஒரு பொருள் வாதத்தினர் கொள்கையின்படி நாட்டிடைச் சட்டமும் நாடுகளின் சட்டமும் (State Law) ஒரே அமைப்பின் இரு வேறு பிரிவுகளை நெறிப்படுத்தும் சட்டங்கள் என்பதாகும். இரு பொருள் வாதத்தினர் கொள்கையின்படி இந்த இரண்டு சட்டங்களும் முற்றிலும் மாறுபட்ட அடிப்படைக் குணங்களில்

வேறுபாடு கொண்ட இரு வேறு அமைப்புகளோடு தொடர்புடைய சட்டங்கள் என்பதாகும்.

இவ்விரு கொள்கையினரும் கீழ்க்கண்ட காரணங்களுக்காக வேறுபடுகின்றனர் :

1. முதலாவதாக இவற்றின் மூலத்தை (Source) ஒட்டி எழும் வேறுபாடு. உள் நாட்டுச் சட்டம் அந்த நாட்டு எல்லைக் குள் சட்டம் பிறப்பிக்கும் ஆற்றலுடன் கூடிய அரசனாலோ அல்லது சட்ட மன்றங்களாலோ பிறப்பிக்கப்படுபவை. ஆனால் நாட்டிடைச் சட்டம் நாடுகளிடையே நீண்ட நெடுங் காலமாக வளர்ந்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வழக்கு விதியாக (Customary Law) வழங்கி வருபவைகளையும் நாடுகளிடையே விதிமுறைகளை உருவாக்கத் தக்க வகையில் ஏற்படும் உடன்படிக்கைகளையுமே மூலமாகக் கொண்டது.

2. இரண்டாவதாக இவை இரண்டும் உறவுகளை ஒழுங்கு படுத்துவதிலும் வேறுபடுகின்றது. உள் நாட்டுச் சட்டம் ஒரு ஆட்சியின் கீழ் உள்ள மக்களுக்கும் அந்த அரசுக்கும் உள்ள உறவுகளை நெறிப்படுத்துகின்றது. ஆனால் நாட்டிடைச் சட்டமோ நாடுகளிடையேயான உறவுகளை நெறிப்படுத்து கின்றது.

3. மூன்றாவதாக அவை உள்ளடக்கிய உட்பொருளில் (Subject) வேறுபடுகின்றன. உள் நாட்டுச் சட்டம் கோன்மை யின் அடிப்பிறந்து அந்நாட்டு மக்களைக் கட்டுப்படுத்துவ தாகும். ஆனால் நாட்டிடைச் சட்டமோ, நாடுகளிடையே வழங்குவதும்; கோன்மையின் (Sovereignity) அடி பிறக்காதது மாகும். எனவே நாட்டிடைச் சட்டத்தை மற்றதுடன் ஒப்பு நோக்குங்கால் அவ்வளவு வலிவானதல்ல.

மேற்கூறிய இருபொருள் வாதத்தினரின் கருத்துகள் ஒரு பொருள் வாதத்தினரால் கீழ்க்கண்ட காரணங்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை :

1. பின்னவர்கள் (Monists) வேறுபட்ட இரண்டு அமைப்பு கள் இருப்பதையே மறுக்கின்றனர். அவர்கள் கூறுவது நாட்டிடைச் சட்டம், உள் நாட்டுச் சட்டம் இரண்டுமே இறுதி யாக ஒழுங்குபடுத்த நினைப்பது மக்களையும் மக்கள் நடத்தை யையுமே என்பதாகும்.

2. இரண்டாவதாக இரண்டு சட்டங்களுமே நெறிப் படுத்தும் ஆதாரப்பொருட்களை (Basic Subject) ஏற்றுக்

கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிடினும் அவை கட்டுப் படுத்தும் ஆற்றலுடைய ஆணையாகும்.

3. மூன்றாவதாக நாட்டிடைச் சட்டம், நாடுகளின் சட்டம் இரண்டும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டிருந்த போதிலும் இரண்டுமே ஒன்றினடியாக பிறந்ததாக கருது கின்றனர்.

4. உள் நாட்டு நீதிமன்றங்கள் தம்நாட்டின் சட்டங்களை நாட்டிடைச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருந்த போதிலும், செயல்படுத்த கடமைப் பட்டிருக்கின்றன. ஆனால் அத்தகு தீர்ப்புகளின் விளைவுகளை அந்நாட்டின் அரசு ஏற்கக் கடமைப் பட்டது. எனவே இறுதியில் அந்நாட்டின் அரசு நாட்டிடைச் சட்டத்தின் விதிமுறைகளை பின்பற்றவே வேண்டியுள்ளது. இன்றைய உலக அரசியல் அரங்கில் முதன்மையான நாடு களில் சில நாட்டிடைச் சட்டத்திற்கும் உள் நாட்டு சட்டத் திற்கும் தங்கள் நாட்டில் என்னென்ன தகுதிகள் தருகின்றன என்பதை அறிவோம்.

**1. கிரேட் பிரிட்டன்**

நாட்டிடைச் சட்டம் உள் நாட்டு சட்டங்களில் ஒரு பகுதியே என்பது பொதுநெறியின் (Common Law) வாயிலாக எழும் கொள்கை. இதனை பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந் திருந்த சட்டப் பேரறிஞர் பிளேக் ஸ்டோன் (Black Stone) என்பார், பெரிதும் வலியுறுத்தியுள்ளார் (Commentaries on the Laws of England C H P 5). பெரும்பான்மையான நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாடுகளிடையே பொதுவாக வழங்கி வரும் விதிகளை இன்றும் இங்கிலாந்து நாடு தனது நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியாகவே கருதி வருகின்றது. ஃப்ரேங் கோனியா (The Franconia Case (1876) R-2-Kyne) வழக்கில் இங்கிலாந்து நாட்டு நீதிமன்றத்தின் ஒருசில நீதிபதிகள் இக் கருத்தினை ஏற்றுக் கொள்ளாத போதும், 1905ஆம் ஆண்டு வந்த மற்றொரு வழக்கில் இக் கருத்து மீண்டும் வலியுறுத்தப் பட்டது.

(அ) இங்கிலாந்து மன்னர் வேறு நாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் செயலுக்கு வருவதற்கு இங்கி லாந்து நாட்டு நாடாளுமன்றம் அவ் வுடன்படிக்கைகளைச் செயல்படுத்துவதற்கு ஆற்றல் வழங்கும் வகையில் (Enabling Act) சட்டம் ஒன்றினை இயற்ற வேண்டும். எனவே

1. பிரிட்டிஷ் மக்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதிக்கத்தக்க வகையிலோ ;

2. பொது நெறியையோ (Customary) இயற்றப்பட்ட சட்டத்தையோ பாதிக்கத்தக்க வகையிலோ ;

3. மன்னரின் அதிகாரங்களை அதிகரிக்கத்தக்க வகையிலோ அல்லது,

4. இங்கிலாந்து அரசின் செலவினத்தைக் கூட்டும் வகையிலோ, அமைத்துள்ள உடன்படிக்கைகள் அவசியம் நாடாளு மன்றம் உயிர் கொடுத்த பின்னரே இயங்கத்தக்கவைகளாகும்.

இங்கிலாந்து நாட்டுப் பொது நெறியும் (Common Law) அரசியல் சட்ட மூலங்களும், மன்னர் நாடாளுமன்றத்தின் ஒப்புதலில்லாமல் மக்களின் உரிமைகளைச் சிதைக்கும் வகையிலோ, வரிகளை உயர்த்தும் வகையிலோ, செலவினங்களைக் கூட்டும் வகையிலோ, பொது நெறிக் கொள்கைகளை (Common Law Principles) மாற்றும் வகையிலோ செயல்படக் கூடாது என்று கூறியுள்ள கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். உடன்படிக்கைகள் மன்னரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் தாமாகச் செயலுக்கு வருமானால் மேற் கூறிய வழக்கிற்கு மாறு பட்டதாக அமையும். எனவே தான் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவைப்படுகிறது. இந்த நிபந்தனை நாடாளு மன்றத்திற்கு இத்தகு சூழ்நிலைகளில் ஒரு வாய்ப்பளிப்பதற் காகவேயாகும். ஆனால் நடைமுறையில் அனேகமாக எல்லா உடன்படிக்கைகளும் செயலுக்கு வருவதில் எவ்விதத்தடங்கலும் இருந்ததில்லை.

(ஆ) நாட்டிடைச் சட்டம் இங்கிலாந்து சட்டத்தின் ஒரு பிரிவு என்கிற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டதெனினும் எல்லாச் சூழ் நிலைகளிலும் நாட்டிடைச் சட்டமே முதன்மை வாய்ந்தது என்று கருத இயலாது. இங்கிலாந்து நாடாளு மன்றம் நிறைவேற்றிய சட்டங்களனைத்தும் பிரிட்டிஷ் நீதி மன்றங்கள் முற்றிலும் செயல்படுத்தக் கடமைப்பட்டவை. பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்றும் போது நாட்டிடைச் சட்டத்திற்கு முரணானதொரு கருத்தை மனதில் கொண்டு நிறைவேற்றியிராது என்றொரு யூகம் இருந்தபோதும் நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டம், நாட்டிடைச் சட்டத்திற்கு மாறுபட்டு இருக்குமானால் பிரிட்டிஷ் நீதி மன்றங்கள் உள்நாட்டுச் சட்டத்தைத்தான் செயல்படுத்த கடமைப்பட்டவைகள்.

ப்ளேக் ஸ்டோனின் மேற்கூறிய கொள்கையை பதினெட்டாம் நூற்றாண்டு நீதிபதிகளும் குறிப்பாக கோமான் மேன்ஸ்ஃபீல்டு என்பாரும் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும் எண்ணிக்கையான வழக்குகளில் அக்கொள்கை ஏற்று செயல்படுத்தப்பட்டுள்ளது. அவ்வழக்குகள் வருமாறு:

1. டோல்டர்–எ– ஹன்ட்டிங்ஃபீல்டு—1805. (Dolder–v–Hunting Field–1805).

2. உல்ஃப்–எ–ஆக்ஸ்ஹோம்—1817. (Wolff — v — Oxholm 1817).

3. நொ வெல்லோ—எ—ட்டுகுட்—1823. (Novello—v—Toogood 1823).

4. டீவட்ஸ்—எ—ஹென்ட்ரிக்ஸ்—1824. (De Voutze—v—Hendricks 1824).

5. எம்ப்பெரர் ஆஃப் ஆஸ்ட்ரியா—எ—டே 1861. (Emperor of Austria—v—Day)

மேற்கூறிய வழக்குகளில் நீதிமன்றங்கள் ப்ளேக் ஸ்டோனின் கொள்கைப்படி, நாடுகளிடையே வழங்கப்பட்டு வேரூன்றி விட்ட விதிகளைத் தங்கள் நாட்டுச்சட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதுமென்று வலியுறுத்தியுள்ளார். எனினும் அவ்விதிகள் உள் நாட்டுச் சட்டத்திற்கு முரணாக இருக்குமானால் உள் நாட்டுச் சட்டமே முதன்மையாக செயல்படுத்தப்படும்.

மன்னர் –எ—கைன் (The Franconia Case)

இவ்வழக்கில் ஃரேங்கோனியா எனும் ஜெர்மானிய நாவாய் பிரிட்டிஷ் எல்லையோரக் கடல் பகுதியில் பயணம் செய்யும் போது டோவர் (Dover) துறைமுகத்திலிருந்த ஸ்ட்ரேத் க்ளைட் (Strath Clyde) என்ற பிரிட்டிஷ் நாவாயின்மீது கவனம் இன்றி மோதி அந்த நாவாய்க்கும் அதிலிருந்த பயணி ஒருவருக்கும் சேதம் விளைவித்தது. இதன்காரணமாக ஜெர்மானிய நாவாயின் தலைவன் மனிதச் சிதைவிற்காக (Manslaughter) பிரிட்டிஷ் நீதிமன்றத்தின் முன் குற்றம் சாட்டப்பட்டார். ஆனால் இவ்வழக்கு இறுதியாக மன்னர் வழக்குகளுக்கான நீதிமன்றம் (Court for Crown Cases) விசாரித்து பிரிட்டனின் எல்லையோரக் கடல் பகுதியில் அயலார் குற்றம் புரிந்தால் அவர்களை விசாரித்துத் தண்டனை நல்கும் ஆற்றல் பிரிட்டிஷ் பொது

நெறி நீதிமன்றங்களுக்கு (Common Law Courts) இல்லை யென்று தீர்ப்பு வழங்கிற்று.

இத்தீர்ப்பு இது வரை வழங்கிவந்த ப்ளேக் ஸ்டோனின் கொள்கையினை வலிவிழக்கச் செய்யவே பிரிட்டிஷ் நாடாளு மன்றம் இத்தகைய வழக்குகளை விசாரிக்க பிரிட்டிஷ் பொது நெறி நீதிமன்றங்களுக்கு ஆற்றல் வழங்கும் வகையில் எல்லை யோரக் கடல் நீர்மீதான விசாரணை நடத்தும் அதிகாரம் வழங் கும் சட்டத்தினை 1878ஆம் ஆண்டு நிறைவேற்றியது.

ஃபிரேங்கோனியா வழக்கில் மன்னர் வழக்குகளுக்கான நீதி மன்றம், பிரிட்டிஷ் நாடாளுமன்றம் வலிந்து ஏற்றுக் கொள்ளாத நாட்டிடைச் சட்ட விதிகள் உள் நாட்டுச் சட்டத்தின் பகுதியாகாது என்ற நிலையை உருவாக்கியது. ஆனால் 1905இல் முடிவு செய்யப்பட்ட வெஸ்ட் ரேண்ட் கோல்டு மைனிங் எ மன்னர் (West Rand Gold Mining Co-v-R) என்ற வழக்கில் ப்ளேக் ஸ்டோனின் இணைப்பு விதியை (Incorporation Doctrine) நீதி மன்றம் ஏற்று வலியுறுத்திற்று. இதே கருத்து. ச்சங்-சீ-சாவுங் எ மன்னர் (Chang-chi-chaung v. R.) என்ற வழக் கிலும் நீதிபதி அட்இன் கோமகனால் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் (போர்க்கால) கடல் திறை நீதி ஆயங்களின் நிலை (Prize Courts) பொது நெறி நீதிமன்றங்களிலிருந்து (Common Law Courts) வேறுபட்டதாகும். கடல் போர் பொருள் நீதி மன்றங்கள் தங்கள் விசாரணையின் போது முற்றிலும் நாட் டிடைச் சட்டத்தையே மன்னரின் ஆணைக்கு முரண்பட்ட தாயினும் பின்பற்றும். ஆனால் இங்கும் நாடாளு மன்றத்தின் சட்டம் நாட்டிடைச் சட்டத்தோடு முரண்படுமானால் நாடாளு மன்றச் சட்டமே முதன்மை பெறும். மேற்கூறிய கருத்து குறிப் பிடத்தக்க வழக்கொன்றில் (The Zamora) தெரிவிக்கப்பட்டது.

**அமெரிக்க வழக்காறு : அமெரிக்க இணை நாடுகள் (United States of America)**

நாடுகளிடையே வழங்கப்பட்டு நிலைபெற்றுவிட்ட சட்ட விதிகள், உள் நாட்டுச் சட்டத்தின் பகுதியாகக் கருதப்பட வேண்டும் என்கின்ற ப்ளேக் ஸ்டோனின் கொள்கையினை (Doctrine of Incorporation) முதன்முதலில் சட்ட அடிப்படை யில் செயலுக்குக் கொண்டுவந்தவை ஆங்கிலேய அமெரிக்க நாடுகள் தாம்.

அமெரிக்க இணை நாடுகள் 1787ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட தனது அரசியல் சட்டத்தின் ஆறுவது இனம்,

இரண்டாவது பிரிவின் கீழ் (Article VI, Sec 2), அமெரிக்க நாடு செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் அனைத்துமே அமெரிக்க நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தவல்லது என்று கூறுகிறது. ஆனால் இவ்வுடன்படிக்கைகள் தன்னியக்க உடன்படிக்கைகள் (Self Executing Treaties) தன்னியக்கமற்ற உடன்படிக்கைகள் (Nonself Executing Treaties) என இரண்டுவகையாகப் பிரிந்துவழங்கப்படுகின்றன. இவற்றில் தன்னியக்க உடன்படிக்கைமட்டுமே அமெரிக்க சட்டமன்றத்தின் சட்டமின்றித் தானே வழக்கிற்கு வரும். தன்னியக்கமற்ற உடன்படிக்கைகள் செயலுக்குவர அமெரிக்க சட்டமன்றத்தின் செயலுருச் சட்டம் (Enabling Set) தேவை.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நாடுகளிடையே நிலையாக வழங்கிவரும் சட்ட விதிகளும், முறைப்படி முடிக்கப்பட்ட தன்னியக்க உடன்படிக்கைகளும், அரசியல் சட்டத்திற்கு முரணாக இன்றி ஏற்கனவே செயலிலுள்ள சட்டத்திற்கு மட்டும் முரணாக இருப்பினும் அமெரிக்க நீதிமன்றங்களால் ஏற்றுச் செயல்படத் தக்கவை, ஆனால் குறிப்பிட்ட ஏற்றுக்கொள்ளப் பட்ட விதிகளுக்கோ, உடன்படிக்கைகளுக்கோ பின்னிட்டு, அமெரிக்க நாடாளுமன்றம் முரணான சட்டம் ஒன்றினைப் பிறப்பிக்குமானால் அந்த விதிகளும் உடன்படிக்கையும் வழக்கிழந்து விடும். அண்மையில் ஏற்கப்பட்ட உள் நாட்டுச் சட்டமே மேன்மை பெறும். இங்குங்கூட நாடாளுமன்றம் அப்படி ஒரு விருப்பத்தை வெளிப்படையாகத் தெரிவித்திருக்க வேண்டும். இல்லையென்றால் முரண்பாடான நாட்டிடைச் சட்ட விதியும் உடன்படிக்கையுமேதான் மேன்மை பெறும்.

**மற்ற நாடுகள்**

ஒரு பொருள் வாதத்தினரின் கொள்கையே இன்று வழக்கில் பெருமளவு வலிவு பெற்றுள்ளது. இதனை பேராசிரியர் திரு. பழனிச்சாமி அவர்களும் தனது 'சர்வ தேச சட்டம்' எனும் நூலில் ஏற்றுக் கொண்டுள்ளார். இதன்படி ஒவ்வொரு நாளும் நாட்டிடைச் சட்ட விதிகளையும், ஏற்றுக் கொண்டுள்ள உடன்படிக்கைகளையும் தங்கள் உள் நாட்டுச் சட்டத்தைவிட முதன்மை வாய்ந்ததாகவும் எங்கெங்கே அவை தடையின்றி செயல்பட உள் நாட்டுச் சட்டத்தை மாற்றியமைக்கவும், இயற்றவும் தேவைப்படுகிறதோ அந்தந்த மாற்றங்களையும் சட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

அண்மையில் இயற்றப்பட்ட சில மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல் சட்டத்தில் நாட்டிடைச் சட்டத்தின் முதன்மை

வெளிப்படையாக வலியுறுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது இத்தகு நாடுகள்.

1. தி ஃபெடரல் ரிபப்ளிக் ஆஃப் ஜெர்மனி.
(The Federal Republic of Germany. Art. 26 'Basic Law of The Federal Republic of Germany 1949').

2. நெதர்லாண்ட்ஸ் (Netharlands)
The Netharlands.

3. இடாலி (Italy)
Art. 10 Constitution of The Italian Republic 1948.

4. ஃப்ரான்ஸ் (France)
(Art. 55—The French Constitution of Oct 4th 1958)

5. ஆஸ்ட்ரியா (Austria)
(Art. 9 The Federal Constitution of Austria).

சமதர்ம நாடுகளுக்கு இணைப்புக் கொள்கை (Incorporation Doctrine) ஏற்புடைத்ததல்ல வெனினும் போலந்து நாடு அதற்கு ஒரு விதி விலக்கு. தனது 1952ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் உடன்படிக்கைகள் உள்நாட்டுச்சட்டத்தின், மூலமாகக் கருதப்படவேண்டும், (Source of Municipal Law) ஆனால் உள்நாட்டுச்சட்டத்திற்கு அவை இரண்டாம் தரமானதாகும் என்று கூறியுள்ளது

(Polish Constitution of 1962) மார்ட்டின்—எ—ரெனல்ட் வழக்கில் ஸ்விட்சர்லாந்து நீதிமன்றம் ஒப்பந்தங்களில் மற்ற நாடுகள் சம்பந்தப்பட்டிருப்பதால், பின்வந்த உள்நாட்டுச் சட்டம் அதனை மாற்ற வலிவற்றது என்றும், ஹோபியர்—எ—சிக் சேண்டரினோ (Hobier-A-Sigg Sandrino French National Railway Co.) வழக்கில் ஃப்ரான்ஸ் நாட்டு நீதிமன்றம் ஃப்ரான்ஸ் நாட்டுக்கும் ஸ்விட்சர்லாந்து நாட்டுக்குமிடையே 1869இல் ஏற்பட்ட உடன்படிக்கை ஒன்றினை, 1922இல் பிறப்பிக்கப்பட்ட ஃப்ரான்ஸ் நாட்டின் உள்நாட்டுச்சட்ட மொன்றிற்கு உட்படுத்த மறுத்துவிட்டதோடு, உள்நாட்டுச் சட்டங்கள்; பலநாடுகளின் சம்மதத்தோடு உருவாக்கப்படும் உடன்படிக்கைகளைக் கட்டுப்படுத்த மாட்டா என்றும் கூறி விட்டது.

இதே கருத்தைக் கீழ்க்கண்ட நாடுகளின் நீதிமன்றங்களும் பல்வேறு காலங்களில் வலியுறுத்தி வந்துள்ளன.

அந் நாடுகளாவன : 1. ஜெர்மனி, 2. தென் அமெரிக்கா, (Latin American Courts) நாடுகள், 3. இத்தாலி, 4. யூகோஸ்லாவியா, 5. டான்சிக், 6. சிரியா, 7. டேன்ஜியர், 8. மார்கன் ஸ்டேஜுன்.

(1. Germany, 2. Latin America, 3. Italy, 4. Yugoslavia, 5. Danzic, 6. Syria, 7. Tangier 8. Morgenstern).

ஆனால் இத்தகு துணிச்சலான தீர்ப்பு எதுவும் இன்னும் இந்திய தலைமை நீதிமன்றத்தில் வெளியிடப் படவில்லை.

**இந்தியாவின் வழக்காறு**

இதனையொட்டி இந்தியாவின் நிலையை உறுதியாகச் சொல்ல இயலாவிடினும் கீழ்க்கண்ட கருத்தினைக் கொள்ளலாம்.

இந்திய அரசியல் சட்டம், நாட்டிடைச் சட்டம் பற்றியும் அரசியல் அரங்கில் அது செய்து கொள்ளக்கூடிய உடன் படிக்கைகள் பற்றியும் இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறது.

இந்திய அரசியல் சட்டம் அனைத்து நாடுகளிடையே அமைதியையும், பாதுகாப்பினையும் வளர்க்கும் வகையிலும், நியாயமான, மேன்மையான உறவுகளை நிலை நிறுத்தும் வகையிலும், நாட்டிடைச் சட்டத்திற்கும் உடன்படிக்கைகளால் உருவாகும் கடமைகளையும் மதிக்கும் பண்பை ஊக்குவிக்கும் வகையிலும், நாடுகளினிடையேயான வழக்குகளை நியாயக் குழுக்களின் வாயிலாக முடித்துக் கொள்ளும் பழக்கத்தைப் பாராட்டும் வகையிலும், மாநிலங்கள் தங்கள் சட்டங்களை இயற்றக் கடமைப்பட்டவை என்று கூறுகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் இனங்கள் 37-51. இரண்டையும் இணைத்துப் படித்தல் வேண்டும். இந்திய அரசியல் சட்டத் தின் இனம் 253-ஐ ஏழாம் அட்டவணை முதலாம் பட்டியல் 14வது உருவுடன் இணைத்துப் படித்தால் உடன்படிக்கை களையோ, ஒப்பந்தங்களையோ யொட்டிச் சட்டமியற்றும் ஆற்றலை நாடாளுமன்றமும் அவற்றைச் செயல்படுத்தும் ஆற்றலைச் செயற் குழுவும் பெறுகின்றன.

இன்றைய நிலையில் இந்தியாவில் உடன்படிக்கைகளோ அனைத்து நாடுகளரங்கில் இந்தியா ஏற்றுக் கொள்ளும் சட்ட விதிகளோ, நாடாளுமன்றத்தால் ஏற்று உள்நாட்டுச் சட்டமாக உருமாற்றம் பெற்ற பின்னரே செயல் தன்மை பெறு

கின்றன. மற்றபடி வழக்கிலுள்ள நாட்டிடைச் சட்ட விதிகளைப் பொறுத்தவரை பிரிட்டனில் உள்ள நடைமுறையையே இந்தியாவும் பின்பற்றி வருகிறது. இக் கூற்றினை இந்தியத் தலைமை நீதிமன்றம் வைரேந்திராசிங் வழக்கில் வலியுறுத்தி யுள்ளது.

Constitutional Law of India-H.M-Saıvai Page 821. இந்திய குடியுரிமை சட்டம் 1955, (இந்திய) மீட்டொப்படைப்பு சட்டம், 1962 ஆகிய இரண்டு சட்டங்களையும் நிறைவேற்றியுள்ளதன் மூலம் இந்திய நாடாளுமன்றம் உலக அரசியல் அரங்கில் தனது கடப்பாடுகளை முற்றிலும் மதித்து நிறைவேற்றியுள்ளது என்று கூறத்தக்கதாக அமையவில்லை. (S-K-Agarwala 'International Law' Indian Courts and Legislature. Page 270).

**சென்னை மாநிலம்-எ-C-G மேனன் 1954 S.C. 517 :**

சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்தடைந்த திரு. மேனன் என்பாரும், அவர்தம் மனைவியும் நம்பிக்கை மோசம் (Breach of Trust) செய்த குற்றத்திற்காகக் கைது செய்ய சிங்கப்பூர் குற்றத் துறை நீதிபதி பிறப்பித்த ஆணையின்கீழ், கைது செய்து சென்னை மாநில, தலைமை குற்றத்துறை நீதிபதி முன்னர் கொண்டு வரப்பட்டனர். அவர்களை மீண்டும் சிங்கப்பூர் அரசிடம் ஒப்படைப்பதில் ஏற்பட்ட சிக்கலில், இந்திய தலைமை நீதிமன்றம், நாடுகளிடையே வழங்கி வரும் விதிகள் இந்திய நாட்டுச் சட்டத்துடன் முரண்படாத வரையில் அவை வேறு சட்டம் எதுவுமின்றிச் செயல்படுத்தப்படும். ஆனல் உடன் படிக்கைகளும் அவற்றை ஓட்டியெழும் விதிகளும் இந்திய சட்ட மன்றத்தால் குறிப்பாகவும், தெளிவாகவும் சட்டத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டாலொழியத் தாமே செயலுக்கு வரமாட்டா என்றும் கூறியுள்ளது.

# 5. நாட்டிடைச் சட்டம்–தொகுத்தல்

நாட்டிடைச் சட்டத்தை தொகுப்பது பற்றி கீழ்க்கண்ட ஒன்பது தலைப்பின் கீழ் அறியலாம்.

1. தொகுப்பதின் அவசியத்திற்கான காரணங்கள்

2. முதலாம் ஹேக் (The Hague) அமைதி மாநாட்டின் தொகுத்தல் பணி.

3. இரண்டாம் ஹேக் அமைதி மாநாட்டின் தொகுத்தல் பணி.

4. முதலாம் உலக போருக்குப்பின்–தொகுத்தல் பணியில் முன்னேற்றம்.

5. உலக நாடுகள் மன்றத்தின் கீழ் நடந்த தொகுப்பு

6. ஹேக்கில் 1930 ஆம் ஆண்டில் கூடிய நாட்டிடைச் சட்டத் தொகுப்பு மாநாடு ஆற்றிய பணிகள்

7. தொகுத்தலின் நன்மைகள், விளைவுகள், வரையறை

8. நாட்டிடைச் சட்டத் தொகுப்பும் வளர்ச்சியும்

9. உலக சட்டமும் (International Legislation) நாட்டிடைச் சட்டத் திருத்தமும் (Revision of International Law).

நாட்டிடைச் சட்டத்தை தொகுக்க வேண்டுமென்கிற கருத்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி முதலே வலிவு பெறலாயிற்று. பெந்தம் (Bentham) என்பார் இக் கருத்தினை முதலில் வெளியிட்டு ஆதரவு திரட்டி வந்தார். 1792இல்

ஃப்ரான்ஸ் நாட்டில் இதற்கெனக்கூடிய மாநாட்டிலும் இக் கருத்து வலியுறுத்தப்படவே மேலும் முக்கியத்துவம் பெறலாயிற்று.

1. (அ) நாட்டிடைச் சட்டம் நாடுகளிடையே வழங்கி வரும் நெறி முறைகளின் வாயிலாக வளர்ச்சி பெறுவதால் அவற்றைச் சட்ட வடிவில் சுருக்கமாகவும் உறுதியாகவும் அறிந்து கொள்ளவும்.

(ஆ) நாடுகளிடையேயான நியாயக் குழுக்களும், நீதிமன்றங்களும் தங்கள் முன்னுள்ள வழக்குகளை நிர்ணயிப் பதற்கு ஒரு குறிப்பிட்ட நிலையான சட்டத்தைப் பயன்படுத்து வதற்கும் நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல் அவசிய மாகிறது.

2. (அ) தொகுத்தல் என்பதற்கு ஆங்கில சட்ட நிபுணர்கள், 1893ஆம் ஆண்டு பொருள்கள் விற்பனை (Sale of Goods Act) சட்டத்தை தொகுக்குங்கால் கூறியபடி தொகுத்தல் என்றால் ஏற்கனவே வழக்கில் வழங்கிவரும் சட்டத்தையும் விதி களையும், நீதிமன்றங்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தீர்ப்பு களின் அடியெழும் விதிகளையும் தேவைக்கேற்ப மாற்றியோ, மாற்றாமலோ தொகுத்து சட்ட உருவம் கொடுத்தல் எனவும்,

(ஆ) சில தலைப்புகளையொட்டி வழக்கில் இயங்கி வரும் விதிகளையும், நெறிமுறைகளையும் எல்லா நாடுகளும் ஏற்கும் வகையில் திருத்தியமைத்து, நாடுகளின் பொதுவான ஒப்புதலின் வாயிலாகவோ சட்ட ஆக்க மா-நாடுகள் மூலமோ, எல்லா நாடுகளும் வழக்கில் ஏற்றொழுகும் பொருட்டு, அச் சட்டத்தை ஏற்றுக் கொள்வது எனவும் இரு பொருளில் கூறப்படுகிறது.

1899 ஆம் ஆண்டு ரஷ்யா நாட்டு மாமன்னர் இரண்டாம் நிக்கோலஸ் என்பார் ஹேக் என்னுமிடத்தில் முதலாவது அமைதி மாநாட்டைக் கூட்டி நாட்டிடைச் சட்டத்தை தொகுப் பது நடைமுறையில் இயலக் கூடியதே என்பதை ஆக்க பூர்வ மாக உலகுக்கு உணர்த்தினர். இம் மாநாட்டில் நாடுகளிடை யேயான வழக்குகளில் அமைதி உடன்படிக்கை காண்பதற்கான (ஏற்பு விதிகள்) விதிமுறை தொகுப்பு (Convention for the Pacific Settlement of International Disputes) களப் போர்

(land Warfare) பற்றிய (ஏற்பு விதிகள்) சட்டம் விதிமுறை தொகுப்பு (Convention with respect to the Laws and Customs of War on Land) ஆகியவை உருவாக்கப்பட்டன.

இவற்றில் முன் கூறியது உலக நாடுகளால் வழக்கத்தில் பெரிதும் ஏற்று வழங்கப்படுகிறது. உலக நிலை இசைவுத் தீர்ப்புக் குழுவும் (Permanent Court of Arbitration) பல வழக்கு களை இந்த விதிமுறைகளை யொட்டி நிர்ணயித்துள்ளது.

இரண்டாம் ஹேக் அமைதி மாநாட்டில் பதின்மூன்று தலைப் பின் கீழ் தொகுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் கடல், கடற்போர், நிலப்போர், அமைதி உடன்படிக்கை ஆகிய வைகளை யொட்டிய தொகுப்புக்கள் நீங்கலாக, எஞ்சிய தலைப் புக்கள் புதியவை.

முதல் உலகப் போருக்குப்பின் நோயுற்றும் காயமுற்றும், போர்க் கைதிகளாகியும் உள்ள படை வீரர்களை நடத்தும் முறை பற்றிய பொதுவான ஏற்பு விதிகள் (Conventions). 1929 ஆம் ஆண்டிலும் நச்சுத்தன்மை, மூச்சுத்திணற வைக்கும் தன்மை (Asphyxiating gas) கொண்ட வாயுக்களை போர்களங்களில் பயன்படுத்துதல் பற்றிய ஏற்பு விதிகள். 1925 ஆம் ஆண்டிலும் உலக நாடுகள் மன்றசாசனம் (Covenent of League of Nations), நாடுகளிடை நிலை நீதிமன்ற சட்டம் (Charter of the Permanent Court of International Justice). போன்றவைகளும் உருவாயின. உலக நாடுகள் மன்றக் கண்காணிப்பின்கீழ் உரு வான சட்டத் தொகுப்பு, 1924ஆம் ஆண்டில் உலக நாடுகளின் செயற்குழு (Council of the League of Nations) பதினாறு சட்ட நிபுணர்களைக் கொண்ட குழு வொன்றினை நாட்டிடைச் சட்டத் தொகுப்புப் பணிக்காக நியமித்தது. அக்குழு 1. நாட்டினை யுறவு (Nationality) 2. எல்லையோரக்கடல் (Territorial Sea) 3. தன்னெல்லையில் அயலாருக்கிழைக்கப்பட்ட தீங்கிற்கு அந்நாட் டின் பொறுப்பு. 4. தூதுக்குழுவினர்க்கு விலக்குச் சலுகைகளும் உரிமைகளும். (Diplomatic Immunities and Privileges) 5. உலக நாடுகளின் மாநாடுகள் உடன்படிக்கைகள்—இவற்றை நெறிப்படுத்தும் நடைமுறை விதிகள். 6. கடற்கொள்ளை (Piracy). 7. கடற் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவை தொகுத்தற் கேற்ப நிலையிலுள்ள தலைப்புக்கள் என்று செயற் குழுவிற்குப் பரிந்துரை செய்தது. இக்குழுவின் அறிக்கையை யொட்டி உலக நாடுகளின் பேரவை (Assembly of League of Nations) முதல் மூன்று தலைப்புகளை யொட்டிய விதிகளைத் தொகுப்பதற்காகப் பன்னாட்டு மாநாடொன்றினைக் கூட்டியது.

நாட்டிடைச் சட்டத்தினை முன்னேற்றமான வளர்ச்சி பெறும் வகையில் தொகுத்தலுக்காக 1930ஆம் ஆண்டு ஹேக் என்னுமிடத்தில் முதல் மாநாடு கூட்டப்பட்டது. இம் மாநாடு முக்குழுக்களாக அமைந்து செயல்பட்டது. இது தேசீய இணையுறவுக் கொள்கை (Nationality Laws), நாடற்ற தன்மை (State lessness) ஆகியவைபற்றிய விதிகளை உருவாக்கிற்று. இத்தொகுப்பு விதிகள் மேற்கூறிய தலைப்புகளை யொட்டி விரிவானதும் முழுமையானதுமான தொகுப்பினை உருவாக்கா விடினும் இவற்றினை ஒட்டியிருந்த சில கொள்கை வேறுபாடுகளை நீக்கவும் சில முக்கியமான கருத்துகள் பரவலாக வழங்கவும் வழி செய்தன. இவ்விரு தலைப்புகளை யொட்டிய ஏற்பு விதிகள் (Conventions). பெரும்பாலான நாடுகளால் ஏற்றுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் இம் மாநாடு எல்லையோரக் கடல் (Territorial Sea), கடலொட்டிய பகுதி (Contiguous Zone), கண்டத்திட்டு (Continental Shelf) ஆகியவைபற்றிய விதிகளில் ஒருமைகாண பெரு முயற்சி எடுத்துக்கொண்டு எல்லையோரக் கடலை அளப்பதற்குண்டான அடிக்கோடு நிர்ணயித்தல்.

**தீங்கற்ற கடல் வழியுரிமை**

எல்லையோரக் கடல் தன்மை ஆகியவற்றைப் பற்றிய விதிகளில் வெற்றிகரமாக ஒருமைப்பாடு கண்டது. ஆனால் எல்லையோரக் கடலின் அகல அளவு பற்றி நிர்ணயிப்பதில் பெரும் கருத்து வேறுபாடு இருந்ததால் அதை நிர்ணயிக்காமலும், அதனை யொட்டிய சட்டத் தொகுப்பு நாடுகளால் ஏற்கப்படாமலும் விடப்பட்டது.

ஹேக் மாநாடு தொகுத்தல் பணியில் பாராட்டத்தக்க பெரும் முன்னேற்றங்களை உருவாக்கித்தரவில்லையெனினும் தொகுத்தலில் ஏற்படக்கூடிய சிக்கல்களையும், நன்மை தீமைகளையும் அனுபவ வாயிலாக அறிந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. நாட்டிடைச் சட்டத்தை தொகுப்பதில் குறிப்பிடத்தக்க தீமை யொன்றுண்டு. ஏற்கனவே நாடுகளால் நடைமுறையில் ஏற்கப்பட்டு வழங்கி வரும் விதிகள் தொகுக்கப்படும்போது கருத்து வேற்றுமைக்குட்பட்டு பின்னர் ஒருமைப்பாடு எய்தாமல் விடப்படுமானால், இதுகாறும் நன்முறையில் செயல்பட்டு வந்த விதியின் பொதுத்தன்மை தற்போது ஐயத்திற்குரியதாகி, பரவலாக வழங்கப்படும் தன்மையை (Wide Application) இழந்து விடக்கூடும். உதாரணமாக எல்லையோரக் கடல் அகலம் பற்றி பல நாடுகள் மூன்று

மைல் கொள்கையை வழக்கில் ஏற்றுச் செயல்பட்டு வந்தன. ஆனால் ஹேக் மாநாட்டில் அக்கொள்கை பலவாறாக விவாதிக்கப் பட்டு இறுதியில் ஒருமைப்பாடு ஏற்படாமல் விட்டுவிடவே நாடுகள் மூன்று மைல் கொள்கையிலிருந்து விலகி தன்னிச்சை யாக எல்லையோரக் கடல் அகலத்தை நிர்ணயிக்கத் துவங்கின.

### இணை நாடுகளமைப்பின் தொகுத்தல் பணி

இணை நாடுகள் (United Nations) அமைப்பு சாசனத்தின் 13 (1) (a) பிரிவு, நாட்டிடைச்சட்டம் முற்போக்கான வளர்ச்சி யுறும் வகையில் தொகுக்கும் பணியை பொதுமன்றத்திடம் (General Assembly) ஒப்படைத்துள்ளது. இதன் முதன்மை யான நோக்கம் சிதறிக்கிடக்கும் சட்டமூலங்களைத் தொகுத் தெடுத்து சுருக்கமாகவும், ஐயத்திற்கிடமின்றியும், தெளிவாகவும் சட்ட விதிகளை வகுத்துத் தொகுப்பது. இது இருவகையில் அமையும். முதலாவதாக நாடுகளிடையே ஏற்கப்பட்டு வழங்கி வரும் வழக்காறு விதிகளைத் (Customary Laws) தொகுப்பது. இது சற்று எளிதானது. இரண்டாவதாக, ஏற்கனவே வளர்ச்சி யெய்தாமலும் இதுவரை தேவை ஏற்படாததுமாகிய சட்டங்களை உருவாக்கவேண்டிய அவசியமும் ஏற்படுவதுண்டு. உதாரணமாக வான்கொள்ளை (Sky Jacking) போன்றவைகளை ஒழிக்க இனிமேல்தான் சட்டங்களை ஏற்படுத்த வேண்டும். இணை நாடுகள் சாசனத்தின் 13. (1) (a) பிரிவு முற்போக்கான வளர்ச்சியுறும் சட்டங்கள் என்று கூறியிருப்பதனால், இதுவரை வழக்குக்கு வராத, இன்றைய உலக அரசியல் நிலைமைக்கு தேவையான சட்டங்களை உருவாக்குவதற்கும் பொது மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென்று ஏற்க இடமுள்ளது.

## பகுதி II பிரிவு (i)

# 6. நாடுகளை அங்கீகரித்தல்

நாகரீகமடைந்த நாடுகளின் பொது ஒப்புதலே (Common Consent) நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையாகக் (Basis) கொள்ளப்படுவதால், நாட்டமைப்பே மட்டுமே (Statehood) குடும்ப நாடுகளின் உறுப்பினராவதற்குப் போதுமானதல்ல. துவக்க காலத்தில் தங்களிடையே வழக்கம், உடன்படிக்கை மூலமாக நாட்டிடைச் சட்டத்தை தோற்றுவித்தவர்களே அதன் துவக்க கால உறுப்பினராவார்கள். இதற்கு மாறாகப் புது நாடு ஒன்று மலரும் பொழுது ஏற்கனவே இருக்கும் உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டால் தான் புதிதாகத் தோன்றிய நாடு, நாடுகளின் கூட்டுக் குடும்பத்தில் உறுப்பினராகும். ஆகவே அங்கீகரிப்பின் மூலமாக மட்டுமேதான் புதிதாகத் தோன்றிய நாடு உலக அரங்கில் நபராக (International Person) முடியும்; என்று ஒரு கருத்து நிலவுகிறது.

ஆனால் அனேக ஆசிரியப் பெருமக்கள் இதனை ஒத்துக் கொள்வதில்லை. இப்பொழுது இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட நாட்டினின்றும் உடைத்துக் கொண்டு, உதாரணமாக: (1831ஆம் ஆண்டு பெல்ஜியம் நாடு செய்ததைப் போலவும், 1971இல் பங்களாதேஷ் நாடு செய்தது போலவும்) ஒரு புது நாடு தோன்றினால் அது குடும்ப நாடுகளின் உறுப்பினராவதற்கும் உலக நாட்டு நபராவதற்கும் எவ்வித வெளித் தூண்டுதலுமின்றி தானாக அந்நிலைப் பெறுகிறது என்பது அவ்வாசிரியர்களது கருத்தாகும். நடைமுறையில் அங்கீகரிப்பு இருப்பதை அவர்கள் மறுக்கவில்லை. அந்நாடுகளின் தோற்றுவாயே உறுப்பினர்களாக்கி விடுகிறது எனவும், அங்கீகரிப்பு எனப்படுவது அப்பேருண்மை (Fact) மெய்ப்பிற்கும் சான்றாகும் எனகூறுகின்றனர். இதனைச் சான்றுக் கொள்கை (Evidentiary Theory) என்பர்.

எந்த ஒரு புதிய நாடும், தான், மற்ற நாடுகளால் அங்கீ கரிக்கப்படவேண்டுமென்று உரிமை கொண்டாட முடியாது. எந்த நாடும் புதிய நாட்டை அங்கீகரித்துத்தான் தீரவேண்டு மென்ற கட்டாயத்திற்குட்பட்டதல்ல. குடும்ப நாடுகள் தங்களுக்கிடையேயுள்ள உரிமைகளை மற்ற நாடுகளின் அங்கீ கரிப்பின்றி பெறுவதற்கில்லை என்பது நாட்டிடைச் சட்டத்தின் விதி ஆகும் என்று மற்றொரு சாரார் கூறுகின்றனர். ஆனால் ஆராயுமிடத்து ஒரு சமுதாயம்தான் ஒரு சுதந்திர நாடாகக் கருதப்படவேண்டும் என்று எழுப்பும் உரிமைக்குரலே அதன் குடும்ப நாடுகளின் உறுப்பினராவதற்குரிய உரிமையை அளித்து விடுகின்றதென்றால் அங்கீகாரம் என்பது பொரு ளற்றுப் போய்விடும் என்ற கருத்தும் நிலவுகிறது. எனவே ஒருநாடு அங்கீகாரம் பெறுவதன் மூலமாகத்தான் உலக நாடுகளின் உறுப்பினராகும் தகுதியைப் பெறுகின்றது.

ஒரு புதிய நாட்டை உலக நாடுகளின் அமைப்பில் உறுப் பினராக அங்கீகரிப்பதன் மூலம் அங்கீகரிக்கும் நாடுகள் தங்கள் கருத்தின்படி புதியநாடு நாட்டிடைச் சட்டத்தில் கோரப்பட்டுள்ள விதிகளை முழுவதுமாக நிறைவேற்ற ஏற்றுக் கொண்டு சம்மதம் அறிவிப்பதாகக் கருதப்படுகிறது. புதிய நாடு எல்லாவிதத்திலும் நாட்டிடைச் சட்டத்தில் கூறப் பட்டுள்ள இலக்கணங்களைப் பூரணமாக நிறைவேற்றுகின்றதா என்பதை தீர்மானிக்கின்ற பொறுப்பு உறுப்பு நாடுகளிடமே விடப்பட்டுள்ளது. அதை அந் நாடுகள் நல்லெண்ணத் துடனும் நீதி நெறியின்படியும், கடமை உணர்ச்சியுடன் செய்ய வேண்டும்.

அங்கீகரிக்கும் நாடுகள் தங்கள் சொந்த நலனைப் பொறுத்த வரை காப்பாளராக ஒருபுறமும், நாட்டிடைச்சட்டத் தின் சார்பாளராக மற்றொரு புறமும், இரு வேறுபட்ட குணம் கொண்ட கடமையை நிறைவேற்ற வேண்டியதிருப்பதால், அங்கீகரிக்கும் செயலிலோ அல்லது அதனை மறுக்கும் செயலிலோ அரசியல் நோக்குகளைக் கலந்து விடச்செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது. ஆனாலும் இவ் விரு கடமை உணர்ச்சியும் அதன் இன்றியமையாத சட்ட இயல்பினை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. அங்கீகரிக்கப்பட்ட நாடு உலக அரங்கில் பெறும் உரிமைகளே அவற்றின் கடமைகளின் தோற்றுவாய் ஆகும்.

ஏற்கனவே இருக்கும் நாடொன்றிலிருந்து புரட்சியின் மூலம் தன்னை விடுவித்துக் கொண்டு தன்னைப் புதிய நாடாக

அறிவிக்கும் பொழுது அங்கீகரித்தல் அதிக முக்கியத் துவத்தை பெறுகின்றது. அப் புதிய நாடுகள் ஏற்கனவே உண்மையாகவே சகல பாதுகாப்புடனும், நிலையாகவும் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டதா, அல்லது அம் முயற்சியில் ஈடு பட்டிருக்கின்றதா என்பதை மற்ற நாடுகள் முடிவு செய்ய வேண்டும். உள் நாட்டுப் போர் ஒவ்வொன்றின் போதும் புரட்சி செய்வோர் அந்நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றி அப் பகுதியில் அவர்களது சொந்த அரசு ஒன்றை ஏற்படுத்தி போர் விதிகளின்படி தங்களது போரினை நடத்திஞல் அப் புரட்சி கூட்டத்தாரை வெளி நாடுகள் ஒரு போரிடும் நாடா கவே (Belligerent Countries) அங்கீகரித்தால் அதில் சந்தேகப் படுவதற்கொன்றுமில்லை. ஆஞல் இவ்வாறு புரட்சிக் கூட்டத் தாரை போரிடும் நாடாக கருதுவதற்கும் அவர்களையும் அவர்கள் கொண்டுள்ள நிலப்பகுதியையும் ஒரு நாடாக அங்கீகரிப்பதற்கும் மாபெரும் வித்தியாசம் இருக்கின்றது குறிப்பாக எந்த நேரத்தில் அப் புரட்சி கூட்டத்தாரை புது நாடாகவே அங்கீகரிப்பது என்பதே பிரச்சனைக்குரிய கேள்வி யாகும். உரிய காலத்திற்கு முன்னதாகவே தகாத துணிச்ச லோடு அங்கீகரித்தால் அது அந்தத் தாய் நாட்டின் தன் மானத்தைத் தகர்ப்பதாகவும் அதன் விவகாரங்களில் தலையிட்ட தாகவும் கொள்ளப்படும்.

அது சட்டமுறையற்ற செயலாகும். அந் நாட்டுப் பிரச்சனை யில் ஊடுருவியதாகவே கருதப்படும். ஆகவே அதைப் போன்ற சமயங்களில் புரட்சி நாடு தாய் நாட்டை வென்ருலோ அல்லது தாய் நாடு புரட்சி நாட்டை ஒடுக்கும் முயற்சிகளைக் கைவிட்டு விட்டாலோ, அல்லது தாய் நாடு அப் புரட்சி நாட்டை தன் கைவசத்திற்கு மீண்டும் கொண்டு வரும் திறனை வெளிப்படை யாகவே இழந்து விட்டாலோ, அப்பொழுது வெளி நாடுகள் எவ்வித குற்றச்சாட்டுகளுக்கும் இடமின்றி அப் புரட்சி நாட்டை அங்கீகரிக்கலாம்.

புது நாடு ஒன்றினை அங்கீகரிப்பதையும் புதிய அரசுத் தலைமை அல்லது புதிய அரசை அங்கீகரிப்பதையும் ஒன்ருகவே கருதக்கூடாது. ஒரு நாட்டின் அரசு தலைமையில் மாறுதலை, அரசில் மாறுதல் அல்லது அந்நாட்டின் பெயரில் மாறுதல் என்பவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளேயாகும். ஆஞல் இவைகளை அங்கீகரிப்பதற்கும் நாட்டை அங்கீகரிப்ப தற்கும் எவ்விதத் தொடர்பில்லை. ஒரு பழைய அரசின் புதிய ஆட்சித் தலைமையை அல்லது ஆட்சி மாற்றத்தை வெளிநாடு

அங்கீகரிக்க மறுத்தால், அதன் காரணமாக அவ்விரு நாடுகளிடையே உறவு முறைகள் நிறுத்தி வைக்கப்பட்டாலும், அப் புதிய நாடு உலக நாடுகள் நபர் என்ற அங்கீகாரத்தை இழந்ததாகக் கருத முடியாது.

உள்நாட்டுச் சட்டப்படி புதிய ஆட்சித் தலைவர் பதவிக்கு வருவாரானால் அவர் மன்னராகவோ அல்லது குடிஅரசுத் தலைவராகவோ, பிற நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டு அந் நாடுகளின் வாழ்த்துச் செய்திகளின் மூலம் அங்கீகாரத்தைப் பெறுகின்றார். அவர் அப் பதவிக்கு வருவது நாட்டிடைச் சட்டத்தாலல்ல; உள்நாட்டுச் சட்டத்தால்தான் என்பதை நினைவில்கொண்டால் நாட்டிடைச்சட்டத்தின் அவ் வறிவிப்புகளும், அங்கீகாரங்களும் தவிர்க்கமுடியாத தேவையாகக் கருதமுடியாது என்பது 'உள்ளங்கை நெல்லிக் கனியாக' விளங்கும். ஆனாலும் அவைகளில் சிலவற்றில் சட்ட முக்கியத்துவங்களும் அடங்கியுள்ளன. அவ்வறிவிப்பின் மூலம் அக் குறிப்பிட்ட நபரே நாட்டின் உயர் தலைமை என்பதையும் உள்நாட்டுச் சட்டத்தின்படி அவர்தான் வெளிநாட்டு உறவுமுறைகளில் நாட்டின் சார்பில் முழுவதுமாக தன்னுட்டைக் கட்டுப்படுத்தும் செயல்களைச் செய்யும் அதிகாரம் பெற்றவரென்றும் அந்நாடு மற்ற நாடுகளுக்கு அவ் வறிவிப்புகளின் மூலமாக அறிவிக்கின்றது. இதற்கு மாறுதலைச் செயலாக மற்ற நாடுகளும் அந் நபரை அங்கீகரிப்பதன் மூலம் அந் நாட்டின் உயர் அங்கமாகக் கருதி அவருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராயிருப்பதாக அறிவிக்கின்றன. சாதாரணமாக ஒரு அரசர் அல்லது தலைவர் மறைவுற்று மற்றவர் வரும் பொழுதும், எவ்வித புரட்சியும் இல்லாமல் முடிஆட்சி குடியாட்சியாக மாறும் பொழுதும் அங்கீகாரம் என்பது சாதாரண நடைமுறைச் செயலாகும்.

ஆனால் ஆட்சித் தலைமை மாற்றம் சட்டப்படி நிகழாமல் புரட்சியின் மூலமோ அல்லது வேறு எவ்வகையிலோ நிகழ்ந்தால், அத் தலைமையை மற்ற நாடுகள் எப்படிக் கருத வேண்டுமென்பது மிகவும் சிக்கலான கருத்தாகும். புதிய ஆட்சியினர் அந் நாட்டின் சார்பாளர்களாக (Representing) இருக்கின்றார்களா என்ற கேள்விக்கு அங்கீகாரம் தரும் நாடுகள் சரியான விடை காணவேண்டும். நாட்டிடைச் சட்டம் முற்றிலும் அரசியல் காரணங்களின் அடிப்படையிலேயே இம் முடிவெடுப்பதை அனுமதிப்பதில்லை. அரசு ஒன்று அங்கீகரிக்கப் படாவிட்டால் அந் நாடு உலகக் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்குரிய உரிமைகளையும் பயன்களையும் கடமைகளையும் இமக்க

நேரிடும். சட்ட வரைமுறைகளுக்கு அப்பால் இதற்கு தீர்வு காணுதல் என்பது கடினமான காரியமாகும். ஒரு நாட்டு மக்களில் பெரும்பான்மையினரால் தோற்றுவிக்கப்பட்டு, நீதி உணர்வுகளுடனும், மக்களின் கீழ்படிதலுடனும் நிலையான ஆட்சியைத் தோற்றுவித்துள்ள அரசே அந் நாட்டைப் பிரதி பலிப்பதும் அங்கீகாரத்திற்குடையதுமாகும். எனவே ஒரு அரசை அங்கீகரிப்பதா, வேண்டாமா என்பது அந் நாட்டின் நடைமுறைச் செயலாற்றலை வைத்தே முடிவு செய்யப்பட வேண்டும்.

ஐ.நா.விலும் அதன் அமைப்புகளிலும்கூட இப் பிரச்னைகள் எழுவதுண்டு. எடுத்துக்காட்டாக உள்நாட்டின் போர் காரண மாகவோ (உதாரணம் - சீன) அல்லது புரட்சியின் மூலமாகவோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகள் தோன்றி ஒவ்வொன்றும் ஐ.நா. போன்ற அமைப்புகளில் தாங்களே தங்கள் நாட்டின் உண்மையான அதிகாரப்பூர்வமான பிரதி வாதிகள் என்று வாதிடுவதுண்டு. 1950ஆம் ஆண்டு சீன நாட்டை (தைவான் தீவைத் தவிர) மாசே துங் தலைமையிலான அரசு கைப்பற்றி முழுத் திறனுடன் ஆட்சி செய்து வருவதால் சீன நாட்டின் சார்பாக ஐ.நா. வின் அமைப்புகளில் தன்னையே சீன நாட்டின் சார்பாளராக ஏற்க வேண்டுமென்றும், சியாங்-கே-ஷேக்கின் ஃபார்மோஸா அரசு, சீனத்தைப் பிரதிபலிக்காது என்றும், தனது அரசே உண்மை அரசு என்றும் மா-சே-துங்கு கூறிவந்ததால், இது நீண்ட நாள் தீராப்பிரச்னையாக இருந்து வந்தது. மா-சே-துங் அரசை சிறுபான்மை நாடுகள்தான் முதலில் அங்கீகரித்தன. நாளடைவில் அதிக நாடுகள் அங்கீ கரிக்க ஆரம்பித்தன. 1950ஆம் ஆண்டு ஐ. நா. பொது மன்றம் இக் கேள்விக்கு சாசனத்தின் நோக்கங்களையும், கோட் பாடுகளையும் கவனத்தில் வைத்து ஆராய வேண்டும் என்று தீர்மானித்து இதனைத் தள்ளிப்போட்டு வந்தது. எனினும் அண்மையில் 1972ஆம் ஆண்டு மா-சே-துங் தலைமையிலுள்ள செஞ்-சீன ஐ. நா.வின் உறுப்பு நாடாக ஏற்கப்பட்டது. ஆனால் ஐ. நா. வின் மற்ற உறுப்பு நாடுகள், அதனை அங்கீகரித்துத் தான் ஆகவேண்டும் என்று பொருளாகாது.

**நிகழ்வு நிலை அங்கீகாரம்** (Deffacto Recognition): ஒரு நாட்டில் புதிய அரசு ஒன்று தோன்றியுள்ளது. அது நிகழ்வு நிலையில் தன்னியக்கம் பெற்று அதன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் மேலாண்மையுடன் அரசோச்சுகின்றது. ஆனாலும் அங்கீ கரிக்கும் வெளிநாடுகளின் கருத்துப்படி அந் நாடு தன்னை

நிரந்தரமாக உறுதியாக்கிக் கொள்ளவில்லையென்றோ அல்லது அந்நாடு அனைத்துலக அரங்கில் தன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தயங்கும்போதும் அல்லது தவறும்போதும், சட்டப்படி இல்லாவிட்டாலும் அந் நாட்டை செயல் நிலையில் அங்கீகரிக்கலாம். இதனையே நிகழ்வு நிலை அங்கீகாரம் என்பர்.

முதலாம் உலகப் போருக்குப் பிறகு ரஷ்யப் பேரரசிலிருந்து விடுவித்துச்சென்ற ஃபின்லாந்து, லாட்வியா, எஸ்த்தோனியா போன்ற நாடுகள் தங்களுக்கென்று தனித்தன்மையும், இயக்கமும் பெற்ற மேலாண்மை அரசுகளை அமைத்துக்கொண்டன. அவ் வரசுகளுக்கு மற்ற நாடுகள் நிகழ்வு நிலை அங்கீகாரம்தான் அளித்தன. அதேமாதிரி சோவியத் அரசும் முதலில் நிகழ்வு நிலை அங்கீகாரத்தைத்தான் பெற்றது. சிலவேளைகளில் அயலார் சொத்துக்களை உள்நாட்டு அரசு பறிமுதல் செய்யும் பொழுது கொடுக்கவேண்டிய இழப்பீட்டை (Compensation) அளித்தல், தன் முந்திய அரசுகளின் பொருளாதாரக் கடமைகளுக்கு (Financial Obligations) பொறுப்பேற்றுக்கொள்வது போன்ற அனைத்துலகக் கடமைகளை நிறைவேற்ற மறுக்கின்ற காரணத்தால் இந் நாட்டுக்கு முதலில் நிகழ்வுநிலை அங்கீகாரம் மட்டுமே மற்ற நாடுகளால் தரப்பட்டன.

நிகழ்வு நிலை அங்கீகாரம் எந்நேரத்திலும் திரும்பிப் பெறக் கூடும். அஃதாவது அங்கீகாரம் பெறுவதற்குரிய தேவைகள்.

நிகழ்வு நிலை (Defacto) அங்கீகாரம் தற்காலிகமானதால், அங்கீகரித்தலுக்குத் தேவையான நிலைமைகளைத் தோற்றுவிக்கும் முயற்சியில் தோல்வியுற்றால் எந்நேரத்திலும் அங்கீகாரத்தை இழந்துவிடக்கூடும். ஆனால் இதைத்தவிர இதற்கும், சட்டபூர்வமான அங்கீகாரத்திற்கும் வேறுபாடு எதுவுமில்லை. ஏனெனில் அங்கீகரிக்கும் நாட்டு நீதிமன்றங்கள், நிகழ்வு நிலை அங்கீகாரம் பெற்ற நாட்டின் சட்டமன்றங்களையும், உள்ளாட்சி நடவடிக்கைகளையும் சட்டபூர்வ அங்கீகாரம் பெற்ற நாட்டினது போலவே கருதுகின்றனர்.

**லூத்தர்-ஏ-சாகோர்** (Luther-U-Sagor): (1921) 3KB 532. இவ் வழக்கில் நிகழ்வு நிலை அங்கீகாரம் பெற்ற நாடுகளுக்கும் உலக நபர்களுக்குண்டான சலுகைகளும், உரிமைகளும், பாதிக்கப்படாத தன்மையும் (Ex territoriality) வேற்று நாட்டு நீதிமன்றங்கள் முன் உண்டென்று தீர்ப்பு வழங்கப் பட்டது.

1. ஒரு புதிய நாட்டையோ அரசையோ அங்கீகரிப்பதின் காரணமாகத் தோன்றும் முக்கிய விளைவுகள்:

(அ) மற்ற நாடுகளுடன் அரசியல், தூதியல் (Diplomatic) உறவுகொள்வதற்கும், அந் நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்வதற்கும் தகுதியைப் பெறுகின்றது.

(ஆ) இரு நாடுகளுக்கிடையே முன்பு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள், மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டு, செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது.

(இ) அங்கீகரிக்கும் நாட்டு நீதிமன்றங்களில் அங்கீகாரம் பெற்ற நாடு வழக்காடுவதற்கான உரிமையினைப் பெறுகின்றது.

(ஈ) தனக்கும், தன்னுடைய சொத்திற்கும் அங்கீகரிக்கும் நாட்டு நீதிமன்றங்களின் சட்ட ஆட்சியினின்றும் காப்புரிமை பெறுகின்றது.

(உ) அங்கீகரிக்கும் நாடுகளில் முன்பிருந்த அரசின் சொத்துக்களுக்கு உரிமைகொண்டாடவும் தன் உடைமைக்குக் கொண்டுவரவுமான உரிமையுடையது.

(ஊ) அங்கீகரித்தலால் பின்னோக்கி, அதாவது அது தன்னை உறுதியாக ஆட்சியில் அமைத்துக்கொண்ட நேரத்திலிருந்து, செயல்படுகின்ற திறனுடையது. அங்கீகரிப்பதற்குமுன் ஏற்பட்ட சட்டமன்ற செயலாட்சித்துறையைச் சார்ந்த நடவடிக்கைகள் முறைப்படியான சட்டமாகுமா என்று அங்கீகரிக்கும் நாட்டு நீதிமன்றங்கள் விசாரிக்கக்கூடாது. மேற்கண்ட அங்கீகரித்தலைத் தவிர கீழ்க்காணும் அங்கீகார வகைகளும் உள்ளன.

(அ) போர் நிலையை அங்கீகரித்தல் (Recognition of Belligerency).

(ஆ) ஆட்சிக்கெதிரான கலகத்தை அங்கீகரித்தல் (Recognition of Insurgency).

**கலக அங்கீகாரம்** (Recognition of Insurgency):

தாய்நாட்டிலிருந்து பிரிந்து செல்ல உள்நாட்டுப் புரட்சியோ, அல்லது கலகமோ ஏற்படும்போது, மூன்றாவது நாடுகள் கலக நாட்டை உடனடியாக அங்கீகரிக்கக்கூடாது. அவ்வாறு

செய்தால், அது தாய்நாட்டின் உள் நாட்டு விவகாரத்தில் தலையிட்டதாக அமையும். ஆனால் கலக நாடு தனக்கென்று ஒரு நாட்டமைப்பையும் அரசையும் உறுதியாகத் தோற்றுவித்துக் கொண்டாலோ அல்லது தாய்நாட்டை உள் நாட்டுப் போரில் தோற்கடித்துவிட்டாலோ அங்கீகரிக்கலாம்.

**அங்கீகரிப்பது :**

நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கலாம். அங்கீகாரம் கோரும் நாடு அல்லது அரசிற்குத் தன் அங்கீகாரத்தை முறையோடு அறிவித்தால் அது நேரிடையான அங்கீகாரம் ஆகும். வெளிப்படையாகவே அங்கீகார அறிவிப்பு வராவிட்டாலும், அளிப்பதற்கான தன் எண்ணத்தை எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றிச் செயல்கள் மூலம் வெளிக் காட்டுவது மறைமுக அங்கீகாரமாகும். இவ்வித அங்கீகாரம் எல்லா நாட்டின் ஐயப்பாட்டிற்கிடமில்லாமல் எண்ணத் தெளிவைப் பொறுத்திருக்கின்றது. இந்த எண்ணத்தெளிவு ஏற்பட்டாலொழிய அங்கீகாரம் அளிக்கப்பட்டதாகக்கொள்ளக் கூடாது. உதாரணமாக: நாடுகளுக்கிடையேயான மாநாடுகளில் அங்கீகாரம் பெறாத நாடும் பங்குகொள்வதால் அது அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டதாகக் கொள்ளக்கூடாது.

**மறைமுக அங்கீகாரம்:**

(அ) அவ் விரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை முழுமையான அளவு ஒழுங்குபடுத்தி (Regulating) வாணிபம் போன்ற உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் போதும்,

(ஆ) அரசியலில் உறவுகளை மேற்கொள்ளுவதற்கான நடைமுறைச் செயல் துவக்கும்போதும்,

(இ) போர் நிலையை அங்கீகரிக்கும் பொழுது தன்னுடைய நடுநிலைக் கொள்கையைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் போதும் மறைமுக அங்கீகாரம் ஏற்படும் எனலாம்.

**கடந்த காலத்திலிருந்தே செயலுக்கு வரும் அங்கீகாரம்** (Recognition with Retrospective Effects):

அங்கீகாரம் கடந்த காலத்திலிருந்தே செயலுக்கு வரக் கூடிய ஆற்றலுடையது. அதாவது ஒரு நாடு புதிதாகத் தோன்றுமானால் தோன்றியவுடனே அதனை அங்கீகரிக்காமல் சில நாடுகள் காலந்தாழ்த்தி அங்கீகரிக்கப்படுவதுண்டு. இவ்வாறு அங்கீகரிப்பதன் மூலம், அங்கீகரிக்கும் நாடு அங்கீ

கரிக்கப்பட்ட நாடு அங்கீகரிப்பதற்கு முன் செய்த செயல்களைப் பொறுத்தவரை எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதனையும் அறிந்து கொள்வது அவசியம். அமெரிக்காவின் நடைமுறை வழக்கத்திலும், இங்கிலாந்து நாட்டு வழக்கத்திலும், புதிதாகத் தோன்றும் ஒரு நாடு அங்கீகரிக்கப்படும் போது அந்த நாடு எப்போது அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் அது தோன்றிய நாள் முதல் செய்த அத்தனைச் செயல்களுக்குமே அங்கீகாரம் ஏற்படும். எனவே அங்கீகரிக்கும் நாட்டு நீதி மன்றங்கள் இத்தகைய அங்கீகரிப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நாட்டின் செயல்களை அந்நாடு செயல்படத் துவங்கிய காலத்திலிருந்தே முறையான வைகளாகக் கருதும் என்ற கருத்து லூதர்—எ—சாகோர் (Luther—U—Sagor) வழக்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இம் முறைக்கு அனைத்து உலக வழக்கில் நேரிடையான அடிப்படை ஆதாரம் எதுவுமில்லை. எனினும் நாடுகளுக்கிடையே நடைமுறையில் செயல் நலத்தைக் கருதி இவ் வழக்கமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுதல் :**

அங்கீகாரம் என்பது ஒரு நாடு மற்றொரு நாட்டைத் தனக்கிணையான ஒரு உலக நபராக ஏற்றுக் கொள்ளும் விழைவினை அறிவித்தலே ஆகும். இவ் வறிவிப்பின் மூலம் அங்கீகரிக்கும் நாடு ஒரு சமுதாயம் நாட்டின் தன்மைகளைப் பெற்று நாடாக மலர்ந்துள்ளதென்றோ அல்லது ஒரு நாட்டை போர் நாடு என்றோ ஏற்கிறது. ஒரு நாட்டை அங்கீகரிப்பதற்குக் காரணமாக இருந்த தன்மைகள் என்றென்றும் நிலையாக இருக்குமென்று எண்ணமுடியாது. உதாரணமாக : ஒரு நாடு தனது தனித்தன்மையையோ, வலிமை மிக்க அரசு ஆற்றலையோ இழந்து விடக்கூடும். இக் காரணங்களுக்காக அங்கீகரிக்கும் நாடு தனது அங்கீகரிப்பைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமேயானால் அச் செயலை தவறாகக்கூற இயலாது. சில சமயங்களில் போட்டி அரசை சட்டப்படி (De Jure) அங்கீகரிப்பதின் மூலம் முந்தய அரசிற்கு அளிக்கப்பட்ட நிகழ்வு நிலை (Defacto) அங்கீகாரம் திரும்பப் பெற்றதாகக் கருதப்படும்.

**அங்கீகரிப்பின் மறுப்புக்கொள்கை அல்லது ஸ்டிம்சன் கொள்கை (Stimson Doctrine of Non Recognition):**

1931 இல் ஜப்பான் உலகநாடுகள் மன்றத்தில் ஒரு உறுப்பினராக இருந்தபோது, சைனாவிற்குச் சொந்தமான மஞ்சூரியாவை முற்றுகையிட்டு தெற்கு மஞ்சூரியாவைத் தன் வயப்படுத்திக்

கொண்டது. இத்தகு சூழ்நிலைகளில் வன்முறையினடிப்படையில் நடந்த இந் நிகழ்ச்சிக்குத்தான் அங்கீகாரம் தர இயலாது என்று அமெரிக்க நாட்டு செயலாளர் திரு. ஸ்டிம்சன் (Secretary of State) அறிவிப்பு விடுத்தார். அது முதல் எந் நாட்டிற்கேனும் இவ் வகைக் காரணங்களுக்காக, அங்கீகாரம் மறுக்கப்பட்டால் அவ்வாறு அங்கீகாரம் மறுத்தலை 'ஸ்டிம்சன் கொள்கை' என அழைக்கப்படுகிறது.

1945இல் ஐ.நா. அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து அங்கீகரிப்பு மறுப்புக் கொள்கையில் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது.

1. 1948இல் அமெரிக்க நாடுகள் அமைப்பின் பகோடா சாசனத்தின் பதினேழாவது பிரிவில் 'வன்முறையாலோ, பலாத்காரத்தாலோ ஈட்டும் நிலப்பரப்பையும், தனிச் சலுகைகளையும் அங்கீகரித்தல் கூடாது' எனக் கூறப்பட்டுள்ளது.

2. 1949இல் அனைத்துலக சட்டக்குழு இயற்றிய நாடுகளின் உரிமைகள், கடமைகள் பற்றிய விழைவு அறிக்கை வரைவின் 11—வது பிரிவில் (Article 11 of the Draft declaration on the rights and duties of States prepared by the International Law Commission in 1949). 'நாடுகள், மற்ற எந்நாடேனும் அச்சுறுத்தலாலோ, வன்முறை காட்டியோ ஈட்டும் நிலப்பரப்பினை அங்கீகரித்தல் கூடாது' என்று கூறுகிறது.

3. நாடுகளின் நட்புறவையும் ஒத்துழைப்பையும் உருவாக்குவதற்கான நாட்டிடைச் சட்டக் கொள்கைகளை வெளிப்படுத்தும் விழைவு அறிக்கையை ஐ.நா. பொதுமன்றம் 1970இல் ஏற்றுக் கொண்டுள்ளது. அதிலும் மேற்கூறிய கருத்தே வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

**தென் மேற்கு ஆப்பிரிக்காவில் (Namibia) தென் ஆப்பிரிக்கா தொடர்ந்திருப்பதைப் பற்றிய சட்டபூர்வமான விழைவுகளையொட்டி உலக நீதி மன்றம் அளித்த அறிவுரைக்கருத்து** (Advisery Openion Regarding the Legal Concequences For States of the Continued Presence of South Africa in South West Africa (Namibia).

உலக நீதிமன்றத்தின் இந்த அறிவுரை கருத்து 1971 ஜூன் 21இல் வெளியிடப்பட்டது. இதில்,

1. ஐ.நா. வின் மேற்பார்வையிடுதலை ஏற்றுக் கொள்ளாததனால் தென் ஆப்பிரிக்கா நமீபியாவில் தொடர்ந்து இருந்து

வருவது சட்டத்திற்குப் புறம்பானது, எனவே வெளியேற வேண்டும்.

2. தென்-ஆப்பிரிக்கா இதற்கு ஒப்புக் கொள்ளாததனுல் ஐ. நா. வின் உறுப்பு நாடுகள்

(அ) தென் ஆப்பிரிக்கா நமீபியாவில் தொடர்ந்திருப்பதை சட்டபூர்வமாக ஏற்று அங்கீகரிக்கக் கூடாது.

(ஆ) நமீபியாவிற்குச் சம்பந்தப்பட்டோ அல்லது நமீபியா வின் சார்பாகவோ, தென் ஆப்பிரிக்கா ஆற்றும் எந்தச் செயலேயும் அங்கீரிக்கக் கூடாது.

(இ) தென் ஆப்பிரிக்கா நமீபியாவில் தொடர்ந்திருப்பதற் குண்டான உதவியையோ, ஆதரவையோ தருவதைத் தவிர்க்கவேண்டும்

என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# 7. உலக நபர்களிடையே வாரிசுரிமை

இத் தலைப்பையொட்டி சட்ட நிபுணர்களிடையே கருத் தொற்றுமை இல்லையானாலும் கீழ்க் கண்ட பொதுவான கொள்கைகளைக் குறிப்பிடலாம்.

ஒரு உலக நபரின் நிலையில் ஏற்படும் சில மாறுதல்களின் காரணமாக அந்த உலக நபரின் இடத்தை மற்ற உலக நபர்கள் கைக் கொள்ளும்போது வாரிசுரிமை உண்டாகிறது. இது முழு வாரிசு (Universal Succession) எனவும், பகுதி வாரிசு (Partial Succession) எனவும் இரு வகைப்படும்.

**முழு வாரிசு :**

இவ் வகை வாரிசுரிமை ஒருவகை நபர் மற்றொரு உலக நபருடன் முற்றிலும் இணையும் பொழுது ஏற்படும். இது தானாகவோ அல்லது அடிப்படுத்துதாலோ நேரலாம். அல்லது ஒரு நாடு துண்டு துண்டாகச் சிதறி பல நாடுகள் பல்வேறுப் பகுதியை தங்களுடன் இணைத்துக் கொள்வதாலும் நேரலாம்.

**பகுதி வாரிசு :**

இவ் வகை வாரிசுரிமை ஒரு நாட்டின் பகுதி அதனிடமிருந்து பிரிந்து, தனி நாடாவதாலோ, விடுதலை பெறுவதாலோ அல்லது ஒரு நாட்டின் நிலப்பரப்பில் ஒரு பகுதி மற்ற நாட்டுடன் இணைந்து விடுவதாலோ, தனி மேலாண்மை கொண்ட நாடுகள் கூட்டாட்சியின் உறுப்பு நாடுகளாக மாறுவதாலோ நேரலாம்.

இவ்வாறு ஒரு நாடு மற்ற நாட்டின் வாரிசாகும் பொழுது என்னென்ன உரிமைகளும், கடமைகளும் இவற்றின் மீது விழுகின்றன என்பதைக் காண்போம்.

**ஒருநாடு மற்ற நாட்டுடன் இணையும்போது வாரிசுரிமை:**

ஒருநாடு தன்னிச்சையால் மற்றொரு நாட்டுடன் இணைதல் உண்டு. உதாரணமாக 1910இல் கொரியா ஜப்பானுடன் இணைந்தது. இவ்வாறு இணையும் போது இணையும் நாடு இணைத்துக் கொள்ளும் நாட்டுடன் இரண்டறக் கலந்து மறைந்து விடுகிறது.

**(அ) அரசியல் உரிமைகளும் கடமைகளும்** (Political Rights and Duties):

இணையும் நாட்டின் அரசியல் குணங்கள் அழிவதால், அந் நாட்டுடன் மற்ற நாடுகள் செய்து கொண்ட அரசியல் சம்மந் தப்பட்ட உடன்படிக்கைகள் செயலிழந்து விடும். பெரும்பா லான வல்லுநர்கள், வணிக மற்றும் மீட்டொப்படைப்பது சம்மந்தப்பட்ட உடன்படிக்கைகளும்கூட செயலிழந்து போகும் என்று கூறுகின்றனர்.

**(ஆ) உள்நாட்டு உரிமைகளும் கடமைகளும்** (Local Rights and Duties):

இணையும் நாட்டினது உள்நாட்டோடு சம்மந்தப்பட்ட உலக அரங்க உரிமைகளும் கடமைகளும் இணைத்துக் கொள்ளும் நாட்டின் மீது விழும்.

**(இ) சொத்துக்களும் கடன்களும்** (Fiscal Properties and Debts):

இணையும் நாட்டின் சொத்துக்களும், பணமும் இணைத்துக் கொள்ளும் நாட்டைச்சாரும். அதேபோல் இணையும் நாட்டின் கடன்களுக்கும் இணைத்துக் கொள்ளும் நாடு கட்டுப்பட்டது. இதனையொட்டி சில நாட்டிடைச் சட்டநிபுணர்கள் இணைத்துக் கொள்ளும் நாடு இணையும் நாட்டினது சொத்து மதிப்பை விடக் கடன் அதிகமாக இருந்தால் அதையும் கட்டவேண்டும் என்கின்றனர். ஆனால் இது நடைமுறையில் வருவது கடினம்.

**(ஈ) வணிக ஒப்பந்தங்கள்** (Business Contracts):

பெரும்பான்மையான சட்ட வல்லுநர்கள், இணையும் நாடு செய்து கொண்ட வணிக ஒப்பந்தங்களை நிறைவேற்றித்தர கடமைப்பட்டது என்று கூறுகின்றனர்.

**(உ) சலுகை தரும் ஒப்பந்தங்கள்** (Concessionary Contracts):

இணையும் நாடு மற்ற நாடுகளுடன் எவ்விதத்திலேனும் சலுகை தருவதாகக்கூறி ஒப்பந்தம் செய்து அவ் வொப்பந்

த்தை ஏற்கனவே நிறைவேற்ற தொடங்கியிருந்தால் இணைத்துக் கொண்ட நாடு அவ் வொப்பந்தத்தை மதித்து நடக்கக் கடமைப்பட்டது.

(ஊ) குற்றங்கட்கு அறுதியிடாத இழப்பீடு (Unliquidated damages for Tirts and Delicts):

இணையும் நாடு இதையொட்டித் தன் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தாலோ அல்லது இழப்பீட்டுத் தொகை தருவதாக ஒப்புக் கொண்டிருந்தாலோ இணைத்துக் கொண்ட நாடு அதனைத்தரக் கடமைப் பட்டது எனவும் இல்லையென்றால் கட்டுப்படவேண்டியதில்லை எனவும் கருத்து நிலவுகிறது.

(எ) ஒப்பந்த மீறுதல்களுக்கு அறுதியிடப்படாத இழப்பீடு (Unliquidated damages for breach of Contract):

இங்கும் கூட இணையும் நாடு ஏற்கனவே தனது ஒப்பந்த மீறுதலுக்கு இழப்பீடாக ஏதேனும் தொகை தருவதாக ஒப்புக் கொண்டிருந்தால் இணைத்து கொண்ட வாரிசு நாடு அதனைத் தரக் கடமைப்பட்டது.

(ஏ) நாடுகள் சிதறுவதால் ஏற்படும் வாரிசுரிமை :

ஸ்வீடனும் நார்வே நாடும் 1905இல் இணைப்பு நாடுகளாக இருந்து பிரிந்து கொண்டன. அப்பொழுது இணைப்பு நாடு பொதுவாகச் செய்து கொண்ட உடன்படிக்கைக் கடப்பாடுகள் உறுப்பு நாடுகளினால் தத்தம் உள்நாடு சம்மந்தப்பட்ட வரையில் நிறைவேற்ற வேண்டியதாயிற்று.

(ஐ) பிரிவினையால் ஏற்படும் வாரிசுரிமை :

ஒருநாடு தனது ஒரு பகுதிக்கு விடுதலை வழங்குவதாலோ, பிரிந்து தனித்தனி நாடுகளாவதாலோ இவ் வாரிசுரிமை ஏற்படும். இதன் மூலம் உள்நாட்டுடன் சம்மந்தப்பட்ட உலக அரங்க உரிமைகளும், கடமைகளும் புதுநாட்டின் மீது விழும். ஒவ்வொரு நாடும் தன் நிலப்பரப்பு சம்மந்தப்பட்ட கடன்களை அடைக்கக் கடமைப்பட்டவை.

# 8. நாடுகளின் வகைகள்

உலக நபர்கள் அதாவது நாடுகள் பெரும்பாலும் தனிக் கோன்மை நாடுகளேயாகும் (Single Sovereign States). இத்தகு நாடுகளில் அவற்றின் சார்பாக நாட்டிற்குள்ளேயும் வெளியேயும் செயல்பட ஒரு ஆட்சி அமைப்பே உண்டு. இந் நாடுகள் தனிஉலக நபர்களாகும் (Simple International Persons). முதல் உலகப் போருக்கு முன்னர் பிரிட்டன் தன்னகத்தே கனடா, ஆஸ்ட்ரேலியா, தென் ஆப்ரிக்கா, நியூஸிலாந்து போன்ற நாடுகளை உள்ளடக்கியிருந்த போதும், அவை தனிக்கோன்மை பெற்றிராததால் பிரிட்டன் மட்டுமே உலக நபராகக் கருதப் பட்டு உலக அரங்கில் இவற்றின் சார்பாகச் செயல்பட்டு வந்தது.

இதற்கு மாறாக உலக வரலாற்றில் கூட்டு நபர்களும் உண்டு (Composite International Persons). கோன்மை கொண்ட நாடுகள் பல சேர்ந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்குவதுண்டு. இக் கூட்டமைப்பு இரு வகைப்படக்கூடும். அவைகள் இயல் இணைப்புகள் (Real Unions), இணைப்பாட்சி நாடுகள் (Federal States) எனப்படும். இதுவன்றி தன்னிணைப்பு நாடுகள் (Personal Unions), நாடுகளின் கூட்டரசு (Confederate States) எனவும் மற்றுமிரண்டு வகையும் உண்டு. இவற்றில் இயல் இணைப்பு நாடுகளும், இணைப்பாட்சி நாடுகளும் உலக நபர்களாகக் கருதப்படும். ஆனால் தன்னிணைப்பு நாடுகளும் நாடுகளின் கூட்டு அரசும் உலக நபர்களாக மாட்டா.

## தன்னிணைப்பு நாடுகள் (States in Personal Union)

தனி உலக நபரத்துவமும், கோன்மையும் பெற்ற வெவ்வேறு நாடுகள் ஒரே மனிதரை மன்னராகக் கொண்டிருந்தால் அந் நாடுகள் இவ்வாறு அழைக்கப்படும். ஆனால் எல்லா நடை

முறை நிகழ்ச்சிகளுக்கும் இந் நாடுகள் ஒவ்வொன்றும் தனி நபரத்துவம் பெற்றவை.

இதற்குச் சான்றாக 1714 முதல் 1837 வரை பிரிட்டனும் ஹனோவரும் (Hanovar), 1815 முதல் 1890 வரை நெதர் லேண்ட்டும் லக்ஸம்பர்க்கும், 1885 முதல் 1908 வரை பெல்ஜியமும் பழைய சுதந்திர காங்கோ நாடும் (Congo Free State) இவ் வகை இணைப்புக்குட்பட்டிருந்தன.

## இயல் இணைப்பு (Real Union)

இவ்வகை இணைப்பிலும் இணையும் தனி நாடுகளுக்கே நாட்டுத் தகுதியுண்டு. எனினும் இணையமைப்பே உலக நபரத்துவம் பெற்று விளங்கும். இத்தகு நாடுகள் தனித்தியங்க முடியாது. போர் தொடுத்தாலும், தொடுக்கப்பட்டாலும் இணை நாடுகள் அனைத்துமே இணைந்து செயல்படுதல் வேண்டும். அத்துடன் தங்களுக்குள் போரில் ஈடுபடமுடியாது. வெளி உறவுகளில் இணையமைப்பே (Union) இயங்கும் தன்மை பெற்றது.

ஸ்வீடனும் நார்வேயும் இவ் வகையில் இணைந்தன. ஆனால் உலக நாடுகளால் இவ் விணைப்பு அங்கீகரிக்கப்படாததால் 1905ஆம் ஆண்டு இவ் விணைப்பு முறிந்தது.

தன்னிணைப்பும், இயல் இணைப்பும் தற்போது நடைமுறையில் வழக்கிழந்து விட்டன.

## நாடுகளின் கூட்டரசு (Confederation)

முழுக்கோன்மை கொண்ட நாடுகள் அத்தன்மையை எவ் விதத்திலும் குறைத்துக் கொள்ளாமல், குறிக்கோள்கள் அல்லது நோக்கங்களுக்காக மட்டுமே இணைந்து ஒரு பொது அமைப்பை ஏற்படுத்துமானால் அவ் விணையமைப்பு நாடுகளின் கூட்டரசு அமைப்பு எனப்படும். இதனையே தன்னாட்சி பெற்ற மாநிலங்களால் (Autonomous States) அமைக்கப்படும் மையக் கூட்டாட்சி எனவும் கூறுகின்றனர்.

இவ் வகையமைப்பில் நாடுகளின் கூட்டரசு (Confederation) நாட்டுக் குடிமக்களின்மீது நேரடி ஆதிக்கம் செலுத்த முடியாது. இரண்டாவதாக அவற்றிற்கு மிகக் குறைந்த அளவிலேயே இயங்கும் ஆற்றலுண்டு. அதாவது வெளியுறவு, போக்கு வரத்து, பாதுகாப்பு போன்ற குறுகிய துறைகளில் மட்டுமே

செயல்படும். தொகுப்பு நாடுகளமைப்பிற்கு உதாரணமாகச் சிலவற்றைக் கூறலாம்.

1. 1580 முதல் 1795 வரை நெதர்லாண்டும் 2. 1778 முதல் 1787 வரை ஐக்கிய அமெரிக்க நாடுகளும் 3. 1815 முதல் 1848 வரை ஸ்விட்ஸர்லாந்தும் இவ் வகை அமைப்பைப் பெற்றிருந்தன. இன்னும்கூட ஸ்விட்ஸர்லாந்து இவ் வகையமைப்பாகும் என்பதாக அதன் அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனால் நடைமுறையில் அது கூட்டாட்சியின் தன்மைகளையே பெருமளவு கொண்டுள்ளது.

## இணைப்பாட்சி நாடுகளமைப்பு (Federation)

கூட்டரசு நாடுகளமைப்பிற்கும், இணைப்பாட்சி நாடுகளமைப்பிற்கும் வேறுபாடு அவற்றின் அரசியல் அதிகார அளவிலும் தரத்திலுமே தவிர அவற்றின் தன்மையிலல்ல. இவ் வகையமைப்பில் நாட்டின் கோன்மை பிளவுபடுத்தப்பட்டு இணைப்பாட்சி யமைப்பின் அதிகாரத்திற்குட்பட்ட துறைகளின் மேலாண்மைத்தன்மை இணைப்பாட்சியமைப்பிடமும், இணை நாடுகளின் (Federating States) அதிகாரத்திற்குட்பட்ட துறைகளின் மேலாண்மைத் தன்மை இணையும் நாடுகளிடமும் தங்குகிறது. இணைப்பாட்சிக்கு இணையும் நாட்டுக் குடிமக்களின் மீது நேரடி ஆதிக்கம் உண்டு. இங்கு இணைப்பாட்சி மட்டுமே உலக நபர். இணையும் நாடுகளுக்குத் தனி நபரத்துவம் கிடையாது. அவற்றிற்கு தனித்தியங்கும் தன்மை கிடையாது. இவ் வகையமைப்பு நாடுகள் பல ஒன்று சேர்ந்து இணைப்பாட்சி அமைக்க ஒப்பந்தம் ஏற்ப்படுத்திக் கொண்டு பின்னர் தங்களுக்குரிய அரசியல் சட்டத்தை வகுத்து ஏற்கும். அவ் வரசியல் சட்டம், எவ்வகைத் துறைகள் இணைப்பாட்சியின் ஆதிக்கத்திற்கும், எவ்வகைத் துறைகள் இணையும் நாடுகள் ஆதிக்கத்திற்கும் உட்பட்டவை என்பதை வரையறை செய்யும். இவ்வகையமைப்பை முதன் முதல் உலகுக்கு அமைத்துக் காட்டியது—ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியல் சட்டம்தான்.

இத்தகைய அமைப்பில் பொதுவாக இணைப்பாட்சியமைப்புதான் வெளியுறவுக் கொள்கைகளை நிர்ணயித்துச் செயல்படுகின்றன. எனினும் சிலநாடுகள் விதிவிலக்காகச் செயல்படுவதுமுண்டு. உதாரணமாக சுவிட்ஸர்லாந்து நாட்டின் உறுப்பமைப்புகளாகிய கேன்டன்கள் (Cantons) ஒருசில துறைகளில் மற்ற நாடுகளுடன் தாமே நேரடியாக ஒப்பந்தம் செய்துகொள்ளும் தகுதி பெற்றிருக்கின்றன. அத்துடன் 1914ஆம்

ஆண்டிற்கு முன்னிருந்த ஜெர்மன் இணைப்பாட்சியில் உறுப்பு மாநிலங்கள் (Member States) ஓரளவுக்கு உலக நபராகக் கருதப்பட்டு தூதுவர்கள் நியமிக்கவும், பெறவும் சில துறைகளில் வெளிநாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவும் ஆற்றல் பெற்றிருந்தன. தற்போதுள்ள நாடுகளில் இணைப்பாட்சி அமைப்பைக் கொண்ட நாடுகளாவன: 1. 1787ஆம் ஆண்டு முதல் ஐக்கிய அமெரிக்க நாடு, 2. 1848 முதல் சுவிட்ஸர்லாந்து, 3. 1857 முதல் மெக்ஸிகோ, 4. 1860 முதல் அர்ஜென்டைனு, 5. 1867 முதல் கெனடா, 6. 1891 முதல் பிரேஸில், 7. 1893 முதல் வெனிஸுவேலா, 8. 1901 முதல் ஆஸ்திரேலியா, 9. 1918 முதல் சோவியத் ரஷ்யா, 10. 1949 முதல் இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான்.

## ஒருங்காட்சி
### (Condominium)

ஒரு நாட்டெல்லேக்குள் அந்நாட்டரசுக்கே தனித்தியங்கும் தன்மையும் முழுக் கோன்மையும் உண்டு. வேறு நாட்டின் கோன்மைக்கு அந்நிலப்பரப்பு உட்படாதென்பது பொதுவாக ஏற்கப்பட்ட கருத்தெனினும் சில வேளைகளில் ஒரு நிலப்பரப்பின் மீது ஒரே சமயத்தில் இரு வேறு அரசுகள் ஆதிக்கம் ஏற்படுவதுண்டு. இதனையே ஒருங்காட்சி என அழைக்கிறோம். மேற்கூறிய கருத்துக்கு இவ் வமைப்பு ஓர் விதி விலக்கு.

இத்தகு நிலப்பரப்பில் வாழும் குடி மக்கள் ஒரே சமயத்தில் இரு அரசுகளின் குடி மக்களாகின்றனர். அந் நிலப்பரப்பு ஆளும் நாடுகளின் இணைகோன்மைக்குட்பட்டது. (Joint Sovereignity). இவ்வகை ஆட்சி சிக்கலானது. எனினும் இணை கோன்மை கொண்ட நாடுகள் தங்களுக்குள் ஓர் உடன்பாடு ஏற்படும்வரை தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துவதில்லே. உடன்பாடு ஏற்படும் போது, இணைநிர்வாகத்திற்கும் (Joint Administration) எந்தெந்த துறை எந்தெந்த அரசாட்சி நிர்வாகத்தின் கீழ் இருக்கவேண்டும் எனவும் தங்களுக்குள் நிர்ணயித்துக் கொள்கின்றன. செல்ஸ்விக் ஹோல்ஸ்டீன் (Schles wig Holstein). லான் பெர்க் (Laun berg). போன்ற நிலப்பரப்புகள் 1864 முதல் 1866 வரை ஆஸ்ட்ரியா, பிரஷ்யா, ஆகிய நாடுகளின் கீழும், சூடான் 1898 முதல் பிரிட்டன் எகிப்து ஆகிய நாடுகளின் கீழும், 1914 முதல் நியூ ஹெப்ரிஸ்ட் (New Hebrides) பிரிட்டன், ஃப்ரான்ஸுக்கு கீழும் இணைப்பாட்சிக்குட்பட்டிருந்தன.

## பாதுகாப்பிலுள்ள நாடுகள்

**அடிமை நாடுகள்** (Vassal States) **காப்பு நாடுகள்,** (Protectorates)

சில வேளைகளில் ஒரு நாடு மற்றொரு நாட்டின் பாதுகாப்பிலிருப்பது உண்டு. இவை அடிமை நாடுகளெனவும், காப்பு நாடுகளெனவும் இரண்டு வகைப்படும்.

**அடிமை நாடுகள்**

இவ்வகையில் காக்கப்படும் நாடுகள் காக்கும் நாட்டின் மேலாண்மைக்குப் பெரிதும் கட்டுப்பட்டது என்பதாலும் காக்கும் நாடு இந் நாடுகளின் உள், வெளி விவகாரங்களில் பெரிதும் ஈடுபாடு கொள்வதாலும், இந் நாடுகளுக்கு உலக அரங்கில் தனி நபரத்துவம் இல்லாததாலும் இவ்வாறு அழைக்கிறோம்.

அடிமை நாடுகளுக்கும் மேலாண்மை (Suzerain) நாடுகளுக்கும் உண்டான இடையுறவுகளைச் சுருக்கமாக விரிவுபடுத்த இயலாது. ஏனென்றால் ஒவ்வொரு போதும் குறிப்பிட்ட நாடுகளிடையே ஏற்படும் ஒப்பந்தமே அவ்விடையுறவுகளை நெறிப்படுத்துவதால், நாம் பொதுவாக எதுவும் சொல்ல இயலாது. அடிமைநாடுகள் குறை கோன்மை நாடுகளாகும். அவற்றிற்கு உலக அரங்கில் ஒரு சிலதகுதிகள் இருந்தபோதும் அவை மேலாண்மை நாட்டின் பகுதியாகவே கருதப்படும். மேலாண்மை நாடு வெளி நாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் அடிமை நாடுகளையும் கட்டுப்படுத்தும். அத்துடன் மேலாண்மை நாடு போர் தொடுக்குமானால் அடிமை நாடும் அப்போருக்குக் கட்டுப்பட்டதாகும். இத்தகு அடிமை நாடுகள் தற்போது வழக்கில் இல்லை. ஆனால் எகிப்து சில காலம் துருக்கியின் கீழ் அடிமை நாடாக இருந்து வந்தது. இதற்கொரு உதாரணமாக அமையும்.

**காப்பு நாடுகள்** (Protectorates)

எந்நாடேனும் தன்னைத்தானே காத்து வழி நடத்திச் செல்லுவதில் கடினப்பட்டு, வலிமை மிகுந்த வேற்றொரு நாட்டுடன் தன்னைக்காக்கும் பொறுப்பை ஒப்படைத்து உடன்படிக்கை செய்து கொள்ளுமாயின் காப்பு நாடுகள் உருவாகின்றன. அவ்வாறு உடன்படிக்கை செய்து கொண்டபின் காக்கும் நாடே காப்பு நாட்டின் முக்கியமான அரசியல் கொள்கைகளையும், வெளியுறவு கொள்கைகளையும், வகுத்துச் செயல்படுகின்றன.

இதிலும் நிர்ணயிக்கப்பட்ட அமைப்பு முறைகள் எதுவும் கிடையாது. ஒவ்வொரு நாடும் செய்து கொள்ளும் உடன் படிக்கைகளின் உட்பொருள்களை யொட்டியே அவற்றின் இடை யுறவுகள் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். இத்தகைய காப்பு உடன்படிக்கைகள் மூலம் காப்பு நாடுகள் தங்களின் தனித்தியங் கும் தன்மையை ஓரளவிற்கு முடமாக்கிக் கொண்ட போதும், அவற்றின் கோன்மைக்குண்டான சிறப்புக் குணங்களை அவை இழப்பதில்லை. எனும் கருத்து டஃப்-டெவலெப்மென்ட் கம்பெனி எ கெலான்டன் கவர்ன்மென்ட் (Duff Developement Co. Vs. Kelantan Government). எனும் வழக்கில் வெளியிடப்பட்டது அத்துடன் அவை உலக அரங்கில் தனது நபரத்துவத்தை இழப்பதில்லை.

சில வளர்ச்சியுற்ற காப்பு நாடுகள் தன்னுட்சிக் குடியேற்ற நாடுகளுக்கிணையான தகுதியைப் பெற்றுள்ளன. குறிப்பாக வும் இதற்கு காரணமாகவும் இந்தியாவின் கீழுள்ள காப்பு நாடுகளான பூட்டானையும் சிக்கிமையும் கூறலாம்.

## பொதுநல நாடுகள்
### (Members of the Common Wealth)

பிரிட்டிஷ் பேரரசின் குடியேற்ற நாடுகள் சிறிது சிறிதாகத் தம் அடிமைத்தளையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டன. முதலில் அதிகாரமற்ற குடியேற்ற நாடுகளாகவும் பின்னர் தன்னுட்சியுரிமை பெற்ற குடியேற்ற நாடுகளாகவும் பின்னர் பொறுப்பு அரசாங்கம் கொண்ட தன்னுட்சி நாடுகளாகவும் (Dominious) பின்னர் முழு மேலாண்மை கொண்ட நாடுகளா கவும், மலர்ந்தன.

பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாடுகள் இன்று எல்லா வகையிலும் கோன்மையின் முழுத்தன்மை களையும் பெற்று பிரிட்டனுக்குச் சமமான நாடுகளாக விளங்கு கின்றன. உதாரணமாக: இவற்றின் வெளி விவகார சுதந்திரம், உள்ளாட்சி ஆதிக்கம் இவை வரையற்றவை. தனித்தனியே வேற்று நாடுகளுடன் நேரடியாக ஒப்பந்தங் களில் ஈடுபடுகின்றன. இவ் வமைப்பிற்கு தனித்தன்மையோ, கோன்மையோ, நபரத்துவமோ இல்லை. முன்னர் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து ஐ.நா. அமைப்புக் கொள்கைகளில் நம்பிக் கையும், ஆர்வமும் கொண்ட நாடுகள், தங்கள் பொது நன்மைக்காக ஒன்று சேர்ந்து இவ் வமைப்பை உருவாக்கி யுள்ளன. இவைகள் நிற, இன, மத அடிப்படையில் வேறுபாடு கூடாது என்ற பொதுக் கொள்கையுடையவை. இந் நாடுகள்

தங்களுக்குள் பொதுக் கொள்கையுடன் செயல்படவேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்தபோதும் அவ்வப்போது வேற்றுமைகள் ஏற்படாமலில்லை.

உதாரணமாக: 1962ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் விவகாரத்தில் இங்கிலாந்து, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளின் தலையீட்டை யொட்டியும் 1966ஆம் ஆண்டு ரொடீஷிய சிக்கலை யொட்டியும், 1971ஆம் ஆண்டு இங்கிலாந்து ஐரோப்பிய பொருளாதாரக் குழுவில் (European Economic Committee) சேருவது பற்றியும், தென் ஆப்பிரிக்காவிற்கு ஆயுத உதவி அளிப்பது பற்றியும், உறுப்பு நாடுகளுக்கிடையில் பெரிதும் வேற்றுமை நிலவியது.

1971 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் சிங்கப்பூரில் கூடிய உறுப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பொதுநல நாடுகளமைப்பின் தன்மை பற்றித் தனித்தியங்கும் தன்மை பெற்ற கோன் நாடுகள் மக்களின் நலன்களையொட்டித் தங்களுக்கிடையே நிலவும் பொதுப் பிரச்சினைகளில் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பினை நல்கிக் கொள்ளவும், உலக அமைதி காக்கவும், கலாசார, பொருளாதார, சட்ட, அரசியல், தொழில் துறைகளில் ஒன்றோடொன்று இணைந்து முன்னேற்றமடையவும், தாங்களாகவே விரும்பி ஏற்படுத்திக் கொண்ட அமைப்பு என்று விளக்கம் வழங்கப்பட்டது.

# 9. நடுநிலையாக்கப்பட்ட நாடுகள்

## (Neutralised States)

பெரும் வலிமை பொருந்திய நாடுகளிடையே வாழும் சிறு நாடுகளின் தனித்தியங்கும் தன்மையைக் காக்கவும் வல்லரசுகளுக்கிடையே நிலவும் பிணக்குகளில் அவை சிக்கிவிடாமல் தவிர்க்கப்படவும் இச் சிறு நாடுகள் நடுநிலை நாடுகளாக ஆக்கப்படுவது உண்டு. இச் சிறு நாடுகளின் வேண்டுகோளின் பேரில் வல்லரசு நாடுகள் ஒன்று கூடி வேண்டிக்கொண்ட நாட்டை நடுநிலையாக்கப்பட்ட நாடாக அறிவிக்கும். இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட நாடுகள் தங்கள் தற்காப்புக்காக மட்டும் வேற்று நாடுகளின் மேல் போரில் ஈடுபடலாம். அத்துடன் அவை வேறு நாடுகளுடன் நட்பு உடன்படிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது.

**நடுநிலை ஆக்கலின் நோக்கம்**

1. பெரும் வல்லரசு நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றுதலும், உலக அரங்கில் அரசியல் சக்திகளின் சமநிலை காத்தலும்.

2. அண்டை வல்லரசுகளிடமிருந்து இச் சிறு நாடுகள் தனித்தியங்கும் தன்மைக்குப் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பதுமே.

**நடுநிலை ஆக்கலின் சாரம்**

1. ஒரு நாட்டை நடுநிலையாக்க அதன் ஒப்புதல் தேவை.

2. நடுநிலையாக்குதல் ஒப்பந்தத்தின் விளைவு.

3. நடுநிலையாக்கும் பேரரசுகள் நடுநிலையாக்கப்படும் நாட்டின் நடுநிலைத் தன்மையை நிரந்தரமாக ஏற்றதாகக் கருதப்படும்.

**நடுநிலையாக்கப்படுதலும் நடுநிலையும் (Neutraliation and Neutrality)**

நடுநிலையாக்கப்படும் நாடுகளுக்கும் நடுநிலை வகிக்கும் நாடுகளுக்கும் அடிப்படை வேறுபாடுகளுண்டு. நடுநிலையாக்கலில் நன்மை பெறும் நாடுகளின் முயற்சியால் நிரந்தரமாக ஒரு நாடு நடுநிலையாக்கப்படுகிறது. ஆனால் நடுநிலை வகிக்கும் நாடுகள் தங்களின் சொந்த விருப்பின் காரணமாகத் தாம் நடுநிலை நாடு என அறிவிப்பு செய்யும், தேவைப்பட்டால் தன்னிச்சையாக தம் நடுநிலைத் தன்மையை முடிவுக்குக் கொண்டு வரும் ஆற்றலும் வாய்ப்பும் கொண்டவை

நடுநிலையாக்கப்பட்ட நாடுகளின் கடப்பாடுகள் :

1. தற்காப்பிற்கன்றி போர்ச் செயலில் ஈடுபடுதல் ஆகாது.

2. இவை அரசியல் சார்பான உடன்படிக்கையில் வேறு நாடுகளுடன் ஈடுபட முடியாது. ஆனால் அரசியல் சார்பற்ற மாநாடுகளில் கலந்து கொள்ளவும் உடன்படிக்கைகளில் ஈடுபடவும் உரிமை பெற்றவை.

3. வேற்று நாடுகளிடையே போர் நடக்குங்கால் நடுநிலையாக்கப்பட்டநாடு, நடுநிலை நிதிகளைக் கடைப் பிடிக்கக் கடமைப்பட்டவை.

4. தம் உள் விவகாரங்களில் வேறு எந்நாடும் தலையிட வாய்ப்பளிக்காமல் இருத்தல்.

நடுநிலையாக்கும் நாடுகளின் கடப்பாடுகள் :

1. நடுநிலையாக்கப்பட்ட நாட்டினைத் தாக்குதலையோ அச்சுறுத்தலையோ தவிர்த்தல்.

2. நடுநிலையாக்கப்பட்ட நாட்டின் மீது வேறெந்த நாடேனும் போர் மேற்கொண்டால் நடுநிலையாக்கப்பட்ட நாட்டினைக் காக்கக் கடமைப்பட்டது. ஐ.நா.அமைப்பு சாசனத்தின் இரண்டாம் பிரிவு (Art. 2) உறுப்பு நாடுகள், அமைப்பு மேற்கொள்ளும், எல்லா நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ளக் கடமைப்பட்டவை என்று கூறியிருந்தபோதும் ஐ.நா.அமைப்பின் பாதுகாப்புக் குழு நடுநிலையாக்கப்பட்ட நாடுகளுக்கு இவ்வித கடமையிலிருந்து விதிவிலக்கு அளிக்கும் ஆற்றலுண்டு. எனவே நடுநிலையாக்கப்பட்ட நாடுகளும்

ஐ.நா. அமைப்பின் உறுப்பு நாடுகளாகும் ஆற்றல் பெற்றவை. 1955ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஆஸ்ட்ரியா (Austria) நாடு இவ்விதத்தில் ஐ.நா.வின் உறுப்பு நாடுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தற்போதுள்ள நடுநிலையாக்கப்பட்ட நாடுகள் 1. ஸ்விட்ஸர்லாந்து 2. லாவோஸ் 3. ஆஸ்ட்ரியா ஆகியவைகளாகும். பெல்ஜியம் நடுநிலையாக்கப்பட்ட நாடென்றாலும் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அது மற்ற நாடுகளுடன் செய்து கொண்டுள்ள சில ஒப்பந்தங்கள் அதனை இத் தன்மையிலிருந்து வழுவச் செய்து விட்டது.

# 10. புனித நாடு

## (Holy See)

கிறிஸ்துவ நாடுகளிடையே நாட்டிடைச் சட்டம் வளர்ச்சி பெறத் துவங்கியபோது போப் ஒரு நாட்டின் முடிமன்னராக விளங்கினர். அப்பொழுது அந்நாடு போப்பாண்டவர் நாடு (Papal State) என்றழைக்கப்பட்டது. இது 1870இல் இத்தாலி நாட்டால் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

வரலாற்றில் இடைக்காலம் முதல் போப்பின் உலக நபரத்துவம் அங்கீகரிக்கப்பட்டு நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அக்காலத்தில் போப் மதத் தலைவராகவும் (Spiritual Head) அரசியல் தலைவராகவும் (Temporal Head) இருந்து வந்தார். 1870இல் போப்பாண்டவர் நாடு இத்தாலியுடன் இணைத்துக்கொள்ளப்பட்டது முதல் போப் தனது அரசியல் தலைமைத் தன்மையை இழந்து மதத் தலைமையை மட்டும் வகித்து வருகிறார். ஆனால் தூது அனுப்புவது, பெறுவது, உடன்படிக்கைகள் செய்துகொள்வது ஆகிய அதிகாரங்கள் என்றுமே பறிக்கப்படவில்லை.

1871இல் இத்தாலிய நாடாளு மன்றம், உறுதிச் சட்டம் (Law of Guarantee) ஒன்றை நிறைவேற்றியது. அச்சட்டம் போப்பிற்கும் அவரின் புனித நாட்டிற்கும் (Holy See) சில சலுகை உறுதிகளை அளித்தது. அதுமுதல் புனித நாட்டின் நிலை உறுதி பெற்று உலக நாடுகள் போப்புடன் உடன்படிக்கைகளும் தூதுவப் பரிவர்த்தனையும் செய்து கொண்டன.

**லேட்டரன் உடன்படிக்கை** (Lateran Treaty) :

1929இல் இதுகாறும் சிக்கலான நிலையைப் பெற்றிருந்த புனித நாடு, லேட்டரன் உடன்படிக்கையின் மூலம் ஒரு முடிவுக்கு வந்தது. இவ்வுடன்படிக்கை புனித நாட்டின் உலக

நிலையைத் தெளிவுபடுத்தியது. அத்துடன் வேட்டிக்கன் நகரத்தையும் (Vatican State) உருவாக்கியது. மேலும் புனித நாட்டை இத்தாலியுடன் இணைத்துக் கொண்டதால் அதற்கேற்பட்ட இழப்பை ஈடு செய்ய பொருளாதார ஈடும் தர வழி வகை செய்தது.

லேட்டரன் உடன்படிக்கை நாட்டின் கோன்மை புனித நாட்டிடம் உள்ளதா, வேட்டிக்கன் நகரமைப்பால் உள்ளதா என்பதைத் தெளிவுபடுத்தாமல் விட்டுவிட்டது. ஆனால் சட்ட வல்லுநர்கள் வேட்டிக்கன் நகரத்தைக் கொண்ட கோன் நாட்டிற்குத் தலைவராயிருப்பவர்தான் போப் என்று கருத்து தெரிவிக்கின்றனர். அதுவே சரியானதாகவும் தெரிகிறது. ஆனால் மற்றும் சிலர் வேட்டிக்கன் நகரமும், போப்பும் இரு வேறு உலக நபர்கள் என்ற கருத்தினைக் கொண்டுள்ளனர்.

தற்போது புனித நாடு வேற்று நாட்டுடன் மனிதாபிமான உடன்படிக்கைகள் செய்து கொள்கிறது. வேட்டிக்கன் நகரம் தற்போது இரண்டு ஐ. நா. அமைப்பின் சிறப்பமைப்புக்களில் (Specialised Agencies—I-T-U., U-PU) உறுப்பினராக உள்ளது.

பிரிவு (ii)

# 11. உலக நபரத்துவம்

## (International Personality)

தற்காலத்தில் வகுக்கப்படுகின்ற அரசியல் சட்டத்தில் குடிகளுக்கு அடிப்படை மனித உரிமை வழங்குவதுபோல் நாடுகளுக்கும் அடிப்படை உரிமை உண்டு என ஒரு சிலர் கருதுகின்றனர். ஆனால் இக் கருத்து தற்போது வலிவிழந்து வருகிறது. அடிப்படை உரிமை என்று அவர்கள் கருதுவது நாடுகளின் கோன்மையின் அடியெழும் குணங்களாகும்.

அவைகளாவன :

1. நிலைத்து வாழும் உரிமை (Existence)
2. தற்பேணும் உரிமை (Self-Preservation)
3. உலக அரங்கில் சமத்துவம் (Equality)
4. தனித்தியங்கும் தன்மை (Independence)
5. எல்லைகளின் தனி மேலாண்மைத் தன்மை (Territorial Supremacy)
6. நிலப் பரப்பை ஈட்டுதற்கும் காத்தற்குமுண்டான உரிமை.
7. உலக நாடுகளுடன் இடையுறவு கொள்ளுமுரிமை.
8. நற்பெயரையும் புகழையும் ஈட்டிக் காத்திடும் உரிமை.

உலக அரங்கிலும் நாட்டிடைச் சட்டத்திலும் நாடுகள் மட்டுமே உரிமையும் கடமையும் பெற்ற நபர்களாகக் கருதப்படுகின்றன. இந் நாடுகள் ஒன்றையொன்று அங்கீகரித்துக்

கொள்வதன் மூலம் தங்களை உலக அரங்கில் நபர்கள் என்கின்ற நிலைக்கு உயர்த்திக் கொள்கின்றன. நாடுகள் ஒன்றுடன் ஒன்று இடையுறவு (அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, கலாச்சாரம், வாணிபம்) கொள்வது அவசிய மாகிறது. இவ் விடையுறவுகளை நெறிப்படுத்தவும், முறையாக வளர்த்து வரவும் சில நெறி முறைகள் தேவை. அவ்வாறு பொதுவாக ஏற்று வழக்கில் வழங்கிவரும் விதிகளின் தொகுப்பே நாட்டிடைச் சட்டம். ஒரு நாடு உலக அரங்கில் புதிதாகத் தோன்றி நபரத்துவம் பெறும்போதும், மற்ற நாடு களால் அங்கீகரிக்கப்படும்போதும் வருங்காலத்தில் அப் புதிய நாடு தனது அரசியல் நடவடிக்கைகளை நாட்டிடைச் சட்ட விதிகளுக்கேற்ப நெறிப்படுத்திக் கொண்டு செல்லும் என்கின்ற நம்பிக்கையின் பேரிலேயே அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இவ்வாறு நாடுகள் தங்களிடை உறவுகளை நாட்டிடைச் சட்ட விதிகளுக்கேற்பவே நெறிமுறைப்படுத்திச் செல்ல வேண்டும். எனினும் சில சமயங்களில் சில காரணங்களுக்காக அவை நெறி முறைகளிலிருந்து வழுவிச் செல்வதும் அதை விதி விலக்காக மற்ற நாடுகள் மன்னித்துவிடுவதோ அல்லது பொறுத்துக் கொள்வதோ வழக்கமாகிவிட்டது. உதாரணமாக நாடுகளின் போர்க் கால நடவடிக்கை, தற்பேணும் பொருட்டுச் செய்யும் செயல்கள் ஆகியவற்றைக் கூறலாம்.

### சமத்துவம் (Equality)

உலக நபரத்துவத்தின் (International Personality) அடியெழும் குணங்களில் ஒன்று நாடுகளின் சமத்துவம். ஏனென்றால் கோன்மை பெற்ற நாடுகள் ஒவ்வொன்றும் ஒன்றின் ஆதிக்கத்திற்கு மற்றொன்று உட்பட்டதல்ல என்றொரு கொள்கை நிலைபெற்று வழங்கி வருகிறது. (Par in Parem Non Habet Imperium). நாடுகள் தங்களிடையே எண்ணற்ற பரிவர்த்தனைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. ஒன்றையொன்று தனக்கிணையான நாடாகக் கருதவில்லையென்றால் இவ் விடை யுறவுகளை மேற்கொள்வது கடினம். இடையுறவுகள் அவ்வப் போது முறையாக நெறிப்படுத்தப்படவில்லை யென்றால் உலக அரங்கில் அரசியல் பணிகள் நல்லியக்கம் பெறாமல் முடங்கிப் போகும். இரண்டாவதாக அண்மைக் காலத்தில் சில நூற்றாண்டுகளாக அதிலும் குறிப்பாக உலக நாடுகள் மன்றமும், ஐக்கிய நாடுகள் அமைப்பும் தோன்றிய பின்னர், நாடுகள் தங்களுக்குள் உண்டான சிக்கல்களை ஒன்றுகூடித் தீர்த்துக் கொள்வதால், இச் சமத்துவ மனப்பான்மை மிகவும் இன்றியமையாததாகிவிட்டது. சமத்துவ மனப்பான்மை இல்லை

யென்றால் சிறிய நாடுகளின் வாதங்கள் கவனிக்கப்படவோ ஏற்றுக்கொள்ளப்படவோ வழியிராது. நாடுகளிடையே ஒருமைப்பாடு காண்பது மேலும் கடினமாகிவிடும்.

**சமத்துவத்தின் நல் விளைவுகள்**

1. Par in Parem Habet Imperium எனும் கொள்கைப்படி ஒரு நாடு மற்ற நாட்டின் ஆளுகைக்கு உட்பட்டதல்ல. எனவே உதாரணமாக ஒரு நாடு மற்ற நாட்டின் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம் என்ற நிலை இருந்த போதும், ஒரு நாட்டு நீதி மன்றத்தின்முன் மற்ற நாடு அதன் ஒப்புதலின்றிப் பிரதிவாதியாக்கப்பட முடியாது. அதாவது அதன் மீது வழக்கு தொடுக்க முடியாது.

2. ஒரு நாட்டு நீதி மன்றம் மற்ற நாட்டின் செயல் தகுதிகளை மதிப்பிடவோ, நிர்ணயிக்கவோ, குற்றங் காணவோ முடியாது.

3. நாடுகளின் ஒப்புதலின் பேரில் ஏதேனும் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டிய நிலை ஏற்பட்டால் ஒவ்வொரு நாட்டுக்கும் சரி நிகர் சமானமாக ஒரு வாக்கே வழங்கப் படுகிறது.

4. வழங்கப்படுகின்ற வாக்கு, பலம் பொருந்திய பெரும் நாட்டினுடையதாயிருப்பினும், சிறு நாட்டினதாயிருப்பினும் அவ்வாக்கின் தரமும், தகுதியும், மதிப்பும், நிர்ணயிக்கும் ஆற்றலும் ஒன்றேயாகும். இரண்டு வாக்கிற்கும் எவ்விதத் தகுதி வேறுபாடுகளும் கிடையாது.

**வல்லரசும் சிற்றரசும்** (Great Powers and Tiny States)

மனிதர்களில் வலியோர் மெலியோர் இருப்பது போலவே நாடுகளுள்ளும் வல்லரசு என்றும் சிற்றரசு என்றும் உண்டு. பொதுவாக வல்லரசுகளுக்கு வழக்கத்தில் தனித் தன்மைகள் எதுவுமில்லை யெனினும் உலக நாடுகள் மன்றம் தோன்றும் வரையில் வல்லரசுகள் உலக அரங்கில் மேன்மையாகக் (Superiority) கருதப்படவில்லை யெனினும் முதன்மை (Primacy) பெற்று வந்தன.

ஒரு நாட்டின் வல்லாண்மை அதன் நிலப் பரப்பு, மக்கள் தொகை, பொருளாதார வளர்ச்சியும் வலிவும், அரசியல் வலிவு, படை வலிமை ஆகியவற்றை வைத்து நிர்ணயிக்கப்

படும். இக் குணங்கள் எல்லா நாட்டிற்கும், எல்லா சமயங்களிலும் ஒரே தன்மையதாக இராது. அவ்வப்போது நடைபெறும் வட்டாரப் போர்களிலோ, உலகப் போர்களிலோ அந்நாடுகளுக்கு ஏற்படும் வெற்றி அல்லது தோல்வியையொட்டி அவற்றின் வல்லாண்மையும் கூடுவதோ, குறைவதோ இயல்பு. உதாரணமாக: 1815இல் வியன்னு மாநாடு கூடியபோது எட்டு நாடுகள் வல்லரசுகள் என்ற தகுதி பெற்றிருந்தன. (பிரிட்டன், ஃபிரான்ஸ், போர்ச்சுகல், பிரஷ்யா, ஸ்பெயின், ஆஸ்ட்ரியா, ஸ்வீடன், ரஷ்யா.) பிறகு போர்ச்சுகல், ஸ்பெயின், ஸ்வீடன் ஆகிய நாடுகள் வலுவிழக்கவே ஐந்து வல்லரசுகள் மட்டுமே இருந்து வந்தன. உலக நாடுகள் மன்றம் வல்லரசுகளை நிரந்தர உறுப்பு நாடுகளாக ஏற்றுத் தனித் தகுதி வழங்கியதன் மூலம் வல்லரசுகளுக்கு உயர் நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது. இங்கும்கூட உலக நாடுகள் மன்றத்தில் வல்லரசுகளாகக் கருதப்பட்ட சில நாடுகள் ஐக்கிய நாடுகள் அமைப்புத் தோன்றியபோது வலிவிழந்து வெளியேறிவிட, சில புது நாடுகள் வல்லரசுகளாக ஐ. நா. அமைப்பில் இடம் பெற்றன. உலக நாடுகள் மன்றத்தில் பிரிட்டன், ஃபிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் வல்லரசுகளாக இருந்தன. ஐ. நா. அமைப்பில் இத்தாலியும், ஜப்பானும் அத்தகுதி இழந்துவிட ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரிட்டன், ஃபிரான்ஸ், ரஷ்யா, சைனு ஆகிய நாடுகள் இத் தகுதி பெற்று விளங்குகின்றன. நாடுகளின் சமத்துவமெல்லாம் சட்ட ரீதியில்தான். நடைமுறை அரசியலில் வல்லரசுகளும், சிற்றரசுகளும் வழக்கத்தில் இருக்கத்தான் செய்கின்றன.

ஐ. நா. சாசனத்தின் முதல் பிரிவு நாடுகளின் சம உரிமைகளை மதிக்க வேண்டும் எனவும், இரண்டாம் பிரிவு, உறுப்பு நாடுகளின் சமகோன்மை கொள்கையடிப்படையிலேயே இவ் வமைப்புத் தோற்றுவிக்கப்படுகிறது எனவும் கூறியிருந்தபோதும் பின்வரும் பகுதிகள் இச் சமத்துவக் கொள்கைகளுக்குச் சாவு மணி அடித்து விட்டதை மறுத்தல் இயலாது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது மன்றத்தில் (General Assembly) எல்லா உறுப்பு நாடுகளுக்கும் சம தகுதியுடைய வாக்கு ஒவ்வொன்றே உண்டு என்ருலும் வலிமை வாய்ந்த பாதுகாப்புக் குழுவில் (Sccurity Council) செயல்முறை (Procedural Matters) விவகாரங்களைத் தவிர மற்ற எல்லாப்

பிரச்னைகளிலும் நிரந்தர உறுப்பு நாடுகளான ஐந்து வல்லரசுகளும் ஒன்றுபட்ட முடிவு எடுத்தால்தான் அம்முடிவு செயலுக்கு வரும். எனவே ஒரு வல்லரசு விரும்பிஞலும் சில விவகாரங்களில் உலக நாடுகளனைத்தும் விரும்பும் ஒரு காரியத்தை நடக்க வொட்டாமல் முடக்கி வைக்க முடியும்.

நாம் இதுகாறும் கூறிவந்த இச் சமத்துவக் கொள்கையும் கூட சில வரையறைக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டவை. உலக நாடுகள் அனைத்தும் சமத்துவமும் சம கோன்மையும் பெற்றவை என்பது ஏற்றுக்கொண்ட கொள்கை. கோன்மை பெற்ற நாடு தன் செயல்களில் தனித்தியங்கும் தன்மையும், தனி மேலாண்மைத் தன்மையும் பெற்றது. எனினும் இத் தனித்தியங்கும் தன்மையும், ஆள் நில மேலாண்மைத் தன்மையும் மற்ற நாடுகளின் கோன்மையை இழிவு படுத்தாத வகையில் செயல்படுதல் வேண்டும். சில சமயங்களில் தன் நாட்டிற்குள்ளேயே நிகழ்த்தும் செயல்கள்கூட மற்ற நாட்டைப் பாதிக்கக் கூடும். உதாரணமாக: ஒரு நதி இரண்டு நாடுகளின் வழியே ஓடும்போது மேலிருக்கும் நாடு கீழிருக்கும் நாட்டிற்குச் செல்லும் நீர் வறண்டு போகும்படி தான்தோன்றித்தனமாகச் செயல்படுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். ஏனென்றல் அது மற்ற நாட்டின் உரிமையைப் பாதிக்க வல்லது. (Oppenheinn-Page 290).

**ட்ரயில் ஸ்மெல்டர் ஆர்பிட்ரேஷன் வழக்கு** (Trial Smelter Arbitration Case of 1931):

மேற்கண்ட வழக்கில் ஒரு நாடு, மற்ற நாட்டிற்கு எவ்விதத்திலேனும் இழப்பு நேரும் வகையில் எக்காரணங் கொண்டும் நடத்தலாகாது என்று நிர்ணயிக்கப்பட்டது.

**கார்ஃபூ கால்வாய் வழக்கு**

இதே கருத்து Corfu Channel (on Merits) 1949 வழக்கிலும் உலக நீதி மன்றத்தால் ஏற்று வலியுறுத்தப்பட்டது.

இவ்வழக்கு விபரமாவது :

கார்ஃபூ கால்வாயில் தனது எல்லையோர நீரடியில் கன்னி வெடிகள் பரப்பப்பட்டிருப்பதை அறிந்திருந்தும், அல்பேனிய நாடு அவ்வழிச் செல்லும் வேற்று நாட்டு நாவாய்களுக்கு அது பற்றி அறிவிக்கக் கடமைப்பட்டிருந்தும், எவ்வித அறிவிப்பும் தராமல் வாளாவிருந்தது. இச் செய்தியறியாத பிரிட்டிஷ் கடற்

போர் நாவாய்கள் அவ்வழியே சென்றபோது கன்னி வெடிகளால் உயிரிழப்புக்கும், பொருளிழப்புக்கும் உள்ளாயின.

அல்பேனியா நாடு இக் கடமையிலிருந்து தவறியதால், பிரிட்டிஷ் நாட்டிற்கேற்பட்ட இழப்பினை ஈடு (Damages) செய்ய வேண்டிய பொறுப்புக்குட்பட்டது எனவும், ஒரு நாடு அறிந்தே மற்ற நாடுகளின் உரிமைகளுக்குப் பழுதேற்படும் வகையில் நடவாதிருக்கக் கடமைப்பட்டது என்றும் இவ் வழக்கை நிர்ணயித்த உலக நீதிமன்றம் (International Court of Justice) தீர்ப்பளித்தது.

**அணு சோதனைகள்**

ஒரு நாடு தன் கோன்மையின் அடிப்படையில் அணு ஆயுதச் சோதனைகளை நடத்த உரிமை பெற்றதெனினும், அவ் வுரிமையைப் பயன்படுத்தக் கூடாது என ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனால் மற்றொரு பொதுவான கருத்தும் வழங்கி வருகிறது. அதாவது அணு ஆயுதச் சோதனைகளின் விளைவாக வெளி வான்மண்டலத்தில் நச்சுக் கதிர் வீச்சு கலந்து மற்ற நாடுகளுக்கும், மொத்தத்தில் மனித சமுதாயத்திற்கும் எவ்விதத் தீங்கும் ஏற்படாதிருக்க எல்லா முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளையும் ஒரு நாடு செய்த பின்னர் வேண்டுமானால் அச் சோதனைகளில் ஈடுபடலாம் என்பதே அந்தக் கருத்தாகும்.

# 12. தற்பேணுதல்

## (Self Preservations)

ஒரு நாடு தற்பேணுங் காரணத்திற்காக வேற்றுநாட்டின் தனி மேலாண்மைத் தன்மையை மீறுகின்ற செயலில் ஈடுபடுமானால், அதனை நாட்டிடைச் சட்டத்தில் குற்றமாகக் கருதுவதில்லை. அத்துடன் வேற்று நாட்டு விவகாரங்களில் நியாயமான காரணங்களுக்காகத் தலையீடு என்று விளக்கமும் தருகிறது. ஆனால் இது முறையாகவும் பொதுவாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதியல்ல. காரணம் தற்பேணும் நாடு மற்ற நாட்டிற்கு அக் காரணங் கொண்டு இழப்பு ஏற்படுத்தும் உரிமை பெற்றதென்றால், அவ் வகையில் துன்புறும் நாடு அதற்கிணையாக அதனைத் தாங்கும் கடமைப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் அத்தகு கடமை நாட்டிடைச் சட்டத்தில் இல்லை.

தற்பேணுதல் பொருட்டு மற்ற நாட்டுக் கோன்மையை மீறும் வகையில் ஆற்றப்படும் செயல்கள் மன்னிக்கக்கூடியவை என்றாலும், நடந்துவிட்ட தீங்கான செயல் அதனைப் புரிந்த நாட்டைத் தற்காத்தற்கு மிகமிக இன்றியமையாதது என்பதோடு அச் செயலைச் செய்யாது விடுத்திருந்தால் அந் நாடு பேரிழப்புக்குள்ளாகியிருக்கும் என்கின்ற நிலை இருந்தால்தான் அச் செயல்கள் மன்னிக்கப்படும். இல்லையென்றால், அச் செயல்கள் தலையீட்டுக் குற்றமாக மாறிவிடும். எனவே தற்பேணும் நாடு செய்த செயல் தற்காத்தற்கு அவசரமாகவும் அவசியமாகவும் ஆற்றப்படுதல் இன்றியமையாததாக இருந்திருக்க வேண்டும்.

**உதாரணமாக :** 1. ஒரு நதி இரண்டு நாடுகளில் ஓடுவதாகக் கொள்வோம். கீழ்நாட்டில் அந் நதியின் குறுக்கே அணைக் கட்டப்பட்டுள்ளது. நதியில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ள

நிலையில் மேல்நாடு கீழ்நாட்டை அணையைத் திறந்து நீரை வெளியேற்றுமாறும் இல்லையென்றால் தன்னுடு வெள்ளத்தால் அழிவுக்குள்ளாகும் என்றும் வேண்டுகிறது. கீழ்நாடு அணையைத் திறப்பதில் காலதாமதம் செய்கிறது. மேல்நாடு ஆட்களை அனுப்பி அணையைத் திறந்துவிடுகிறது. இச் செயல் தற்பேணுதற்காக ஆற்றப்பட்டதால் மன்னிப்புப் பெறத் தக்கது.

ஏற்பட்டுள்ள ஆபத்தினைப் போக்கிக் கொள்ளப் போதுமான காலமிருந்தால் ஆபத்திற்குள்ளான நாடு மற்ற நாட்டிடம் முறையீடு செய்துகொள்ள வேண்டும். முறையீடு பலனளிக்காமல் போனாலோ அன்றி அதனால் ஏற்படும் கால தாமதம் பேரிழப்பை உண்டாக்குவதாகவோ இருந்தால்தான் மீறும் நாடு மற்ற நாட்டின் கோன்மைக்குப் பழுதேற்படும் வகையில் நடப்பது மன்னிக்கப்படும்.

**வழக்குகள் :**

1. **அமிலியாத் தீவு வழக்கு** (Case of Amelia Island – 1817) : அமிலியாத் தீவினை ஸ்பானியக் கடற் கொள்ளையர்கள் கைப்பற்றிக்கொண்டு அப்பக்கம் கடந்து செல்லும் கடல் வாணிபர்களைக் கொள்ளையடித்து வந்தனர். அத்தீவு ஸ்பானிய நாட்டைச் சார்ந்தது. ஸ்பானிய நாடு இதையொட்டி எவ்வித நடவடிக்கையும் எடுக்காததனால் அமெரிக்கா தனது போர்க் கப்பலை அத் தீவுக்கு அனுப்பி அக் கொள்ளையரை வெளி யேற்றியது.

2. **கரோலின் வழக்கு** (Case of the Caroline—1837): 1837ஆம் ஆண்டுகனடா நாட்டுப் புரட்சிக் கலகத்தினர் நயாகராவின் கனடா பகுதிக் கரையை யொட்டி அமைந்துள்ள நேவித் தீவினைக் கைப்பற்றிக் கொண்டு கரோலின் என்கிற நாவாய்மூலம் அமெரிக்கப் பகுதியிலிருந்து கலகக்காரர்களுக்கு தேவையான பொருள்களை அளித்து வந்தனர். அப்பொருள்கள் அங்கிருந்து நாட்டினுள்ளே யிருந்த கலகத்தினருக்கு வழங்கப்பட்டு வந்தது. இதனையறிந்த கனடா அரசு நயாகராவின் அமெரிக்கப் பகுதிக்கரைக்கு பிரிட்டிஷ் கடற்படைப் பிரிவினை அனுப்பி கரோலின் நாவா யைக் கைப்பற்றி அழித்தது. இச்செயலில் இரு அமெரிக் கர்கள் உயிரிழக்க நேரிட்டது. தன்னுட்டெல்லையில் நுழைந்த தற்காகவும் தன் குடிமக்களிருவரைக் கொன்றதற்காகவும், அமெரிக்க எல்லையின் மேலாண்மைத்தன்மையை மீறியதாகவும், அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. அமெரிக்கா, இச் செயலில்

அவசரமோ, அவசியமோ கனடாவிற்கு இருக்கவில்லை என வாதிட்டது. ஆனால் நடந்து விட்ட செயலுக்கு பிரிட்டன் மன்னிப்புக் கோரவே அமெரிக்கா அதனை அத்துடன் விட்டு விட்டது.

3. (American Expedition into Mexico—1916—19): 1916—19ஆம் ஆண்டுகளில் மெக்ஸிகோ நாட்டில் ஏற்பட்ட உள் கலவரத்தால் அங்கிருந்த அமெரிக்கக் குடிமக்கள் உயிரையும் பொருள்களையும் பாதுகாக்கவும்,தன் மேலாண்மைத் தன்மையை மீறிய குற்றத்தைத் தண்டிக்கவும் அமெரிக்கா பலமுறை மெக்ஸிகோ நாட்டிற்குள் தன் படையை அனுப்பி ஒழுங்குபடுத்த வேண்டியிருந்தது.

4. **நடுநிலை நாடுகளாக்கப்பட்ட லக்ஸம்பர்க், பெல்ஜியம் ஆகியவற்றின் மீது ஜெர்மனியின் முற்றுகை** (The German Invasion of Luxumburg and Belgium - 1914) :

1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் ஜெர்மனி ரஷ்யாவின் மீது போர் அறிவிப்புச் செய்தவுடன் நடுநிலையாக்கப்பட்ட (Neutralized) லக்ஸம்பர்க்கிற்குள் தன் படையை நடத்திச் சென்று பெல்ஜியம் நாட்டின் வழியாகக் கடக்கும் உரிமை கோரியது. பெல்ஜியம் அவ்வுரிமையை மறுக்குமானால் பெல்ஜியத்தை ஜெர்மனி பகை நாடாகக் கருதும் என்றும் அறிவிப்புச் செய்தது. பெல்ஜியம் மறுக்கவே ஜெர்மனி பெல்ஜியத்தை வென்று தன் கைப்படுத்திக்கொண்டு அதன் வழியாகத் தன் படையை நடத்தி ஃபிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள்மீது தாக்குதல் நடத்தியது.

இச் செயலுக்கு விளக்கமளித்த ஜெர்மனி, ஒருபுறம் ரஷ்யாவும் மற்றொருபுறம் ஃபிரான்ஸ் நாடும் தன்மீது போர் மேற்கொண்டிருந்ததால் தற்பேணும் பொருட்டு லக்ஸம்பர்க், பெல்ஜியம் வழியாகத் தன் படையை வெளிக்கொணர்ந்து தாக்குவதைத் தவிர தனக்கு வேறு வழி இல்லை யென்றும் இதற்கு அந் நாடுகள் அனுமதி மறுக்கவே தான் வென்று கைப்பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டதென்றும் கூறியது.

ஆனால் இவ் விளக்கத்தை உலக நாடுகள் ஏற்கவில்லை. காரணம் ஜெர்மனிதான் ரஷ்யா மீதும் ஃபிரான்ஸ் மீதும் போரைத் துவக்கியது. இவ் வழியில் போரை எளிதாகவும் வெற்றிகரமாகவும் முடிக்கும் வாய்ப்பிருந்ததால் ஜெர்மனி இக் காரணத்தின் மறைவில் தன் நோக்கத்தை முடித்துக் கொண்டது.

# 13. இடையீடு

## (Intervention)

ஒரு நாட்டின் உள், வெளி விவகாரங்களில் மற்றொரு நாடு தலையிடுவது நாட்டிடைச் சட்ட விதிகளுக்குப் புறம்பானது. இத்தலையீடு தலையிடப்படுகின்ற நாட்டின் தனி மேலாண்மைத் தன்மையைப் பாதிக்கத்தக்கது. இத் தலையீடு உரிமையுடன் கூடிய தலையீடு,உரிமையற்ற தலையீடு என இருவகையாகப் பிரிக்கின்றனர். பொதுவாகத் தலையீடு என்றால் ஆதிக்க மனப் பான்மையோடு செய்யும் இடையீடுகளையே (Dictatorial-Intervention) குறிக்கும். ஒரு நாட்டின் விவகாரங்களில் மற்ற நாடு தலையிடுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு விதிவிலக்குண்டு. அது உரிமைபெற்ற தலையீடு (Intervention by Rights).

ஒரு நாட்டின் விவகாரத்தில் மற்ற நாடு இடையிடுவதாலேயே அதனைத் தலையீடு என்று கூறிவிட இயலாது. சிலசமயம் இரு நாடுகளிடையே பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் குறிக்கோளுடனோ—சந்து செய்விக்கும் பொருட்டோ (Extending Co-operation to reconcile) மற்றொரு நாடு தன் ஒத்துழைப்பை நல்கக்கூடும். இச்செயல்கள் தலையீடு ஆகாது. உதாரணமாக :

1. 1826இல் டான் மிகேல் என்பவர் தலைமையின் கீழ் போர்ச்சுகலில் நடந்த புரட்சியை ஒடுக்க, போர்ச்சுகலின் வேண்டுகோளின்பேரில் பிரிட்டன் படைகளை அனுப்பியதும்,

2. 1849இல் ஆஸ்ட்ரியாவின் வேண்டுகோளுக்கிணங்க ரஷ்யா ஹங்கேரி புரட்சியை அடக்க ஹங்கேரி நாட்டுக்குத் தன் படையை அனுப்பியதும் தலையீடாகாது.

**உரிமையுடன் கூடிய தலையீடு** (Intervention by Right):

எப்பொழுதும் தலையீடென்பது, ஒரு நாட்டின் புறத் தன்னியக்கத்தையோ (External-Independence) அந்நாட் டெல்லையின் தனி மேலாண்மைத் தன்மையையோ (Supremacy) பழுதாக்க வல்லது. ஆனால் தலையீடு உரிமையினடிப்படையில் இருக்குமானால், தலையிடப்படுகின்ற நாட்டின் புறத் தன்னியக்கமோ, எல்லைகளின் தனிமேலாண்மைத் தன்மைக்கோ குந்தகம் ஏற்பட்டதாகக் கொள்ளுதல் கூடாது. ஏனென்றால் உரிமையடித் தலையீட்டில் தலையிடப்படுகின்ற நாடு ஏதோ காரணங்களுக்காக வேற்று நாட்டின் தலையீட்டிற்குத் தன்னை உட்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டது. ஒரு நாடு ஏழு காரணங்களுக்காக உரிமையடித் தலையீடு செய்யலாம்.

அவைகளாவன :

1. தன் காப்பாட்சிக்குட்பட்ட (Protectorate) நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட மேலாட்சி நாட்டிற்கு உரிமை யுண்டு.

2. ஒரு நாட்டின் வெளி விவகாரம் மற்றொரு நாட்டையும் அதில் ஈடுபடுத்த வல்லதாயின், அத்தகு நாடு முதல் நாட்டின் விவகாரங்களில் தலையிட உரிமையுண்டு

3. உதாரணமாக 1878ஆம் ஆண்டு ரஷ்யா, துருக்கி யுடன் சேன்ஸ்டெஃப்பெனோ (San Stefeno) அமைதி உடன் படிக்கை செய்து கொண்டது. ஆனால் இவ் வுடன்படிக்கையின் நிபந்தனைகள் 1856ஆம் ஆண்டு ஆகஸ்ட் பாரீஸ் உடன்படிக் கைக்கும், 1871ஆம் ஆண்டின் லண்டன் ஏற்பு விதிகளுக்கும் (Taeaty of Paris 1856 and Convention of London of 1871) மாறுபட்டது என்று கூறியதன் பேரில் ரஷ்யா இதனை மறு பரிசீலிக்க பெர்லின் மாநாட்டைக் கூட்டியது. எந்நாடேனும் தன் வெளிவிவகாரத் தன்னியக்கத்தையோ (External Independence) தனி மேலாண்மைத் தன்மையையோ (Personal Supremacy) வரையறுத்து மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட பின், அவ்வரையறை மீறிச் செயல்படு மாயின், ஒப்பந்தம் செய்து கொண்டதும் அம் மீறுதலால் பாதிக்கப்பட்டதுமான நாடு, மீறிய நாட்டின் விவகாரங்களில் தலையிடும் உரிமை பெற்றது.

உதாரணமாக : 1. ஐக்கிய அமெரிக்க ஹவானா ஒப்பந் தத்தின் 3-வது பிரிவின்படி (Art. 3. Treaty of Havana)1903ஆம்

ஆண்டு ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு க்யூபாவின் (Cuba) விவகாரங்களில் தலையிட்டது.

2. கிரீஸ் நாட்டுக் காப்பாளர்களான ரஷ்யா, பிரிட்டன், ஃபிரான்ஸ் ஆகிய நாடுகள் 1916—17ஆம் ஆண்டுகளில் கிரீஸ் நாட்டில் சட்ட முறை அரசை (Constitutional Government) நிலைநிறுத்தும் பொருட்டு, அந்நாட்டு ஆட்சியில் தலையிட்டு மன்னர் கான்ஸ்டேன்டின் என்பவரை வெளியேற்றிவிட்டு அவரது இரண்டாவது மகன் அலெக்ஸாண்டர் என்பாரை ஹெலெனெஸ் (Hellenes) மன்னராக நியமித்தன.

3. உலக நாடுகளில் ஏற்கப்பட்டு வழங்கிவரும் நாட்டிடைச் சட்ட விதியினை அமைதிக் காலத்திலோ போர்க் காலத்திலோ எந் நாடேனும் மீறுமாறுல், அந் நாட்டின் விவகாரங்களில் தலையிட்டு அந் நாட்டைச் சட்ட விதிகளின்படி நடக்கச் செய்ய மற்ற நாடுகளுக்கு உரிமையுண்டு.

4. எந் நாடேனும் மற்ற நாட்டுடன், தன்னுடு ஒரு குறிப்பிட்ட அரசியலமைப்பாலோ, அரச வம்சத்தாலோ ஆளப்படும் என உறுதி ஒப்பந்தம் செய்துகொண்டு, அவ்வுறுதியினின்றும் வழுவுமாயின், உறுதி பெற்ற நாடு தலையிட்டு வாக்குறுதியை நிலை பெறச் செய்யும் உரிமை பெற்றது.

5. ஒரு நாடு வேற்று நாட்டிலுள்ள தன் குடிகளின் நன்மையைக் கருதி அந் நாட்டு விவகாரங்களில் தலையிடும் உரிமை பெற்றது.

6. உலக நாடுகள் (Covenant of the League of Nations) மன்றச் சாசனமும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் சாசனமும் (Charter of the United Nations) உலக அமைதியைக் குலைக்கும் செயலில் ஈடுபடும் நாட்டின்மீது உலக நாடுகள் கூட்டுத் தலையீடு நடத்தி தேவைப்பட்டால் போர் மேற்கொண்டேனும் அந் நாட்டை அமைதி வழிக்குக் கொண்டுவரும் உரிமையை வழங்குகின்றன.

மேற்கூறிய உரிமையடித் தலையீடுகளைத் தவிர வேறு இரண்டு காரணங்களுக்காகவும் நாடுகள் தீங்கற்ற தலையீடு செய்தல் கூடும். அவைகளாவன :

1. தற்பேணுதல்—Self Preservation.

2. அரசுகளின் வலிமையைச் சமனுக்கும் பொருட்டு— In the interest of the Balance of Powers.

இவை தவிர மனிதாபிமான அடிப்படையிலும்கூட இடையிடுதல் உண்டு. ஒரு நாடு தன் நாட்டு மக்களைத் தன்னிச்சையாக நடத்தும் உரிமை பெற்றதெனினும், அவ் வுரிமை சில வரையறைகளுக்கும், நெறிமுறைக்கும் உட்பட்டது. தன்னுட்டு மக்களுக்கு அடிப்படை மனித உரிமைகளை மறுத்துக் கொடுங்கோன்மை ஆட்சி நடத்துமாயின் அத்தகு நாட்டின் உள்விவகாரத்தில் தலையிட்டு நல்வழிக்குக் கொண்டு வர மற்ற நாடுகளுக்கு உரிமையுண்டு எனவும் நாட்டிடைச் சட்ட விதிகள் ஏற்கின்றன.

உதாரணமாக 1827ஆம் ஆண்டு புரட்சி கிரீஸ் நாட்டுக்கும் துருக்கி நாட்டுக்குமிடையே நிகழ்ந்த சச்சரவில் மனித இனத் திற்களிக்கப்பட்ட கொடுமைக்கெதிராக, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தலையிட்டன. இவ்வகைத் தலையீடு அடிக்கடி நிகழ்வதுண்டு. அண்மையில் 1971–72ஆம் ஆண்டு களில் மேற்கு பாகிஸ்தான் புரட்சி செய்த கிழக்கு பாகிஸ்தான் மக்களைக் கடுங் கொடுமைகளுக்குள்ளாக்கியது. இந்தியா மனிதாபிமானக் காரணங்களுக்காக அந் நாட்டு விவகாரங் களில் தலையிட்டுக் கிழக்கு பாகிஸ்தான் மக்களைக் கொடுமை யிலிருந்து காப்பாற்றி, தனி நாடாக (பங்களா தேஷ்) மலர உதவிற்று.

**மன்றோ கொள்கை** (Monroe Doctrine) :

ஐக்கிய—அமெரிக்க நாடுகளின் மக்கள் தலைவர் ஜேம்ஸ் மன்றோ என்பார் 1823ஆம் ஆண்டு இக் கொள்கையை வெளியிட்டார். இதனைத் தென் அமெரிக்க நாடுகள் பெரும்பா லானவை ஏற்று செயல்பட்டன.

இக் கொள்கையின் நோக்கம் :

இக் கொள்கையின் முதன்மையான நோக்கம் அமெரிக்கக் கண்டத்திலுள்ள மற்ற நாடுகளின் விவகாரத்தில் ஐக்கிய— அமெரிக்க நாடு மட்டுமே தலையிடும் உரிமையை ஏற்படுத்திக் கொள்வதுதான். ஆனல் மற்ற ஐரோப்பிய நாடுகள் தென்— அமெரிக்க நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதையும் மேலும் குடியேற்றங்களைத் தவிர்ப்பதற்காகப் பொதுவாகவும், குறிப்பாக வடமேற்கு அமெரிக்காவில் ரஷ்யாவின் ஆதிக் கத்தை ஒழிக்கவும், ஸ்பேனிய-அமெரிக்கக் குடியேற்ற நாடு

களின்மீது ஸ்பெயின் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்யவும் இக் கொள்கை உருவாக்கப்பட்டது. இதனைப் புனித ஒப்பந்தம் (Holy Alliance) எனவும் கூறுவர்.

இக் கொள்கை சாற்றும் விழைவு அறிவிப்புகள் (Declarations) மூன்று பகுதிகளாகும் :

1. இதுகாறும் தடையற்ற குடியேற்ற நாடாகவிருந்த அமெரிக்கக் கண்டம் இனிமேல் எந்த ஐரோப்பிய நாடுகளாலும் குடியேற்ற நாடாகக் கருதப்படுதல் கூடாது. இந்த ஆவணத்தை (Declaration) பிரிட்டன், ரஷ்யா போன்ற ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக்கொள்ளாததுடன் எதிர்ப்பும் தெரிவித்தபோதும், பின்னர் எவ்விதக் குடியேற்றமும் எந்த நாடும் மேற்கொள்ளவில்லை.

2. ஐரோப்பிய நாடுகளின் உள் விவகாரங்களிலோ அல்லது ஐரோப்பியப் போர்களிலோ அமெரிக்கா தலையிடாது. தலையிடுவது அமெரிக்காவின் எண்ணமும் அல்ல.

3. ஐரோப்பிய நாடுகள் புதிய தென்—அமெரிக்க நாடுகளின்மீது தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டும் வகையில் தலையிட்டால் அதனை அமெரிக்கக் கண்டத்திற்கெதிரான பகைமை நடவடிக்கையாகக் கருதப்படும். இதுவே மிக முக்கியமான கொள்கையாக அமைந்தது.

மன்றோ கொள்கை வெளியீட்டிலிருந்து ஐக்கிய அமெரிக்கா, அமெரிக்கக் கண்டத்தின் தலைமையை மறைமுகமாக உருவாக்கிக் கொண்டது. அதுமுதல் தென் அமெரிக்க நாட்டுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் எல்லைப்புறச் சிக்கல் ஏற்படும்போதெல்லாம் ஐக்கிய அமெரிக்கா தலையிடும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது.

**மன்றோ கொள்கையின் சிறப்புகள் :**

1. இக் கொள்கை தென் அமெரிக்க நாடுகளுக்குத் தனித்தியங்கும் (Independence) தன்மையைத் தந்தது.

2. தங்கள் ஐரோப்பியத் தாய்நாடுகளுடன் தென் அமெரிக்க நாடுகள் உலக அரங்கில் சமத்துவம் பெற வழிவகுத்துக் கொடுத்தது.

3. நாடுகளின் வட்டார வளர்ச்சி, ஒருமைப்பாட்டுணர்ச்சி ஆகியவற்றைத் தோற்றுவித்தது.

**மன்ரோ கொள்கையின் வளர்ச்சி :**

இக் கொள்கை முதலில் ஐக்கிய அமெரிக்காவால் தன் சார்பாக (Unilateral) மட்டுமே வெளியிடப்பட்டதெனினும் தென் அமெரிக்க நாடுகள் வழக்கில் ஏற்றுச் செயல்படத் துவங்கியதோடு பின்னர் கூடிய மா நாடுகளில் இக்கொள்கையை ஏற்று வலியுறுத்தியதன் மூலம் இக்கொள்கை முக்கியத்துவமும் பொதுத் தன்மையும் பெறலாயிற்று.

தென் அமெரிக்க நாடுகள் 1938இல் லிமா(Lima)வில் கூட்டிய பேன் அமெரிக்கன் (Pan-American) மா நாடு இக் கொள்கையை வலியுறுத்திற்று. 1940இல் ஐக்கிய அமெரிக்க நாடு, ஜெர்மனிக்கும் இத்தாலி நாட்டுக்கும், அமெரிக்க நாடுகளல்லாத நாடுகளின் அமெரிக்க நிலப்பகுதியை வேறொரு அமெரிக்காவல்லாத நாட்டுக்கு மாற்றுதலாகாது என எச்சரிக்கை விடுத்தது. 1940இல் அபானு (Habana)வில் கூடிய அமெரிக்கக் குடியரசுகளின் வெளி விவகார அமைச்சர்களின் மாநாட்டிலும் மன்ரோ கொள்கையின் ஆவணங்கள் வலியுறுத்தி ஏற்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் சாசனமும் இத்தகு வட்டார ஒப்பந்தங்கள் வளர வழி வகுத்துள்ளது.

# 14. தன் முடிவுரிமை
## (Right of Self Determination)

உலகில் மனித இனம் தோன்றிப் பெருகி வளர ஆரம்பித்தபோது, இன்று நாம் காண்கிற வகையில், மக்கள் சமுதாயமாகவோ, நாடெனும் வகையிலோ அமைப்புகளைப் பெற்றிருக்கவில்லை. மனித இனத்தின் அறிவும் நாகரீகமும் வளர வளர, மொழிகள் தோன்றின. அதன்பின் மக்கள் கூட்டம் மொழியினடிப்படையிலோ, இனத்தினடிப்படையிலோ சமுதாயங்களாக இயங்கத் தொடங்கின. இவ் வகையில் விரைவான நாகரீக வளர்ச்சி பெற்ற சமுதாயத்தினர் தங்களுக்கென்று ஒரு நிலப்பரப்பிற்குள் நாடுகளைத் தோற்றுவித்துக் கொண்டனர். அதே நேரத்தில் மற்ற சமுதாயங்களிலிருந்து விலகி நாகரீக உலகுடன் தொடர்புகொள்ள முடியாத இருண்ட பகுதியில் வாழ்ந்த மக்கள், நாகரீக முதிர்ச்சி பெற்ற மக்களுக்கிணையாகத் தங்களுக்கென்று முன்னேற்றமான அரசியலமைப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளாமல் மழலை மனிதர்களாகவே வாழ்ந்திருந்தனர்.

அறிவு வளர்ச்சியும், சூழ்ச்சியும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. நாகரீக முதிர்ச்சி பெற்ற மனிதன் நாகரீக முதிர்ச்சி பெறாத மனிதனை, காலப் போக்கில் தனது பல்வேறுபட்ட வளர்ச்சிக்கு கருவியாகப் பயன்படுத்தத் துவங்கினான். அவ் வகையில்தான் அடிமை இனங்கள் தோன்றலாயின. நாகரீகத்தில் முதிர்ச்சி பெற்றதாகக் கூறிக்கொள்ளும் மனிதர்கள், சூழ்ச்சியறியாத மனிதக் கூட்டத்தினரை மந்தை மந்தையாகப் பிடித்துவந்து, சந்தையிலே விலை கூறி விற்றதும், உழைக்காமலேயே தங்கள் வாழ்வைச் செழிப்பாக்கிக்கொள்ள விரும்பியோர் அவ் வடிமைகளை வாங்கிச் சென்று அவர்களுடைய மனித சக்தியைப் பிழிந்தெடுத்துத் தங்கமாக்கிக் கொண்ட சம்பவங்களும் மனித

வரலாற்றைப் புரட்டுவோமானால் பக்கத்திற்குப் பக்கம் நாம் சந்திக்கும் நிகழ்ச்சிகளாகும்.

இவ் வடிமைகள் பல்வேறு வகையினராகும்; தொழிலடிமைகள், எழிலடிமைகள், அரசியலடிமைகள் எனப் பிரிக்கலாம். இவ்வாறு மனிதக் கூட்டங்களை அடிமைப்படுத்துவதுடன், படை வலிமை கொண்ட நாடு எளிய நாடுகளையே தனக்கடிமையாக்கிக் கொள்ளும் சம்பவங்களும் வரலாற்றில் சாதாரண நிகழ்ச்சி. இவ்வாறு அடிமையுற்ற இனங்களோ, நாடுகளோ என்றென்றும் அடிமைப்பட்டுக் கிடக்கவேண்டியது தானா என்ற கேள்விக்கு விடைதான் தன்முடிவுரிமை.

தன்முடிவுரிமையின் தேவை :

துவக்கத்தில் எவ்வாறு மனிதன் இயற்கை நிலங்களைத் தன் கையகப்படுத்தியும், மற்றவன் நிலத்தைத் தன் வலிமையினால் திருடியும் தன் நில உரிமையைப் பெருக்கிக் கொண்டானோ அவ்வாறே நாடுகளும் துவக்கத்தில் தங்களுக்கென்று ஒரு நிலப்பரப்பை ஏற்படுத்திக் கொண்டு பிறகு, தம் படை வலிமையால் வேறு எளிய நாடுகளின் நிலப் பரப்பையும் தங்கள் எல்லையுடன் இணைத்துக்கொள்வதும், தங்களைவிடப் பெரு வலிமை கொண்ட நாடுகளுக்கு சில நிலத் துண்டுகளைப் பரிசாகக் கொடுத்து அவற்றுடன் நட்புக்கொள்வதும், நாடுகளின் எல்லை மாற்றத்தில் பழைய முறைகள்.

கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக அரசியலிலும் படை வன்மையிலும் முன் நின்ற நாடுகள் தங்கள் அரசியல், பொருளாதார வளர்ச்சியையும் லாபத்தையும் கருதி நிலவுலகின் பல்வேறுபட்ட இன, மொழி, நிலப்பிரிவுகளைச் சார்ந்த மக்களைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவதும், பின்னர் மேற்கொண்டு தங்களால் அங்கு ஆதிக்கம் செலுத்த இயலாத காரணத்திற்காகவோ, விடுதலை நல்கும்போது ஒன்றுக்கொன்று விருப்பமில்லாத நாடுகளை இணைத்து விடுதலை வழங்கி விடுவதாலும், குடியேற்ற நாடுகளுக்கும், தன்னாட்சி உரிமையில்லாத நாடுகளுக்கும் விடுதலை வழங்க மறுத்ததாலும், பாதிக்கப்பட்ட சமுதாயத்தினர் தங்கள் அரசியல், பொருளாதார, கலாச்சார வளர்ச்சியையும், வாழ்வு மேம்பாட்டையும் அடைய எவ்வழி சிறந்தது என்பதைத் தாங்களாகவே நிர்ணயிக்கும் உரிமை பெறுவது அவசியமாகிறது. அத்தகைய உரிமையைத் தான் தன்முடிவுரிமை எனக் குறிக்கின்றோம்.

குறிப்பிட்ட சமுதாயத்தினர் தன் முடிவுரிமை பெறுதல் வேண்டும் என்று கூறும்போது 'சமுதாயத்தினர்' என்பது யாரைக் குறிக்கும், தன் முடிவுரிமை என்ருல் என்ன என்று விளக்க வேண்டுவது அவசியமாகிறது. 'சமுதாயத்தினர்' என்ற சொல் ஒரு பொதுவான மொழியாலோ, நிலப் பரப்பாலோ, அரசியல் கொள்கையாலோ தங்களை இணைத்துக் கொண்டுள்ள மக்கள் தொகுப்பு என்று அமெரிக்காவும், ரஷ்யாவும் அனைத்துலக அரங்கில் பொருள் கொள்கின்றன.

தன்முடிவுரிமை :

நெதர்லாண்ட்ஸ் நாடும் இந்தோனேஷியா நாடும் 1962ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 15ஆம் நாள் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தில் மேற்கு நியூகினி மக்களுக்குத் தன்தேர்வுரிமை (Freedom of Choice) வழங்கும் பகுதியில் 'தன்முடிவுரிமை' என்ருல் மற்ருெரு நாட்டைச் சார்ந்து வாழும் மக்கள், தங்கள் விழைவைப் பொது வாக்கெடுப்பு வாயிலாகவோ, மற்ற வகையிலோ வெளிப்படுத்தும் உரிமை என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

தன்முடிவுரிமை என்பது நாட்டிடைச் சட்டத்தில் புதிய தொரு அத்தியாயத்தைத் துவக்கியுள்ளது. அண்மைக்காலம் வரை இத் தலைப்பு நாட்டிடைச் சட்டத்தின்கீழ் வரவில்லை. பெருமளவு நாடுகள் இத்தகைய உரிமைகள் உள்நாட்டுச் சட்டத்தின் பிரிவைச் சார்ந்தவை என்று கூறி ஒதுக்கி வந்தன. ஆனல் இப்பொழுது புதிதாக விடுதலை பெற்றுத் தனித் தன்மை நாடுகளாக உலக அரங்கில் மலர்ந்துள்ள நாடுகளும், ஐ. நா. அமைப்பும், இங்கே விளக்கப்போகிற காரணங்களுக்காக 'தன் முடிவுரிமை' நாட்டிடைச் சட்டத்திஞல் வருவதே என்ற கொள்கைக்குப் பெரும் வலிவு தேடியுள்ளன. நாட்டிடைச் சட்டத்தில் இம் முன்னேற்றம் 1958ஆம் ஆண்டிற்குப் பின்னரே துவங்கியது. அதுவரை வழங்கி வந்த நாட்டிடைச் சட்டத்தில் சார்ந்து வாழும் மக்கட்கு இத்தகைய உரிமைகள் பற்றிய குறிப் பெதுவும் இல்லை.

ஐ.நா. அமைப்பு 1958இல் தனது தீர்மானம் ஒன்றின் வாயிலாக, சார்பு நிறுவனங்களுக்கும், மக்களுக்கும் (dependent entities and people) தன்முடிவுரிமை உண்டென அங்கீகரித்து ஏற்றதன் மூலமும், குடியேற்ற நாடுகளுக்கும், மக்களுக்கும் விடுதலை வழங்குதல் பற்றி 1960ஆம் ஆண்டு வெளியிட்ட

தீர்மானத்திலும், ஐ. நா. அமைப்பின் சாஸனத்தின் அடிப் படையில் நாடுகளிடையே நட்புறவும் கூட்டுறவும் பற்றிய 'நாட்டிடைச் சட்ட கொள்கைகள்' என்று 1970இல் ஐ.நா.வின் பொதுமன்றம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளில் 'மக்களின் சம உரிமையையும் தன் முடிவுரிமையையும்' ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டிருப்பதாலும் 'தன்முடிவுரிமை' பெரிதும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. மேல்கண்ட காரணங் களின் அடிப்படையில் ஐ.நா. அமைப்பு, நாடுகளிடையே அமைதியும் நட்புறவும் நிலவ வேண்டுமானால் தங்களின் விருப் பத்திற்கெதிராக மற்ற நாட்டுடன் இணைக்கப்பட்டிருக்கும் மக்களினமோ, நாடோ, தொடர்ந்து இணைந்திருக்கவோ, இணைப்பைத் துண்டித்துக் கொண்டு தனித்தியங்கவோ தாங்களாக முடிவெடுக்கும் உரிமை பெற்றிருத்தல் அவசியம் என்று கருதுவதை உணரலாம்.

ஐ.நா. அமைப்பு சாசனத்தின் 2 (4) பிரிவு, எந்நாடும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள அமைதி வழியையே கடைப் பிடிக்க வேண்டுமேயல்லாமல் ஆயுதமேந்தும் முறையை மேற்கொள்ளக்கூடாது என்று கூறியுள்ளது. இப் பிரிவு நாடுகளை விளித்துக் கூறப்பட்டிருப்பதால் எந்த நாடும் தன் நாட்டு மக்களுக்கெதிராகக்கூட ஆயுதம் பயன்படுத்துதல் கூடாது என்று பொருள் கொள்ளுதல் வேண்டும் எனக் கூறப் படுகிறது. இக் கருத்தை அண்மையில் விடுதலை பெற்ற நாடுகள் குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகள் பெரிதும் ஏற்றுக் கொண்டுள்ளன. இக் கருத்து ஏற்கப்படுமானால் பல மொழி, இனம், கலாச்சாரத்தைச் சார்ந்த மக்கள் கூடி வாழும் ஒரு நாட்டில் ஒரு பகுதியினர் தங்கள் உரிமைகள் பாதிக்கப் படுவதாகக் கருதினால் அவர்களுக்குத் தன்முடிவுரிமை வழங்கப் படுதல் வேண்டும் எனவும், அவர்களது விருப்பத்தை அடக்கி ஒடுக்க அந்நாடு ஆயுதமேந்த இயலாது எனவும் பொருள் படும். (Max Sorensen Manual of Public International Law– Pages 771—772.)

அண்மையில் இதனை நாம் நடைமுறை வாழ்க்கையிலும் 'பங்களா தேஷ்' விவகாரத்தில் கண்டோம். மேற்கு பாகிஸ்தான் தங்கள் உள்நாட்டுப் பிரச்னை என்று கூறி கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் விருப்பத்தை அடக்க இராணுவ வலிமையைப் பயன்படுத்தியது. ஆனால் அப் பிரச்னை வெகு விரைவில் உலக அரங்கிற்குவந்து கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தங்களின் தன்முடிவுரிமைக் கோரிக்கையில் வெற்றி பெற்று

தனி நாட்டையும் ஏற்படுத்திக்கொண்டனர். ஒரே நாட்டில் வாழும் மக்களில் ஒரு பிரிவினர், அதே நாட்டில் வாழும் ஆனால் வேறு மொழியையோ, இனத்தையோ சார்ந்த பிரிவினர் மீது ஆதிக்கம் செலுத்தவோ, அவர்களது அடிப்படை மனித உரிமைகளைப் பறிக்கவோ முயற்சித்தால், அது உலகில் எந்த நாடாயிருப்பினும் அதற்கு பாகிஸ்தான் சம்பவம் நாட்டிடைச் சட்டத்தில் ஒரு எச்சரிக்கையாகவும், எடுத்துக்காட்டாகவும், அடிப்படை ஆதாரமாகவும் அமைந்துவிட்டது.

தென்மேற்கு ஆப்பிரிக்கா (நமீபியா)வில் தன் பொறுப் பாண்மையில் நிர்வகிக்கும் தென் ஆப்பிரிக்கா நாடு ஐ.நா.வின் மேற்பார்வைக்குப் பணிய மறுத்தது. எனவே நாட்டிடை நீதி மன்றம் இதன் விளைவாக ஏற்படும் சட்டபூர்வமான நிலைபற்றிய தனது அறிவுரைக் கருத்தில், தென்மேற்கு ஆப்பிரிக்கா (நமீபியா) மக்களுக்கு விடுதலையை நோக்கி முன்னேற உரிமை உண்டென்று கூறுகிறது. தன்முடிவுரிமைக்காகப் போராடும் மக்களிடத்து பரிவு கொண்டு உலக நாடுகள் தனித்தோ அல்லது கூட்டாகவோ அவர்கள் தன்முடிவுரிமை எய்தவும், கோன்மை அதிகாரங்களைப் பெறவும் உதவி செய்ய வேண்டும்; மற்றும் தன்முடிவுரிமையை மறுக்கின்ற எந்த வன்செயலிலும் ஈடுபடக் கூடாது. ஐ.நா.வின் பொதுமன்றம் தனது தீர்மானத்தில் குடியேற்ற (Colony) ஆதிக்கத்தை விரைவாக வும் நிபந்தனையின்றியும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய தேவையையும் விடுதலை பெறாத நாடுகளுக்கு விரைவில் எல்லா அதிகாரங்களும் மாற்றப்பட வேண்டும் என்பதையும் பறை சாற்றுகின்றது. இதை நிறைவேற்ற 1961ஆம் ஆண்டு ஒரு தனிக் குழுவையும் ஏற்படுத்தியது.

பிரிவு (iii)

# 15. நாடு என்றால் என்ன?

நாடுகள்தான் நாட்டிடைச் சட்டத்தின் மூலாதாரப் பொருள் (Subject). நாடு என்பதனை விளக்குவது கடினம் என்றாலும் நாட்டிற்கு வேண்டிய தன்மைகளை நாட்டிடைச் சட்டமும், மாண்டேவிடோவில் 1933ஆம் ஆண்டில் கூடிய சிறப்பு சட்டப் பேரவையில் (Convention) ஏற்றுக்கொண்ட தீர்மானமும் நிர்ணயித்துள்ளன.

அவையாவன :

(அ) நாகரீகமடைந்து நிலையான சமுதாயமாக இணைந்து செயலாற்றும் மக்கள் கூட்டு.

(ஆ) எல்லைகளால் வரையறுக்கப்பட்ட ஆட்சி நிலப்பரப்பு.

(இ) அரசு—குடியரசாகவோ முடியரசாகவோ இருக்கலாம்.

(ஈ) மற்ற நாடுகளுடன் தொடர்பும் உறவும் கொள்வதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளும் ஆற்றலும் தனி மேலாண்மையும் (Independent Sovereign) பெற்றிருத்தல் வேண்டும்.

இவற்றில் இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள நிலப்பரப்பு ஓரே சீரானதாக இராது. ஒரு சமயம் கூடியும் குறைந்துமிருக்கும். ஏனென்றால் நாடுகள் போரில் ஈடுபடும்போது நிலப்பரப்பு கூடுவதும் குறைவதும் இயற்கை. ஆனால் இவற்றில் மிக முக்கியமாக வேண்டுவது மற்ற நாடுகளுடன் உறவு கொள்வதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளும் தகுதியும், தனி மேலாண்மைத் தன்மையுமாகும்.

**நாடுகளின் அடிப்படை உரிமைகளும், கடமைகளும்:**

சில நாட்டிடைச் சட்ட நிபுணர்கள் குறிப்பாக இயற்கை கோட்பாட்டாளர்கள் (Naturalists), நாடுகள் சில அடிப்படை

உரிமையும், கடமையும் கொண்டவை என்ற கருத்துடையவர் களாவர்.

இந்த இயற்கைக் கோட்பாட்டாளர்கள் பொதுவாக உலக நாடுகளிடையே உறவு முறைகளை நெறிப்படுத்தும் தரமுடைய விதிமுறைகளை உருவாக்குவதைக் கொள்கையாகக் கொண் டிருந்தனர்.

அடிப்படை உரிமைகளாவன (Independence).

1. தனித்தியங்கும் தன்மையும் மேலாண்மைத் தன்மையும் கொண்டிருத்தல்.
2. நாடுகளிடையே சமத்துவம்.
3. தன் நிலவரம்பில் ஆட்சி செலுத்தும் உரிமை.
4. தற்காத்துக் கொள்ளும் உரிமை.

இவற்றிற்கிணையான கடமைகளாவன:

1. போரில் ஈடுபடாதிருத்தல்.
2. செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகளை நல்லெண் ணத்துடன் செயல்படுத்தல்.
3. மற்ற நாட்டு நடவடிக்கைகளில் தலையிடாதிருத்தல்.

நாடுகளின் தனித்தியங்கும் தன்மையும் (Independence) மேலாண்மைத் தன்மையும் (Sovereighty):

ஒரு நாடு தனது ஆட்சிக்குட்பட்ட மக்கள் மீதும் பொருள்கள் மீதும் ஆட்சி செலுத்துவதிலும், தன்னாட்டு நடவடிக்கைகளில் தனித்தியங்கும் தன்மையும், மேலாண்மைத் தன்மையும் பெற்றதாகக் கருதப்படுகிறது. ஆனால் மேலாண்மைத் தன்மையை 18—19ஆம் நூற்றாண்டில் புரிந்து கொண்ட வகையில் நாம் ஏற்றுக் கொள்ள இயலாது. 20ஆம் நூற்றாண்டில் அனைத்துலக அரசியல் அரங்கில் ஏற்பட்டுள்ள பல மாறுதல்கள், வளர்ச்சி களின் காரணமாக ஒரு நாட்டின் மேலாண்மைத் தன்மை ஒரு வரையறைக்குட்பட்டுத்தான் இனி இயங்க முடியும். காரணம் ஒவ்வொரு நாடும் அனைத்துலக அரங்கில் சில கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டது. அந்த அளவிற்குக்

குறிப்பிட்ட நாட்டின் மேலாண்மைத்தன்மை குறுக்கப்படுவது தவிர்க்க முடியாதது. எனவே இன்றைய நிலைமையில் ஒரு நாடு நாட்டிடைச் சட்டத்தின்கீழ் ஆற்ற வேண்டிய கடமைகள் என்னென்னவோ அவை நீக்கியபின் எஞ்சும் அதிகாரமே மேலாண்மைத் தன்மையாகும்.

ஒரு நாட்டின் தனித்தியங்கும் தன்மையை யொட்டி எழக் கூடிய சில உரிமைகளும், அவற்றிற்கிணையான கடமைகளும்:

உரிமைகள் :

அ. தனது உள்ளாட்சி நடவடிக்கைகளில் (Domestic Affairs) முற்றிலும் தன்னிச்சையுடன் செயல்படும் உரிமை.

ஆ. அயலாரை (Aliens) நாட்டினுள் அனுமதிக்கவும், வெளியேற்றவும் உண்டான உரிமை.

இ. தன்னாட்டின் தூதுவர்க்கு அன்னிய நாட்டில் சிறப்புச் சலுகைகள் பெறும் உரிமை.

ஈ. தன்னாட்டில் குற்றச் செயல் புரிந்தோரின்மீது நீதி நடவடிக்கை எடுத்துத் தண்டனை நல்கும் உரிமை.

பின்வருவன இவற்றினையொட்டி யெழும் கடமைகள்:

(1) அயல் நாட்டெல்லையில், தன் மேலாண்மைத் தன்மையின் (கோன்மையின்) அடியெழும் செயல்களில் ஈடுபடாதிருத்தல்.

(2) வேற்று நாட்டின் தனித்தியங்கும் தன்மைக்கும் மேலாண்மைத் தன்மைக்கும் பழுதேற்படத்தக்க வகையில் தன்னாட்டுக் குடிமக்களும், அரசுப் பணியாளர்களும், முகவர்களும் (Agents) செயல்பட்டுவிடாமல் கண்காணிப்பது.

(3) அயல்நாட்டின் காரியங்களில் இடையீடு(Intervention) தவிர்த்தல்.

அயல்நாட்டெல்லையில் தன் மேலாண்மைத் தன்மையின் அடியெழும் செயல்களில் ஈடுபடாதிருத்தல். எடுத்துக் காட்டாக ஒரு நாடு தன்னாட்டுச் சட்டத்தை மீறியவர்களோ தன்னாட்டில் குற்றம் புரிந்தவர்களோ வேற்று நாட்டெல்லையிலிருக்கும்போது, தனது முகவர்களையோ, அதிகாரிகளையோ

அனுப்பி அவர்களைக் கைது செய்தல் போன்ற செயல்களைத் தவிர்க்கக் கடமைப்பட்டது. இந்தக் குற்றங்கள் நாட்டிடைச் சட்டத்திற்கெதிராகவோ மனித இனத்திற்கே எதிராகவோ இருந்தபோதிலும் நாடுகள் மேற்கூறிய கட்டுப்பாட்டிற் குட்பட்டவை.

அடால்ஃப் ஐச்மென் என்பார் நாஜிப் போர்க் குற்றவாளி. இஸ்ரேல் நாடு தனக்கெதிராகவும் மனித குலத்திற்கெதி ராகவும் ஐச்மென் புரிந்த குற்றத்திற்காக நீதி விசாரணை நடத்தும் பொருட்டு அர்ஜென்டைனா நாட்டிலிருந்து அவரைத் தன் நாட்டிற்கு 1960 ஜூனில் கடத்திச் சென்றது. இச் செயல் அர்ஜென்டைனா நாட்டின் மேலாண்மைத் தன்மையைப் பெரிதும் பாதிக்க வல்லது என்றும், இஸ்ரேல் நாடு இதன்மூலம் அர்ஜென்டைனா நாட்டிற்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்திட வேண்டும் என்றும் இணை நாடுகளின் (U. N.) பாதுகாப்புக் குழு கருத்துத் தெரிவித்தது.

ஐச்மென் தவறான முறையில் இஸ்ரேல் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், மனித குலத்திற்கெதிராகவும் மற்ற வகையிலும் புரிந்த குற்றங்களையொட்டி நீதி விசாரணை நடத்தத் தனக்கு அதிகாரம் உண்டு என ஜெரூசலம் மாவட்ட நீதி மன்றம் தெரிவித்த கருத்து அந் நாட்டு உயர்நீதி மன்றத் தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

1911இல் நடந்த (**சாவர்க்கார் வழக்கினிலும்**) ஃபிரான்ஸ்-*v*-கிரேட்பிரிட்டன்.

பிரிட்டிஷ் கைதியான சாவர்க்காரைத் தவறான முறையில் ஃபிரான்ஸ் நாடு, பிரிட்டிஷ் நாட்டு அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு மீண்டும் திருப்பிக் கேட்டது. பிரிட்டன் மறுத்துவிடவே ஃபிரான்ஸ் நிலை நியாயக் குழு முன்னர் முறை யிட்டுக் கொண்டது. நிலை நியாயக் குழுவும் தவறான முறையில் ஒப்படைக்கப்பட்ட கைதியை, பெற்ற நாடு திருப்பித் தர வேண்டியதில்லை என்று கூறிவிட்டது.

மேற்கூறிய கருத்து மற்றொரு வழக்கிலும் வலியுறுத்தப் பட்டுள்ளது. **கார்ஃபுக் கால்வாய் வழக்கு** (Corfu Channal Case) தகுதியினடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வழக்கு—1949.

அல்பேனிய எல்லையோரக் கடல் பகுதியை யொட்டி அமைந்த கார்ஃபுக் கால்வாயில் அமைக்கப்பட்டிருந்த கண்ணி

களால், 1946 நவம்பரில் பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பலுக்கும் சில உயிர்களுக்கும் சேதம் ஏற்பட்டதன் விளைவாக மூன்று வாரங்களுக்குப் பின்னர் பிரிட்டன் அப் பகுதியில் கண்ணிகளைக் களையும் செயலில் ஈடுபட்டது. அல்பேனியா நாடு தனது நாட்டின் மேலாண்மைத் துறை பிரிட்டனின் இந்த செயலால் பாதிக்கப்பட்டுவிட்டதாக நாட்டிடை நீதி மன்றத்தின் முன்னர் (International Court of Justice) தொடுத்த வழக்கில் நாட்டிடை நீதி மன்றம், பிரிட்டன் மேற்கொண்ட கண்ணிகளைக் களையும் செயல் அல்பேனிய நாட்டின் தனி மேலாண்மைத் தன்மைக்குக் குந்தகம் விளைவிக்கத் தக்கதுதான் என்று தீர்ப்பு வழங்கிற்று.

இரண்டாவது வகைக் கடமைக்கு உதாரணமாக அயல் நாட்டு அரசின் மேலாண்மைத் தலைமைக்குத் தனதெல்லைக்குள் எவ்விதத் தீங்குமேற்படாமல் பாதுகாக்க வேண்டியதைக் கூறலாம்.

மார்செய்ல்ஸ் (Marseills) நகரில் மாசிடோனிய பயங்கரவாதி ஒருவன் யூகோஸ்லாவிய முடிமன்னர் மீது கொலைத் தாக்குதல் நடத்தியதையொட்டி, உலக நாடுகள் மன்ற செயற்குழு (League of Nations Council) நாடுகளுக்கு விடுத்த அறிவிப்பில்,

1. ஒரு நாடு அரசியல் நோக்குடன் தன்னெல்லையில் எவரும் மற்றொரு நாட்டரசின்மீது பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபடுவதைப் பொறுத்துக்கொள்வதோ வளர்ப்பதோ கூடாது எனவும்,

2. அத்தகு செயல்களைக் கண்டிக்கவும், தவிர்க்கவும் தன்னாலான எல்லா முயற்சிகளையும் எடுக்கக் கடமைப்பட்டதெனவும்,

3. மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிடாதிருத்தல் வேண்டுமென்றும் கூறியது.

# 16. ஆள் நில ஆதிக்கம்

## (Territorial Jurisdiction)

உலக நாடுகள் ஒவ்வொன்றிற்கும் தனது ஆள் நிலப் பரப்பிற்குள் உள்ள மனிதர்கள், உயிர்கள், பொருள்கள், நிகழும் செயல்கள் அனைத்தின் மீதும் ஆதிக்கம் உண்டு என்பது நாட்டிடைச் சட்டத்தில் தெளிவாக ஏற்றுக் கொள்ளப் பட்ட கருத்து.

**கம்பேனியா நேவீரா வாஸ்க்கன் காடோ - எ - S. S. கிறிஸ்ட்டினு –1938**
(Compania Naviera Vascongado - V - S. S. Christina 1938)

இவ் வழக்கில் மேற்கூறிய கொள்கை கீழ்க்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

தனித்தியங்கும் ஆற்றலுடன் கூடிய கோன்மை பெற்ற நாடுகள் அனைத்தும் தன் ஆள் நிலப்பரப்பில் உள்ள மக்கள், பொருள்கள், குடிமைச் செயல்கள் (Civil Acts), குற்றச் செயல்கள் (Criminal Acts) ஆகியவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆற்றல் பெற்றிருத்தல் அவசியம். இத்தகைய ஆற்றல் கோன்மைக்குரிய அடிப்படைக் குணங்களில் ஒன்ருகும்.

இங்கிலாந்து நாட்டின் வழக்கப்படி ஒருவன் அந் நாட்டில் சில காலம் இருந்திருந்தாலும் போதும், அந் நாட்டு நீதி மன்றங்களுக்கு அவனது செயல் பற்றி விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் ஆற்றல் உண்டு என்று கீழ்க்கண்ட

**டொராண்டோ வங்கி - எ - லேம்ப்** (Bank of Toranto - V - Lambe)
**க்கேரிக் - எ- ஹேன்காக்** (Carrick - V - Hancock)

என்ற இரண்டு வழக்குகளிலும் கூறப்பட்டுள்ளது. இவ் வழக்கில் மேலும் கூறப்பட்டுள்ளபடி அம் மனிதன் நிலையான

வாழ்வோ, இல்லமோ இங்குக் கொண்டிருக்க வேண்டியதில்லை. சிலநாட்கள் பார்வையாளராக வந்திருக்கும்போது அவனது செயல்பற்றிய விசாரணைக்குரிய நீதிமன்றத்தின் அழைப்பாணையைப் (Summons) பெற்றிருந்தாலே போதுமானதாகும்.

ஆள் நில ஆதிக்க ஆற்றல், ஆள் நிலப் பரப்பின்மீது மட்டுமல்லாமல் வேறு சில எல்லைப் பொருள்கள் மீதும் படியும். அவைகள் :

1. எல்லையோரக் கடல், 2. கப்பல்கள், 3. துறைமுகங்கள்.

1. **எல்லையோரக் கடல்**: எல்லையோரக் கடலில் வேற்று நாட்டுக் கப்பல்களுக்குத் தீங்கிலா வழியுரிமை உண்டு. ஆனால் அத்தகைய வழியுரிமை அதற்கு மேலுள்ள வான்மண்டலத்தில் வெளிநாட்டு வானவூர்திகளுக்கு இல்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டில் எல்லையோரக் கடலில் பயணம் செய்யும் வெளி நாட்டுக் கப்பல்கள் புரியும் குற்றத்தைத் தண்டிக்கும் உரிமை கரையோர நாட்டிற்கு உண்டா என்கின்ற ஐயம் எழுந்தது.

**மன்னர் - எ - கைன்** (R- V- Keyn—Franconia Case)

இவ் வழக்கில் இங்கிலாந்து நாட்டின் எல்லையோரக் கடலில் ஜெர்மானியக் கப்பலான ஃபிரேன்கோனியா, பிரிட்டிஷ் கப்பலொன்றின்மீது மோதிப் பொருளுக்கும், உயிர்களுக்கும் சேதம் விளைவித்துவிட்டது. எனவே இக் குற்றத்திற்காக அக் கப்பலின் தலைவனைக்(Captain) கைது செய்து இங்கிலாந்து நாட்டின் குற்ற நீதி மன்றத்தின்முன் விசாரணைக்குக் கொண்டு வந்தபோது, அந் நீதிமன்றங்கள், அப் பகுதியில் நடக்கும் குற்றங்களை விசாரிக்கும் ஆற்றலைத் தங்களுக்கு அளிக்கும் வகையில் நாடாளுமன்றம் சட்டம் எதுவும் செய்யவில்லை எனவும், எனவே தாங்கள் அவ் வழக்கை விசாரிக்க இயலாது என்றும் கூறிவிட்டன.

எனவே இவ் வகை வழக்குகளை விசாரிக்கும் ஆற்றலை வழங்குவதற்காக 1878இல் இங்கிலாந்து நாடாளுமன்றம் எல்லையோரக் கடல் நீர்ப்பகுதி மீது ஆதிக்கம் வழங்கும் சட்டம் (Territorial Waters Jurisdiction Act 1878) ஒன்றினை நிறைவேற்றியது. ஆனால் 1958இல் ஜெனீவாவில் நடந்த எல்லையோரக் கடல் மற்றும் கரையோரக் கடல் பகுதிகள் பற்றிய மாநாட்டின் 19, 20, 21, 22 ஏற்பு விதிகள் எல்லையோரக் கடல் நாட்டிற்கு அவ்வழிச் செல்லும் கப்பல்கள்மீது இருந்த

முழு ஆற்றலைத் தற்போது பெருமளவு குறைத்துவிட்டது. அதன்படி கரையோர நாடு இக் கப்பல்கள் மீது மிக அவசிய மான காரணங்களுக்கு மட்டுமே மேற்கூறிய தங்கள் ஆதிக் கத்தைப் பயன்படுத்தலாம்.

2. **கப்பல்கள்:** ஒரு கப்பல் எந் நாட்டோடு இணையுறவு கொண்டு அதன் கொடியைப் பறக்கவிட்டிருக்கிறதோ, அக் கப்பல் அந்நாட்டின் மிதக்கும் தீவாகக் கருதப்படும். முற்றிலும் அரசுப் பணிக்காகப் பயன்படுத்தப்படும் கப்பல் களும், போர்க் கப்பல்களும் அந்நாட்டின் மிதக்கும் தீவுகளாகக் கருதப்பட்டு ஆழ்கடலிலும், எல்லையோரக் கடலிலும் எல்லா நாட்டு ஆதிக்கத்திலிருந்தும் விலக்கப்பட்டதாகக் கருதப்படும். இக் கருத்து 1958இல் ஜெனீவாவில் ஏற்கப்பட்டுள்ள நெடுங் கடல் பற்றிய ஏற்பு விதிகள் 8, 9 ஆகியவற்றால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

3. **துறைமுகங்கள்** (Ports): துறைமுகம் உள்நாட்டு நீரில் அமைவதால் அது எல்லையோரக் கடலின் தன்மையிலிருந்து பெரிதும் வேறுபட்டது. வேற்றுநாட்டுக் கப்பல்கள் துறைமுக நாட்டுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களின் அடிப் படையில் அவைகள் அந் நாட்டின் துறைமுகத்தைப் பயன் படுத்தலாம். துறைமுக நாட்டிற்குத் தன் துறைமுகத்திற்குள் புகும் கப்பல்களின் மீதுண்டான ஆதிக்கம் நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையிலானதல்ல. ஆனால் இவ் வாதிக்கம் அக் கப்பல்களின் வகையைப் பொறுத்து அமையும்.

**அயலார் மீது ஆள்நில ஆதிக்கம்** (Territorial Jurisdiction over Aliens)

ஒரு நாடு ஆதிக்கம் செலுத்துவதையொட்டித் தன் மக்கள், அயல் மக்கள் என்று பிரித்து அயலாருக்குச் சலுகை காட்ட வேண்டிய அவசியமில்லை. அயலாரும் ஒரு நாட்டின் உள் நாட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்களே. லோட்டஸ் வழக்கிலும் (Lotus Case) இக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அயலார்கள் தூதுவச் சலுகைகளுக்கு உரியவர்களாக இருந் தாலோ, அன்றி அந் நாட்டின் உள்நாட்டுச் சட்டம் நாட்டிடைச் சட்ட விதிகளுக்கு முரண்பட்ட வகையில் இருந்தாலோ அன்றி அந்நாடு அயலாருக்குச் சலுகை தரவேண்டிய அவசியமில்லை.

**ஆழ்கடல் மீதுண்டான ஆதிக்கம்**

நெடுங்கடல் பற்றிய நாட்டிடைச் சட்ட விதிகள் 1958, ஏப்ரல் 29இல் கையெழுத்தான ஜெனீவா மாநாட்டில் தொகுக்கப்

பட்டு ஏற்கப்பட்டது. அம் மாநாட்டு ஏற்பு விதிகள் வெளி நெடுங் கடலில் (Open High Seas) விதிகளைத் தொகுத்ததோடல்லாமல் முன்னேற்றமான மாறுதல்களையும் கண்டன.

இம் மாநாட்டின் 1-வது ஏற்பு விதி, திறந்த வெளி ஆழ் கடல் என்றால், எந்நாட்டு ஆள் நிலப் பகுதிக்குட்பட்டோ (Internal Waters) அல்லது எல்லையோரக் கடல் பகுதியாகவோ அமையாத, கடலின் மற்ற எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும் என்று கூறுகிறது. ஆழ்கடலின் விடுதலைக் கொள்கை (Freedom of the High Seas) பற்றி 2-வது ஏற்பு விதி கூறுகிறது. வரலாற்றில் ஆழ்கடலின் வழியாகக் கப்பல் பயண வழி உரிமை எல்லா நாடுகளுக்கும் உண்டு. ஆனால் நிலவுலகின்மீது பல கண்டுபிடிப்புகள் நிகழ்ந்த பதினைந்து - பதினாறுவது நூற்றாண்டுகளில் கடற்படை வலிவு பெற்றிருந்த நாடுகள் சில திறந்தவெளி ஆழ்கடலின் மீதும் கோன்மை கொண்டாடத் துவங்கின.

உதாரணமாக—போர்ச்சுகல் நாடு இந்து கடல் முழுவதின் மீதும், அட்லாண்டிக் கடலின் பெரும் பகுதியிலும் கடல் கோன்மை கோரியது. அதேபோல் ஸ்பெயின் நாடும் மெக்ஸிகோ வளைகுடா, பசிபிக் கடல் ஆகியவற்றின்மீதுள்ள உரிமைகளைத் தானே ஆக்கிரமிப்புச் செய்து கொண்டது.

இவ் வழக்கத்தை முதன்முதலாக நாட்டிடைச் சட்ட வல்லுநர் குரோஸியஸ் என்பார் இரண்டு காரணங்களின் அடிப்படையில் வன்மையாகக் கண்டித்தார். முதல் காரணம் : ஆழ்கடல் ஒரு நாட்டின் சொத்தாகாது. ஏன் எனில் எந்த நாடும் கையாளுகையின் மூலம் ஆதிக்கம் செலுத்தும் பொருட்டு அதைத் தன் தன்மை பெற்ற உடமையாக்கிக் கொள்ள முடியாது.

இரண்டாவதாக, அளவில் அடங்காததும், மனித சமுதாயத்தின் உறுப்பினர் அனைவராலும் பயன்படுத்துதற்குரியதுமான எப்பொருள் மீதும் யாரும் தனி உரிமை கொண்டாட முடியாது என்பதுமாகும்.

நாடுகள் ஆழ்கடலின் மீது தங்கள் கோன்மையை நிலை நிறுத்த முயன்றுகொண்டிருந்த அதே நேரத்தில், ஆழ் கடலின் விடுதலைக் கொள்கையும் சிறிது சிறிதாக வலிவு பெறத் துவங்கியது. மேலும் ஆழ்கடலின் ஒரே பகுதியில் இரு நாடுகள், தங்களுக்குக் கோன்மை இருப்பதாகக் கோரி வந்த

தாலும், மூன்ருவதாகவும் முக்கியமானதாகவும், தாங்கள் வலிவு மிக்க பெரும் கடற்படையை வைத்திருந்தால் போரின்போது மட்டுமே பயன்படக்கூடிய இப்பகுதியின்மீது கோன்மை கோருவ தால் எவ்வித லாபமும் இல்லை என்பதை நாடுகள் உணர்ந்த தாலும் ஆழ்கடல்மீது கோன்மை கோரும் பழக்கம் அழிந்தது.

திறந்த வெளி ஆழ்கடலின் விடுதலைப்பாடுகள் (Freedom of the High seas) என்பதின் மூலம் நாம் கீழ்க் கண்ட பொருள்களை உணருகிறோம்.

(அ) ஆழ்கடல் எப்பொழுதும் ஒரு நாட்டின் கோன்மைக்குட் படக்கூடியது அல்ல.

(ஆ) உலக நாடுகளின் போர்க் கப்பல், வாணிபக் கப்பல் இரண்டிற்குமே நெடுங்கடலில் தடையற்ற நீர் வழி உரிமை உண்டு.

(இ) நெடுங்கடலில் தன்னுட்டுக் கொடிக் கப்பலைத் தவிர, வேறு எந் நாட்டுக் கப்பல் மீதும் ஒரு நாடு ஆதிக்கம் செலுத்த இயலாது.

(ஈ) எல்லா நாடுகளும் அதன் குடிகளும் மீன் பிடிக்கும் பயன் களுக்காகவோ, அறிவியல் காரணங்களுக்காகவோ, தொழில் நுணுக்க காரணங்களுக்காகவோ ஆழ்கடல் நீரினடியில் கம்பிகளை இட்டுச் செல்லவும், எண்ணைக் குழாய் அமைப்புகளை ஏற்படுத்தவும் உரிமை பெற்றவர் களாவார்கள்

(உ) ஆழ்கடலின் மேலான வான் மண்டலத்தில் அனைத்து நாடுகளின் வான ஊர்திகளும் பறந்து செல்ல முழுமையான விடுதலை உரிமை உண்டு.

மேற்கூறிய ஆழ்கடல் விடுதலைப் பாடுகள், எல்லையோரக் கடலிலும், கண்டத் திட்டுகளிலும், கரையோரக் கடல் பகுதி களிலும் கரையோர நாடுகளின் உரிமை வளர்ந்திருப்ப தால் அதற்கிணையாகச் சிறிது குறைந்துள்ளது.

ஆழ்கடலின் விடுதலைப்பாட்டுக் கொள்கையை ஆழ் கடலில் சட்ட ஒழுங்கு முறைமையற்ற தன்மை என்பதாகப் பொருள் கொள்ளக்கூடாது. கப்பல்கள் தான்தோன்றித் தனமாக நடந்து விடாமலிருக்கச் செய்ய சில நெறிமுறைகளும் உள்ளன.

அவையாவன: 1. கப்பல்களை மேற்பார்வையிடவும், பாது காக்கவும், அந்தக் கப்பல் எந் நாட்டுக் கொடியைப் பறக்கவிட்டுச் செல்கிறதோ அந் நாட்டிற்கு அவற்றின் மீது ஆதிக்க உரிமை உண்டு. இதன் காரணமாக எந்தக் கப்பலும் ஒரு நாட்டின் அனு மதியின்றி அந் நாட்டுக் கொடியைத் தன் கொடிக் கம்பத்தில் பறக்க விட்டுச் செல்லலாகாது என்றும், ஒரு கப்பல் எந்நாட்டுக் கொடியைத் தன் மீது பறக்க அனுமதி பெற்றுள்ளதோ அந்தக் கொடியைத் தவிர வேறு நாட்டுக் கொடியைப் பறக்கவிடக் கூடாது என்று ஏற்பு விதி 4 கூறுகிறது.

ஏற்பு விதி 5ன்படி ஒரு கப்பல் எந்நாட்டுக் கொடியைப் பறக்கவிட்டுச் செல்கிறதோ அந்தக் கொடி நாட்டிற்கும், அந்தக் கப்பலுக்கும் நியாயமான தொடர்பிருக்க வேண்டும். எந்தக் கொடியையேனும் அந் நாட்டின் அனுமதியின்றிக் கப்பல்கள் பயன்படுத்துமானால், அந்தக் கொடி நாடு அத்தகைய கப்பல்களைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்யலாம். போர்க் கப்பல்கள் மீது சந்தேகமேற்படுமானால், அதன் நாட்டுக் கொடியைக் காட்டுமாறு கேட்கலாம். வணிகக் கப்பல் ஏதேனும் கடற் கொள்ளையிலோ (Piracy) அடிமை வணிகத் திலோ ஈடுபட்டிருப்பதாக நியாயமான காரணங்களினடிப் படையில் ஐயமேற்படுமானால் அதன் மீது ஏறிப் பார்க்கவும், தேடிப் பார்க்கவும் உரிமையுண்டு என்று ஏற்பு விதி 22 கூறுகிறது.

**துரத்திப் பிடித்தல் (Hot Pursuit)**

கரையோர நாடுகளின் நன்மையைக் கருதி இவ் வகை உரிமை உலகில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. துரத்திப் பிடித்தல் என்றால், எந்நாட்டு வணிகக் கப்பலேனும் ஒரு நாட்டு எல்லையோரக் கடலில் சட்டத்தை மீறும் வகையிலோ குற்றம் புரியும் வகையிலோ நடந்துவிட்டுத் தப்பிச் செல்ல முயன்றால், எல்லையோரக் கடல் நாடு தன் போர்க் கப்பலின் துணைகொண்டு தவறிழைத்து விட்டுத் தப்பிச் செல்லும் அயல் நாட்டு வணிகக் கப்பலை, சூட்டோடு பின் தொடர்ந்து சென்று துரத்திப் பிடித்து வந்து, அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமை ஆகும்.

இவ் வகை உரிமை தற்போது நெடுங்கடல்பற்றிய ஜெனீவா மாநாட்டு ஏற்பு விதி 23இல் இணைக்கப்பட்டுள்ளது. அதன் படி கரையோர நாடு அயல் கப்பல் எதுவும் கரையோர நாட்டின் எல்லைக் கடலில் அந் நாட்டின் சட்டத்தையோ

ஒழுங்கு முறையையோ மீறும் வகையில் நடந்திருப்பதாக நம்பு வதற்கு நியாயமான காரணங்களிருந்தால், அந்தத் தவ றிழைத்த கப்பல்களைத் துரத்திப் பிடித்து வரலாமென்கிறது. அது மேலும் கூறுவதாவது:

(அ) அவ்வாறு துரத்திப் பிடிக்கும் உரிமையைச் செயல்படுத்த அந்தக் குற்றம் கரையோர நாட்டின் எல்லைக் கடலில் செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் குற்றம் புரிந்தவுடனே கரையோர நாடு குற்றக் கப்பலைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். அவ்வாறு துரத்திப் பிடித்தலை எல்லைக் கடலிலேயே துவங்கி விட்டால், துரத்துதல் அந் நாட்டின் எல்லைக் கடலைத் தாண்டி ஆழ் கடலிலும் தொடர்ந்து துரத்திப் பிடித்து வரலாம். ஆனல் குற்றக் கப்பல் ஆழ்கடலைத் தாண்டி வேறு நாட்டு எல்லைக் கடலில் புகுந்துவிடுமேயானல் துரத்தும் கப்பல் பிடிக்கும் முயற்சியை அத்துடன் விட்டு விடுதல் வேண்டும்.

(ஆ) இத் துரத்துதல் இடையீடோ, முறிவோ இன்றித் தொடர்ந்து இருக்க வேண்டும்.

கரையோர நாடு தற்காப்புக் காரணங்களுக்காக மட்டும் தனது எல்லையோரக் கடலுக்கப்பாலுள்ள கப்பல்கள் தொடர்ந்து தனது கோன்மைக்கும், எல்லைக்கும் தீங்கு தரும் வகையில் நடந்துகொண்டிருந்தால், அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தலாம். இது தவிர, நாடுகளின் நன்மை கருதி வேறு சில பொது ஏற்பு விதிகளும் உள்ளன. உதாரணமாக, 1884 ஆம் ஆண்டு கடல் நீரடியில் இடப்பட்டுள்ள தொலை பேசிக் கம்பிகளின் பாதுகாப்பு பற்றிய ஏற்பு விதிகள், அடிமை வணிகத்தை ஒழிப்பதற்காக 1890இல் பிரஸ்ஸெல்ஸில் செய்யப் பட்ட பொது நெறி, வட அட்லாண்டிக்கிலுள்ள ஃபர் சீல் (Fur Seal) உயிரினங்களைக் காப்பதற்காக 1957 ஆம் ஆண்டில் ஏற்பு விதிகள் (Convention for the Protection of Submarine Telegraph Cables of 1884. The General Act of Brussels 1890. For the Represson of African Slave Trade, The Interr.um Convention of February 9, 1957 for the Concervation of the North Paciffic Fur Seal heards) ஆகியவற்றைக் கூறலாம். இவ் வுரிமை களைப் போலவே, சில கடமைகளை நாடுகளின்மீது சுமத்தும் ஏற்பு விதிகளும் உண்டு.

உதாரணமாக கடலில் எண்ணெயைக் கொண்டு மாசு படுத்துவதைத் தவிர்த்தற்கான 1954ஆம் ஆண்டின் ஏற்பு விதிகளைக் கூறலாம்.

### ஆழ்கடலில் வாழும் உயிரினங்களைக் காத்தல்

மீன் பிடி துறையிலும் கடல் வாழ் உயிரினங்களைப் பயன்படுத்துவதிலும் ஏற்பட்டுள்ள அறிவியல், தொழில் நுணுக்கங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினால் அவைகள் மிக வேகமாக மனித இனத்தால் குறைக்கப்பட்டு வருகிறது. எனவே இதனைத் தவிர்க்கவும் கடல் வாழ் உயிர்கள் அழிந்தொழிந்துவிடாதபடி பொதுவாகப் பாதுகாக்கவும் நாடுகள் எல்லாம் கடமைப்பட்டுள்ளன. இதன் காரணமாக மிக முக்கியமானதொரு மாநாடு கூட்டப்பட்டு அதில் சில ஏற்பு விதிகளும் உருவாக்கப்பட்டன. அதனடிப்படையில் மேலும் சில நெறி முறைகளும், உடன்படிக்கைகளும் ஏற்பட்டுள்ளன. அந்த மாநாடு ஏப்ரல், 1958இல் ஜெனீவாவில், நெடுங்கடலில் மீன் பிடிப்பு உயிர் வாழ் இனங்களைப் பாது காப்பது ஆகியவை பற்றி விதிகளைத் தோற்றுவித்து ஏற்றது. (The Convention on Fishing and Concervation of the living Resources of the High Seas signed at Geneva on April 29, 1958 and drawn up by the First Conference on the law of the Sea).

### உலக ஆதிக்கக் கொள்கை (Principles of Universal Jurisdiction)

உலக ஆதிக்கம் என்பதன் மூலம் எல்லா நாடுகளுக்கும் குறிப்பிட்ட குற்ற நபர் மீதோ, குற்றச் செயல் மீதோ நடவடிக்கை எடுக்கும் ஆதிக்கம் உண்டென்று பொருள்படும். சுருங்கக் கூறின் மனித இனத்திற்கெதிராகக் குற்றம் செய்பவர்கள் அல்லது இழைக்கப்படும் குற்றங்கள் எங்கு, எப்பொழுது செய்யப்பட்டதென்றாலும் உலக நாடுகள் எதுவும் அவர்கள் மீது அக் குற்றத்திற்காகக் கைது செய்தல், விசாரித்தல், தண்டித்தல் ஆகிய நடவடிக்கை எடுக்கலாம். இதனை உலகெதிர்த் தீங்கு (Delict Jure Gentium) என்பர்.

இவ் வகைக் குற்றங்கள் இருவகையாகப் புரியப்படலாம்.

1. கடற்கொள்ளை (Piracy)

2. மனித இனத்திற்கெதிரான குற்றங்களும் போர்க் குற்றங்களும் (Genocide And War Crimes)

**ஐச்மென் வழக்கு** (Eichman Case 1962)

மனித இனச் சிதைவு, போர்க் குற்றங்கள் ஆகிய காரணங்களுக்காக ஐச்மென் கைது செய்யப்பட்டு இஸ்ரேல் நாட்டுத் தலைமை நீதிமன்றத்தின் முன் அவ் வழக்கு விசாரணைக்கு வந்த போது, ஐச்மென் தன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் நடந்தபோது இஸ்ரேல் என்ற பெயருடன் ஒரு நாடே இருக்கவில்லை யென்றும், எனவே தான் அந்நாட்டிற்கெதிராக இக் குற்றங்களைச் செய்ததாகக் கருத இடமில்லை என்றும், ஆகவே இஸ்ரேல் நாடு தன்னைத் தண்டிக்கும் ஆற்றலற்றது என்றும் வாதித்தான். ஆனால் இஸ்ரேல் தலைமை நீதிமன்றம் இவ் வாதத்தை நிராகரித்து, ஐச்மென் செய்த குற்றங்கள் மனித இனத்திற்கும் உலக நாடுகளுக்கும் எதிரானதனால் இஸ்ரேல் நாடு, அக் குற்றங்கள் இழைக்கப்பட்டபோது இருந்ததா, இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லாதது மட்டுமன்றி, குற்றம் புரிந்தோரை உலக நாடுகள் எதுவும் தண்டிக்கும் தகுதி பெற்றதென்றும் கூறியது.

கடற் கொள்ளை, போர்க் குற்றம் இவைகளைத் தவிர போதைப் பொருட்களைக் கடத்தும் வணிகத்தில் ஈடுபடுவது, பெண்கள், குழந்தைகள் இவர்களைத் தவருன வழியில் ஈடுபடுத்தும் பொருட்டு கடத்தும் வணிகத்தில் ஈடுபடுவது, கள்ள நாணயங்களைச் செய்வது போன்ற வேறு சில குற்றங்களையும் இவ் வகைக்கு உதாரணமாகச் சொல்லலாம். இக் குற்றங்களை யொட்டி இக் குற்றவாளிகள் எந்நாட்டு ஆள் நிலத்தில் காணப்படுகிருர்களோ அந் நாட்டிஞலேயோ அல்லது அக் குற்றத்திஞல் எந்நாடு பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதோ அந்நாட்டாலோ தண்டிக்கப்படலாம்.

**கடற்கொள்ளை** (Piracy)

தனியார் கப்பலேதேனும் ஆழ்கடலில் வேற்றுக் கப்பல்களின்மீது பொருள்களைக் கொள்ளையடிக்கும் நோக்குடன் வன்முறைத் தாக்குதல் நடத்துவதே கடற் கொள்ளை எனப்படும் என்று பெரும்பாலோர் கூறுகின்றனர். ஆனால் இவ் விலக்கத்திற்குட்படாத வேறு சில நிகழ்ச்சிகளும் கடற் கொள்ளையாகக் கருதப்படுகின்றன.

உதாரணமாக, ஒரு கப்பலில் சென்று கொண்டிருக்கும் பணிக் குழுவினர் (Crew) புரட்சி செய்து அக் கப்பலையும் அதன் பொருள்களையும் தங்கள் நன்மைக்குப் பயன்படுத்துவதற்காக,

தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவருவார்களேயானுல் அதுவும் கடற் கொள்ளையாகவே கருதப்படும் இக் கொள்ளை ஆழ்கடல் பரப்பிலோ அல்லது வான் மண்டலத்தில் வான ஊர்திகளுக்கெதிராகவோ செய்தல் கூடும். இத்தகைய கொள்ளைக்காரர்கள் தங்களின் நாட்டுறவையும், தங்கள் நாட்டின் பாதுகாப்பையும் இழந்துவிடுவர்.

1958ஆம் ஆண்டில் ஆழ்கடல் பற்றிய மாநாட்டின் 15வது ஏற்பு விதி, கடற்கொள்ளை என்றுல் என்ன? என்பதைப் பற்றி விளக்குகிறது. அதன்படியான மூலக் குற்றத்தையொட்டி, சில கிளைக் குற்றங்களும்கூட கடற்கொள்ளையாகக் கருதப் படுகின்றன.

**உலகெதிர் கடற்கொள்ளை பற்றிய வழக்கு** (Repiracy Jure–Gentium)

இவ் வழக்கில் அரசப் பேரவை (Privy Council) கடற் கொள்ளை நடந்ததாகக் கூறப்படுவதற்கு உண்மையிலேயே கொள்ளை அடிக்கப்பட்டிருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை என்றும், அவ்வாறு கொள்ளையடிப்பதற்கு முயற்சியில் ஈடுபட்டு அம் முயற்சியில் தோல்வியுற்றிருந்தாலும், அதையும் கடற் கொள்ளையாகவே கருதப்படும் என்றும் கூறியது. இத் தீர்ப்பின் காரணமாக லாபம் கருதி செய்யப்படும் குற்றங்கள் மட்டு மல்லாமல், பழிவாங்கும் நோக்குடன் செய்யும் செயல்களும் கடற் கொள்ளையாகக் கருதும் வகையில் அதன் பொருள் விரிவு பெற்றுள்ளது. இப்பொழுது நடந்துவரும் விமானக் கடத்தல் கொள்ளைகள் (Hi-Jackings) அவற்றின் தனித் தன்மையின் காரணமாக, இவ் வகைக் கொள்ளைகளுக்குட்பட்டதாகக் கருத இயலாது என்று ஒரு கருத்து நிலவி வருகிறது.

**விமானக் கடத்தல் கொள்ளைகள்** (Hi-Jack) :

இதனையொட்டி முதலில் நடந்த டோக்கியோ மாநாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. 1970 டிசம்பர் மாதத்தில் சட்டத்திற்கு முரணுக விமானங்களைக் கைப்பற்றுவதை ஒடுக்குவதற்காகக் கூடிய ஹேக் மாநாடு (Hague Convention for the Suppression on unlawful seizure of Air Craft opened for signature on December 16, 1970) உதாரணமாகக் கூறலாம். இவ் வகையில் சில முன்னேற்ற மான விதிகளைத் தோற்றுவித்துள்ளது.

ஏற்பு விதி 1, விமானக் கடத்தலின் இலக்கணத்தை விளக்குகிறது.

ஏற்பு விதி 2, ஒவ்வொரு தரப்பு நாட்டையும் இவ் வகைக் குற்றங்களைக் கடுமையாகத் தண்டிக்கும் கடமைக்குள்ளாக்குகிறது.

ஏற்பு விதி 4, இத்தகைய குற்றத்தையும் வேறு தொடர்புடைய வன்செயல்களைப் பயணிகள், விமானம் செலுத்துவோர் ஆகியோர் மீது புரிவதையும் தண்டிப்பதற்காக ஏற்ற ஆதிக்க உரிமையை நிலை நாட்டுவதற்காக வேண்டிய நடவடிக்கைகளை நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

நாட்டிடைச் சட்டத்தின் கீழ் உண்டான கடற் கொள்ளை உள் நாட்டுச் சட்டங்களில் கூறப்பட்டுள்ள கடற்கொள்ளையிலிருந்து பெரிதும் வேறுபட்டவை நாட்டிடைச் சட்டத்தின் கீழ் எழும் கடற்கொள்ளை மட்டுமே உலகெதிர் குற்றமாகக் கருதப்படும்.

**உள்நாட்டுக் கடற் கொள்ளை (Piracy in Municipal Law)**

சில நாடுகளின் உள் நாட்டுச் சட்டம் சில செயல்களைக் கடற்கொள்ளையென விவரிக்கின்றன. உதாரணமாக, இங்கிலாந்து நாட்டின் குற்ற இயல் சட்டத்தில் இங்கிலாந்து மன்னரின் எதிரிகளுக்குக் கடலில் உதவி நல்கும் பிரிட்டிஷ் குடிமகனைக் கடற் கொள்ளைக்காரனாகவும், நெடுங்கடலில் அடிமை வாணிபம் நடக்க வசதி கொடுப்பதையும் கடற் கொள்ளை எனக் கூறுகிறது.

# 17. நாட்டுப் பொறுப்பு

ஒரு நாடு நடந்துகொள்ளும் முறையோ, கையாளும் கொள்கையோ, செய்த செயலோ வேற்று நாட்டின் கண்ணியத்திற்கோ, உயர்விற்கோ இழுக்கு ஏற்படுத்துவதாகவோ, வேறு விதத்தில் இழப்புக்களை ஏற்படுத்தும் வகையிலோ, சினமூட்டும் வகையிலோ அமைவதுண்டு. அச் செயலினுல் பாதிக்கப்பட்ட நாடு எவ்வெச் செயலுக்காக எப்பொழுது எவ்வாறு ஈடு பெறுவது என்பதை நிர்ணயிப்பதே நாட்டிடைச் சட்டத்தில் இப் பகுதியின் குறிக்கோள்.

பொதுவாகப் பாதிக்கப்பட்ட நாடு தனக்கேற்பட்ட இழப்பிற்கு, தூதுப் பரிவர்த்தனை (Diplomatic Negotiations) வாயிலாகத் தீரடைவு (Satisfaction) பெறுதல் உண்டு. கண்ணியத்திற்கு இழப்பு ஏற்படுமாறுல் அவமதித்த நாடு மன்னிப்புக் கோருவதுடன் முடிந்ததாகக் கருதப்படும். அவ்வாறின்றி பொருட் சேதங்களோ இழப்போ ஏற்பட்டால், பணத்தில் (Pecuniary) ஈடு பெறும்பொருட்டு நாட்டிடை நியாயக் குழுக்களிடம் முறையிடப்படும்.

ஒரு நாடு மற்ற நாட்டிற்கு இழைக்கும் தீங்கோ, பொறுப்பாவதோ பல வகைப்படும். உதாரணமாக, செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறுவது, ஒப்பந்தப் பிணைப்புகளை (Contractual obligations) நிறைவேற்ருதது வேற்று நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்பு, தீங்கு ஆகியவற்றைக் கூறலாம்.

நாட்டுப் பொறுப்பினைப் பற்றி தற்போதுள்ள நாடுகளின் உள்நாட்டுச் சட்டங்கள் போதுமான அளவு மனநிறைவு தருவதாக இல்லை. அத்துடன் நாட்டிடைச் சட்டத்தில் மேலும் பல புதுவித நாட்டுப் பொறுப்புகளும் உருவாகியுள்ளன. உதாரணமாக அணு ஆயுதச் சோதனை போன்ற நிகழ்ச்சிகளில், ஆராய்ச்சியில் ஈடுபடும் நாடு மற்ற நாட்டிற்குப் பெரும்

தீங்கை விளைவிக்க வல்லவை. இத் துறைகளில் சட்டம் பெரு வளர்ச்சி பெற வேண்டியுள்ளது.

**கூட்டாட்சி நாடுகளின் நிலை**

காப்பு நாடுகளோ, இணைப்பாட்சி உறுப்பு நாடுகளோ மற்ற நாட்டுக்கு எவ்விதத்திலேனும் தீங்கோ இழப்போ ஏற்படுத்திவிடுவார்களேயானால், இணைப்பாட்சி நாடோ (Federal State) காக்கும் நாடோ (Protecting State) தங்கள் அரசியல் சட்டத்தையோ, காப்பு உடன்படிக்கையையோ (Treaty of protection) துணைக்கிழுத்துத் தப்பிக்கவியலாது. ஏனென்றால் இரண்டு வகையிலுமே அவைகள்தான் வெளி விவகாரத்தில் ஈடுபடும் ஆற்றல் பெற்றவை என்பதனால், தீங்கிழைத்த நாடு இணைப்பாட்சியின் உறுப்பு நாடாகவோ அல்லது காப்பு (Protectorate) நாடாகவோ இருந்தபோதும் இணைப்பாட்சியோ, காக்கும் நாடோ பொறுப்பேற்கக் கடமைப் பட்டவை.

## நாட்டுப் பொறுப்பு

**நாட்டிடைச் சட்டமும் உள்நாட்டுச் சட்டமும்:** 1. எந்நாடேனும் மற்ற நாட்டுக்குத் தீங்கான செயல் புரிந்து விடுமானால், அந்நாட்டுச் சட்டப்படி ஒரு குற்றமும் செய்யவில்லையென்றோ அல்லது அந்நாட்டுச் சட்டப்படி அச்செயல் செய்யக் கடமைப் பட்டதென்றோ வாதிட இயலாது. ஏனென்றால் நாட்டிடைச் சட்டத்தின் கீழ் அந்நாடு மற்ற நாட்டிற்குத் தீங்கிழைத் துள்ளது எனத் தீர்மானம் செய்யப்பட்ட பின்னர் உள்நாட்டுச் சட்ட விதிகளைப் பற்றிய பேச்சே இல்லை.

2. உள்நாட்டில் செயலாற்றும் பணியாளர்கள் தங்கள் அதிகாரத்தையும், எல்லையையும் மீறி நடந்து குற்றமிழைத்து விட்டார்கள் எனக் கூறி, குற்றமிழைத்த நாடு பொறுப்பி லிருந்து நழுவ முடியாது. இச் செயல்கள் மூலமாக நாட்டிடைச் சட்டம் உள்நாட்டுச் சட்டத்தைவிட முதன்மை பெற்றுள்ளதை இதன் மூலம் உணர்கிறோம்.

**உடன்படிக்கைகளை மீறுவது, ஒப்பந்தப் பிணைப்புகளை நிறைவேற்றாதது, சொத்துக்களைக் கவர்வது ஆகியவற்றால் விளையும் தீங்குகளுக்குண்டான பொறுப்பு**

உடன்படிக்கை சட்டப் பிணைப்புகளை (Treaty Obligations) மீறுவதால் ஏற்படும் இழப்புகளும் அவற்றை ஈடு செய்வதும் அவ் வுடன்படிக்கையின் நிபந்தனைகளைப் பொறுத்தது.

(Chorzow Factory Indemnity case) சார்சாவ் ஃபேக்டரி ஈட்டுறுதி செய்தல் வழக்கில் உலகநிலை நீதிமன்றம் உடன்படிக்கை சட்டப் பிணைப்புகளை மீறுதல் இழப்பினை ஈடு செய்ய வேண்டிய பொறுப்பை உருவாக்கும் என்று கூறியது. ஆனால் ஒரு நாட்டிற்கும் மற்ற நாட்டுக் குடிமகனுக்குமோ, அல்லது நிறுவனத்திற்குமோ ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்நாடு ஒப்பந்த சட்டப் பிணைப்புகளை மீறுமானால் அது நாட்டிடைச் சட்டத்திற் குட்படாது. ஒப்பந்த நிபந்தனைகள்படி செயல்படுத்தப்படும். எனினும் சில சமயங்களில் ஒரு நாடு மறைமுகமாக மற்றொரு நாட்டுடன் அதன் குடிமகனை ஒப்பந்தக் கோட்பாடுகளுக்கேற்ப நடத்தும் என்று உடன்படிக்கை செய்து கொண்டதாகவும் கருத இடம் உண்டு. ஆனால்,

(Anglo Iranian Oil Company Case Jurisdiction) ஆங்கிலோ ஈரானியன் ஆயில் கம்பெனி வழக்கில் இது போன்ற உடன்படிக்கை கட்கு சான்று தேவை என்று கூறப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் ஒவ்வொரு நாடும் பொது நன்மையைக் கருதி தனியார் தொழில்களையும் சொத்துக் களையும் நாட்டுடமையாக்கி வருவது ஏற்றுக் கொள்ளப்பட்ட நாட்டு நடப்பு. எனினும், எடுத்துக்கொள்ளப்பட்ட (Acquired) சொத்து அயல்நாட்டுக் குடிமக்களுடையதாக இருக்குமானால் பொது நன்மைக்காகவும், அயலார் சொத்து என்கின்ற வகையில் வேற்றுமை காட்டாமலும் (Non-discriminatary) அவற்றினை எடுத்துக் கொள்வதில் எவ்வித ஒழுங்கீனமும் இல்லாமலிருந்தால்தான் அது சட்டப்படி செல்லுபடியாகும் எனவும், எடுத்துக் கொள்ளப்பட்ட சொத்திற்கு நியாயமான (Just) போதுமான (Sufficient) ஆக்கபூர்வமான இழப்பீடு (Effective Compensation) வழங்கப்படுதல் வேண்டும் எனவும், இவ்வகையிலன்றி அயலார் சொத்து எடுத்துக் கொள்ளப் பட்டால் அது உலகப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என்றும் கூறப்படுகிறது. எனினும் மற்றொரு சாரார் எடுத்துக் கொள்ளப்படும் அயலார் சொத்திற்கு இழப்பீடு மட்டும் வழங் கினால் போதுமென்றும், அது போதுமானதாகவோ, நியாய மானதாகவோ, ஆக்கபூர்வமானதாகவோ இல்லையென்றாலும் கூட எடுத்துக் கொள்ளப்பட்ட சொத்தின் மீது நாட்டிற் குண்டான உரிமையைப் பாதிக்கவோ, உலகப் பிரச்சினையைத் தோற்றுவிக்கவோ முடியாது என்கின்றனர்.

**கால்வோ விதி** (Calvo clause)

இவ் விதியினை முதலில் வழக்கிற்குக் கொண்டு வந்தவர் '**கால்வோ**' என்ற அர்ஜென்டைன் நாட்டுச் சட்ட வல்லுநர். ஒரு

நாட்டுக் குடிமகன் மற்ற நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொள்வதிலோ, வேறு நாட்டில் தொழிலமைப்புகள் ஏற்படுத்துவதிலோ பின்னர் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் தன் நாட்டு உதவியையோ, நாட்டிடை இசைவுத் தீர்ப்பாயங்களையோ International Arbitral Tribunals) நாடாமல் தான் எந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிருரோ அந் நாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புக்கும், அந் நாட்டுச் சட்ட அடிப்படையில் உண்டான ஈடு பெறவோ ஒப்புதல் தெரிவித்துச் செய்து கொள்ளும் ஒப்பந்த நிபந்தனைக்குத்தான் கால்வோ விதி என்று பெயர்.

இதன் மூலம் வேற்று நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் மற்ெருரு நாட்டின் குடிமகன் தன்னைக் காப்பாற்றத் தன்ுட்டிற்கிருக்கும் உரிமையை இழந்துவிடச் சம்மதிக்கிறுன். இவ்வாருன ஒப்பந்தங்கள் சரியானவை என்று சில இசைவுத் தீர்ப்பாயங்களும், செல்லாதவை என்று மற்றும் சில தீர்ப்பாயங்களும் மாறுபட்ட கருத்துத் தெரிவித்துள்ளன.

**நார்த் அமெரிக்கன் ட்ரெஜிங் கம்பெனி வழக்கில்** (North American Dredging Co. Case) ஐக்கிய அமெரிக்க நாடு—மெக்ஸிகோ இடையிலான பொது கோருரிமைக் குழு (United States-Mexico General Claims Council) இத்தகைய ஒப்பந்தத்தின் நிபந்தனையைச் சரியென்று ஏற்றுக் கொண்டு ஈடு கோரும் நிறுவனம் ஏற்கனவே கால்வோ விதியினடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால் மெக்ஸிகோ நாட்டுச் சட்டப்படியும் அந் நாட்டு நீதிமன்றங்களின் மூலமும்தான் ஈட்டுத் தொகைக்கான முறையீட்டைச் செய்து கொள்ள வேண்டும் என ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்தது. ஆனால்,

**எல்ஒரோ மைனிங் ரெயில்வே கம்பெனி லிமிடெட் வழக்கும்** (El Oro Mining Railway Co. Ltd) கால்வோ விதி சம்பந்தப்பட்டதே. மேற்கூறிய பிரிட்டிஷ் நிறுவனம் மெக்ஸிகோ நாட்டுடன் கால்வோ விதியினடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொண்டு பின்னர் ஈட்டுத்தொகைக்காக அவ்வொப்பந்தப்படி மெக்ஸிகோ நாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. ஆனால் வழக்கு ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாததால் பாதிக்கப்பட்ட நிறுவனம் கால்வோ விதிக்குப் புறம்பாகத் தன்ுட்டுத் துணையையும் நாட்டிடைச் சட்ட கழுவாய்களையும் பெற முயன்றது.

அப்பொழுது பிரிட்டிஷ் - மெக்ஸிகோ பொதுக் கோரு ரிமைக் குழு முன்னுல் மெக்ஸிகோ - கால்வோ விதியினடிப்படை யில் பாதிக்கப்பட்ட நிறுவனம் மெக்ஸிகோ நாட்டு நீதி மன்றத்தில்தான் கழுவாய் தேட வேண்டும் என்ற கோரிக்கை, ஏற்கனவே வழக்குத் தொடரப்பட்டு ஒன்பது ஆண்டுகள் காலதாமதமான காரணத்தினுல் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

**கடன்கள்** (Debts)

கடன்களையொட்டிய பொறுப்பு பல வகைகளில் எழக் கூடும். உதாரணமாக ஒரு நாடு மற்ற நாட்டிடம் பெற்ற கடனை அடைப்பதில் தவறுதல், அல்லது ஒரு நாடு மற்ற நாட்டுடன் இணையும்போது இணையும் நாடு பட்டுள்ள கடன்களை அடைப்பதில் எழும் சிக்கல் ஆகியவற்றைக் குறிப் பிடலாம். இதையொட்டி மூன்று கொள்கைகள் உண்டு.

1. **பால்மர்ஸ்டன் கொள்கை** (Lord Palmerston's Theory): இக் கொள்கை 1848இல் தோற்றுவிக்கப்பட்டது. இதன்படி கடன் கொடுத்த நாடு, கடன்பட்ட நாட்டுடன் தூது முறைகளைப் பயன்படுத்திக் கடன் தொகையைப் பெற முயலலாம்; அம் முயற்சி பலனளிக்கவில்லையென்ருலும், தேவை ஏற்பட்டாலும் இராணுவத் தலையீடு செய்தும் கடன் தொகையைப் பெறலாம்.

2. **ட்ரேகோ கொள்கை** (Drago Doctrine) இது முதன்முதல் 1902ஆம் ஆண்டு அர்ஜென்டைனுவிலுள்ள வெளியுறவு அமைச்சர் ட்ரேகோ என்பவரால் எடுத்தாளப்பட்டதால் அவர் பெயர் கொண்டு வழங்கப்படுகிறது.

இக் கொள்கைப்படி கடன் கொடுத்த நாடுகள், கடன்பட்ட நாட்டின் மீது இராணுவ முயற்சிகளை மேற்கொள்ளாம லிருக்கக் கடமைப்பட்டவைகள் எனப்படும். இக் கொள்கை மன்ரே கொள்கையின் தொடர்பிணைக் (Corollary) கொள்கை யாகும். இக் கொள்கை மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடு களிடையே பெரிதும் வலிவு பெற்று வழங்கப்பட்டது. இதன்படி கடன் கொடுத்த நாடு எக்காரணம் பற்றியும் கடன் பட்ட நாட்டின்மீது ஆயுதத் தலையீடு நடத்துதல் முடியாது, கூடாது. இக் கொள்கை இராணுவத் தலையீட்டைத்தான் எதிர்க் கிறதே தவிர தூது முறையில் கடன் வசூலிப்பதை எதிர்க்க வில்லை. 1907ஆம் ஆண்டு ஹேக் மாநாட்டில் இது ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது கடன்பட்ட நாடு இசைவுக் குழுத் தீர்ப்பிற்கு சம்மதிக்கவில்லை யென்ருலொழிய

ஆயுதத் தலையீடு தவிர்க்கப்படுதல் வேண்டும் என ஏற்றுக் கொண்டது.

3. இக் கொள்கைகளன்றி பொதுவாகப் பெரும் நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றுமொரு கொள்கையும் உண்டு. இக் கொள்கையின்படி கடன்பட்ட நாட்டின் சட்டப் பிணைப் புகள், நாட்டிடைச் சட்டத்தில் உடன்படிக்கைகளின் கீழ் எழும் சட்டப் பிணைப்புகளைப் போன்றவை. எனவே அத்தகைய சட்டப் பிணைப்புகளைச் செயல்படுத்த என்ன விதிகள் உள்ளனவோ அவைகளையே இவ் வகைச் சட்டப் பிணைப்புகளை நிறைவேற்றவும் பயன்படுத்தலாம் என்பதாகும்.

**அனைத்துலகுத் தீங்குகள் (International Delinquencies)**

ஒப்பந்தப் பிணைப்புக்களை மீறுதலன்றி வேறொரு விதமான தீங்கிற்கும் இழைக்கும் நாடு பொறுப்பேற்கக் கடமைப் பட்டது. இவ் வகைத் தீங்குகள் ஒரு நாடு நாட்டிடைச் சட்டத்தின் கீழ் மற்ற நாடுகளுக்கோ அதன் குடிமக்களுக்கோ ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுததாலோ, தவிர்க்கப்பட வேண்டிய செயல்களைச் செய்துவிடுவதாலோ ஏற்படும். இவ் வகைத் தவறுகளை அனைத்துலகுத் தீங்கு (International Delinquencies) என அழைக்கிறோம். இவ் வகைத் தீங்குகள் பல வகைப்படும். உதாரணமாக அந் நாட்டில் நடந்த கலவரத்தில் அந்நியக் குடிமகனுக்கு ஏற்படும் பொருள், உடல், உயிர்ச் சேதங்கள், முறையற்ற சிறையிடல், அந் நாட்டு நீதி மன்றங்கள் முறையான தீர்ப்பு வழங்க மறுத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

நாட்டிடைச் சட்டத்தில், ஒரு நாட்டில் உள்ள அயல் நாட்டுக் குடிமக்களின் வாழ்விற்கும் சொத்திற்கும் சில உரிமைகள் உண்டு. இதனையொட்டிக் கருதும் கொள்கை (Doctrine of Imputability) எனவும் ஒன்று வழங்கி வருகிறது. உதாரணமாக (அ) நாடு (ஈ) நாட்டைச் சார்ந்த குடிமகனுக்கு நாட்டிடைச் சட்டத்தை மீறும் வகையில் ஏதேனும் தீங்கிழைத்து விடுமானல் அ, நாடு, ஈ, நாட்டிற்கு அவ் வகையில் பொறுப் புடையதாகிறது. இவ் வகையில் அ, நாட்டைச் சார்ந்த பணி யாளர்களோ, அதிகாரிகளோ, அமைப்புக்களோ ஈ, நாட்டுக் குடிமகனுக்கிழைத்த தீங்கிற்கு அந்த நாடே பொறுப்புடைய தாகக் கருதப்படுவதால் இதனைக் 'கருதும் கொள்கை' (Doctrine of Imputability) என்கிறோம். குற்றம் இழைத்த நாடு அக் குற்றத்தை இழைத்த தனது அதிகாரியோ, அமைப்போ

உள் நாட்டுச் சட்டத்திற்குப் புறம்பாகவோ, அவர்களது எல்லை மீறியோ நடந்திருந்தாலும் அச் செயலின் விளைவிற்குப் பொறுப் பேற்கக் கடமைப்பட்டது. இவ்வாறு ஒரு நாட்டின் அதிகாரி களோ, அமைப்புகளோ இழைத்த தீங்கினை அந் நாடே இழைத்ததாகக் கருதப்படும் இக் 'கருதும் கொள்கை' இரு நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

1. அந் நாட்டு அதிகாரியோ அமைப்போ இழைத்ததாகக் கூறப்படும் தீங்கு நாட்டிடைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கடப்பாடுகளை மீறியதாக இருக்க வேண்டும்.

2. நாட்டிடைச் சட்டத்தில் அவ்வகைத் தீங்குகள் நாட்டால் இழைக்கப்பட்டதாகக் கருதத்தக்க வகையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு அந் நாட்டின் பொறுப்பினைக் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது.

1. முதலாவதாக அத் தீங்கான செயலை இழைத்த அதிகாரியோ, அமைப்போ அவ் விளைவுகளை உருவாக்கத்தக்க செயல்களில் ஈடுபட உள் நாட்டுச் சட்டத்தின் கீழ் ஆற்றல் பெற்றவர்களா என நிர்ணயிக்கப்பட வேண்டும்.

2. அவ்வாறு அவர்கள் ஆற்றல் பெற்றவராயிருப்பின் அத் தீங்குகளை நாடே இழைத்ததாகக் கருத இடமுண்டா? என்பதையும் நிர்ணயிக்க வேண்டும். அவ்வதிகாரி உள் நாட்டுச் சட்டத்திற்குப் புறம்பாக நடந்திருந்தாலும் பொது வாக நாடே இழைத்ததாகத்தான் கருதப்பட வேண்டும்.

**யௌமேன் வழக்கு (Youman's Case)**

வழக்கு விபரம் :

மெக்ஸிகோ நாட்டில் ஒரு நகரத்தில் ஏற்பட்ட கலவரத்தில் அமெரிக்க நாட்டைச் சார்ந்த குடிமக்கள் தாக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு அந் நகரத் தந்தை (Mayor) இராணுவ அதிகாரியொருவரை அழைத்துக் கலவரத்தை அடக்கு வதற்காக ஆணையிட்டனுப்பினர். அங்கு சென்ற இராணுவக் குழு கலவரக்காரர்களைக் கலைப்பதற்குப் பதிலாக அவ் வமெரிக்க மக்கள் ஒளிந்து கொண்டிருந்த இல்லத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதன் பேரில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவரை அவ் வீட்டை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தி

வெளியேறும்போது இராணுவத்தாலும், கலவரக்காரர்களாலும் கொல்லப்பட்டனர். இச் செயல் மூலம் இராணுவக் குழு தங்களுக்கிடப்பட்ட ஆணைக்கு முற்றிலும் புறம்பாக நடந்துள்ளனர். எனினும் மெக்ஸிகோ நாடு இந்தத் தீங்கான செயலுக்குப் பொறுப்பேற்க வேண்டியது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

3. ஆனால் அவ்வாறு தீங்கினைப் புரிந்த அதிகாரியோ அமைப்போ உள் நாட்டுச் சட்டத்தின்கீழ் அவ்வாறு செயல்பட இயலாதவர்களாயின் அத்தகு செயல்கட்கு நாடே பொறுப்பு எனக் கருதுதல் இயலாது.

4. ஒரு நாட்டின் அதிகாரியோ அமைப்போ அல்லாமல் அந் நாட்டின் குடிமக்கள் அயல் நாட்டுக் குடிமக்களுக்குத் தீங்கிழைத்தால் அதற்கு அந் நாட்டைப் பொறுப்பாளியாக்க முடியாது. ஆனால் அந் நாடு தன் மக்களை அவ்விதத் தீங்குகள் புரியாத வண்ணம் தடுப்பதற்குண்டான எல்லா முயற்சிகளையும் எடுப்பதும் குற்றம் புரிந்தவர்களைத் தீவிரமாகத் தண்டிப்பதும் அவசியம். அந் நாடு இச் செயல்களில் தவறுமானல் இங்கும்கூட பொறுப்பாளியாக்கப்படும்.

இவ் வகை நாட்டுப் பொறுப்பு உள் நாட்டுக் கலவரங்களால் ஏற்படுவதுண்டு. உள் நாட்டுக் கலவரங்களின்போது அயலார் பொருள்களுக்குச் சேதம் ஏற்படுதல் கூடும். இத் தருணங்களில் அந் நாடு அயலார் சொத்துக்களைக் கலவரத்தினரிடமிருந்து காப்பாற்ற நல்லெண்ணத்துடன் தன்னுற்றலுக்குட்பட்டு எல்லா முயற்சிகளும் எடுத்திருந்தால் அவ் விழப்புகளுக்கு நாடு பொறுப்பாளியாகாது. அவ்விதமின்றி காப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லையென்றல் நாடு பொறுப்பாளியாகக் கருதப்படும்.

**அந்நிய மண்ணிலுள்ள தம் மக்களைக் காத்தல்**

இத் தலைப்பின்கீழ் ஏற்படும் நாட்டுப் பொறுப்பு கீழ்க்கண்ட இரு மாறுபட்ட நாடுகளின் அடிப்படை உரிமைகளைச் சமநிலைப்படுத்தி செயல்படுவதையொட்டி அமையும்.

1. மற்ற நாடுகளின் தலையீடின்றி தன்னுட்டெல்லையில் தன்னிச்சையுடன் ஆதிக்கம் செலுத்தும் உரிமை.

2. அந்நிய நாட்டிலுள்ள தன் குடிமக்களைக் காக்கும் உரிமை.

இதையொட்டி நாடுகளிடையேயிருந்து வேறுபட்ட கருத்தினை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு 1930இல் ஹேக் மாநாட்டில் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காமல் போயிற்று. வேற்று நாட்டிலுள்ள குடிமக்கள் முறைகேடாக நடத்தப்பட்டாலோ, சட்டத்திற்குப் புறம்பாக சிறைப்படுத்தப் பட்டாலோ, அவர்களுடைய சொத்துக்கள் நீதிக்குப் புறம்பாகக் கவரப்பட்டாலோ, நீதி மன்றங்கள் செயல்பட மறுத்தாலோ, நீதி வழங்குவதில் வேண்டுமென்றே கால தாமதமோ, முறைகேடுகளோ ஏற்பட்டாலோ, சுருக்கமாக நீதி மறுக்கப்படுமேயானுல் இத் தலைப்பின் கீழான கோருரிமை (Claims) தோன்றும்.

**சாட்டின் கோருரிமை வழக்கு** (Chattin Claim 1927)

மெக்ஸிகோ நாட்டின் நீதி மன்றத்தின் முன்வந்த வழக்கொன்றில் அந் நீதிமன்றம் போதுமான அளவு புலனுய்வுகளின்றி செயல்பட்டமையாலும், குற்றவாளி தன் மீதுண்டான குற்றச்சாட்டுகளை அறியும் வாய்ப்பினைத் தராததாலும், வழக்கை நிர்ணயிப்பதில் வீணுன காலதாமதம் காட்டியதாலும், பெயரளவில் மட்டுமே வெளிப்படையான நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தமையாலும், அந் நீதிமன்றம் உண்மையாக நீதி வழங்கும் நோக்குடன் செயல்படவில்லை யெனவும் நாட்டிடைச் சட்டத்தின் கீழ் அது போதுமானவையல்ல வெனவும் இவ் வழக்கில் பொதுக் கோருரிமைக் குழு (General Claims Commission) மெக்ஸிகோ நாட்டின் நடத்தையைக் கண்டித்தது.

**கட்டிங் வழக்கிலும்** (Cutting Case) மெக்ஸிகோ நாடு ஒரு அமெரிக்கர்மீது நிலையான குற்ற அவதூறு (Criminal Libel) காரணத்திற்காகக் கைது செய்து தொடர்ந்த வழக்கில் அமெரிக்கா தலையிட வேண்டியிருந்தது. ஆனுல் நீதி மறுக்கப் பட்டதாக முறையிடுவதற்கு முன்னர் கோராளர் (Claimant) தீங்கிழைத்த நாட்டின் நீதி மன்றங்களில் நீதி பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு நீதி பெறுவதில் தோற்றிருக்க வேண்டும். குறிப்பாக அந் நாட்டின் தலைமை நீதி மன்றத்தால் அவ் வழக்கு விசாரிக்கப்பட்டு நிர்ணயிக்கப் படாத வரையில் நீதி மறுக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ள முடியாது. இதனையே உள் நாட்டு கழுவாய் இழப்புக் கொள்கை (Exhaution of Local Remedies) என்பர். இக் கொள்கையை யொட்டிய சில குறிப்புகள் :

1. உள்நாட்டு நீதி மன்றங்கள் இழப்பீடு வழங்கித் தீர்ப்பளிக்கும் ஆற்றலற்றதென்றால் அத்தகு நீதிமன்ற விசாரணைகள் போதுமான கழுவாய்களாகக் கருதப்பட மாட்டாது. அத்தகு உள்நாட்டுக் கழுவாய்களை (Local Remedies) கோராளர் பயன்படுத்தியிருக்கத் தேவையில்லை.

2. எங்கே உறுதியாக நீதி பெற வழியில்லையோ அங்கே நீதி பெறும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதில்லை. உதாரணமாக அந் நாட்டு நீதி மன்றம் அரசு ஆணைக்குக் கட்டுப்பட்டு நீதி வழங்குவதாக இருந்து அரசின் அதிகாரியோ அமைப்போ தீங்கிழைத்திருந்தாலோ அல்லது சட்டமியற்றும் துறையின் செயலால் தீங்கு நேர்ந்திருந்தாலோ அங்கு எங்ஙனம் நீதி கிடைக்கும்?

3. சில வேளைகளில் அரசின் செயலால் தீங்கு ஏற்படுமானால் அத்தகு அரசு செயல்களைப் பற்றி விசாரிக்க அந் நாட்டு நீதி மன்றங்களுக்கு உரிமையிராது. எனவே இவ் வகையிலும் உள்நாட்டு நீதிக்காகக் கோராளர் முயன்றிருக்கத் தேவையில்லை.

**அம்பேடிலஸ் பஞ்சாயத்து** (Ambatielos Arbitration)

பிரிட்டனுக்கும் கிரீஸ் நாட்டிற்கும் இடையேயானது. இங்கும்கூட வெற்றி பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் சான்றுகளைப் பயன்படுத்தாமல் விட்டிருந்தாலோ, மேல் முறையீட்டு நீதி மன்றத்தின் முன் வழக்கை எடுத்துச் செல்லாமல் விட்டிருந்தாலோ உள்நாட்டில் நீதி பெறும் முயற்சி முழுமை பெற்றதாகக் கருத இயலாது என்று கூறப்பட்டது.

**இழப்புக் கோரலும், இழப்பீட்டுத் தொகையும்**

ஒரு நாடு மற்றொரு நாடு தனக்கு இழைத்த தீங்கிற்காக இழப்பீடு கோரும்போது, நாட்டிடைச் சட்டத்தின்கீழ் இழப்பீடு, ஏற்பட்ட இழப்பின் தன்மையதாகவே இருக்க வேண்டுமென்பதில்லை; அதற்கிணையான ஈட்டுத் தொகை இருந்தால் போதுமென்று கூறப்படுகிறது.

**சார்சாவ் பேக்டரி வழக்கில்** (Caorzow Factory Case—1928) ஏற்பட்ட இழப்பினதாகவே இழப்பீடும் அமைய வேண்டுவதில்லை; அவ் விழப்பு இழப்புத் தொகையை நிர்ணயிப்பதற்கு மட்டுமே கணக்கிலெடுக்கப்படும் என்று உலக நிலை நீதிமன்றம் கூறியுள்ளது.

நாட்டிடைச் சட்டத்தின்படி கோரும் நாடு தீங்கு இழைக்கப் பட்டதால் பொருளுக்கோ உடமைக்கோ அல்லது உடலுக்கோ ஊறு, காயம் அல்லது இழப்பு ஏற்பட்டிருந்தால் அதற்காகத் தகுந்ததோர் இழப்பீடு பெறும் உரிமையுடையதாகும். மேலும் நாட்டிடைச் சட்டத்திற்கு முரணான வகையில் தனி மனிதனது உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தால் அவனது உரிமைக்காக வழக்கிடும் நாட்டுக்கு ஏற்படும் இழப்பும் உரிமையைப் பறிகொடுத்த மனிதனுக்கு ஏற்பட்ட இழப்பும் வெவ்வேறானவை. ஆயினும் கோரும் நாட்டுக்குத் தரப்பட வேண்டிய ஈட்டைக் கணக்கிட தனி மனிதனுக்கு ஏற்பட்ட இழப்பை அளவு கோலாகப் பயன்படுத்தலாம். இதே கொள்கை லூசிட்டானியா சாவுக்கான கோருரிமை வழக்கிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பல சமயங்களில் நாட்டிடை இசைவு முறைத் தீர்ப்பாயமும் தனி மனிதனுக்கு ஏற்பட்ட இழப்புக்காக ஒரு வகை இழப்பீடும், கோரும் நாட்டிற்கு ஏற்பட்ட இழப்பிற்கு வேறுவகையான இழப்பீடும் அளித்துள்ளது. இவ்வாறே அலோன் வழக்கிலும் இசைவுத் தீர்ப்புத் தரப்பட்டது. தவிரவும் ஐ. நா. ஊழியர்கள் பணியாற்றும் காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் இழப்பைப் பொறுத்தவரை ஐ. நா. தனக்காகவும், தன் ஊழியர்களுக்காகவும் எனத் தனித்தனியே இழப்பீடு கோர இயலும் என்று நாட்டிடை நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது. ஆயினும் நடைமுறையில் பெரும்பான்மையான நாடுகள் தனி மனிதனுக்கு உண்மையில் ஏற்பட்ட இழப்பிற்கு மட்டும் இழப்பீடு கோருவதோடு அமைகின்றன.

# 18. ஆள் நிலம்

## (State Territory)

துவக்க காலத்தில் தன் இயற்கைத் தேவைகளை மட்டிலுமே தேடிப்பெற்று அனுபவித்து வந்த மனிதன், தன் அறிவும் நாகரீகமும் வளர்ச்சி பெறவே தனக்கென்று வாழ்வின் அமைப்புக்களை உருவாக்கிக் கொள்ளத் தொடங்கினுன். அவ் வகையில் தனது உணவுப் பொருள்களை விளைவிக்கவும், தன் உறையுளை ஏற்படுத்திக்கொள்ளவும் தனக்கென்று நிலப் பகுதிகளை உடைமைப்படுத்திக் கொள்ளவும் துவங்கினுன். இவ்வாறு ஒரு மனிதன் நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் முறைகளில் உலகம் ஏற்றுக்கொண்ட சில முறைகள் உண்டு. இம் முறைகளில் சில இன்றைய சட்ட அமைப்புகளுக்கெல் லாம் அடிப்படை வகுத்துக் கொடுத்த ரோமானிய சட்டத்தி லும் (Romans' Laws), அதனையொட்டி ஆங்கில நாடுகளல்லாத ஐரோப்பிய நாடுகளால் தோற்றுவிக்கப்பட்ட குடிமைச் சட்டங் களிலும் (Civil Laws) பெரிதும் ஏற்றுக் கையாளப்பட்ட முறை களாகும். நாட்டிடைச் சட்டத்தின் துவக்க காலத்தில் நாடுகள் ஒற்றிய நில உரிமை உடைமைகளும் அம் முறைகளினடிப் படையில் நிர்ணயிக்கப்பட்டு வந்தன.

ஆள் நிலம் என்ருல் என்ன ?

நாட்டின் தன்மைகள் ஐந்து எனவும் அவற்றில் ஒன்ருகிய ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பினை அது பெற்றிருத்தல் வேண்டு மெனவும் கண்டோம். நிலையான நிலப் பரப்புடன் ஒரு அமைப் பாக ஊன்றி வாழாத மக்கள் கூட்டங்கள் 'நாடு' எனும் தகுதி யைப் பெருு.

தந்தைமைக் கருத்துகளை (Patrimonial Notions) ஒட்டிய ரோமானிய குடும்பச் சட்டங்களில் (Family Laws) ஒரு குடும்பத்

திலுள்ளவர்கள்மீதும், அக் குடும்பச் சொத்தின்மீதும் அக் குடும்பத் தலைவனுக்கே முழு ஆதிக்கம் உண்டு. எனினும் அக் குடும்பச் சொத்தை குடும்பத்தின் பொது நன்மைக்காகப் பயன் படுத்தவும் சில குடும்பக் கடமைகளை நிறைவேற்றவும் குடும் பத் தலைவனைக் கட்டுப்படுத்தும் விதிகளும் உண்டு.

அவ்வாறே நாட்டிடைச் சட்டத்திலும், நாடெனும் தகுதி வாய்ந்த நாடு, பூப்பந்தின் மீது தனக்கென்று நிலப்பகுதியை உடைமைப்படுத்திக்கொண்டு, அந் நாட்டிற்குள் வாழும் மக் களின்மீதும், வளங்களின்மீதும் ஆதிக்கம் செய்யும் உரிமை பெற்றவை. இவ்வாறு ஒரு நாட்டின் ஆளுகைக்குட்பட்ட நிலப் பரப்பையே அந் நாட்டின் 'ஆள் நிலம்' எனக் குறிக்கின் றோம். இவ் ஆள் நிலங்கள் பெரும் நிலப் பரப்பாகவோ, ஒரு ஊரை மட்டுமே உள்ளடக்கிய சிறு நிலத் துண்டுகளையோ கூடக் கொண்டிருக்கலாம். உதாரணமாக போப்பாண்டவரின் ஆளுகைக்குட்பட்ட வேட்டிகன் 100 ஏக்கராக்களை மட்டுமே கொண்ட தனி நாடு. பத்தொன்பதாம் நூற்றுண்டுவரை பெருமளவான நாடுகள் முடி மன்னர்களால் ஆளப்பட்டதால் இந்த நிலப் பரப்பு மன்னர்களுக்குச் சொந்தமென்று சிலரால் கருதப்பட்டு வந்தது. ஆனுல் நாட்டின் நிலப் பரப்பு அந் நாட்டின் சொத்தாகும் எனவே ஆளும் அரசுக்கோ மன்ன ருக்கோ அது சொந்தமாகாது. நாட்டின் நிலப்பரப்பு அந் நாட்டின் கோன்மையுடன் இணைந்தது. எனவேதான் ஒரு நாடு தன் பகுதியை மற்ற நாடுகட்கு எக் காரணத்திற்காக வேனும் வழங்க வேண்டியதிருந்தால், அந் நாட்டு நாடாளு மன்றத்தின் ஒப்புதல் தேவை என்று சில நாட்டு அரசியல் சட்டங்கள் வலியுறுத்துகின்றன.

ஒரு நாட்டின் ஆள் நிலத்தின்மீது, பொதுவாக வேறு எந்தவித நாட்டிற்கும் ஆதிக்கம் செலுத்தும் ஆதிகாரமோ, உரிமையோ கிடையாது. ஆனுல் இதற்கு விதி விலக்குகள் உண்டு. உதாரணமாக தூதர்களின் பாதிக்கப்படாத நிலை (Ex-territoriality), ஒருங்காட்சி அமைப்பு (Condominium) ஆகிய வற்றைக் கூறலாம்.

அந் நாட்டு எல்லைகளுக்குள் உள்ள அனைத்தின் மீதும் அந் நாட்டிற்கு ஆதிக்க உரிமை உண்டு. அத்துடன் அந் நாட்டு எல்லைக்குள் நுழையும் எவரும் அச் செயலால் அந் நாட்டு ஆதிக்கத்திற்குத் தங்களை உட்படுத்திக் கொள்கிருர் களென்றும் (Quidquid este in territorio, est etiam de territorio

and qui in territorio meo est, etiam mens subditus est) பழங் கோட்பாடுகள் கூறுகின்றன.

**நிலப் பரப்பினை ஈட்டும் வகைகள்**

நாம் இங்குக் குறிப்பிடும் நில ஈட்டு (Acquiring) வகைகள் ஏற்கனவே நாடுகளின் கூட்டுக் குடும்பத்திலுள்ள உறுப்பு நாடுகளால் ஈட்டப்படும் வகைகளே ஒழிய, வேறிரண்டு வகையில் உருவாகும் நிலப் பரப்புக்களை யொட்டியல்ல. அந்த வேறிரண்டு வகையிலும் சுருக்கமாகக் காண்போம்.

1. புதிய நாடுகள்: இதுகாறும் எந் நாட்டிற்கும் உட்படாது இயற்கையின் பகுதிகளாக (Res Nullius) உள்ள நிலப் பரப்பில் புதிதாக மக்கள் குழுவினர் நுழைந்து ஒரு நாட்டமைப்பைத் தோற்றுவித்தால், ஒரு நாட்டிற்கு வேண்டிய தன்மைகளனைத்தும் பெற்றவுடன், அந் நாடு தன்னையும் உலக நாடுகளின் கூட்டுக் குடும்பத்தில் ஒரு உறுப்பு நாடாக அங்கீகாரம் செய்யுமாறு ஏற்கனவே உள்ள நாடுகளை வேண்டிக் கொள்ளலாம்.

2. அல்லது இதுவரை உரிமையாக்கப்படாத நிலப்பரப்பினைத் தனி மனிதர்களோ, நிறுவனங்களோ சொந்தப்படுத்திக் கொள்ளும்போது ஒரு நாட்டின் சார்பாக சொந்தப்படுத்தினால் அந் நாட்டின் மூலமாக அங்கீகாரம் பெறுவார்கள். அன்றி தன் செயலாலேயே உரிமைப்படுத்தினால் அது தனியார் உரிமைச் சட்டத்தின் கீழ் (Law Relating to Private Rights) வருமே யொழிய நாட்டிடைச் சட்டத்தின் கீழ் வராது. இவ்வாறு தனியார் மூலம் கையகப்படுத்தப்படும் நிலப்பரப்புகள் நாட்டுத் தன்மை பெறவும் வாய்ப்புண்டு. உதாரணமாக, முன்னாள் காங்கோ தனி நாட்டையும் (Former Congo Free State), சாராவாக்கையும் கூறலாம்.

**சாராவாக் (Sarawak)**

வடபோர்னியாவிலுள்ள சாராவாக்கை சர். ஜேம்ஸ் புருக் என்பார் 1841இல் தன்னுரிமைப்படுத்தி, அப் பகுதியைத் தனி நாடெனவும் அதற்குத் தானே மன்னரெனவும் கூறினார். அது தனிநாட்டுத் தன்மையையும் பெற்றது. 1946 வரை அது பிரிட்டிஷ் நாட்டின் காப்பு (Protectorate) நாடாகவும் இருந்து வந்தது.

நாடுகளின் ஆள் நிலப் பரப்புகள், அவ்வப்போது அதன் வலிமைக்கேற்பவும், செயல்களுக்கேற்பவும், இயற்கையின்

மாறுதலுக்கேற்பவும் கூடவோ குறையவோ கூடியவை. எனவே ஒரு நாடு தன் நிலப்பரப்பைக் கூட்டிக் கொள்ள ஐந்து வழிகள் அல்லது வகைகள் உண்டு.

அவைகளாவன :

1. பிரிதல் (Cession), 2. ஆளுகைக்கு உட்படுத்தல் (Occupation), 3. நிலப் பெருக்கம் (Accretion), 4. அடிமைப் படுத்தல் அல்லது வயப்படுத்தல் (Subjugation,) 5. நீடு அனுபோக உரிமை வழி நிலம் சேர்த்தல் (Prescription) எனப்படும்.

இவற்றில் பிரிதல் எனும் வகை ஏற்கனவே ஒரு நாட்டால் ஈட்டப்பட்டு அதனின்றும் பிரிந்து, மற்ெறாரு நாட்டின் நிலப் பரப்பு கூடுவதால் இதனை அடியொற்றிய (derivative) வகை எனவும், மற்ற நான்கும் ஒரு நாடு நேரடியாக நிலப் பரப்பைப் பெருக்கிக் கொள்ளும் வகையாதலால் தன்வகை (Original Mode) எனவும் குறிக்கின்றோம்.

**ஆள் நில ஆதிக்கம்** (Territorial Sovereignty)

நாடுகளின் தன்மைகளுள் நாட்டின் நிலப்பரப்பைப் பெற்றிருப்பதும், அந் நிலப் பரப்பின் மீதுள்ள தனது குடிகளின்மீது தன்னுட்டுச் சட்டத்தைச் செயல்படுத்தவும், அவ் வகையில் அந் நாடு முழு மேலாண்மைத் தன்மையும், ஆதிக்கமும் பெற்றதெனவும் கண்டோம். எனவே தனது நிலப் பரப்பில் தனது சட்டத்தைச் செயல்படுத்தும் ஆற்றலும், தனதெல்லைக்குள் உள்ள மக்கள், பொருள் அனைத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் ஆற்றலையுமே ஆள் நில ஆதிக்கம் (Territorial Sovereignty) எனக் குறிப்பிடப்படுகிறது.

**ஆள் நில ஆதிக்கம் பெறுதல்**

ஒரு நிலப் பரப்பின் மீது தனக்கு ஆள் நில ஆதிக்கம் உண்டென வாதிடும் நாடு அந் நிலப் பரப்பில் தனக்கு செயல் வலிவான ஆதிக்கம் (Effective Occupation) இருந்தது எனவோ அல்லது எந் நாட்டிடமிருந்து வாதிடும் நாடு அந் நிலப் பரப்பைப் பெற்றதோ அந் நாட்டுக்கு அந்த நிலப் பரப்பின்மீது செயல் வலிவான ஆதிக்கம் இருந்தது என்பதை நிரூபிக்க வேண்டும் என பால்மாஸ் தீவு இசைவுத் தீர்ப்பில் (Island of Palmas Arbitration) கூறப்பட்டுள்ளது.

தொன்மையான நாடு ஈட்டும் வழிகளுடன் புதிதான ஒரு வழியும் தற்போது வழக்கத்தில் உள்ளது. அதாவது

இசைவுத் தீர்ப்பு மூலமோ அல்லது நாடுகளின் மூலமோ நிலப் பரப்பை அளிப்பது. உதாரணமாக, போரில் வென்ற நாடுகள் கூடி அமைதியை நிலைநாட்டக் குறிப்பிட்ட நிலப் பரப்பை ஒரு நாட்டிற்குத் தருவது. இது 1919இல் முதல் உலகப் போருக்குப் பின் வெர்செய்ல்ஸ் அமைதி மாநாட்டில் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளைச் சீர்திருத்தியபோது நடைமுறையில் ஏற்கப்பட்ட ஒன்று.

**இணைத்தல்** (Annexation)

இம் முறையால் ஒரு நாட்டின் கீழுள்ள நிலப் பரப்பை மற்றொரு நாடு தன் ஆள் நிலப் பரப்புடன் இணைத்துக் கொள்வது. இது இரு வகையில் நிகழக்கூடும்

1. ஒரு நாடு மற்ற நாட்டை வெற்றி பெறுவதன் மூலமோ அல்லது தன் வயப்படுத்திக் கொள்வதன் மூலமோ (Conquering or Subjugating) இவ் வகையில் வெற்றி கொண்ட நாட்டின் நிலப் பகுதியைத் தன்னுடன் இணைத்துக் கொள்வதுண்டு. இதுதான் பெரும்பாலும் வழக்கிலுள்ள முறையும்கூட.

2. இரண்டாவது வகை ஒரு நாடு தன்னாதிக்கத்தின் கீழ் அடிமையாக உள்ள நாட்டின் நிலப் பகுதியைத் தன் ஆள் நிலத்துடன் இணைத்துக் கொள்வதாகத் தனது விழைவை அறிவித்து (Declaring Annexation) பின்னர் இணைத்துக் கொள்வது. ஆனல் இம் முறையில் இணைக்கும்போது இணைக்கப்படும் நிலப் பரப்பிற்குரிய நாடு இணைத்துக் கொள்ளும் நாட்டின் முழு ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக இருந்திருத்தல் வேண்டும். உதாரணமாக ஜப்பான் தன் ஆதிக்கத்தின் கீழிருந்த கொரியாவைத் தன்னுடன் 1910இல் இணைத்துக் கொண்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

வெற்றி கொண்ட நாடு வெற்றி பெற்றதனாலேயே தோல்வியுற்ற நாட்டின் நிலப் பரப்பை இணைத்துக் கொண்டதாகப் பொருள் கொள்ள முடியாது. வெற்றியின் காரணமாக இணைத்துக் கொள்ளும் நாடு அதை யொட்டி உலகிற்கு அறிவிப்புச் செய்தல் அவசியம்.

**நிலப் பெருக்கம்** (Accretion)

இவ் வகையான நிலப் பெருக்கம் ஆற்றிலோ கரையோரக் கடல் வற்றி விடுவதாலோ ஏற்படும் மணற் படுகைகள்

அல்லது நதிகளில் வெழி நகர்வு ஏற்பட்டு நிலத் திட்டுக்கள் வளர்வதால் ஏற்படும் இவ் வகை நிலப் பெருக்கத்தின் மீது அதற்குரிய நாட்டின் ஆதிக்கம் எவ்வித முயற்சியுமின்றி விரியும். இவ் வகை நிலப் பெருக்கம் செயற்கையானதாகவோ இயற்கையானதாகவோ இருத்தல் கூடும். சில வேளைகளில் உள் நாட்டு நதிகளின் நடுவிலோ கடலின் மத்தியிலோ புதுத் தீவுகள் தோன்றுவதுண்டு. இவ் வகைத் தீவுகள் உள் நாட்டு நதிகளிலோ, எல்லையோரக் கடலிலோ தோன்றுமானால் அந் நிலத் துண்டு எல்லைக் கடலுக்குரிய நாட்டைச் சாரும். அன்றி ஆழ் கடலில் தோன்றுமானால் அது எந் நாட்டையும் சேராது. ஆனால் நாடுகள் தங்கள் உடைமையின் கீழ்க் கொண்டு வரலாம்.

**பிரிவினை (Cession)**

ஒரு நாடு தனது கோனாற்றலின் கீழ் தனது ஆள் நிலப் பரப்பின் எப் பகுதியையும், தனது சொந்தக் காரணங்களுக்காக, உதாரணமாக போர் நிறுத்தத்திற்காகவோ, இடையெழும் சிக்கல்களில் அமைதியும் தீர்வும் காண்பதற்காகவோ பிரித்து மற்ற நாடுகளுக்குக் கொடுக்கலாம். இவ்வாறு ஒரு நாடு தன்னிடமிருந்து பிரித்துத் தந்த நிலப் பரப்பு மற்ற நாட்டுடன் சேரும்பொழுது சேர்த்துக் கொள்ளும் நாட்டின் நிலப்பரப்பு பெருகுகிறது.

ஒரு சில சந்தர்ப்ப சூழ்நிலைகளின் தொல்லையிலிருந்து விடுபடும் பொருட்டோ அல்லது தன் விருப்பத்தின் பேரிலோ ஒரு நாடு தன் பகுதியை மற்ற நாட்டிற்கு வழங்கலாம். இவ் வகைக்கு உதாரணமாக அமெரிக்காவிற்கு ரஷ்யா 1867இல் தன் நிலப் பரப்பான அலாஸ்காவை விற்ற நிகழ்ச்சியையும், கட்டாயப் பிரிவினைக்கு உதாரணமாக ஃபிரான்ஸ் அல்ஸாஸ்-லோரைன் பகுதியை 1871இல் ஜெர்மனிக்குக் கொடுத்ததையும் கூறலாம்.

**நெடுங்கால அனுபோக உரிமை (Prescription)**

எந் நாடேனும் ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பின் மீது இடையீடின்றி அமைதியான வகையில் நடைமுறையில் (De-Facto) உடைமையாக்கிக் கொண்டு, தனது கோன்மைக்குரிய காரியங்களை நிகழ்த்தி வருமானால் அந் நாடு அந் நிலப் பரப்பின் மீது நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வரும் உடைமை உரிமையின் அடிப்படையில் அந் நிலப் பரப்பின்மீது ஆள் நில ஆதிக்கம் ஏற்றுக் கொள்ளப்படும்.

எனினும் இது நாட்டிடைச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்ட முறையல்ல என ஒன்றிரண்டு வல்லுநர்கள் வாதிடுகின் றனர். அதே நேரத்தில் உலக நியாயக் குழு எதுவும் உள் நாட்டுச் சட்டத்தில், பனிரெண்டு ஆண்டுக்காலம் எவரேனும் தொடர்ந்து ஒரு நிலப் பகுதியை அனுபவித்து வந்தால் அது அனுபவதாரரைச் சார்ந்ததாகக் கருதப்படும் என்று கூறி யிருப்பதைப் போல் இவ்வளவு கால அனுபோகம் தேவை என்று ஆண்டுகளை நிர்ணயிக்கவில்லை. இது போன்ற நில ஈட்டுக்கு நாட்டிடைச் சட்டத்தில் உறுதியான உதாரணம் எதுவுமில்லை யெனினும் பால்மாஸ் தீவு வழக்கினை (Island of Palmas) தற்போது முன் மாதிரியாகக் கூறுகிறார்கள்.

**ஆளுகைக்கு உட்படுத்தல்** (Occupation)

இவ் வகையான நில ஈட்டல் இதுவரை எந் நாட்டு ஆளு கைக்கும் உட்படுத்தப்படாத நிலப் பகுதியை ஒரு நாடு தன் னுட்சியின் கீழ்க் கொண்டு வருதலாகும். இது இணைத்தல், பிரிதல் முறைகளிலிருந்து வேறுபட்டது. ஏனெனில் இவ் வகையில் இயற்கை நிலப் பரப்பு நேரடியாக ஒரு நாட்டு ஆதிக்கத்தின் கீழ் வருகிறது. மற்ற இரண்டு வகையிலும் ஏற்கெனவே ஒரு நாடு தன்னுளுகைக்கு உட்படுத்திப் பிறகு மற்ற நாடு அதைப் பெறுகிறது.

இவ் வகையான ஈட்டுதலுக்கு இரண்டு நிபந்தனைகள் நிறைவேற வேண்டும். அதாவது குறிப்பிட்ட நிலப்பரப்பின் மீது ஆதிக்கம் கோரும் நாடு அந் நிலப் பரப்பினைத் தனது வயப்படுத்தி (Occupation) இருத்தல் வேண்டும். அத்துடன் அப் பகுதியில் உறுதியான நிர்வாகத்தை (Effective Control) ஏற்படுத்தி நடத்திக் கொண்டிருத்தல் வேண்டும்.

**கைக் கொள்ளுதல்:** எந் நாடு அந் நிலப் பரப்பின்மீது தன் ஆதிக்கம் கோருகிறதோ, அந் நாடு அந் நிலப் பரப்பினைத் தன் கையகப்படுத்தியிருத்தல் வேண்டும். அத்துடன் அதன் மீது தன் கோன்மையடியொற்றிய நிகழ்ச்சிகளையும் ஆற்றி வரவேண்டும்.

**நிர்வாகம்:** மேற்கூறியவாறு அந் நிலப் பரப்பை உறுதியுடன் தன் கையகப்படுத்திய பின் அந் நிலப் பரப்பின் மீது தன் ஆளுகையை உறுதிப் படுத்தும் வகையில் நிர்வாகம் செய்து வரவேண்டும்.

**கோன்மையை (வெளிப்படுத்தும்) காட்டும் செயல்கள்**

ஒரு நாடு வயப்படுத்திய நிலப் பரப்பைத் தொடர்ந்து தன் வசம் வைத்து அமைதியான, நிலை பெற்ற நிர்வாகத்தை நடத்தி வரவேண்டும். பால்மாஸ் தீவு இசைவுத் தீர்வில் ஒரு நாடு குறிப்பிட்ட நிலப் பரப்பைக் கண்டுபிடித்தால் மட்டும் போதாது. அதனை வயப்படுத்தித் தன் கோன்மையின் கீழ்க் கொண்டு வரும் எண்ணமும், முயற்சியும் வேண்டும். அதைத் தொடர்ந்து உறுதியான நிர்வாகத்தையும் ஏற்படுத்தி நடத்தி வருதல் வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஆள் நிலத்தை ஈட்டி கோன்மை யெய்தும் வழிமுறைகளை யொட்டி, அதை இழக்கும் வழிமுறைகளும் உண்டு. உதாரணமாக ஆள் நிலக் கோன்மையைத் துறப்பது அல்லது கைவிடுவதாலும், ஒரு நாட்டை மற்றொரு நாடு வெற்றி கொள்வதாலும், இயற்கையால் ஏற்படும் மாறுதல்களாலும், நீடனுபோக உரிமை மூலமாகவும் ஆள் நிலக் கோன்மையை இழக்கும் வாய்ப்புண்டு. தவிர புரட்சியின் விளைவாக ஒரு நாட்டின் ஆள் நிலப் பகுதி தனியே பிரிந்து போவதால் அந் நாடு தன் ஆள் நிலக் கோன்மையை இழந்துவிட நேரும்.

## (அ) ஆறுகள் (Rivers)

ஆறுகளை அவற்றின் தன்மையை யொட்டி நாட்டிமை ஆறுகள் (National Rivers) எனவும், நாட்டிடை ஆறுகள் (International Rivers) எனவும் இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு ஆறு அதன் துவக்கம் முதல் கழிவாய் (Mouth) வரை ஒரே நாட்டு எல்லைக்குள் ஓடி முடியுமானால் அத்தகைய ஆறுகளின் மீது அந்த நாட்டிற்கு முழுக் கோன்மையும் ஆதிக்கமும் உண்டு.

ஆறுகளைப் பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. நாட்டிமை ஆறுகள் (National Rivers)
2. எல்லை ஆறுகள் (Boundary Rivers)
3. நாட்டிமை அல்லாத ஆறுகள் (Non National Rivers)
4. நாடுகளிடை ஆறுகள் (International Rivers)

**1. நாட்டிமை ஆறுகள்**

ஒரு நாட்டு நிலப் பகுதியிலேயே தோன்றி ஓடி முடியும் ஆறுகள் இவ் வகைப்பட்டவை. மற்ற நாடுகள் இவ் வகை

ஆறுகள் வழியாகக் கப்பல் வழியுரிமை கோர முடியாது. நாடு களிடையே இவ் வகையில் வழியுரிமை வழங்கும் வகையில் உடன்படிக்கைகளில்லாதவிடத்து ஆற்றுக்குரிய நாடுகள் மற்ற நாட்டுக் கப்பல்களுக்கு வழியுரிமை மறுக்கவோ, நிபந்தனை யின் பேரில் வழங்கவோ ஆற்றல் பெற்றவை.

### 2. எல்லை ஆறுகள்

இரு நாட்டு எல்லைகளைப் பிரிக்கும் வகையில் ஓடுகின்ற ஆறுகள் எல்லை ஆறுகள் எனப்படும். இவ் வகை ஆறுகளில் சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் தங்கள் பகுதியில் அதற்குச் சொந்தமாக ஓடும் ஆற்றுப் பகுதியை நதி வழிப் போக்குவரத் துக்குப் பயன்படுத்தலாம்.

### 3. நாட்டிமை அல்லாத ஆறுகள்

பல நாடுகளைக் கடந்து ஓடும் ஆறுகள் நாட்டிமையற்ற ஆறுகள் எனப்படும். இவை ஒன்றுக்கும் மேற்பட்ட நாடு களுக்குச் சொந்தமானவை. ஒவ்வொரு நாடும் தன் நில எல்லையில் ஓடும் ஆற்றுப் பகுதிக்குச் சொந்தமுடையவை ஆகும். இங்கும் ஆற்றின்மீது உரிமையற்ற மற்ற நாடுகளுக்கு நீர் உரிமை தரவோ, மறுக்கவோ இந் நாடுகளுக்கு உரிமை உண்டு.

### 4. நாடுகளிடை ஆறுகள்

இவ் வகை ஆறுகள் தங்கள் ஒரு நாட்டில் துவங்கி ஒரே நாட்டிலோ, பல நாடுகள் வழியாகவோ ஓடி ஆழ் கடலில் முடியும். இவ் வகை ஆறுகள் நெடுங்கடலிலிருந்து கப்பல் போக்குவரத்துக்கு வசதியானவை. இவ் வகை ஆறுகள் எந்தெந்த நாடுகளின் வழியாக ஓடுகின்றனவோ அந்தந்த நாடுகளுக்கெல்லாம் சொந்தம். என்ருலும் அவற்றின் தன்மையைக் கருதி நாடுகளிடையேயான ஆறுகளெனக் கருதப் படும்.

### நாடுகளிடை ஆறுகளில் நீர்வழியுரிமை (Navigation)

நெடுங்காலம் தொட்டே நாடுகளிடையே ஓடும் ஆறுகளில் எல்லா நாடுகளுக்கும் நீர் வழியுரிமையுண்டு என்ற கருத்து ஏற் கப்பட்டு வழங்கி வருகிறது. இவ் வகை வழியுரிமை ஐரோப்பிய நாடுகளிடத்தும் ஐரோப்பா அல்லாத மற்ற நாடுகளிடத்தும் வழங்கி வரும் வழக்கம் மரபுப்படி நாட்டிடைச் சட்டத்தால்

அங்கீகரிக்கப்பட்டுள்ளது என ஓப்பென்ஹெய்ம் கூறுகின்ருர் ஆனால் இக் கருத்திணை ஸ்டார்க் (Starke) மறுத்துரைக்கிருர்.

நாடுகளிடையே ஓடும் ஆறுகளில் நீர் வழியுரிமை பற்றி மூன்று கருத்துகள் வழங்கி வருகின்றன.

1. ஒரு சாரார் இத்தகைய வழியுரிமைகள் அமைதிக் காலத்தில் மட்டுமே செயல்படுத்தத் தக்கவை என்று கருதுகின்றனர்.

2. மற்ருெரு சாரார் எந்தெந்த நாடுகளைக் கடந்து நாடுகளிடை ஆறுகள் ஓடுகின்றனவோ அந்தந்த நாடுகள் மட்டுமே அந்த ஆற்றிணைப் பயன்படுத்தும் உரிமை பெற்றவை என்று கருதுகின்றனர்.

3. மற்றுமொரு சாரார் நாடுகளிடையே ஓடும் ஆறுகள் அமைதிக் காலத்தில் மட்டுமோ, அன்றி அவற்றிற்குரிய நாடுகளுக்கு மட்டுமோ அல்லாமல் எல்லாக் காலத்திலும், எல்லா நாடுகளாலும் பயன்படுத்துதற்குரியவை எனவும், அவற்றின் மீது உரிமை பெற்ற நாடுகள் தங்கள் நன்மையைப் பேணும் பொருட்டு அவற்றின் பயன்பாடுகளை நெறிப் படுத்தலாம் என்றும் கூறுகின்றனர்.

4. தற்போது நாடுகளிடை ஆறுகளின் வழியுரிமை உடன்படிக்கைகள் மூலம் நெறிப்படுத்தப்படுகிறது. இப் பழக்கம் 1814இல் பாரீஸ் உடன்படிக்கை ஏற்பட்டது முதல் தொடங்கியது. இறுதியாக தற்போது பார்சிலோனு ஏற்பு விதிகள் (Barcelona Convention in 1921) இவ் வகை வழியுரிமைகளை நெறிப்படுத்துகிறது.

**பார்சிலோனு ஏற்பு விதிகள்**

1. இவ் விதியின்படி எந்தெந்த நாடுகள் இம் மாநாட்டு விதிகளுக்குத் தரப்பு நாடாக உள்ளனவோ அவைகள் ஒவ்வொன்றும் தங்கள் நாட்டு வழியோடும் ஆற்றில் மற்றத் தரப்பு நாடுகளுக்கு வழியுரிமை வழங்கக் கடமைப்பட்டவை.

2. (ஆறு ஓடுகின்ற ஆற்ருேர நாடுகள் வழி நாடுகள்) (Riparian States) அவற்றின் மீதுண்டான பயனுரிமையைத் தங்களுக்கு முற்றிலுமாக ஓதுக்கிக் கொள்ளலாம். இதனைப் 'பயனுரிமை ஓதுக்கம்' (Cabotage) என்றழைக்கப்படும். அத்

துடன் இந் நாடுகள் மற்ற நாட்டுப் போர்க் கப்பல்களுக்கு இவ்வாறுகளில் வழியுரிமை மறுக்கலாம்.

3. இம் மாநாட்டின் தரப்பு நாடுகள் அனைத்தும் ஒன்றுக் கொன்று நீர் வழியுரிமை வழங்குவதிலும், நாட்டு மக்களை நடத்துவதிலும், கொடியை மதிப்பதிலும் சமத்துவத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு தட நாடும் தங்கள் ஆற்றைப் பயன்படுத்து வது அதன் நீர் வழிப் பயன் தன்மைக்குக் குந்தகம் விளையாத வகையில் அமைதல் வேண்டும்.

## (ஆ) கால்வாய்கள் (Canals)

உள் நாட்டில் ஓடும் கால்வாய்கள் அந் நாட்டின் ஆள் நிலப் பரப்பின் ஒரு பகுதியாகவே கருதப்படும். எனவே இக் கால் வாய்களும் ஆறுகளுக்குண்டான விதிகளுக்குக் கட்டுப் பட்டவைகளே.

கடல்களுக்கிடையே ஓடி இணைக்கும் கால்வாய்களுக்கென்று தனி விதிகள் உண்டு. இவ் வகைக் கால்வாய்களுக்கு சூயெஸ், பனுமா, கயல் (Kiel) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### சூயெஸ் கால்வாய் (Suez)

கடலிடைக் கால்வாய்களில் (Inter Oceanic Canals) மிகவும் முதன்மையானது சூயெஸ் ஆகும். இக் கால்வாய் செங்கடல் (Red Sea), மத்தியத்தரைக் கடல் (Mediterranean Sea) ஆகிய இரண்டையும் இணைக்கிறது. இக் கால்வாய் 1888இல் கான்ஸ் டான்டிநோப்பிள் மாநாட்டுத் தீர்மானத்தின்படி (Convention of Constantinople in 1888) நடுநிலைக் கால்வாய் (Neutralised) ஆக ஆக்கப்பட்டது. இம் மாநாட்டில் இங்கிலாந்து, ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, ஃபிரான்ஸ், ஜெர்மனி, ஹாலந்து, இத்தாலி, ஸ்பெயின், ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகள் பங்குகொண்டன.

1. இம் மாநாட்டு ஏற்பு விதிகள் 1ன்படி இக் கால்வாயில் அமைதிக் காலத்திலும், போர்க் காலத்திலும் எல்லா நாட்டு வணிக, போர்க் கப்பல்களுக்கும் வழி திறந்திருக்க வேண்டும். எப்பொழுதும் இக் கால்வாய் கடலடைப்புக்கு உட்படுத்தப் படுதல் ஆகாது.

2. ஏற்பு விதிகள் 4, 5, 6ன் கீழ் இக் கால்வாய்க்குரிய துருக்கி நாடு போரிலீடுபட்டிருந்தாலும் இக் கால்வாயில் எவ்விதப்

போர் நிகழ்ச்சியிலும் ஈடுபடுதலாகாது. இக் கால்வாயில் எந்த நாடும் போர்ப் பொருட்களை ஏற்றவோ இறக்கவோ கூடாது.

3. **ஏற்பு விதிகள் 2, 7ன் கீழ்:** இக் கால்வாய்ப் பகுதியில் எந் நாடும் போர்க் கப்பல்களை (Men of War) நிறுத்துதல் கூடாது. நிலையான கோட்டை கொத்தளங்களைத் தோற்றுவித்தல் கூடாது. 1956இல் எகிப்து சூயெஸ் கால்வாய் நிறுவனத்தை (Suez Canal Company) நாட்டுடைமை ஆக்கியது. இக் கால்வாய் இங்கிலாந்து, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு முக்கியக் கடல்வழியானதால் இதனை நாட்டுடைமை ஆக்கியது பெரும் சிக்கலைத் தோற்றுவித்தது. இதனையொட்டி 1956இல் இங்கிலாந்தும், ஃபிரான்ஸும் எகிப்தின் இந்த நடவடிக்கைக்கெதிராகத் தலையீடு செய்தன. ஆனால் 1957 ஏப்ரல் 27ஆம் தேதி எகிப்து நாடு தான் 1888ஆம் ஆண்டைய கான்ஸ்டான்டிநோப்பிள் மாநாட்டு முடிவுகளை மதித்து நடக்கும் என்று வெளியிட்ட விளைவு அறிக்கை (Declaration) இந்தச் சிக்கலுக்கு ஒரு முடிவு கண்டது.

**கயல் கால்வாய்** (Kiel Canal)

கயல் கால்வாய் பால்டிக் கடலையும் (Baltic) வட கடலையும் (North Sea) இணைக்கிறது. இது முற்றிலும் ஜெர்மனி ஆள் நிலப் பரப்பிலேயே ஓடுகிறது. 1919ஆம் ஆண்டின் வெர்ஸெய்ல்ஸ் உடன்படிக்கையின்படி (Treaty of Versailles of 1919) இக் கால்வாய் போர்க் கப்பல்களுக்கும் (Men of War) வழி திறந்திருக்க வேண்டும்.

**விம்பிள்டன் வழக்கு** (Case of Wimbleton)

கயல் கால்வாயின் தன்மையையொட்டி எழுந்த இவ் வழக்கில் உலக நிலை நீதி மன்றம் (Permanent Court of International Justice) ஜெர்மனியுடன் போரில் ஈடுபடாத நாடுகள், ஜெர்மனி எந் நாட்டுடன் நடுநிலைமை வகிக்கிறதோ, அந் நாட்டுடன் போரில் ஈடுபட்டிருந்தாலும் அத்தகைய போர் நாட்டுக் கப்பல்களுக்கும் கயல் கால்வாயில் வழியுரிமை உண்டு என்று கூறிற்று.

ஆனால் ஜெர்மனி 1936இல் ஒருதலையாக மேற்கூறியுள்ள 1919ஆம் ஆண்டைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை நிபந்தனையைக் கண்டித்து ஏற்க மறுத்துவிட்டது.

**பனுமா கால்வாய்** (Panama Canal)

1901ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் அடியாகத் தோன்றியது இக் கால்வாய். இது அட்லாண்டிக், பசிபிக் ஆகிய கடல்களை இணைக்கிறது. இவ் வுடன்படிக்கையின் பெயர் ஹே-ப்பான்சிஃபோட் (Hay-Pauncefote) எனப்படும். இவ் வுடன்படிக்கையின்படி அமெரிக்காவே இக் கால்வாயை நிர்வகிப்பதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் முழு ஆற்றல் பெற்றது. சூயெஸ் கால்வாய் நடுநிலையாக்கல் விதிகளே இதற்கும் ஏற்கப்பட்டது.

1903ஆம் ஆண்டு புதிதாகத் தோன்றிய பனுமா குடியரசுக்கும் (New Republic of Panama) ஐக்கிய அமெரிக்காவிற்குமிடையே ஹே-வெரில்லா (Hay-Varilla) உடன்படிக்கை ஏற்பட்டது. இவ் வுடன்படிக்கைப்படி பனுமாக் குடியரசிற்கு பனுமா கால்வாயின் மீது சட்டப்படி உரிமையும் கோன்மையுமிருந்தாலும், அதன் உண்மையான ஆதிக்கமும், நிர்வாகமும் ஐக்கிய அமெரிக்காவிடமே தொடர்ந்து இருக்கவேண்டுமென்று ஏற்கப்பட்டது. 1955இல் இவ்விரு நாடுகளும் ஒன்றையொன்று புரிந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்கிக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையும் மேற்கூறிய கருத்தையே மறைமுகமாக வெளிப்படுத்துகிறது. எனினும் இக் கால்வாயின் பயன் கூறுகள் கெடாவண்ணம் பனுமாவின் கோன்மையை நிலைநாட்டும் வகையில் 1923ஆம் ஆண்டு உடன்படிக்கையை ஒதுக்கிவிட்டுப் புதியதொரு உடன்படிக்கையைத் தோற்றுவிக்கும் கருத்து இருந்து வருகிறது.

## (இ) கடல் இடுக்குகள் (Straits)

கடலில் இரு நாடுகளின் கரைகள் உள் நோக்கி ஓடிக் கடலைக் குறுக்கி ஏற்படுத்தும் கடல் குறுக்கங்களையே கடல் இடுக்கு என்றழைக்கிறோம். ஒவ்வொரு நாடும் குறைந்த அளவு மூன்று மைல் அகலக் கரையோரக் கடல் பெற்றிருப்பதால், இக்கடலை இரு சம கூறுகளாக மத்தியக் கோட்டைக் கொண்டு பிரிப்பதன் மூலமோ அன்றி உடன்படிக்கைகள் மூலமோ முடிவு செய்யப்படும். இக் கடல் இடுக்குகள் எங்கெங்கு ஆறு மைல் அகலம் உள்ளதோ, அங்கெல்லாம் இக் கடலிடுக்குகள் அதனதன் கரையோர நாட்டைச் சாரும். இக் கடலிடுக்குகள் எங்கெல்லாம் ஆறு மைல் அகலத்தைவிட அதிகமாக உள்ளதோ அங்கு சிக்கல் எழுவது இயல்பு. நாட்டிடைச்

சட்ட வல்லுநர்கள் இத்தகு கடல் குறுக்கங்கள் கரையோர நாடுகளைச் சாரும் என்கின்றனர். ஆனால் இதனை மறுப்பாரும் உண்டு. என்றும் இக் கருத்தே நடைமுறையில் வழங்கி வருகிறது. உதாரணமாக ஜுவான் டி ஃபுக்கா ((Juan de Fuca) எனப்படும் கடலிடுக்கு பதினைந்து மைல் அகலம் கொண்டது. இது கடலோர நாடுகளான (Littoral States) கெனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளாலும் (கெனடா வடபுறமும், அமெரிக்கா தென்புறமும் ஆகப்) பிரித்தாளப் படுகிறது.

கடல் வாணிபத்திற்குப் பயன்படுத்தப்படும் நெடுவழிக் கடல்களில் இடைப்படும் இத்தகைய கடலிடுக்குகள் வழியாக அனைத்து நாடுகளுக்கும் தீங்கற்ற வழியுரிமை (Right of Innocent Passage) உண்டு.

**கார்ஃபுக் கால்வாய் வழக்கு** (Corfu Canal Case)

இவ் வழக்கு இங்கிலாந்திற்கும் அல்பேனியாவிற்குமிடையே எழுந்தது. இவ் வழக்கில் உலக நீதி மன்றம் நெடுவழிக் கடலில் இடைப்படும் கடலிடுக்குகள் வழியே நாடுகளுக்கு வணிக,போர்க் கப்பல்களுக்குத் தீங்கிலா வழியுரிமை உண்டெனவும், அவ்வுரிமை பெற்றிருக்கும்போது கரையோர நாட்டிற்கு முன் கூட்டித் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லையென்றும் கூறியுள்ளது.

**பாஸ்ஃபோரஸ் டார்னேல்ஸ்—கடலிடுக்குகள்**

கருங்கடல் ஒரு காலத்தில் முற்றிலும் துருக்கி நாட்டின் எல்லையில் உட்பட்டிருந்தபோது, துருக்கிக்கு இக் கடலிடுக்குகளின்மீது முழு ஆதிக்கம் இருந்து வந்தது. ஆனால் ரஷ்ய நாடு கருங்கடலின் கரையோர நாடானபோது துருக்கி மற்ற நாடுகளுடன் இதனையொட்டி உடன்படிக்கைகள் செய்து கொள்ள வேண்டி ஏற்பட்டது. இவ்வகையில் சில கடலிடுக்குகள் உள்நாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டது. கருங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைக்கும் இக் கடலிடுக்குகளை நிர்வகிக்கும் விதி முறைகள் மாண்ட்ரியாக்ஸில் 1936இல் நடந்த கடலிடுக்கு மாநாட்டில் (Montreux Straits Convention 1936) ஏற்கப்பட்டன.

இவ் ஏற்பு விதிகள் கரையோர நாடுகளான ரஷ்யா, துருக்கி இரு நாட்டு நன்மைகளையும் முற்றிலும் செயல்படுத்தும் நோக்குடன் தோற்றுவிக்கப்பட்டவை. இதன்படி அமைதிக்

காலத்திலோ, போர்க் காலத்திலோ எல்லா நாட்டு வணிகக் கப்பல்களுக்கும் வழியுரிமை வழங்கப்படுதல் வேண்டும். ஆனால் துருக்கியின் நன்மையைக் கருதி சில நிபந்தனைகளை விதிக்கலாம். துருக்கியோடு போர் புரியும் நாட்டு வணிகக் கப்பல்களை அவ் வழிச் செல்வதிலிருந்து தடுக்கும் உரிமை அதற்குண்டு. அத்துடன் போர்க் கப்பல்களையும் (Men of War), பாரக் கப்பல்களையும் அனுமதிப்பதையொட்டி தனிப் பிரிவுகளும் உள்ளன.

## (ஈ) விரிகுடாக்களும் வளைகுடாக்களும் (Bays and Gulfs)

கடல் கரையின் உள் பக்கத்தில் ∩ இவ் வடிவத்தில் வளைந்திருப்பதை விரிகுடாக்கள் என்றும், ஆழமான பகுதியை வளைகுடாக்கள் என்றும் அழைக்கிறோம்.

இவற்றினையொட்டிய சட்டத்தை இரு கால கட்டங்களில் அறியலாம். அதாவது ஆங்கிலோ-நார்வேய மீன்பிடி வழக்கில் உலக நீதிமன்றத் தீர்ப்புக்கு முன்னும் பின்னும் அதன் நிலைகள் வேறுபட்டவை.

**வழக்கிற்கு முன்னிருந்த சட்டம்**

ஆறு மைல் அகலத்திற்குக் குறைவான விரிகுடாக்கள் முற்றிலும் கரையோர நாட்டின் ஆள் நிலத்திற்குட்பட்டது என வழங்கி வந்தது. ஆனால் சில வல்லுநர்கள் பத்து மைல் அகலத்திற்கு மேலிருக்குமானால் அதைக் கரையோர ஆள் நிலப் பகுதியாகக் கருத முடியாது என்று கூறி வந்தனர். ஆனால் கெனடா பதினைந்து மைலுக்கும் மேல் அகலமான ஹட்சன் (Hudson) விரிகுடாவைத் தனது ஆள் நிலப் பகுதியாகவே கூறி வந்தது.

**வழக்கிற்குப் பின்னுள்ள நிலை**

இவ் வழக்கின் தீர்ப்புப்படி—

1. ஒரு நாடு குறிப்பிட்ட விரிகுடாவையும் உள்ளடக்கிய நீர்ப் பகுதியையும் தன் ஆள் நிலப் பகுதியாக வழங்கி வருவதை மற்ற நாடுகளும் மறுக்காமல் ஏற்றுக்கொண்டிருந்தால் அவ்வுரிமையைப் பின்பு மறுக்க இயலாது.

2. அத்தகைய வழக்கம் இல்லாதவிடத்து கரையோர நாடு தனது பொருளாதார நன்மைகளையும் அவ் விரிகுடாக்களின் அருகாமையையும் மனதில் கொண்டு அதனைத் தன் ஆள் நில நீர்ப் பகுதியாக (Territorial Waters) அறிவிக்கலாம்.

இவ் வழக்குத் தீர்ப்பினால் பத்து மைலுக்கு மேல் அகலமான விரிகுடாக்களை நாடுகள் தம் ஆள் நிலப் பகுதியாகக் கொள்ள முடியாது என்றிருந்த பழங் கொள்கை செயலிழந்துவிட்டது.

# 19. எல்லையோரக் கடல்

## (Territorial Sea)

ஆழ்கடல் (High Seas) எந் நாட்டிலும் வயப்படுத்த இயலாத ஒன்று என்ற கருத்தினை நாட்டிடைச் சட்ட நிபுணர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் எல்லையோரக் கடல் பற்றி கருத்து வேற்றுமைகள் உண்டு. எல்லையோரக் கடல் என்பது ஒரு நாட்டின் எல்லைக் (கடல்) கரையையொட்டி அமைந்துள்ள கடலின் பகுதியாகும். இதனைக் கரையோரக் கடல் கச்சை (Maritime Belt) எனவும் அழைப்பதுண்டு.

எல்லையோரக் கடற்கரை நாட்டின் ஆள் நிலப் பகுதி எனவும், அது கரையோர நாட்டின் சொத்தெனவும், இதன் மீது கரையோர நாட்டிற்கு முழு ஆதிக்கம் உண்டெனவும், ஆனால் மற்ற நாட்டு வணிகக் கப்பல்களுக்குத் தீங்கிலா வழி யுரிமை மட்டுமே உண்டு என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

மற்றொரு சாரார், கரையோர நாட்டிற்கு, எல்லையோரக் கடலில் ஆதிக்கம் செலுத்தவோ, தன் நிலப் பகுதியாகக் கருதவோ உரிமையில்லை எனவும், கரையோர நாடு தனது எல்லைக் கரையின் நன்மையைக் கருதி காவல் உரிமையும், ஆளுகை அதிகார வரம்பும் (Jurisdiction) சில கட்டுப்பாடுகளை செயல்படுத்தும் உரிமை, மற்றும் அது போன்ற சில உரிமை களும் பெற்றவையே தவிர கோன்மை பெற்றவை அல்ல என்றும் கூறுகின்றனர். ஆனால் நாடுகள் நடைமுறையில் முன் வகைக் கருத்தையே கடைப்பிடித்து வருகின்றன.

மேலே நாட்டின் (கடல்) கரை எல்லையை ஒட்டி அமைந் துள்ள கடல்மீது கரை நாட்டிற்கு ஆதிக்கம் உண்டெனக் கண்டோம். ஆனால் இவ்வாறு ஆளுகைக்குட்பட்ட பகுதி கடலில் எவ்வளவு தூரம் உள் நோக்கிப் போகிறது என்பதை

இனி அறிவோம். இந்த எல்லையோரக் கடல் கச்சையின் (Territorial Water Belt) அகலம் பற்றியும், அதனை எவ்வாறு அளப்பது என்பதிலும் சட்ட வல்லுநர்களிடம் கருத்து வேற்றுமை இல்லை.

எங்கிருந்து அளப்பது என்பதில் சிலர் மேல் நீர் மட்டத்திலிருந்தும், சிலர் கீழ் நீர் மட்டத்திலிருந்தும், மற்றும் சிலர் எவ்விடத்தில் கப்பல் பயணம் செய்ய முடியாத அளவிற்கு ஆழம் குறைவாக உள்ளதோ அங்கிருந்து அளக்க வேண்டும் எனவும் பலவகையாகக் கூறுகின்றனர். ஆனல் அளப்பதையொட்டிப் பெரும்பான்மையான நாடுகள் பொதுவாகக் கரை வளைவுகளையொட்டிக் கீழ் நீர் மட்டத்திலிருந்து அளக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. 1930இல் ஹேக் மாநாட்டில் இதையொட்டி எந்த விதிகளையும் உருவாக்கவில்லை. என்ருலும் அம் மாநாடு நாடுகள் மேற்சொன்ன கருத்தைப் பொதுவாக ஏற்றுக்கொண்டுள்ளன என்பதை வெளிப்படுத்தியது.

### மீன்பிடி வழக்கு (Fisheries Case)

இங்கிலாந்திற்கும் நார்வே நாட்டிற்குமிடையே நடந்த இவ் வழக்கில் உலக நீதி மன்றம், கரை எவ்வாறு அமைந்துள்ளதோ அதையொட்டி அளந்தால் போதுமெனவும் ஒவ்வொரு வளைவிலிருந்தும் குறிப்பிட்ட அகல தூரம் கணக்கெடுக்கப்பட வேண்டியதில்லை யெனவும் கூறியுள்ளது. எல்லையோரக் கடல், கரையோரக் கடற் பகுதி பற்றிய மாநாடும் இக் கருத்தை அங்கீகரித்துள்ளது.

### எல்லைக் கடல் கச்சையின் அகலம் (Width of the Territorial Water Belt)

எல்லையோரக் கடலின் அகலம் பற்றிப் பல நாடுகள் பல வகையில் உரிமை கொண்டாடின. இது மூன்று மைல் முதல் நூறு மைல் வரைகூட இருந்தன. சில நாடுகள் பார்வை தூரம் (பதினன்கு மைல்) எனவும், மற்றும் சில நாடுகள் பீரங்கி குண்டு பாயும் தூரம் (3 மைல்) எனவும் கூறிவந்தன. இவற்றில் பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் மூன்று மைல் கொள்கை நாடுகளால் பரவலாக ஏற்கப்பட்டிருந்தது. பீரங்கி தொழில் நுணுக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக, குண்டு தாக்கும் தூரமும் அதிகரிக்கவே மூன்று மைல் கொள்கையிலும் மாற்றமேற்படத் துவங்கியது. 1930ஆம் ஆண்டு ஹேக் மாநாட்டில் மூன்று மைல் அகலம் பற்றிப்

பொதுவான எண்ணம் நாடுகளுக்கு இருந்தபோதிலும் சில நாடுகளின் மாறுபட்ட போக்கினுல் இது பற்றிய கருத் தொற்றுமை காண முடியாமல் போயிற்று. எனவே அம் மாநாட்டில் இதற்கான ஏற்பு விதிகள் வரைவு நிலையுடனேயே ஏற்கப்படாமல் கைவிடப்பட்டன. 1958லும், 1960லும் ஜெனீவாவில் (கடல் சட்டத் தொகுப்பிற்காக) கூடிய மாநாட்டிலும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. 1960ஆம் ஆண்டு மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பல நாடுகள் 6 மைல் அகலக் கொள்கையை ஆதரித்தன. சில நாடுகள் பனிரெண்டு மைல் கொள்கையை ஆதரித்தன. இவ் விரண்டு கருத்துகளுக்குமிடையே ஆறு மைல் அகல எல்லைக் கடலுக்கும், பனிரெண்டு மைல் மீன் பிடிப்புப் பகுதிக்கும் வழி வகுக்கும் வகையில் தெரிவிக்கப்பட்ட சமரசக் கருத்தும் ஆதரவு பெறவில்லை.

எல்லையோரக் கடல் கச்சையில் கரை நாடுகளுக்கு முழுக் கோன்மை உண்டு எனும் கொள்கையினடியாக இரு முக்கிய உரிமைகள் கரை நாடுகளுக்கு உண்டு.

**பயனுரிமை ஒதுக்கம் (Cabotage)**

1. கரை நாட்டிற்குத் தனது எல்லையோரக் கடல் பகுதியில் மீன் பிடித்தல், முத்துக் குளித்தல் போன்ற பயன்தரு துறைகளில் ஈடுபட்டுத் தொழில் புரியும் உரிமையை முற்றிலும் தன்னுட்டு மக்களுக்கே ஒதுக்கீடு செய்துகொள்ளும் உரிமை உண்டு. பயனுரிமை ஒதுக்கம் என்றழைக்கப்படும் இதன்மூலம் நாடுகள் தன் இரு கரைகளுக்கும் இடைப்பட்ட பகுதி அனைத்திலும் பயனுறும் உரிமையைத் தன் மக்களுக்கே முற்றிலும் ஒதுக்கி வந்தன.

2. வேறு நாடுகளுடன் கரை நாடு இதற்கெனத் தனி ஒப்பந்தம் செய்துகொள்ளாதவிடத்து, கரை நாடு வேற்று நாட்டைச் சார்ந்த மீனவர்களை இப் பகுதியில் மீன் பிடிப்பதிலிருந்து தடுக்கும் உரிமையும் ஆற்றலும் பெற்றது.

இவை அன்றி மேலும் இரண்டு உரிமைகளையும் கூறலாம்.

3. கரை நாடு தன் நன்மை கருதிக் கப்பல் போக்குவரத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கவும், தன் காவலுக்குட்படுத்தவும், தன் கரைக் கோட்டை மற்றும் எல்லைப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு வேற்று நாட்டுக் கப்பல்களைக் குறிப்பிட்ட

தடம் வழியாகத்தான் போகவேண்டும் என்று ஆணையிடவும் உரிமை பெற்றவை.

4. தன் எல்லையோரக் கடலில் நுழையும் வேற்று நாட்டு வணிகக் கப்பலினர் (Merchantmen) கரை நாட்டிற்கு மரியாதை தெரிவிக்க வேண்டிய விதிகளை உருவாக்கும் உரிமையும் பெற்றவை. எல்லையோரக் கடல் வான் மண்டலப் பரப்பிலும் நீரடி நிலப் பரப்பிலும் (Subsoil of the Unaritime Belt) கரை நாட்டிற்கு (Littoral State) கோன்மை உண்டு என்று 1958ஆம் ஆண்டு ஜெனீவா ஏற்பு விதியின் இரண்டாவது பிரிவு கூறுகிறது.

ஒரு நாட்டின் தீவுகளுக்கு எல்லையோரக் கடல் உண்டு. ஒரு நாட்டின் கப்பல், கடலில் நடுவே உள்ள கலங்கரை விளக்கம் இவைகள் அந் நாட்டின் மிதக்கும் தீவாகக் கருதப் படுகிறது. இக் கருத்தின் அடிப்படையில் இவைகளுக்கும் (கடல் நடு கலங்கரை விளக்கம்) எல்லையோரக் கடல் உண்டா என்கின்ற கேள்வி, பெஹ்ரிங் கடல் சீல் மீன்பிடி வழக்கில் (Behring Sea Seal Fisheries Case) தோன்றியிராது.

இங்கிலாந்து நாட்டின் வழக்கறிஞர் அத்தகைய எல்லை யோரக் கடல் உண்டு என வாதிட்டார். ஆனால் ஓப்பன் ஹெய்ம் இத்தகைய கலங்கரை விளக்கங்கள் நங்கூரம் பாய்ச்சிய கப்பல்களைவிட எவ்விதத்திலும் மாறானவை அல்லவென்றும் எனவே அவற்றிற்கு எல்லையோரக் கடல் இல்லை எனவும் கூறுகின்றார்.

# 20. கரையொட்டிய கடல்
## (Contiguous Zone)

கரை யொட்டிய கடல் என்பது எல்லையோரக் கடல் (Territorial Maritime Belt) கச்சைப் பகுதியை அடுத்து அமைந்துள்ள ஆழ்கடலின் பகுதியாகும். இப் பகுதி திறந்த ஆழ் கடலுக்கும் (Open High Seas) எல்லையோரக் கடலுக்கும் இடைப்பட்ட பகுதி. இப் பகுதியின்மீது கரையோரக் கடலுக்குக் கோன்மை இல்லையெனினும் இதன்மீது சில நெறிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் விதிக்கக் கரையோர நாட்டிற்கு உரிமை உண்டு. உதாரணமாக தனது சுங்கச் சாவடி நன்மைக்காவும், பொருளாதார நன்மைக்காகவும், உடல் நலக் காரணத்திற்காகவும் கட்டுப்பாடு விதித்தல்.

கரை யொட்டிய கடல் பற்றியும் நாடுகள் பல்வேறு வகையான அளவு அகலங்களைப் பழக்கத்தில் கொண்டு வரவே இதற்கான சட்டத் தொகுப்பை ஏற்படுத்தவும் 1958ல் ஜெனீவா மாநாட்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம் மாநாட்டின் 24வது விதி இக் கடல் பகுதியின் தன்மையையும் நாடுகளுக்கு அவற்றின் மீதுண்டான அதிகார வரம்பையும் விளக்குகிறது. இம் மாநாடு இக் கரையொட்டிய கடல் பகுதியின் அகலம் தரையிலிருந்து பனிரெண்டு மைல்களுக்கு மேல் இருக்கக் கூடாதென்றும் கூறுகிறது. இப் பகுதி ஆழ் கடலின் பகுதியே என்று முதலிலேயே கண்டோம். எனவே மற்ற நாடுகளுக்கும் இப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமை உண்டு என்று பெரும்பாலான நாடுகள் கூறுகின்றன. ஆனால் இக் கருத்து ஜெனீவா மாநாட்டில் ஏற்கப்படவில்லை. எனினும் தற்போது இவ் வகை உரிமையை நாடுகள் உடன்படிக்கைகள் மூலம் நெறிப்படுத்தி வருகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக லண்டனில் 1964இல் கையெழுத்தான ஐரோப்பிய மீன்பிடி ஒப்பந்தத்தைக் கூறலாம்.

**கண்டத் திட்டு (Continental Shelf)**

கண்டத் திட்டு என்பது ஆழ்கடலின் அடி மணல் தளம் (Sea Bed) ஆகும். எல்லையோரக் கடலின் அடிப் பகுதியை ஒட்டி, இந்த அடி மணல் தளமும் கீழ் மண் பகுதியும் (Sea Bed and Sub Soil) அமையும். இப் பகுதி கரை நாட்டு ஆள் நிலப் பரப்பின் தொடர்ச்சியாகக் கருதப்படும்.

1945ஆம் ஆண்டு வரை கண்டத் திட்டுப் பற்றி நாடுகள் எதுவும் அதிகக் கவனம் செலுத்தவில்லை. பின்னர் கடலடி நிலத்திலிருந்து கனிப் பொருள்களையும், எண்ணெய் ஆகியவற்றையும் தோண்டியெடுக்கும் தொழில் நுணுக்க முன்னேற்றம் ஏற்படவும் நாடுகள் இப் பகுதியில் தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்வதில் பெரிதும் அக்கறை காட்டின. இவ் வகையில் முதன்முதலாக 1945ஆம் ஆண்டு செப்டெம்பர் 28ஆம் நாள் ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவரின் சாற்றுதலை (Proclamation) ஒட்டி அனேக நாடுகள் தங்களுக்கும் தங்கள் கரையொட்டிய கண்டத் திட்டின்மீது உரிமை உண்டென்று உலகுக்குச் சாற்றின. ஆனால் இந் நிலப் பகுதியின் மேலுள்ள நீர்ப் பகுதி நெடுங்கடலின் பகுதியாகவே இருக்கும். மற்ற நாடுகளுக்கு நெடுங்கடலில் என்னென்ன உரிமைகளும் சலுகைகளும் உண்டோ, அவை இதனால் பாதிக்கப்படாது. ஆனால் சில லத்தீன் அமெரிக்க நாடுகள் கண்டத் திட்டுக்கு மேலுள்ள கடலிலும் சில உரிமைகளைக் கோருகின்றன. எனினும் அத்தகைய வாதம் நாட்டிடைச் சட்டத்திற்குப் புறம்பானது.

1958இல் ஜெனீவாவில் கூடிய மாநாட்டில் கண்டத் திட்டு பற்றியும் சில ஏற்பு விதிகள் தொகுக்கப்பட்டன.

அவையாவன :

பிரிவு-1. கண்டத் திட்டின் விளக்கம்

(அ) கரையோர நாட்டின் கரையை ஒட்டியதாகவும், அதே சமயத்தில் எல்லையோரக் கடலைத் தாண்டி நீளமாக ஆழ் கடலை நோக்கியும் அமைந்துள்ள அடித்தளமும் (Sea Bed) கீழ் மண்ணும் (Sub Soil) 'கண்டத் திட்டு' எனப்படும். இக் கண்டத் திட்டு, எந்த இடத்தில் கடலின் மேல் நீர் மட்டத்திலிருந்து அடித் தளம் இருநூறு மீட்டர் ஆழத்தில் அமிழ்ந்துள்ளதோ அங்கே முடிவதாகக் கருதப்படும்.

(ஆ) நாடுகளுக்குரிய தீவுகளைச் சுற்றியும் இக் கண்டத் திட்டு உண்டென்றும் இப் பிரிவு கூறுகிறது.

பிரிவு 2ன்படி,

இப் பகுதியில் கரையோர நாட்டின் ஒப்புதலின்றி வேறு எந் நாடும் இயற்கைக் கனி வளத்தைப் பயன்படுத்த முடியாது. இந்த ஏற்பு விதி கரையோர நாட்டிற்குக் கண்டத் திட்டின் மீதுண்டான உரிமை மேல் நீர்ப் பகுதியையும் அதன் மேலுண்டான வான் மண்டலத்தின் தன்மையையும் எவ்விதத்திலும் பாதிக்காது என்று தெளிவுபடுத்தியுள்ளது.

பிரிவு 3ன்படி,

கரையோர நாடு கண்டத் திட்டைப் பயன்படுத்தும் விதம் அப் பகுதியில் மற்ற நாடுகளுக்குண்டான நீர் வாழ்வுரிமை, மீன் பிடியுரிமை இவைகளைப் பாதிக்கும் வகையிலோ, குழாயமைப்புகளையோ (Submarine Pipe Lines), செய்திப் போக்குவரத்துக் கம்பி இணைப்புகளை (Submarine Cables) பாதிக்கும் வகையிலோ அமையக் கூடாது என்றும் அவ் விதிகள் கூறுகின்றன.

இம் மாநாட்டு ஏற்பு விதிகள், இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளோ குறிப்பிட்ட பகுதியில் கண்டத் திட்டு உரிமை பெற்றிருந்தால் அவற்றின் எல்லைகளை எவ்வாறு வரையறுப்பது என்பது பற்றியும் கூறுகிறது. அச் சமயங்களில் ஒன்றுக்கொன்று தங்கள் பரப்பளவையும், எல்லைகளையும் உடன்படிக்கை மூலமோ, அவ்வாறு உடன்படிக்கை இல்லாத விடத்து, ஒவ்வொரு நாட்டின் கரையிலிருந்தும் சம தூரம் இருக்கும் வகையில் (Median line, every point of which is equal distant from the nearest points of Base-Lines) வரையப்படும். மைய அடிக் கோடு இரு நாட்டுக் கண்டத் திட்டின் பரப்பளவைப் பிரிக்கும் எல்லைக் கோடால் இவற்றின் எல்லைகளைக் குறிக்குமென்றும் அந்த ஏற்பு விதி கூறுகிறது.

கடலடி நிலம் பற்றிய சட்டத்தில் அண்மைக் கால முன்னேற்றங்கள் :

1968இல் ஐ.நா. பொதுமன்றம் நாடுகளின் ஆதிக்கத்திற்குட் படாத கடலடி நிலமும் கீழ் மண்ணும் மனித இனத்தின் பொது நன்மைக்காக மட்டுமே பயன்படுத்துதல் வேண்டுமென்றொரு தீர்மானத்தை ஏற்றது. இதே கருத்தை வலியுறுத்தும் வகையிலும், செயல்படுத்தவும் 1970 டிசம்பரில் ஐ. நா. பொது மன்றம் மீண்டும் ஓர் தீர்மானத்தை ஏற்றது. இதனையொட்டி புது விதிகளைத் தோற்றுவிக்க 1973ஆம் ஆண்டில் ஒரு மாநாட்டைக் கூட்டவும் முடிவாகியுள்ளது.

# 21. நாட்டின் கோன்மைக்குரிய மற்ற பகுதிகள்

இதுகாறும் ஆள் நிலக் கோன்மையின் செயல் கூறுகள், அதன் வரையறை, தன்மை ஆகியவற்றைக் கண்டோம். இனி ஒரு நாட்டின் கோன்மை எவைகளின்மீது படிகிறது என்பதைக் காண்போம். அதுவன்றி மேலும் கண்டத் திட்டு (Continental Shelf), கரையோரக் கடல் (Contiguous Zone) ஆகியவற்றைப் பற்றியும் அறிவோம்.

**நாட்டின் எல்லை** (Boundaries)

ஒரு நாட்டின் கோன்மை அதன் ஆள் நிலப் பரப்பின்மீது படியும் என்பதைக் கண்டோம். எனவே அந் நாட்டின் ஆள் நிலப் பரப்பு எது என்பதை அறிதல் அவசியமாகிறது. இதன் காரணமாக ஆள் நிலப் பரப்பை உண்டாக்கும் உறுதியான எல்லைக் கோடுகளை ஒரு நாடு பெற்றிருக்க வேண்டியது மிகவும் தேவை.

பெரும்பாலான உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாட்டிடைச் சட்ட வல்லுநர் ஓப்பென்ஹெய்ம் (Oppenheim) அவர்களாலும் கூறப்பட்டுள்ள எல்லை பற்றிய விளக்கமாவது: ‘ஒரு நாட்டின் எல்லை என்பது அந் நாட்டை வேறு நாடுகளிடமிருந்து பிரித்துக் காட்டுவதற்காக, நிலப் பரப்பின்மீது ஒரு கோடு இருப்பதாகக் கற்பனையாகக் கருதப்படும். அந்தக் கற்பனைக் கோடுதான் அந் நாட்டின் எல்லைக் கோடு’ எனப்படுவது.

ஒரு நாட்டிற்கு இயற்கையாகவோ, செயற்கையாகவோ எல்லை அமைதல் கூடும்.

இயற்கை எல்லைகளாவன: 1. மலைத் தொடர்கள், 2. கடற் கரைகள், 3. வனங்கள், 4. ஏரிகள், 5. எல்லையோர ஆறுகள் அல்லது நதிகள்.

செயற்கை எல்லைகள்: 1. இரு நாட்டு நிலப் பரப்பைப் பிரித்துணர்வதற்காக அந் நாடுகள் ஏற்றுக்கொள்ளும் கற்பனை எல்லைக் கோடு, 2. இது கம்பங்களையோ கற்களையோ நடுவதன் மூலமோ, நீண்ட சுவர்களைக் கட்டியோ, குழிகளை வெட்டியோ, சாலை போட்டோ, செயற்கையான கால்வாய் களைத் தோற்றுவித்தோ உறுதி செய்யப்படும்.

நாடுகளிடையே எல்லைக் கோட்டைக் காரணமாக வைத்து பெரும்பாலான வழக்குகள் எழுந்திருக்கின்றன. சில சமயம் இவை போரில் சென்று முடிந்ததும் உண்டு. பத்தொன்பதாம் நூற்றுண்டு முதல் எல்லைச் சிக்கல்களை அமைதி வழியில் நாடுகள் தீர்த்துக்கொள்ளும் பழக்கத்தைக் கைக்கொள்ளத் துவங்கியதன் மூலம் அனேக எல்லை ஒப்பந்தங்களும் (Boundary) Treaties), இசைவுத் தீர்வுகளும் (Arbitral Awards) ஏற்பட்டன.

உதாரணமாக,

1. **அலாஸ்கா எல்லை இசைவுத் தீர்வு** (Alaska Boundary Arbitration—1903): *இச் சிக்கல் அமெரிக்காவிற்கும், இங்கிலாந் திற்கும் இடையே கனடா நாட்டை யொட்டியுள்ள அலாஸ்கா எல்லையை உள்ளடக்கி எழுந்தது.* கனடா நாட்டின் சார்பாக இங்கிலாந்து அமெரிக்காவுடன் கூடி இந்த எல்லைச் சிக்கலுக்கு 1903இல் இசைவுத் தீர்வு கண்டது.

2. **எல்லையோர நில வழக்கு** (Frontier Lands Case): இவ் வழக்கு பெல்ஜியம் நாட்டிற்கும், நெதர்லாந்து நாட்டிற்கு மிடையே ஏற்பட்டது. இவ் வழக்கு உலக நீதி மன்றத்தால் (International Court of Justice) நிர்ணயிக்கப்பட்டது.

வழக்கு விபரம்: இவ் வழக்கிற்குச் சம்பந்தப்பட்ட எல்லை யோர நிலம் தன்னுல் நிர்வகிக்கப்பட்டு வருவதால் அது தனக்கே உரியது என்றும் அந் நிலத்தின்மீது பெல்ஜியத் திற்கு எவ்வித உரிமையுமில்லை எனவும் நெதர்லாந்து நாடு வாதிட்டது. அந்த நிலத்தையொட்டி ஏற்கனவே சில விதிமுறைகளை நெதர்லாந்து நாடு பெல்ஜியத்துடன் ஏற்படுத்திக்கொண்டிருந்த போதும் (Boundary Convention of 1843 between Belgium and Netherlands) நெதர்லாந்து நாடு

அவ் ஏற்பு விதிகளை ஏற்பதில் சில தவறுகள் நேர்ந்ததன் காரணமாகத் தான் அந்த ஏற்பு விதிகளுக்கு நக் கட்டுப்பட்டதல்ல எனவும் வாதிட்டது.

ஆனால் உலக நீதிமன்றம் நெதர்லாந்தின் வாதத்தை ஏற்க மறுத்து, ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த எல்லையோர நிலத்தை பெல்ஜியத்திற்கு வழங்கியது.

3. **ப்ரிய விஹார் கோவில் வழக்கு** (Case Concerning the Temple of Preah Vihar) (Merits) (Cambodia-Thailand) : இவ் வழக்கு கம்போடியா—தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையே எழுந்து உலக நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டது.

இவ் வழக்கு ப்ரிய விஹார் கோவிலைச் சார்ந்த ஒரு சரணாலயத்தை யொட்டிய பகுதி சம்பந்தப்பட்டது. இப் பகுதியை யொட்டிய எல்லை ஓர நீர் நிலையினைத் தொடர்ந்து முடிவெடுக்கப் படுதல் வேண்டும் என்றும் மற்ற எல்லைகள் 1907இல் முடிக்கப் பட்ட நாட்டுப் படத்தையொட்டி முடிவு செய்தல் வேண்டும் எனவும் 1904இல் ஏற்பட்ட ஓர் ஒப்பந்தம் கூறுகிறது.

இங்கு தாய்லாந்து நாடு தன் நடைமுறையில் முற்றிலும் நாட்டுப் படத்து (Map) எல்லையமைப்புகளையே வழங்கி வந்ததனாலும், நீர்நிலையையொட்டி எல்லைப் பகுதியை நிர்ணயித்துக் கொள்வதில் எவ்வித ஆர்வமோ முயற்சிகளோ இன்றி இருந்ததனாலும் அப்பகுதி கம்போடியா நாட்டைச் சாரும் என்று உலக நீதிமன்றம் இவ் வழக்கில் தீர்ப்பளித்தது.

இவ்வாறு உலக நீதி மன்றத் தீர்ப்புகளன்றி வேறு இரண்டு முக்கியமான இசைவுத் தீர்ப்புகளும் (Arbitral Awards) வெளிவந்துள்ளன.

அவைகளாவன : 1. அந்தேஸ் (Andes) பகுதியின் எல்லை பற்றி அர்ஜென்டைனா—சிலி (Chile) நாடுகளுக்கிடையே 1966இல் ஏற்பட்ட எல்லைச் சிக்கல் இசைவுத் தீர்வு.

2. 1968இல் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்ட கட்ச் எல்லை இசைவுத் தீர்வு (Raun of Kutch Arbitration).

# 22. வசதியுரிமை

## (Sarvitudes)

ஒரு நாடு தனது கோனூற்றலை மற்ற நாட்டின் நன்மையைக் கருதி குறுக்கிக் கொள்வதற்கோ அல்லது தன் நிலப் பரப்பின் ஒரு பகுதியை மற்ருெரு நாடு அதன் கோன்மை அடியெழும் செயல்களைச் செய்வதற்கு அனுமதிப்பதன் மூலமோ தனது கோன்மையினை வரையறைக்குட்படுத்திக் கொள்வதற்கு 'வசதி யுரிமை' என்று பெயர்.

அல்ஸாஸில் (Alsace) உள்ள ஹ்யூனின்ஜென் (Hieningen) எனும் எல்லையோர நகரத்தில் ஸ்விட்சர்லாந்து மாநிலமான பேஸிலின் (Basle) நன்மையைக் கருதி என்றென்றும் எவ்விதக் கோட்டை கொத்தளங்களையும் ஏற்படுத்தவில்லை என்று அல்ஸாஸ் செய்து கொண்ட ஒப்பந்தம் இதற்கு நல்லதொரு உதாரணமாக அமையும்.

வசதியுரிமை என்பது உலகத்திற்கெதிராக ஏற்படும் உரிமை. இதனை மன்று சுட்டிய உரிமை (Rights of Rem) என்றழைக்கப்படும். இவ்வாறு ஒரு நாட்டிற்குத் தன்னாட்டில் வசதியுரிமை வழங்கும் நாடு தன்னுடைய கோனூற்றலைக் குறுக்கிக் கொண்டு ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்த நிபந் தனைப்படி ஒரு சில செயல்களைச் செய்யவோ அன்றி செய்யா மலிருக்கவோ கடமைப்பட்டது. உதாரணமாக, ஒரு நாடு தன்னாட்டு எல்லைக் கடலில் மற்ற நாட்டிற்கு மீன் பிடிக்கும் உரிமை வழங்குவது, தன் நிலப் பரப்பில் ரயில் நிலையங்களை அமைக்கும் உரிமை வழங்குவது, தன் துறைமுகத்தையோ, ஆறுகளையோ, விமான நிலையங்களையோ பயன்படுத்த அனுமதிப்பது ஆகியவற்றைக் கூறலாம்.

நாடுகள் மற்ற நாடுகளுக்குத் தன் நிலத்தில் வசதியுரிமை வழங்குவது அண்மைக்காலந்தொட்டுத்தான் உலக நாடுகளுக்

கிடையே வழக்கம் பெற்று வருகிறது. 1910இல் **வட அட்லாண்டிக் கரையோர மீன்பிடிப்பு இசைவுத் தீர்வில்** (North Atlantic Coast Fisheries Arbitration) நிலை இசைவுத் தீர்வுக் குழு (Permanent Court of Arbitration) 1818ஆம் ஆண்டுவரை அமெரிக்க வழக்கத்திலோ பிரிட்டிஷ் வழக்கத்திலோ இவ்வாறு வசதியுரிமை வழங்கும் பழக்கம் நடைமுறையில் இல்லை என்று கூறித் தீர்ப்பு வழங்கிற்று. வசதியுரிமை என்பது நாடுகளுக் கிடையே மட்டுமே வழங்கிக் கொள்ளக்கூடிய சலுகை.

**வசதியுரிமையின் வகைகள்**

1. **செயலாக்க வசதியுரிமை)** (Affirmative or Achieve or Positive Servitudes): ஒரு நாடு தன் நாட்டுத் துறை முகத்தையோ, ரயில் நிலையங்களையோ, தன் கரையோரக் கடலில் மீன் பிடிக்கவோ மற்ற நாடுகளுக்கு உரிமை வழங்குவது இவ் வகை வசதியுரிமைக்கு உதாரணம்.

2. **மறுதலை வசதியுரிமை** (Negative Servitudes) : இவ் வகை சலுகையை வழங்கும் நாடு தன் செயல் திறனைக் குறுக்கிக் கொண்டு ஒரு சில செயல்களை மற்ற நாட்டின் நலன் கருதி செய்யாமலிருக்க ஒப்புக் கொள்கிறது. இதற்கு முன்னமேயே கூறிய அல்ஸாஸ்—ஸ்விஸ் ஒப்பந்தம் உதாரணம்.

3. **இராணுவ வசதியுரிமை** (Military Servitudes): இராணுவக் காரணங்களுக்காக வழங்கும் வசதியுரிமைகள் இவ்வகைப்படும். இதற்கு உதாரணமாக, ஒரு நாட்டின் வழியாகப் படை நடத்திச் செல்லவோ, பாசறை அமைக்கவோ, கோட்டை கட்டிக் கொள்ளவோ அனுமதிப்பதைக் கூறலாம்.

**பொருளாதார வசதியுரிமை** (Economic Servitudes) : வாணிபப் போக்குவரத்து வளர்ச்சிக்காகவும் நன்மைக்காகவும் ஒரு நாடு மற்ற நாட்டிற்கு வழங்கும் உரிமைகள் இவ்வகைப்படும். உதாரணமாக :

தன் கடலில் மீன் பிடிக்கும் உரிமை, தன் கடலில் நாவாய் செலுத்தும் உரிமை ஆகியவற்றை மற்ற நாட்டிற்கு வழங்குவது.

வட அட்லாண்டிக் கரையோர மீன் பிடிப்பு வழக்கிலும் (North Atlantic Coast Fisheries Arbitration),விம்பிள்டன்—1923

(Wimbledon 1923) வழக்கிலும் நீதிமன்றங்கள் இவ் வசதியுரிமையை அங்கீகரிக்க மறுத்து விட்டன. ஆனால் 1960இல் முதன் முதலாக உலக நீதிமன்றம் வசதியுரிமைக் கொள்கைக்கு 'இந்திய நிலப் பரப்பின் மேல் கடந்து செல்லும் வழியுரிமை' (Right of Passage Over Indian Territory) வழக்கில் ஆதரவும் அங்கீகாரமும் கொடுத்தது.

**வசதியுரிமையை முடிவுக்குக் கொண்டு வரல்**

சம்பந்தப்பட்ட நாடுகளுக்கிடையே ஏற்படும் ஒப்பந்தம் வாயிலாகவோ அல்லது வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ, வசதி பெற்ற நாடு இவ் வசதியுரிமையைத் துறந்து விடுவதாலோ வசதியுரிமை முடிவுக்கு வரும்.

# 23. வான் மண்டலமும் கோனுற்றலும்

## (Air Space and Sovereignty)

இந் நூற்ருண்டின் துவக்க முதல் வளர்ச்சி பெற்றுவரும் விமானப் போக்குவரத்தும் அண்மையில் ஏற்பட்டுள்ள அதி வேகமான வானவூர்திகளும் ஒரு நாடு தன் நிலப் பரப்பின் மேலுள்ள வான்வெளியில் எவ்வகையான கோனுற்றலைப் பெற்றுள்ளது என்கிற சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

வான் மண்டலத்தில், அதன் நில நாட்டுக்குண்டான கோனுற்றலை ஒட்டி ஐந்து கொள்கைகள் உள்ளன. இவற்றில் இரண்டு கொள்கைகள், கடலில் அதன் சார்பு நாடுகளுக்கு என்ன உரிமைகள் உண்டோ அக் கருத்தை ஒட்டியதாகும்.

**முதல் கொள்கை**

ஆழ்கடல் எவ்வாறு எந் நாட்டிற்கும் சொந்தமில்லாமல் பொதுவாக எல்லா நாட்டிற்கும் பயன்படத் தக்கதோ, அது போல் வான் மண்டலமும் ஒரு நாட்டின் நிலப் பரப்பின்மீது பரந்து விரிந்திருந்தாலும் அவ் வான் மண்டலம் அந் நாட்டிற்கு சொந்தமானதல்ல, எல்லா நாடுகளும் அதைப் பயன் படுத்தலாம் என்பது ஒரு கொள்கை.

**இரண்டாவது கொள்கை**

இது எல்லையோரக் கடல் கருத்தையொட்டி எழுவது. அதாவது அவ் வான் மண்டலம் எந்த நாட்டு நிலப் பரப்பிற்கு மேலுள்ளதோ அந்த நில நாடு ஒரு குறிப்பிட்ட உயரம் வரை உள்ள வான் மண்டலத்தைத் தன் கோன்மையின் கீழ்க் கொண்டு வரலாம். அதற்கு மேற்பட்ட வான் மண்டலம், எல்லா நாடுகளுக்கும் பயன்படத்தக்க வகையில் திறந்த பொது வான் மண்டலமாகக் கருதப்பட வேண்டும் என்பது இரண்டாவது கொள்கையாகும்.

**மூன்றாவது கொள்கை**

இக் கொள்கைப்படி நிலத்தினையொட்டி விரிந்துள்ள வான் மண்டலத்தை நில வான் மண்டலம் (Air Belt) எனவும், அதற்கு மேலெழும் வான் மண்டலத்தை மேல் வான் மண்டலம் (Open Air Space) எனவும் கொண்டு, இந்த மேல் வான் மண்டலம் திறந்த பொதுப் பயன் மண்டலமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதாகும். இதுவரை இக் கொள்கை இரண்டாவது கொள்கையை யொட்டியே அமைந்துள்ளது. ஆனால் இக் கொள்கைப்படி நில நாடு தன் நன்மையைக் கருதி மேல் வான் மண்டலத்திலும் சில நெறிமுறைகளைத் தோற்றுவிக்கவும் ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தவும் உரிமையும், ஆற்றலும் பெற்றவை என்பதாகும்.

**நான்காவது கொள்கை**

இக் கொள்கைப்படி நில நாட்டிற்குத்(Subjecent State) தன் மேலுள்ள வான் மண்டலத்தின்மீது முழுக் கோன்மையும் உரிமையும் ஆதிக்கமும் உண்டு. வான் மண்டலத்தில் இதன்படி நில நாட்டின் ஆதிக்கத்திற்கு உயர எல்லையே கிடையாது. எனவே நில நாடு, தான் விருப்பப்பட்டால் எந் நாட்டு வான ஊர்தியையும் தன் வான் மண்டலத்தில் நுழைவதிலிருந்து தவிர்க்கும் ஆற்றல் பெற்றது எனவும் இக்கொள்கையிலிருந்து அறியப்படும்.

**ஐந்தாவது கொள்கை**

இக் கொள்கை நான்காவதாகக் கூறப்பட்டுள்ள கொள்கையிலிருந்து சிறிது வேறுபட்டது. இக் கொள்கையும் நில நாட்டிற்கு வான் மண்டலத்தில் வரம்பில்லாத கோனுரிமையுண்டு என்ற கருத்தினை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் இதன்படி மற்ற நாடுகளுக்கு இவ் வான் மண்டலத்தின் வழியாகப் பறப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் உரிமை உண்டென்று கூறுகிறது. வான் மண்டலக் கோன்மை பற்றிய கருத்து முதல் உலகப் போருக்குப் பின் பெரும் மாறுதல்களுக்குள்ளானது.

மேற்கூறிய ஐந்து கொள்கைகளுள் இங்கு நான்காவதாகக் கூறப்பட்டுள்ள, அதாவது வான் மண்டலத்தில் நில நாட்டிற்கு வரம்பற்ற கோன்மையுண்டு எனும் கொள்கையே உலகத்தின் பெரும்பாலான நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். 1919ஆம் ஆண்டு வான் வெளிப் போக்குவரத்தை நெறிப்படுத்துவதற்காக பாரீஸில் கூட்டப்

பட்ட மாநாட்டில் இதற்கான ஏற்பு விதிகள் (Convention for the regulation of Aerial Navigation at the Conference of Paris in 1919) உருவாக்கப்பட்டு ஏற்கப்பட்டன. இதில் அமெரிக்கா கலந்து கொள்ளவில்லை. இவ் ஏற்பு விதிகள் மிகவும் பரந்த நோக்குடையன. அதன் நான்கு முக்கிய கொள்கைகளாவது:

1. நில நாட்டிற்குத் தன் வான் மண்டலத்தின் மீது முழுக் கோன்மையுண்டு.

2. இதில் கண்ட ஏற்பு விதிகளுக்கு (Conventions), தரப்பு (Party) நாடாக இருந்து ஏற்புறுதி (Ratification) வழங்கியுள்ள நாடுகளுக்குள்ளாக, அமைதிக் காலத்தில் ஒன்றின் வான் மண்டலத்தில், மற்ற நாட்டிற்குத் தீங்கிலா வழியுரிமை (Freedom of Innocent Passage) உண்டு. ஆனால் வான்வெளிப் போக்குவரத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ள அனைத்துலக விமான நிறுவனங்கள் நில நாட்டின் சம்மதத்தைத் தனியாகப் பெற்றிருந்தாலொழிய இச் சலுகைகள் நேரடியாகச் செயல் படாது.

3. வான ஊர்திகளைத் (Air Crafts) தன் நாட்டில் பதிவு செய்யும்போது, பதிவு (Registering) செய்யும் நாடு அந்த வான ஊர்தி தன் நாட்டவனுக்கு (National) சொந்தமானதாக இருந்தாலொழியப் பதிவு செய்யக்கூடாது.

4. வான ஊர்திகளைப் பதிவு செய்யும்போது ஒரே வான ஊர்தியை இரண்டு நாடுகள் பதிவு செய்யக் கூடாது.

### ஹவானு ஏற்பு விதிகள் (Havana Convention)

மேற்கூறிய பாரீஸ் மாநாட்டிற்கு அமெரிக்காவும் ஒரு தரப்பு நாடாகக் கலந்து கொள்ளாததால் அமெரிக்கா மற்ற நாடுகளுடன் சேர்ந்து ஹவானு ஏற்பு விதிகளை உருவாக்கியது. இவ் ஏற்பு விதிகள் பாரீசில் கூடிய மாநாட்டின் ஏற்பு விதிகளையே பெரும்பாலும் பின்பற்றியவை. ஆனால் இம் மாநாடு பெரிதும் வாணிப வான் பணியைப் பற்றிய ஏற்பு விதிகளை (Convention on Commercial Air Naviyation) உருவாக்கும் பொருட்டு 1928இல் ஹவானுவில் கூட்டப்பட்டது.

### சிக்காகோ ஏற்பு விதிகள் (Chicaco Conference)

வானஊர்திகள் எண்ணிக்கையில் பெருமளவு பெருகி விட்டதனுலும், அவற்றின் தொழில் நுணுக்கங்களில் பெரும்

முன்னேற்றங்கள் ஏற்பட்டு விட்டதாலும், ஏற்கனவே இருந்த விதிகளிலும் முன்னேற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக 1944இல் சிக்காகோவில் இம் மாநாடு கூட்டப்பட்டது. இம் மாநாட்டில் 40 நாடுகள் பங்கு கொண்டன. இம் மாநாட்டில் வாணிப வான் போக்குவரத்து உரிமைகளைப் பற்றியும் அதைப் போன்ற மற்றப் போக்குவரத்து சிக்கல்களைப் பற்றியும் பேச்சு நடந்தது. இம் மாநாட்டில், அமெரிக்கா ஒவ்வொரு நாட்டிற்கும் வான் மண்டலத்தில் ஐந்து தன்னுரிமைகள் இருத்தல் (Five Freedoms of Air) அவசியம் என வலியுறுத்தியது.

அவைகளாவன :

1. நிலத்தில் இறங்காமல் மற்ற நாட்டின் வான் மண்டலத்தில் பறந்து கடக்கும் உரிமை.

2. பயணிகள் அல்லது பொருள்களின் போக்குவரத்துப் பணியில் ஈடுபடாமல் மற்றக் காரணங்களுக்காக ஒரு நாட்டில் இறங்கும் உரிமை.

3. வானவூர்தி எந் நாட்டைச் சார்ந்ததோ அந் நாட்டிலிருந்து புறப்பட்டு எந்த வெளி நாட்டில் இறங்குகிறதோ அந்த நாட்டிற்குச் செல்லும் பயணிகளையும் பொருள்களையும் இறக்குவதற்காக இறங்கும் உரிமை.

4. அதேபோல் எந் நாட்டில் இறங்குகிறதோ அந் நாட்டிலிருந்து தன் நாட்டிற்குப் பயணிகளையோ பொருள்களையோ ஏற்றிச் செல்வதற்காக இறங்கும் உரிமை.

5. இரு அந்நிய நாடுகளுக்கிடையே பயணப் பணி புரிவதற்காக இறங்கும் உரிமை.

இதனையொட்டி நாடுகளுக்கிடையே பொதுவாகக் கருத்தொற்றுமை ஏற்படாத காரணத்தால் இவ் ஐந்து உரிமைகளும் செயலுக்கு வரவில்லை. ஆனால் பெரும்பாலான நாடுகள் முதலிரண்டு உரிமைகளை யொட்டி ஒப்புக் கொண்டதன் பேரில் 'நாடுகளிடையே வான் போக்குவரத்துப் பணி மாற்ற ஒப்பந்தம்' (The International Air Services Transit Agreement) என்ற ஒப்புதலினடிப்படையில் முதலிரண்டு உரிமைகள் மட்டும் செயலுக்கு வந்தன. ஐந்து உரிமைகளையும் உள்ளடக்கிய மற்றுமொரு ஒப்பந்தத்தை இருபது நாடுகளுக்கும் குறைவான சில நாடுகள் மட்டுமே ஏற்றன. இவ் வொப்பந்தம் நாடுக

ளிடையேயான 'வான் போக்குவரத்து ஒப்பந்தம்' (The International Air Transport Agreement) என்றழைக்கப்படும். இம் மாநாடு நாடுகளிடையே உண்டான 'குடிமை வான் போக்குவரத்தை' (International Civil Aviation) ஒட்டித் தோற்றுவித்துள்ள சில 'ஏற்பு விதிகள்' (Conventions) உலக அரங்கில் வான் மண்டலப் போக்குவரத்துக் கொள்கைகளை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

**சிக்காகோ மாநாட்டின் விளை பலன்கள்**

சிக்காகோ மாநாடும் 1919ஆம் ஆண்டைய பாரீஸ் மாநாட்டின் முறையையொட்டியே நடந்ததனுல் வான் மண்டலச் சட்டத்தில் என்னென்ன தேவையான புது மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு சிக்காகோ மாநாடு கூட்டப்பட்டதோ அம் மாற்றங்களைச் செயலில் கொண்டுவர இயலாமல் போனது. சிக்காகோ மாநாடும், வான் மண்டலத்தின்மீது நில நாட்டிற்கு வரம்பில்லாத முழுக் கோன்மை உண்டு எனும் பழங் கருத்தையே மீண்டும் வலியுறுத்தியது. உள் நாட்டு வான் மண்டலப் போக்குவரத்துப் பற்றியும் வானவூர்திகளைப் பதிவு செய்வது பற்றியும் தீங்கற்ற வான் மண்டல வழியுரிமை பற்றியும் பாரீஸ் மாநாட்டு ஏற்பு விதிகளைப் போலவே அதே தன்மை பெற்ற ஏற்பு விதிகளைத்தான் இம் மாநாடும் கண்டது.

நாடுகளிடையே உண்டான பயணிகள் விமானப் போக்குவரத்து (Scheduled International Air Services) இடைப்படும் நில நாடுகளின் சம்மதத்தின் பேரிலோ அல்லது ஒப்பந்த நிபந்தனைகளின் பேரிலோ ஒழுங்குபடுத்தப் படுகிறது எனக் கண்டோம். ஆனுல் ஒரு நாட்டிற்குள் நடத்தக்கூடிய விமானப் போக்குவரத்தை அந் நாடுகள் விரும்பினுல் முற்றிலும் நில நாட்டிற்கே உரியதென்று ஒதுக்கி வைக்கலாம். 'வான் பயனுரிமை ஒதுக்கம்' (Air Cabotage) என அழைக்கப்படும். இவ்வாறு வான் மண்டலத்தில் உள் நாட்டு விமானப் போக்குவரத்துப் பயன்களை முற்றிலும் நில நாடே பெறும் வகையில் வழி செய்வதற்குண்டான கொள்கையையும் சிக்காகோ மாநாடு வகுத்துக் கொடுத்தது. வான் மண்டலம் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல் வான் ஒலி பரப்பும் (Radio Broadcasting) சில சிக்கல்களைத் தோற்றுவிக்க வல்லது. இதையொட்டி சில விதிகள் நாட்டிடைச் சட்டத்தில் வழங்கி வருகின்றன.

1. ஒவ்வொரு நாடும் தன் வான் மண்டலத்தில் தனக்கோ அன்றி மற்ற நாடுகளுக்கோ பாதிப்பு ஏற்படுத்தும் செய்தி களைத் தாங்கிய ஒலிக் கதிர்களைத் தன் வான் மண்டலத்தை ஊடுருவிக் கடப்பதைத் தடுக்கும் உரிமை பெற்றது.

2. மேலும் ஒரு நாடு தன் வான் மண்டலத்தை மற்ற நாட்டுக்குத் தீங்கேற்படுத்தும் வகையில் ஒலிபரப்பு செய்வ தற்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்கக் கடமைப்பட்டது.

**வான் மேல் மண்டலமும், விண்வெளியும்** (Upper Strata of the atmosphere and Outer Space)

வானவூர்தி இயந்திரங்களது தரத்திலும் வேகத்திலும் ஏற் பட்டுள்ள பெரும் முன்னேற்றமும், விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 'ஏவுகணைகள்' (Rockets) செயற்கைக் கோள்கள் ஆகியவற்ருலும் வான் மண்டல விண்வெளி அயல் கோள்கள் ஆகியவற்றை ஒட்டிய சட்டங்களை உருவாக்கவும், ஏற்கெனவே உள்ளவற்றில் முன்னேற்றம் காணவும் தேவை ஏற்பட் டுள்ளது.

1957இல் ரஷ்யா தனது முதல் செயற்கைக் கோளை விண் வெளியில் அனுப்பியது முதற்கொண்டு இன்று அமெரிக்காவும், ரஷ்யாவும் போட்டி போட்டுக்கொண்டு விண் வெளி ஆய்வுக் காகவும், மற்றக் கோள்களின் (Other Planets) நிலைகளைக் கண்டறியவும் போட்டி போட்டுக் கொண்டு ஏவுகணைகளையும் செயற்கைக் கோள்களையும் அனுப்பி வருகின்றன. 1959இல் ரஷ்யாவின் முதல் செயற்கைக் கோள் வெற்றியுடன் நிலவைத் தொட்டது முதல் மனிதன் ரோவர் உந்துடன் சென்று நிலவில் இறங்கி அங்கே உந்தை ஓட்டிச் சென்று மண் தோண்டி எடுத்துத் தங்கியும் தூங்கியும் இருந்துவிட்டு, புறப்பட்ட இடத் திற்கே சற்றேறத்தாழ வந்தடையும் வரை இன்று அவ் வகை யில் விண்வெளியில் செயற்கைக் கோள்களின் மூலம் ஆய்வு நிலையங்களையும் நாடுகள் தோற்றுவிக்கத் துவங்கியுள்ளன.

இவ் வகையில் நாடுகளின் நடைமுறையில் அவைகள் விண் வெளியை (Outer Space) எல்லா நாடுகளின் நன்மைக் காகவும் பொதுவாகப் பயன்படுத்தலாம் என்ற கருத்தைக் கொண்டிருப்பதாக எண்ண இடமுள்ளது. இதனை யொட்டி ஐ. நா. பொதுமன்றம் தனது 1721 வது தீர்மானத்தில்,

'விண் வெளியை மனித இனத்தின் பொது நலத்திற்காக வும் அனைத்துலக அரங்கில் நாடுகளிடையே ஒத்துழைப்பை

வளர்க்கவும் பயன்படுத்துதல் வேண்டும்' எனவும், 'இது எல்லா நாடுகளுக்கும் அவை பொருளாதார அறிவியல் துறை களில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இல்லையென்றாலும் பொதுவான நன்மைக்குப் பயன்பட வேண்டும்' என்றும் வலி யுறுத்தியுள்ளது.

இந்த 1721 வது தீர்மானம் விண்வெளிக் கொள்கையை வெளிப்படுத்துகிறது. இந்தத் தீர்மானத்தின்படி நாட்டிடைச் சட்டத்திலும் ஐ. நா. சாசனம் விண்வெளிக்கும் பொருந்துவ தாகும். விண்வெளியும், கோள்களும் நாடுகளின் பொது நன்மைக்கும், ஆய்வுக்கும் உரியவை. அவைகள் எந்தத் தனியொரு நாட்டாலும் உரிமை கொண்டாடத் தக்கவை அல்ல என்ற கருத்தையும் வெளியிடுகிறது.

# 24. நாட்டிடைச் சட்டத்தில் நாடும் மக்களும்

ஒரு மனிதனின் உரிமைகளும் அவனது கட்டுப்பாடுகளும் (Obligations) அவனது நாட்டுரிமையை வைத்தே முடிவு செய்யப்படும். நாட்டுரிமையினடிப்படையில்தான் அவனுக்கும் அவன் நாட்டிற்கும் உண்டான தொடர்புகள் நெறிப்படுத்தப் படுகிறது. மக்கள் ஒரு அரசியல் சமுதாயமாக இணைந்து தங்கள் எண்ணம், செயல், கொள்கை இவற்றை வெளிப் படுத்தி அம் மக்கள் தொகுப்பை ஒரு நாடு என்று கருதத்தக்க வகையில் வளர்ந்துவிட்ட பின்னர், அந்த அரசியல் சமுதா யத்தில் அவனுக்கிருக்கும் உறுப்பினர் தன்மைதான் நாட்டுரிமை என்று கூறப்படுகிறது.

நாட்டுரிமை என்றால் என்னவென்று பிரிட்டிஷ்–மெக்ஸிகோ கோருரிமைக் குழு ரீ லிஞ்ச் (Re-Lynch) எனும் வழக்கில் விளக்க மளித்துள்ளது. அதன்படி :

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வெளித்தோற்றமாக நிகழக் கூடிய செயலல்லாமல், ஒரு மனிதனின் நாட்டுரிமை என்பது தொடர்ச்சியான செயல் நிகழ்வுகளைக் கொண்டது. அதாவது கோன்மை கொண்ட ஒரு நாட்டிற்கும் அதன் குடிமகனுக்கு மிடையே தொடர்ச்சியாகவுள்ள சட்டபூர்வமான உறவினைக் குறிப்பதாகும். ஒரு தனித்தியங்கும் அரசியல் சமுதாயத்தில் அவன் பெற்றிருக்கும் உறுப்பினர் நிலையே நாட்டுரிமையின் அடிப்படை. இந்த சட்டபூர்வமான உறவினால், நாட்டைப் போலவே குடிமகனுக்கும் உரிமைகளும் கடமைகளும் உண்டு. உலக நீதி மன்றமும் (Nottebhom 1955) நாட்டபாம் வழக்கில் இக் கருத்தையே கொண்டுள்ளது. நாட்டுரிமை வழங்கலும், மறுத் தலும் ஒரு நாட்டின் கோனாற்றலைச் சார்ந்தது. அந் நாட்டின் உள்சட்டமே இவ் வுரிமையை நெறிப்படுத்தும்.

1948ஆம் ஆண்டிற்கு முன்னர் பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட நாடுகளனைத்திற்கும் ஏற்ற வகையில் பிரிட்டிஷ் நாட்டுரிமை (British Nationality) என்று இருந்தது. ஆனால் 1948க்குப் பிறகு விடுதலை பெற்ற நாடுகள் தங்கள் விருப்பத்திற்கும் தேவைக்குமேற்ற தத்தம் நாட்டுரிமைச் சட்டத்தில் செய்த மாற்றங்களினால் பிரிட்டிஷ் நாட்டுரிமையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. தற்போது பிரிட்டிஷ் நாட்டுரிமையைப் பொதுநல நாடுகள் தொடர்ந்து மதித்த போதிலும் அதன் தன்மையில் பெரிதும் குறைக்கப்பட்டு சில உரிமைகளை மட்டுமே தற்போது உள்ளடக்கியுள்ளது.

நாட்டுரிமையை நிர்ணயிப்பதில் வேறுபட்ட நாடுகள் மாறுபட்ட முறைகளைக் கையாள்கின்றன. சில நாடுகள் தாய் மண்ணின் அடியொற்றியும் சில நாடுகள் இறுதி இணைப்பின் அடியொற்றியும், இன்னும் சில நாடுகள் இரண்டின் அடிப்படையிலும் நாட்டுரிமை வழங்குகின்றன.

**மண்ணடி விதி (Jus Soli) அல்லது நிலப் பிணைப்பு விதி**

இவ் விதியின்படி ஒரு நாட்டு எல்லைக்குள் பிறந்த எல்லாக் குழந்தைகளும் அது எந் நாட்டுக் குடிமக்களின் குழந்தைகளாக இருப்பினும் அந் நாட்டுக் குடிமக்களாகக் கருதப்படும்.

**குருதியுறவு விதி (Jus Sanguinis) அல்லது இரத்த பாச விதி**

இவ் விதியின்படி ஒரு குழந்தை எந் நாட்டில் பிறந்தாலும் அக் குழந்தையின் தாய் தந்தையர் எந் நாட்டவர்களோ அவர்களது நாட்டுக் குடிமகனாக அல்லது குடிமகளாக அக் குழந்தை கருதப்படும்.

சிலபோது இரண்டின் அடிப்படையிலும் நாட்டுரிமை வழங்குவது உண்டு. உதாரணமாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் நாட்டுரிமைச் சட்டத்தில் நாடுகளிடையே ஒருமைப்பாடு இல்லாததனால் ஒருவரே பல நாட்டுரிமை பெறுவது, சிலர் நாடற்ற தன்மை பெறுவது, மணமான மகளிர் நாட்டுரிமை யிழப்பது போன்ற சிக்கல்கள் தோன்றலாயின. இச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும்பொருட்டு 1930இல் ஹேக் தொகுப்பு மாநாட்டில் நாட்டுரிமைச் சட்டத்தில் முரண்பாடுகளைத் தவிர்க்கும் ஏற்பு விதிகளையும், அதனுடன் கூடிய ராணுவ கடப்பாடுகள் (Military Obligations), இரு நாட்டுரிமை (Double Nationality) ஆகிய இரண்டு தலைப்புகள் பற்றியும் இரண்டு தற்காலிக ஏற்பு விதிகளையும் (Protocols)

நாடற்ற தன்மை (Statelessness) பற்றி ஒரு சிறப்புத் தற்காலிக ஏற்பு விதிகளையும் (Special Protocol) மாநாட்டு நாடுகள் ஏற்றன. இவ் வகை ஏற்பு விதிகளில் (Conventions) குறிப்பிடத் தக்கது, மணமான மகளிரைப் பற்றி 1957லும், நாடற்ற நிலையைக் குறித்திடும் வகையில் 1961லும் வெளியிடப்பட்ட ஏற்பு விதிகளைக் கூறலாம். நாட்டுரிமை மற்ற சில உறவுகளி லிருந்து மாறுபட்டது. அதாவது :

1. இனம்.

2. இணைப்பாட்சி நாட்டு உறுப்பு நாடுகளின் குடியுரிமை. உள் நாட்டுக் குடியுரிமையைவிட உலக அரங்கிலுண்டான நாட்டுரிமை மாறுபட்டதும் விரிவானதுமாகும்.

3. சிலபோது தன் நாட்டுரிமை பெறாத மக்களுக்கும் சில நாடுகள் சில உரிமைகளை வழங்குவதோடு, காக்கவும் செய்கின்றன. இத்தகு உறவு முறைகளால் நாட்டுரிமை பெற்றுவிட்டதாகக் கருதவியலாது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்க நாடும் ஃபிரெஞ்ச் அரசும் இவ்விதக் காப்புதல்களை வழங்குகின்றன.

4. சிலபோது ஒரு நாட்டின் குடிமக்களுக்கு அந் நாடு சில உரிமைகளைக் குறைக்கவோ மறுக்கவோ கூடும். இவ்வாறு குடியுரிமைக்கு ஏற்படும் இழுக்கோ, மாற்றமோ அக் குடிமக னுக்கு அந் நாட்டுரிமையை மறுத்ததாகக் கருத இயலாது. இது கீழ்க்கண்ட வழக்குத் தீர்ப்பிலிருந்து அறியப்படும்.

**கஹானே-வ-பாரிசி ஆஸ்ட்ரிய நாடு (Kahane-*v*-Parisi and the Austrian State)**

இவ் வழக்கில் ருமேனிய நாட்டிலிருந்து யூதர்களின் உரிமை பெரிதும் குறைக்கப்பட்டு அவர்களின் வாழ்வு பல கடுமையான கட்டுப்பாடுகளினால் பாதிக்கப்பட்டிருந்தபோதும் அவர்கள் ருமேனிய நாட்டின் நாட்டுரிமை பெற்றவர்களே என ஏற்கப்பட்டது.

**நாட்டுரிமையின் அனைத்துலக முக்கியத்துவம்**

நாட்டிடைச் சட்டத்துடன் நாட்டுரிமை பல்வேறு காரணங் களில் ஈடுபாடு கொண்டுள்ள கீழ்க்கண்ட காரணங்களுக்காக ஒருவனின் நாட்டுரிமையை அறிய வேண்டியது மிக அவசியம்.

1. ஒரு நாட்டின் காப்புக்கு உரியவனா இல்லையா என்பது அவனது நாட்டுரிமையை வைத்து முடிவு செய்ய வேண்டி யுள்ளது.

2. ஒருவன் மற்ற நாட்டவனுக்கு இழைக்கும் தீங்கைத் தவிர்க்கவோ, தண்டிக்கவோ அவனது நாடு கடமைப் பட்டிருப்பதால் அவன் எந் நாட்டைச் சார்ந்தவன் என அறிய வேண்டுவது அவசியம்.

3. பொதுவாக தன் நாட்டுரிமை பெற்றவனை அந் நாடு மீண்டும் அவன் தன்னெல்லைக்குள் வருவதைத் தவிர்ப்ப தில்லை.

4. நாட்டுரிமை அவனை அந் நாட்டுக்குக் கடமைப்பட்டவ னாக்குகிறது. அதன்மூலம் அவன் அந் நாட்டைக் காப்பாற்றப் படையில் பணியாற்றக் கடமைப்பட்டவன்.

5. ஒரு நாடு, தன்னாட்டுரிமை பெற்றவன், அந்நிய மண்ணில் புரிந்த குற்றத்திற்காக அவனை மீட்டொப்படைக்க (Extradite) மறுக்கும் உரிமை பெற்றது.

6. போர்க் காலங்களில் ஒரு குறிப்பிட்ட மனிதன் குறிப் பிட்ட நாட்டிற்கு நண்பனா, பகைவனா என்பதை அவன் நாட்டுப் பிணைப்பை (Nationality) வைத்தே நிர்ணயிக்கப்படும்.

7. நாடுகள் குடிமை ஆதிக்கத்தையோ, குற்ற ஆதிக் கத்தையோ (Civil or Criminal Jurisdiction) நாட்டுப் பிணைப்பின் அடிப்படையிலேயே செயல்படுத்துகின்றன.

ஒருவனுடைய நாட்டுரிமையை முடிவு செய்வதில் சிக்கல்கள் எழக்கூடும். எனவே ஒருவனுடைய நாட்டுரிமை அவன் எந் நாட்டவன் என்று கூறுகிறானோ அல்லது சொல்லப்படு கிறதோ அந் நாட்டின் உள்நாட்டுச் சட்டத்தில் அவன் அந் நாட்டுடன் உறவு கொண்டவனா என்பதை வைத்தே அவன் அந் நாட்டுரிமை பெற்றவனா இல்லையா என முடிவெடுத்தல் வேண்டும்.

இக் கருத்து ஸ்டோக்-எ-பப்ளிக் ட்ரஸ்டி (Stock-*v*-Public Trustee) வழக்கிலும் இதனை யொட்டிய 1930ஆம் ஆண்டு ஹேக் மாநாட்டு ஏற்பு விதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். அத்துடன் முறைப்படி வழங்கப்பட்ட அயல் நாட்டுக்குள்

நுழையும் அனுமதிச் சீட்டு எந் நாட்டால் வழங்கப்பட்டதோ அந் நாட்டவன் என்பதற்குச் சான்றாகக் கருதப்படும்.

**நாட்டுரிமை ஈட்டல்**

ஒருவன் தன் நாட்டுரிமையைக் கீழ்க்காணும் வகைகளில் ஈட்டுதல் இயலும்.

1. பிறப்பு: மண்ணடி விதியினடிப்படையிலோ (Jus Soli), குருதியுறவு வாயிலாகவோ அவன் பிறக்கும்போது நாட்டுரிமை பெறுகிறான்.

2. தன் குடியாக்கல் (Naturalisation): ஒரு நாட்டுக் குடிமகனல்லாதவன் சில வழிகளால் அந் நாட்டால் தன் குடியாக ஏற்கப்படுவது, அவ் வழிகளில் சில: இரு வேறு நாட்டுரிமை பெற்ற ஆணும் பெண்ணும் மணம் புரிந்தால், மனைவி கணவனின் நாட்டுரிமையைப் பெறுவாள். ஒருவனின் வேண்டுகோளின் பேரில் அவனைத் தன்னாட்டுரிமை பெற்றவனாக ஏற்றல். ஒழுக்கக் கேடாகவோ, சட்டப்படி மணம் புரியாதவர்களுக்கோ பிறக்கும் குழந்தையை, அக் குழந்தைக்குக் காரணமானவர் அதனைத் தன் குழந்தையென வலிந்து ஏற்பதன் மூலம் அக் குழந்தை அதன் தந்தையினுடைய நாட்டுரிமையைப் பெறும்.

3. வயமை (Subjugation) அல்லது அடிமையாக்கல் முறை: ஒரு நிலப் பரப்பை ஒரு நாட்டிடமிருந்து பிரிவினை மூலமோ, போர் வெற்றியின் காரணமாகவோ, வேறு நாடு பெறுமானால் அந் நிலத்தில் வாழும் மக்கள் அதனை இணைத்துக்கொள்ளும் நாட்டுரிமையைப் பெறுவர். இதனை அம் மக்களைத் தன் வயப் படுத்தலால் வயமை முறை எனவோ அல்லது அடிமைப் படுத்துவதால் அடிமை முறை எனவோ அழைக்கப்படும்.

**நாட்டுரிமை இழத்தல்**

ஒருவன் தன் நாட்டுரிமையைக் கீழ்க்காணும் வகைகளில் இழத்தல் கூடும்.

1. விடுத்தல் (Release) அல்லது துறத்தலால் (Renunciation) ஒருவன் தன் நாட்டுரிமையை இழத்தல் கூடும்.

2. பறித்தல் (Deprivation)

ஒரு நாடு இதுகாறும் தனது நாட்டுரிமை பெற்றிருந்தோரின் நாட்டுரிமையைப் பறித்துக் கொள்வது.

3. அயல் நாட்டில் நீண்ட காலம் தொடர்ந்து வாழ்ந்து வருவது—இக் காரணங்களால் ஒருவன் தன் நாட்டுரிமையை இழந்துவிடுவதுண்டு.

**இரு நாட்டுரிமை, நாடற்ற தன்மை, மணமுற்ற மகளிரின் நாட்டுரிமை**

பெண்கள் தங்கள் நாட்டைச் சாராத ஆடவரை மணம் முடிப்பதன் மூலமோ, அல்லது தங்கள் நாடல்லாத வேறு நாட்டில் குழந்தை பெறுவதாலோ இரு நாட்டுரிமைச் சிக்கல் எழுவதுண்டு.

இவ்வாறு இரு நாட்டுரிமை எழும்போது அதனை எவ்வாறு தீர்ப்பதென்று 1930 ஆகஸ்டில், ஹேக்கில் கூடிய மாநாட்டில் உருவாக்கப்பட்ட ஏற்பு விதிகள் தெளிவுபடுத்துகின்றன. அதன்படி இரு நாட்டுரிமை கொண்டுள்ள குழந்தைகள் தாங்கள் பெரியவர்களானதும் தமக்கு எந் நாட்டுரிமை தேவை என்பதை முடிவு செய்து கொள்ளலாம். இரு நாட்டுரிமை கொண்ட எவரேனும் அந்த இரு நாடுகளல்லாத வேறு ஒரு நாட்டில் இருக்கும்போது அந் நாட்டால், அவர் ஏதேனுமொரு நாட்டுடன் மட்டுமே பிணைப்பு கொண்டவராகக் கருதப்படும். அந்த மூன்றுவது நாடு அவர் எந் நாட்டோடு பெரிதும் பிணைப்புக் கொண்டுள்ளவரென்பதைக் கீழ்க்கண்ட காரணங்களினடிப்படையில் முடிவெடுக்கும்.

1. எந் நாட்டில் அவர் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றாரோ (Continuous Resident) அந் நாட்டு உரிமை பெற்றவர் என்பது முதல் கருத்து.

2. எந் நாட்டுடன் சட்டத்தின் கண்களில் அவர் பெரிதும் நெருக்கம் கொண்டவராகக் கருதப்படுகிறாரோ அந் நாட்டவரென்பது இரண்டாம் கருத்து.

மேற்கூறிய ஹேக் ஏற்பு விதிகளின் எட்டு முதல் பதினொன்று வரையாகிய பிரிவுகள், மணமான மகளிர் தம் கணவரின் நாட்டுரிமையைப் பெறுவர் எனக் கூறுகிறது. இவ் விதி 1957ஆம் ஆண்டில் மணமுற்ற மகளிர் நாட்டுரிமை ஏற்பு விதிகள் மூலம் மேலும் சிறிது வளர்ச்சி பெற்றது.

அதன்படி வெவ்வேறு நாட்டைச் சார்ந்த ஆணும் பெண்ணும் மணம் செய்து கொண்டு, பின்னர் மண முறிவு செய்து கொண்டால், அத் திருமண உறவால் பெற்ற புது

நாட்டுறவை மண முறிவின் காரணமாக மனைவி இழக்கக் கூடாதெனவும், மண வாழ்வின்போது (During the Married Life) கணவன் தன்னிச்சையாக வேற்று நாட்டுடன் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டால் அச் செயல் மனைவியின் முன் நாட்டுறவைப் பாதிக்காதெனவும் முன்னேற்றமான மாற்றம் காணப்பட்டது.

**நாடின்மை (Statelessness)**

மக்கள் எந் நாட்டவர்களுமல்லர் எனச் சொல்லத்தக்க வகையில் சில நேரங்களில் அவர்கள் நாடற்ற தன்மையுடன் விளங்குவதுண்டு. இந்த நாடற்ற தன்மை, இரு நாடு களிடையே தத்தம் நாட்டுரிமைச் சட்டத்தில் கொண்டுள்ள முரண்பாடுகள் காரணமாகவோ அல்லது சில நாடுகள் தன்னாட்டு மக்களிலொரு பகுதியினரைத் தன்னாட்டவர்க ளல்லரென திடீரென்று அறிவித்து விடுவதாலோ ஏற்படுவ துண்டு. இதனையொட்டி மனித உரிமைபற்றிய அனைத்துலக விழைவு அறிவிப்பின் (Universal Declaration of Human Rights, 1948) பதினைந்தாம் பிரிவு 'எந் நாடும் தான்தோன்றித்தன மாக, தன் நாட்டு மக்களில் குறிப்பிட்ட பகுதியினருக்கு நாட்டுரிமையை மறுத்தலாகாது' என்று அறிவிக்கின்றது.

**நாடற்ற தன்மையைக் குறைக்கவும், போக்கவும் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள்**

1. 1930இல் ஹேக் தொகுப்பு மாநாட்டில் (Hague Codification Conference) சில உடன்படிக்கைகள் வாயிலாக ஓரளவிற்கு இந் நிலையில் முன்னேற்றம் கண்டது.

2. அகதிகள் நிலை பற்றி ஜெனீவா நகரில் 1951இல் ஏற்கப்பட்ட ஏற்பு விதிகள், அகதிகள் நாடு விட்டு நாடு சென்று வரவும், எந் நாட்டில் வாழ்கின்றார்களோ அங்கே ஏதேனும் வாணிபத்திலோ, தொழில்களிலோ ஈடுபடும் உரிமையையும் நல்கியது. 1954இல் நியூயார்க் நகரில் கூடிய நாடற்றவர்கள் நிலை பற்றிய மாநாட்டிலும் அதேபோல் சில நன்மைகளை வழங்கும் ஏற்பு விதிகள் ஏற்கப்பட்டன.

3. பெருந்தன்மை மிக்க நாடுகள், நாடற்றவர்களுக்குத் தங்கள் நாட்டுரிமையை வழங்குவதன் மூலம் நாடற்றோர் தொகையைக் குறைப்பது.

4. நாடுகள் தன்னிச்சையாக மக்களைத் தன் நாட் டுரிமையை இழக்கச் செய்வதைத் தடுப்பது.

# 25. அயலார்

## விவகாரங்களில் நாடுகளின் உரிமைகளும் கடமைகளும்

அயலாரை நாடுகள் எவ்விதத் தடையுமின்றித் தங்கள் நாட்டில் அனுமதிக்கக் கடமைப்பட்டவை எனவும், நாடுகள் அயலார் எவரையும் தன் நிலத்தில் அனுமதிக்கக் கடமைப்பட்டவை அல்ல எனவும், இதற்கிடையில் நாடுகள் சில நிபந்தனைகளுக்கும் வரையறைக்கும் உட்பட்டு அந்நியர்களைத் தமது எல்லைக்குள் அனுமதிக்கக் கடமைப்பட்டவை எனவும் அயலாரை ஒரு நாட்டினுள் அனுமதிப்பதைப் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவி வருகின்றன. கொள்கை அடிப்படையில், கோனுற்றலின் அடிப்படையில் பெரும்பாலான நாடுகள், தங்கள் விருப்பம்போல் அந்நியரைத் தம் மண்ணில் அனுமதிக்கவோ, அனுமதி மறுக்கவோ தமக்கு உரிமை உண்டெனக் கூறுகின்றன. இத்தகு வாதத்தை இங்கிலாந்து, அமெரிக்க நாட்டு நீதிமன்றங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. கொள்கை அடிப்படையில் நாடுகள் இவ்வாறு வாதிட்டு வந்த போதிலும், நடைமுறையில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு நாடுகள் அந்நியரைத் தம் மண்ணில் அனுமதித்துக் கொண்டு தான் உள்ளன.

### அந்நியர்கள் அனுமதிக்கப்பட்டால், அனுமதிக்கப்பட்ட நாட்டில் அவர்களின் நிலை

ஒரு நாட்டிற்குள் அனுமதிக்கப்பட்ட அந்நியர்கள் தூதுவர் போன்ற சலுகை பெற்ற பிரிவினராக இருந்தாலொழிய மற்றவர்கள் எல்லோரும் புகும் நாட்டின் சட்டத்திற்கும் அந் நாட்டின் ஆதிக்கத்திற்கும் தங்களை ஆட்படுத்திக் கொண்டவர்களாவார்கள். இருப்பினும் அவர்கள் தங்கள் நாட்டு அரசின் நேரடி மேலாண்மைக்கும் உட்பட்டவர்கள்.

சில வேளைகளில் ஒரு நாட்டிற்குள் அந்நியர்களாக நுழைபவர்களுக்கு, அந் நாட்டு மக்கள் துய்க்கும் உரிமைகளைவிடச் சிறிது குறைவான உரிமைகளை மட்டுமே வழங்குவதுண்டு. அதாவது வாக்குரிமை, சில தொழிலில் ஈடுபடுதல் போன்ற உரிமைகளை அவர்கள் பெற முடியாது. உதாரணமாக இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில் 14ஆம் பிரிவிலும் வேறு பிரிவிலும் உள்ள உரிமைகள் இந்தியக் குடிமக்கள், அந்நியர் அனைவருக்கும் உரியவை. ஆனால் 19ஆம் பிரிவில் உண்டான வாழ்வடிப்படை உரிமைகள் இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே உரியவை.

ஐக்கிய நாடுகளமைப்பின் பொருளாதாரக் குழு வேற்று மண்ணில் அந்நியராயுள்ளவர்களை நடத்தும் முறைகளை வகைப்படுத்தியுள்ளது.

**1. பொருளாதார நடத்துகை (Fiscal Treatment)**

அந்நியக் குடியாய் உள்ள ஒவ்வொருவனும் தூதுவச் சலுகைகள் பெற்றிருந்தாலொழிய, உள்நாட்டு வரி, சுங்க வரி ஆகியவை தரக் கடமைப்பட்டவன்.

**2. தொழில், வாணிபம் இவற்றில் ஈடுபடும் உரிமை**

சில வரையறை நிபந்தனைகளுக்குட்பட்டுத் தொழில்களிலும் வாணிபத்திலும் ஈடுபடலாம். குறிப்பிட்ட பதவிகள், தொழில் போன்றவற்றை மேற்கொள்ளுவதிலிருந்து முற்றிலும் தடைப்படுத்தப்படலாம். உதாரணமாக, நீதிபதி, வழக்கறிஞர் தொழில்.

**3. குடியிருப்புக் குடியுரிமைகள்**

அந்நியரின் சொத்துக்களைப் பொறுத்தவரை ஓரவஞ்சனையான வகையில் அவர்தம் பொருட்களைக் கவர்வது, இழப்பீடு தராமல் பொருள்களைத் தன் விருப்பம்போல் கைக்கொள்வது இவை தவிர்க்கப்படுதல் வெண்டும்.

ஆனால் வேற்றுமையற்ற முறையில் அந் நாட்டின் நாட்டுரிமைக் கொள்கையை நிறைவேற்ற நியாயமான இழப்பீட்டுத் தொகை தந்து சொத்துக்களை ஏற்பதை யாரும் தவிர்க்கவோ, தலையிட்டுக் குற்றங் காணவோ இயலாது.

**அந்நியர்களை வெளியேற்றும் உரிமை**

அந்நியர்கள் தற்காலிகமாக ஒரு நாட்டில் இருப்பினும், அல்லது அந் நாட்டையே தங்களின் நிலையான வாழ்வில்ல

மாக (Domicile) ஏற்படுத்திக் கொண்டு வாணிபத்திலோ, தொழிலிலோ ஈடுபட்டிருந்தாலும் அவர்களை வெளியேற்றும் உரிமை அந் நாட்டிற்குண்டு. இவ்வாறு அந்நியரை வெளியேற்றும் உரிமை அந் நாட்டோடு இணையப் பெற்றது. என்றாலும் அந்நியரை வெளியேற்றுவதை நாட்டிடைச் சட்டம் சில நெறிகளின் அடியாக ஒழுங்குபடுத்துகிறது. அந்நியர்களை வெளியேற்றுவது நியாயமான வழியிலும், எவ்வித இழப்போ, துன்பமோ ஏற்படாத வகையிலும் அமைதல் வேண்டும். அவ்வாறு வெளியேறுமாறு கோரப்பட்ட அந்நியன் ஏதேனும் பாதிப்பான வகையிலோ, அல்லது அதிகாரிகளை ஏமாற்றும் நோக்குடனோ, அல்லது வெளியேற மறுத்தாலோ அன்றி அவன் வெளியேறு முன் கைது செய்வதைத் தவிர்த்தல் வேண்டும். அத்தகைய அந்நியர்களைத் தேவையற்ற முறையில் கண்ணியக் குறைவாக நடத்தக்கூடாது. அவனது அடிப்படை உரிமைகளை இழக்கக்கூடிய வகையில் வேறு நாடுகளுக்கு நாடு கடத்தவும் கூடாது.

# 26. அடைக்கலம்

## (Asylum)

ஒரு நாடு தன் கோனாற்றலின் கீழ்த் தன்னாட்டவனல்லாத யாரையும் தன் மண்ணில் ஏற்கவோ, தன்னாட்டில் நுழையும் அனுமதி மறுக்கவோ அதிகாரமும் உரிமையும் பெற்றது. ஒரு நாட்டில் குற்றம் புரிந்துவிட்டு மற்ற நாட்டு ஆள் நிலப் பரப்பிற்குள் எவனாவது தப்பிப் புகுந்துவிடுவானாயின் குற்றம் இழைக்கப்பட்ட நாட்டுக்கும் அடைக்கல நாட்டிற்கும் மீட்டொப் படைப்பதை யொட்டி உடன்படிக்கை இருந்தாலொழிய, அடைக்கல நாடு அக் குற்றவாளிக்கு அடைக்கலமும் பாதுகாப் பும் கொடுப்பதை மற்ற நாடு தவறாக எடுக்கமுடியாது. நாட்டி டைச் சட்டத்தில் எந்த நாடும் அயலான் எவனுக்கும் அடைக் கலம் மறுக்கக் கடமைப்பட்டதல்ல. எனவே அடைக்கலம் தரு வதோ மறுப்பதோ மீட்டொப்படைக்கும் உடன்படிக்கையை யொட்டியது. எங்கே மீட்டொப்படைக்கும் கடமை துவங்கு கிறதோ அங்கே அடைக்கலம் நல்கும் உரிமை முடியும்.

அடைக்கலம் இரு வகைப்படும் :

(1) ஆள் நில அடைக்கலம் (Territorial Asylum)

(2) ஆள் நிலத்திற்கப்பால் அடைக்கலம் (Extra-Territorial Asylum)

### (1) ஆள் நில அடைக்கலம்

ஒரு நாட்டின் ஆள் நிலத்திற்குள் அளிக்கப்படும் அடைக்கலம், ஆள் நில அடைக்கலம். இது அந் நாட்டின் கோன்மையையொட்டி யெழும் ஆற்றலும் உரிமையுமாகும்.

இத்தாலிய நாட்டு 1947ஆம் ஆண்டு அரசியல் சட்டம், அச் சட்டத்தில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மக்களாட்சி

விடுதலையுரிமைகளை நல்ல முறையில் செயல்படுத்த முடியாத அயல் நாட்டவன் எவனும் தன்னுட்டைத் துறந்து இத்தாலி நாட்டில் வாழும் உரிமை உண்டெனக் கூறுகிறது.

ஜெர்மானியக் குடியரசுக் கூட்டாட்சியும் (Federal Republic of Germany) தனது அடிப்படைச் சட்டத்தின் 16 (2) ஆம் பிரிவில் தன்னுட்டில் அரசியல் சித்திரவதைக்காட்பட்ட எவனும் ஜெர்மனி நாட்டில் அடைக்கலம் புகுந்து வாழலாம் எனக் கூறுகிறது.

அமெரிக்காவும் அதன் உறுப்பு நாடுகளும் தன்னுட்டில் அரசியல் கொடுமையினுல் பாதிக்கப்பட்டவர்கள் அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்து வாழலாம் எனச் சட்டம் இயற்றியுள்ளன.

1948இல் ஐ.நா. அமைப்பின் பொது அவையில் மனித உரிமையைப் பற்றிய அனைத்துலக விளைவு அறிக்கை (Universal Declaration of Human Rights) பற்றி விவாதிக்கும் போது ஒருவனுக்கு அந்நிய மண்ணில் நுழையும் உரிமையை நல்க நாடுகள் மறுத்த போதும் அதன் 14வது பிரிவில் தன்னுட்டில் அரசியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட எவனும் வேற்று நாட்டில் அடைக்கலம் புகுந்து வாழும் உரிமை பெற்றவன் என்று மட்டும் கூறியுள்ளது. எனவே நாட்டிடைச் சட்டத்தில் மனிதனுக்கு அடைக்கல உரிமை பற்றி நேரடியாக உறுதியளிக்கப்படவில்லை.

**(2) ஆள் நிலத்திற்கப்பால் அடைக்கலம்**

தவிர்க்க முடியாத சில வேளைகளில் இவ்வகை அடைக்கலம் வழங்கப்படுவதுண்டு. ஒரு நாடு தனது ஆள் நிலப் பரப்பல்லாமல் தனது வாணிபக் கப்பலிலோ, போர்க் கப்பலிலோ, தூதுவ அலுவலகங்களிலோ, நாடுகளிடைப்பட்ட தலைமை அலுவலகத்திலோ அடைக்கலம் தந்தால், அதனை இத்தகைய அடைக்கலமாகக் கருதப்படும். இதன் சில வகைகளை விரிவாகக் காண்போம்.

(i) **தூதுவத் தலைமையகம், வாணிபத் தூதக அடைக்கலம்:** நாட்டிடைச் சட்டத்தின்கீழ் தூதுவ ஆலயங்களின் தனி மேலாண்மைத் தன்மையும், புனிதமும் பாதிக்கப்படும் வகையில் ஏற்கும் நாடு நடக்கக்கூடாது என்பது போலவே தூதுவ ஆலயங்களில் ஏற்கும் நாட்டில் குற்றம் புரிந்துவிட்டுச் சட்டத்திற்குத் தப்பி

யொளிபவர்களுக்கு இடமளிக்கக் கூடாது. ஆனால் வட்டார நாட்டிடைச் சட்ட வழக்கத்தில் (Regional International Law in Practice among Latin American Countries) இவ்வகை உரிமை நடைமுறை வழக்கத்தில் இருந்து வருகிறது.

**அடைக்கல வழக்கு** (Asylum Case) 1950 (Columbia-*v*-Peru)

பெரு (Peru) நாட்டு, லிமா (Lima) நகரிலுள்ள கொலம்பியா நாட்டின் தூதுவராலயத்தில் பெருவிய அரசைக் கவிழ்க்க நடந்த சதியின் தலைவர் விக்டர் ரால்ஹயா டிலாடோர் என்பாருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்திற்கு எதிராக இவ் வழக்கு உலக நீதிமன்றத்தின் முன் தொடரப்பட்டது.

இவ் வழக்கில் உலக நீதி மன்றம் (International Court of Justice) இவ் வகையான அடைக்கலம் நாட்டிடைச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதல்லவென்று தீர்ப்பு வழங்கிற்று.

(ii) **போர்க் கப்பலில் அடைக்கலம்** : இங்கும் தவிர்க்க முடியாத காரணங்களுக்காகவோ அன்றி மனிதாபிமான அடிப்படையிலோ பேராபத்திலிருந்து காப்பதற்காக அடைக்கலம் தரலாம்.

(iii) **வாணிபக் கப்பலில் அடைக்கலம்** : வாணிபக் கப்பலில் அடைக்கலம் வழங்கும் உரிமை எதுவுமில்லை.

# 27. மீட்டொப்படைத்தல்

## (Extradition)

எவரேனும் ஒரு நாட்டில் குற்றம் இழைத்துவிட்டு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு அதற்குண்டான தண்டனை வழங்கப்பட்ட பின்னரோ, அதற்கு முன்னமேயோ வேற்று நாட்டு ஆள் நிலப் பரப்பிற்குள் தப்பிச் சென்று விடுவதுண்டு. எந் நாட்டிற்குள் குற்றவாளி தப்பிப் புகுந்து கொண்டானோ அந் நாட்டை 'அடைக்கலம் வழங்கும் நாடு' என்று கூறலாம். குற்றமிழைக்கப்பட்ட நாடு அடைக்கல நாட்டை, அக் குற்றவாளியின் மீது வழக்குத் தொடர்வதற்காகவோ, வழங்கப் பட்ட தண்டனையை நிறைவேற்றுவதற்காகவோ திருப்பித் தருமாறு வேண்டிக் கொள்ளலாம். இவ் வேண்டுகோளை ஏற்று அடைக்கல நாடு குற்றவாளியைக் குற்றமிழைக்கப்பட்ட நாட்டிடம் வழங்குவதைத்தான் 'மீட்டொப்படைத்தல்' (Extradition) என்று வழங்கப்படுகிறது.

குற்றமிழைத்தவன் யாராயிருந்தாலும் மனித சமுதாயத்தின் நன்மையைக் கருதி தண்டிக்கப்படுதல் வேண்டும். எனவே நாட்டிடைச் சட்ட நிபுணர்களில் ஒருவரான க்ரோஸியஸ் (Grotius) என்பார் அடைக்கல நாடு ஒன்று தன்னிடம் புகுந்துள்ள வேற்று நாட்டுக் குற்றவாளியைத் தண்டிக்கவோ, அல்லது குற்றமிழைக்கப்பட்ட நாட்டிடம் தண்டனை தருவதற்காக ஒப்புவிக்கவோ கடமைப்பட்டதென்று கூறியுள்ளார்.

ஆனால் நாடுகள் உலக நடைமுறையில் தங்களை உட்படுத்திக் கொள்ளவில்லை. மாறாகத் தங்களின் ஆள் நில மேலாண்மையின் அடிப்படையில் அத்தகைய குற்றவாளிக்குத் தாங்கள் விரும்பினால் அடைக்கலம் தரத்தமக்கு உரிமை உண்டு

என்று கூறி வந்தன. ஆனால் பொது நன்மையைக் கருதி, காலப்போக்கில் தங்களுக்குள் குற்றவாளிகளைத் திரும்பவும் ஒப்படைப்பதற்கு உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டன. இவ்வாறு உடன்படிக்கை செய்து கொள்ளாத நாடுகளுக்கிடையே இவ்வாறு திருப்பி ஒப்படைக்கும் கடமையோ, திரும்பப் பெறும் உரிமையோ இல்லையெனக் கூறித் திருப்பி ஒப்படைப்பதில் தங்கள் விருப்பம் போல் நடந்து வந்தன. ஃபிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் தன்னாட்டு மக்கள் அயல் மண்ணில் ஏதேனும் குற்றம் செய்துவிட்டு மீண்டும் தன்னாட்டிற்குத் தப்பி வந்து விட்டால் குற்றமிழைக்கப்பட்ட நாட்டிடம் ஒப்படைக்க மறுத்துத் தாமே தண்டனை வழங்கும் நடைமுறையைக் கொண்டிருந்தன. ஆனால் பிரிட்டன் போன்ற நாடுகள் அவை செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகளுக்கேற்பவோ அல்லது உடன்படிக்கையில்லாதவிடத்துத் தம் நாட்டு மக்கள் என்றும் வேற்று நாட்டு மக்களென்றும் வேற்றுமை பாராட்டாமல் பொது நடைமுறைப் படி நடக்கின்றன.

உதாரணமாக:

**டூர்வில் வழக்கு (Tourville Case)**

1879இல் டூர்வில் என்ற பிரிட்டிஷ் குடிமகன், ஆஸ்ட்ரிய நாட்டில் டைரால் என்னுமிடத்தில் தனது மனைவியைக் கொன்றுவிட்டு மீண்டும் தன் நாட்டிற்குத் தப்பிச் சென்று விட்டான். ஆஸ்ட்ரிய நாடு அவனைத் திருப்பித் தருமாறு வேண்டிக்கொண்டதற்கிணங்க பிரிட்டன் அவனைத் திருப்பி ஒப்படைத்தது.

மீட்டொப்படைப்பதையொட்டிய முதல் உள்நாட்டுச் சட்டத்தை பெல்ஜியம் நாடு 1833இல் தோற்றுவித்தது. 1870இல் பிரிட்டனும் அதையொட்டிப் பல்வேறு நாடுகளும் தத்தம் உள்நாட்டுச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டன. தற்போது ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டுச் சட்டத்தையொட்டியே குற்றவாளிகளைத் திருப்பித் தருவதா வேண்டாமா என்னும் முடிவு செய்கின்றன. இந்தியாவும் 1962இல் ஒரு மீட்டொப்படைப்புச் சட்டத்தை இயற்றியுள்ளது. (Indian Extradition Act of 1962).

**மீட்டொப்படைப்புக் குற்றங்கள் (Extradition Crimes)**

பொதுவாக நாடுகள் மீட்டொப்படைப்பதற்கு ஏற்றதென மிகச் சில குற்றங்களை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளன.

அதிலும் குறிப்பாக ஃபிரான்ஸ் போன்ற நாடுகள் குறிப்பிட்ட குறைந்தபட்ச தண்டனைக்குரிய குற்றங்களுக்கு மட்டுமே குற்றவாளியைத் திருப்பித் தரும் வழக்கமுடையவை. மேலும் எவ்வெக் குற்றங்களுக்குத் திருப்பித் தருவது என்பது உடன்படிக்கை செய்து கொள்ளும்போது நாடுகள் அவ்வுடன்படிக்கையிலேயே கூறி விடுவது வழக்கம். பிரிட்டனைப் பொறுத்தவரையில் திருப்பித் தருவதற்குரிய குற்றங்களனைத்தும் அந் நாட்டின் 1870ஆம் ஆண்டு மீட்டொப்படைப்புச் சட்டத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பொதுவாக அரசியல் குற்றங்கள், ராணுவக் குற்றங்கள், மதத்திற்கெதிரான குற்றங்கள் ஆகியவை மீட்டொப்படைப்பதற்கு ஏற்றதல்ல என்று கருதப்படுபவை.

**மீட்டொப்படைத்தலின் நிபந்தனைகள்**

திருப்பித் தர வேண்டும் நாடு தேவையான வேண்டுதல் முறைமைகளை (Formalities) மேற்கொண்ட பின்னர், வேண்டும் நாட்டிற்கும் திருப்பித் தரும் நாட்டிற்கும் இடையேயுள்ள உடன்படிக்கைக்கேற்பவோ, உடன்படிக்கை இல்லையென்றால் திருப்பித் தரும் நாட்டின் உள் நாட்டுச் சட்டத்திற்கேற்பவோ குற்றவாளியை ஒப்படைப்பதா, வேண்டாமா என்று முடிவு செய்யப்பட்டு, ஒப்படைப்பதானால் திருப்பித் தரும் நாட்டின் காவலர்கள், வேண்டும் நாட்டுக் காவலர்களிடம் குற்றவாளியை ஒப்படைத்தவுடன் மீட்டொப்படைத்தல் முடிவுற்றதாகக் கருதப்படும்.

திருப்பித் தரும் நாடு சில சமயங்களில் குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் திருப்பித் தருவது உண்டு. அப்பொழுது திரும்பப் பெற்ற நாடு எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் குற்றவாளியைப் பெற்றதோ, அந்த நிபந்தனைகளை மீறிக் குற்றவாளியைத் தண்டிக்க முயற்சித்தால் குற்றவாளியை ஒப்படைத்த நாடு மீண்டும் திருப்பிப் பெற உரிமை பெற்றதாகும்.

அடைக்கல நாடு சிலபோது முறை தவறி, குற்றவாளியை ஒப்படைத்த பின்னர், மீண்டும் திருப்பிக் கேட்கும் உரிமை பெற்றதா என்கின்ற கேள்வி சாவர்க்கார் வழக்கில் எழுந்தது.

**சாவர்க்கார் வழக்கு** (France-*v*-Great Britain 1911)

சாவர்க்கார் ஒரு இந்திய நாட்டு பிரிட்டிஷ் குடிமகன். அரச எதிர்ப்புக் குற்றத்திற்காக (Treason) விசாரணை

நடத்தும் பொருட்டு இந்திய நாட்டிற்கு நாவாய் ஒன்றில் அவரைக் கொண்டு செல்கின்ற வழியில் மொரியா என்னும் அந் நாவாய் மார்செயில்ஸ் (France) துறைமுகத்தில் தங்கி யிருந்தபோது சாவர்க்கார் அந் நாவாயிலிருந்து தப்பி ஃபிரான்ஸ் நாட்டிற்குள் ஓடிவிடவே மொரியா நாவாயிலிருந்த காவலர் கூக்குரல் எழுப்பியதன் பேரில் ஃபிரான்ஸ் நாட்டுக் காவலர்கள் சாவர்க்காரைப் பிடித்து மீண்டும் மொரியாவிடம் ஒப்படைத்தனர். தகவல் அறிந்த ஃபிரெஞ்சு நாட்டு மேலதி காரிகள் சாவர்க்காரைத் திருப்பி ஒப்படைப்பதில் முறைகேடுகள் நடந்துவிட்டதாகவும், பிரிட்டன் சாவர்க்காரைத் திரும்பவும் ஃபிரான்ஸ் நாட்டிடம் ஒப்படைத்துவிட்டு, மீட்டொப்படைக்கு மாறு வேண்டிக் கொள்ளவேண்டும் என்றும் ஃபிரான்சு நாடு பிரிட்டனைக் கேட்டது. அதற்கு பிரிட்டன் மறுத்துவிட்டது.

இவ் வழக்கு நிலை இசைவுத் தீர்ப்பு முறை நீதிமன்றம் (Permanent Court of Arbitration) முன்னர் வந்தபோது ஃபிரான்சு நாட்டிடம் தனது கைதியை ஒப்படைத்துவிட்டு, ஃபிரான்சு கேட்டதைப்போல் பிரிட்டன் மறுபடியும் வேண்டித் தான் திரும்பப் பெற வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை என்று கூறிவிட்டது.

**அரசியல் குற்றங்கள் (Political Crimes)**

ஃபிரஞ்சுப் புரட்சித் துவக்கம் வரையில் அரசியல் குற்றங்கள் (Political Crimes) என்றதொரு குற்ற வகை வழக்கில் இல்லை. மீட்டொப்படைக்கும் வழக்கம் ஏற்பட்ட அதே காலத்தில் ஐரோப்பிய நாட்டின் பல்வேறு நாடுகளில் கொடுங்கோன்மை ஆட்சிக்கும், முடி ஆட்சிக்கும் எதிராக மக்கள் புரட்சி செய்யத் தொடங்கினர். அவ் வரசுகள் புரட்சி யாளரைக் கடுந்தண்டனைக்குள்ளாக்கின. இதற்குப் பயந்து மக்கள் அண்டை நாடுகளுக்குத் தப்பியோடினர். துவக்க காலத்தில் இத்தகைய அரசியல் குற்றவாளிகளையும் அடைக்கல நாடுகள் குற்றம் இழைக்கப்பட்ட நாட்டிடம் திருப்பிக் கொடுத்து வந்தன. ஆனால் இவ் வழக்கத்தை அடைக்கல நாட்டு மக்கள் எதிர்த்ததால் அடைக்கல நாடுகள் அரசியல் குற்றவாளிகளை மீட்டொப்படைப்பதிலிருந்து தவிர்த்தன.

ஃபிரான்ஸ் போன்ற நாடுகள் தங்கள் அரசியல் சட்டத் திலேயே, (Art. 120 - French Constitution of 1793) அயல் நாட்டில் விடுதலைப் புரட்சி செய்து அதன் காரணமான தண்டனைக்குப்

பயந்து ஃபிரான்ஸ் நாட்டில் அடைக்கலம் புகும் அரசியல் கைதிகள் காக்கப்பட வேண்டும் என்று வகை செய்திருந்தன.

அரசியல் குற்றம் புரிந்துவிட்டுத் தன் நாட்டில் அடைக்கலம் புகுந்த குற்றவாளிகளைத் திருப்பித் தருதல் கூடாது என்கின்ற கருத்தினை நாடுகள் பொதுவாக ஏற்றுக் கொண்டாலும் எது அரசியல் குற்றம் என்பதை முடிவு செய்வது பெரும் சிக்கலாய் இருந்தது. இதற்குப் பல விதமான முறைகளைக் கொண்டு, உதாரணமாக,

1. அக் குற்றம் புரிவதற்கான அடிப்படை நோக்கம்;

2. குற்றம் எந்தச் சூழ்நிலையில் நிகழ்ந்தது;

3. குற்றத்தின் இயல்பு;

4. குற்றவாளியைத் திருப்பித் தர வேண்டிக் கொள்ளும் நாட்டின் அரசியல் அமைப்பிற்கெதிரான குற்றமா? என்பதை யெல்லாம் ஆராய்ந்து அக் குற்றம் அரசியல் குற்றமா, இல்லையா என்பது முடிவு செய்யப்படும்.

**அரசியல் குற்றங்களுக்கான வழக்குகள்**

**கேஸ்டியோனி இன் ரீ** (In Re Castioni 1890)

வழக்கு விபரம் :

கேஸ்டியோனி என்பவர் ஸ்விட்சர்லாந்து நாட்டவர். ஸ்விட்சர்லாந்தைச் சார்ந்த ஒரு மாநிலத்தைச் சார்ந்த மக்கள் ஸ்விட்சர்லாந்தின் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று விடுத்த வேண்டுகோள், அரசால் புறக்கணிக்கப்படவே வன்முறையில் ஈடுபட்டனர். கேஸ்டியோனியும் அக் கால உறுப்பினர். தனது துப்பாக்கியால் சுட்டபோது அவ்வூர் நகராட்சி ஆணையாளர் கொலையுண்டார். இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் கேஸ்டியோனி இங்கிலாந்து நாட்டுக்கு ஓடிவிட்டார்.

ஸ்விட்சர்லாந்து கேஸ்டியோனியைத் திருப்பித் தன்னிடம் ஒப்படைக்குமாறு இங்கிலாந்தை வேண்டிக் கொண்டது. அதன் பேரில் இங்கிலாந்து அரசு அவரைக் கைது செய்தது. கேஸ்டியோனி அரசியின் நீதிமன்றப் பிரிவில் (Before Queen's Bench) ஆள் கொணர்விக்கும் நீதிப் பேராணைக்காக (Writ of Habess Corpus) செய்து கொண்ட மனுவின் பேரில் விசாரணை நடந்தபோது அந் நீதிமன்றம், இது அரசியல் குற்றமா

யிருப்பதால் ஒப்படைக்க இயலாதெனவும், ஒரு அரசைக் கைப் பற்ற இரு குழுவினரின் போட்டியாலோ அல்லது அரசியல் நோக்கங்களுக்காகவோ ஈடுபட்டு செயலாற்றும்போது நடந்து விடும் குற்றங்களுக்காக அக் குற்றவாளிகளை ஒப்படைப்பது இயலாது என்றும் கூறியது.

### இன் ரீ மியூனியே (In Re Meunier-1894)

மியூனியே ஒரு சட்டத்தில் நம்பிக்கையற்ற தான்தோன்றி வாதி. இவன் ஃபிரெஞ்சு நாட்டில் ஒரு சிற்றுண்டி விடுதியிலும் படை வீடொன்றிலும் வெடி குண்டு வீசிவிட்டு, இங்கிலாந் திற்குத் தப்பிச் சென்று விட்டான். ஃபிரான்ஸ் அரசாங்கம் மியூனியேவைத் திருப்பித் தருமாறு இங்கிலாந்தை வேண்டிக் கொண்டதன் பேரில், இங்கிலாந்து நடவடிக்கைகளில் ஈடு படவே மியூனியே தான் ஒரு அரசியல் குற்றவாளியானதால் ஒப்படைக்க இயலாதெனக் கூறினர்.

மியூனியே சட்டத்தில் நம்பிக்கையற்ற தான்தோன்றி வாதி (Anarchist). ஆகையினால் அவனுக்கு எவ்வித அரசியல் நோக்கோ, எவ்வித அரசியல் அமைப்பிலும் நம்பிக்கையோ இருக்க வாய்ப்பில்லையென்பதாலும், மியூனியேவின் குற்றத்தை அரசியல் குற்றமாகக் கருதவியலாது என்று கூறி மியூனியேவின் வாதத்தைத் தள்ளுபடி செய்து இங்கிலாந்து ஃபிரான்ஸ் நாட்டிடம் அவனை ஒப்படைத்தது.

### அரசி - எ - பிரிக்ஸ்டன் சிறையின் கண்காணிப்பாளர்

(மறு தரப்பிலா கோலிமின்ஸ்கி 1963) (R-*v*-Governor of Brixton Prison Ex Parte Kolczynski 1963)

கேஸ்டியோனி, மியூனியே ஆகிய இரண்டு வழக்கிலும் கூறப் பட்ட கருத்துகள் இதில் மேலும் விரிவும், வலிவும் பெற்றன. இவ் வழக்கில் அரசியல் குற்றங்களென்பதற்கு மிகவும் பரவ லான பொருள் கொள்ளப்பட்டது. அதாவது சட்டப்படி நிறுவப்பட்ட அரசாங்கத்தை மாற்றியமைக்கும் நோக்கத்திற் காக அல்லாமல் அரசியல் நோக்கங் கருதியோ, அரசியல் கொடுமையைத் தவிர்க்கவோ செய்யும் குற்றங்களும் அரசியல் குற்றங்களாகக் கருதப்படும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

### இந்திய அரசும் முபாரக் அலி அகமதும் (1952) பற்றிய வழக்கு (In Re Government of India and Mubarack Ali Ahmed 1952)

இவ் வழக்கில் பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்த முபாரக் அலி பொய் ஆவணம் புனைந்த (Forgery) குற்றத்திற்காகவும் மோசடி (Fraud) குற்றத்திற்காகவும் இந்தியாவில் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்தபோது, இங்கிலாந்திற்குத் தப்பிச் சென்றுவிட்டார்.

இந்திய அரசு இங்கிலாந்து நீதிமன்றத்தின் முன்னர் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட போது முபாரக் அலி தான் பாகிஸ்தானிய ஒற்றன் என்று இந்திய அரசு கைது செய்து பொய்யாக மோசடி வழக்குத் தொடர்ந்திருப்பதாகவும் எனவே தான் அரசியல் குற்றவாளி எனவும் கூறிய வாதம் ஏற்றுக்கொள்ளப்படாமல் அவனை சாதாரண குற்றவாளியாகக் கருதி இந்திய நாட்டிடம் ஒப்படைத்தது.

### இருதலைக் குற்ற விதி (Double Criminality)

குற்றத்தின் குணத்தை முடிவு செய்வதில் பெரும்பாலான நாடுகள் இருதலைக் குற்ற விதியைக் கையாளுகின்றன. இவ் விதியின்படி குற்றவாளி, என்ன குற்றம் செய்ததாகச் சொல்லப்படுகிறதோ அந்த செயல், அவன் அடைக்கலம் புகுந்துள்ள நாடு, குற்றமிழைக்கப்பட்ட நாடு இரண்டிலும் அதே குற்றமாகக் கருதப்பட்டால்தான் அவனை ஒப்படைத்தல் வேண்டும் என்பதாகும்.

இவ் விதியை அமெரிக்க நாட்டுத் தலைமை நீதிமன்றம் **ஃபேக்டர்-வ-லாபெல் ஹெய்மர்** (Factor-*v*-Laubel Heimer) வழக்கில் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

வழக்கு விபரம் : ஜேக்கப் ஃபேக்டர் என்பார் இங்கிலாந்தில் மோசடியான வகையில் சேர்க்கப்பட்ட பணம் என அறிந்தும் அதைப் பெற்றுக் கொண்டு அமெரிக்காவிலுள்ள இல்லிநாய்ஸ் மாநிலத்திற்குச் சென்று விட்டார்.

அக் குற்றத்திற்காகத் திருப்பி ஒப்படைக்குமாறு இங்கிலாந்து, அமெரிக்காவை வேண்டிக் கொண்டது. ஆனால் ஃபேக்டர் அச் செயல் இல்லிநாய்ஸ் மாநிலச் சட்டப்படி குற்றமில்லை என்பதனால் தன்னை ஒப்படைக்க இயலாது என்று முன் வைத்த வாதத்தை அமெரிக்கத் தலைமை நீதி மன்றம் ஏற்றுக்

கொள்ளவில்லே. ஆனால் அச் செயல் பொதுவாக அமெரிக்கச் சட்டப்படி குற்றமாயிருப்பதனால் அது போதும் என்று கூறி ஒப்படைத்தது.

சில வேளைகளில் அரசியல் குற்றங்களைக் கொலே, கொள்ளை, தீயிடல் போன்ற சாதாரண சமுதாய கொடுங் குற்றங்களோடு இணைத்துப் புரிந்துவிடுவதுண்டு. அத்தகைய இரு வகைக் குணங்களையும் கொண்ட குற்றத்தை அரசியல் குற்றமாகக் கொள்வதா அன்றி சமுதாயத்திற்கெதிரான குற்றமாகக் கருதிக் குற்றவாளியை ஒப்படைப்பதா? என்ற சிக்கல் தோன்றுவதுண்டு. இச் சிக்கலுக்குத் தீர்வு காண மூன்று ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. அட்டென்டட் பிரிவு (Attentat Clause) **ஜேக்வின் (Jaquin-1854) வழக்கு**

இவ் வழக்கில் பெல்ஜியத்தில் வாழ்ந்திருந்த ஃபிரெஞ்சு நாட்டினைச் சார்ந்த ஜூலஸ் ஜேக்வின், செலஸ்டின் ஜேக்வின் என்ற இருவரும், மூன்றும் நெப்போலியனைக் கொல்லும் நோக்குடன் அவர் லில்லி, கலாய்ஸ் ஆகிய இரு நகரங்களுக்கிடையே புகை வண்டியில் சென்று கொண்டிருக்கும்போது, இருப்புப் பாதையை வெடி வைத்துத் தகர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இக் குற்றத்திற்காக ஃபிரான்ஸ் நாடு பெல்ஜியத்திடம் அக் குற்றவாளிகளிருவரையும் தன்னிடம் ஒப்படைக்குமாறு வேண்டிக் கொண்டது. அன்று நடைமுறையிலிருந்த பெல்ஜிய நாட்டு மீட்டொப்படைப்புச் சட்டம், அரசியல் குற்றவாளிகளை ஒப்படைக்க இடமளிக்காததால், ஃபிரான்ஸ் நாட்டின் வேண்டுகோளை நிராகரிக்க வேண்டியிருந்தது. எனவே எதிர் காலத்தில் இந் நிலே ஏற்படாதிருக்கத் தன் நாட்டுச் சட்டத்தில் அயல் நாட்டு ஆட்சித் தலைவரையோ அவரது குடும்பத்தினரையோ கொலேபுரிவது அரசியல் குற்றமாகக் கருதக் கூடாது எனும் வகையில் திருத்தப்பட்டது. இவ் வகையில் அச் சட்டத்தைத் திருத்திய பிரிவே 'அட்டென்டட் பிரிவு' என அழைக்கப்பட்டது. இம் முறையைப் பல ஐரோப்பிய நாடுகள் பின்பற்றிய போதும் பிரிட்டன் ஏற்கவில்லே.

இதே அடிப்படையில் கொலே வயப்பட்ட அரசியல் குற்றங்களை அரசியல் குற்றங்களாகக் கருதக் கூடாது என வலியுறுத்தும் வகையில் ரஷ்யா 1881இல் (மாமன்னர் இரண்டாம் அலெக்ஸாண்டர் அரசியல் காரணத்திற்காகக் கொலே யுண்டதால்) ஒரு அனைத்து நாடுகள் மாநாட்டைக் கூட்டு

வதற்கு மேற்கொண்ட முயற்சிகள், பிரிட்டனும், ஃபிரான்சும் ஒத்துழைக்காததால் வெற்றி பெறவில்லை.

1892இல் சற்றுப் புதுமையான வகையில் ஸ்விட்சர்லாந்து ஒரு முயற்சியை மேற்கொண்டது. தனது மீட்டொப்படைப்புச் சட்டத்தின் 10வது பிரிவில் அரசியல் குற்றவாளிகளை ஒப் படைக்கக்கூடாதென கூறிய போதும், அவ்வரசியல் குற்றங்கள் பெரிதும் சமுதாயக் குற்றங்களைத் தன் உள்ளடக்கியிருக்கு மானால் அக் குற்றவாளிகளை ஒப்படைத்துவிட வேண்டுமென வும், ஒரு குற்றம் அரசியல் குற்றமா, சமுதாயத்திற்கெதிரான குற்றமா என்ற சிக்கல் வருமானால் அதை சுவிட்சர்லாந்து நாட்டின் தலைமை நீதிமன்றமே (Bundesgericht) முடிவு செய்யும் உரிமை பெற்றது எனவும் அச் சட்டப் பிரிவு உரைக்கிறது.

1934ஆம் ஆண்டு யூகோஸ்லாவியா நாட்டு மன்னர் அலெக்ஸான்டர் ஃபிரான்ஸ் நாட்டில் கொலை செய்யப்பட்டார். இதனையொட்டி ஃபிரான்ஸ் நாட்டின் வேண்டுகோளுக் கிணங்க உலக நாடுகள் மன்ற செயற்குழு, அனைத்துலக மாநாடொன்றினைக் கூட்டியது. இம் மாநாட்டில் வன்முறை கலந்த பயங்கர (அரசியல்) குற்றங்களைத் தவிர்க்கவும், தண்டிக்கவுமுண்டான ஏற்பு விதிகளை இருபத்தி இரண்டு நாடுகள் ஜெனீவாவில் கையெழுத்திட்டு ஏற்றன. இதன் மூலம் அந் நாடுகள் வன்முறை கலந்த பயங்கர (அரசியல்) குற்றங்களையும் அவற்றைச் செய்வதற்கான தூண்டுதல், அவற்றில் பங்கு கொள்ளுதல் ஆகியவற்றையும் சமுதாயத்திற் கெதிரான குற்றங்களாகவே கருதி குற்றமிழைக்கப்பட்ட நாட்டிடம் ஒப்புவிக்க ஒப்புதல் தெரிவித்துள்ளது.

# 28. மனித உரிமைகளும் அடிப்படை விடுதலைப்பாடுகளும்

## (Human Rights and Fundamental Freedoms)

உலகில் வாழும் மனிதனுக்குச் சில அடிப்படை வாழ்வுரிமைகள் மிகவும் இன்றியமையாதது. அவ் வுரிமைகளை இயற்கையிடமிருந்து மனிதன் பெறும் நேரடி உரிமையெனவும் (Natural Rights), அவ் வுரிமைகளைப் பறிக்கவோ, குறைக்கவோ கூடாதெனவும் மக்களின் பொதுவான (Public opinion) கருத்து வளர்ந்து வலிவு பெற்றுள்ளது. எவையெவை அத்தகைய உரிமைகள் என்பதில் வேண்டுமானால் வேறுபாடும், சிக்கல்களும் தோன்றலாம். ஏனென்றால் பல்வேறு நாடுகள் மாறுபட்ட உரிமைகளை அவ்வாறு குறிக்கின்றன. எனினும் சில உரிமைகள் எல்லா நாடுகளிலும் பொதுவாக அடிப்படை உரிமைகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவை. அவ் வுரிமைகளை மனித இனத்திடமிருந்து பறிக்கவே இயலாது.

மனிதனின் அடிப்படை உரிமைகளை யொட்டிப் பல்வேறு நாடுகள் தங்கள் உள் நாட்டு அரசியல் சட்டத்தில் உறுதியளித்துள்ளன. உதாரணமாக 1776ஆம் ஆண்டின் உரிமைகள் பற்றிய வெர்ஜீனியா விழைவு அறிவிப்பு (Virginian Declaration of Rights—1776) அமெரிக்க அரசியல் சட்டத்தின் முதல் பத்து (உரிமைகள் பற்றிய) திருத்தங்கள், இங்கிலாந்து நாட்டின் உரிமைகளின் மூலத் தொகுப்பு, (Bill of Rights) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் நாட்டிடைச் சட்டத்தில் இவ் வுரிமைகள் மிக நிதானமாகவே அங்கீகாரம் பெற்றன.

ஐ. நா. அமைப்பு சாசனம் பொதுவாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் கவனம் கொள்ளும் வகையில் அமைந்திருந்த போதிலும், மனித உரிமைகள் இன்னும் கொள்கை

அளவிலும் சட்ட வடிவிலும்தான் உள்ளனவே தவிர செயலள வில் பெரும் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டுள்ளதாகக் கூற முடியாது. எனினும் பல்வேறு உலக விழைவு அறிவிப்புக்களும் (Declarations), உடன்படிக்கைகளும் மனித உரிமையை உறுதி செய்து உருவாக்கப்பட்டுள்ளன.

**1. ஐ. நா. அமைப்பு சாசனமும், சிறப்பமைப்புக்களின் அமைப்புச் சட்டங்களும்** (United Nations Charter and the Constitutions of Specialised Agencies)

இந்த ஆவணங்களில் மனித உரிமையைப் பற்றி உறுதி யளிக்கப்பட்டது உண்மை யெனினும் அவற்றிற்கு அதனை நிறைவேற்றும் தன்னாற்றல் இல்லை. அவ் வுரிமைகளை உறுப்பு நாடுகள் வழங்க மறுக்காத வகையில் அவற்றினைக் கட்டுப் படுத்தும் கடப்பாடு எதுவுமில்லை.

**2. இத்தாலி, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, ஃபின்லாந்து ஆகிய வற்றுடன் பாரீஸில் 1947இல் செய்துகொள்ளப்பட்ட அமைதி உடன்படிக்கை**

இவ் வுடன்படிக்கையிலும் மனித உரிமைகளை மதிக்கவும், காக்கவும் உறுதி கொடுக்கப்பட்டுள்ளதே தவிர அவ் வுறுதியை நிறைவேற்ற எவ்வித வழிவகைகளோ, நீதிமன்றங்களோ அதனடிப்படையாக உருவாகவில்லை.

**3. 1948இல் ஐ. நா. பொது அவையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைகள் பற்றிய உலக விழைவு அறிவிப்பு** (Universal Declarations of Human Rights of 1948.)

மனித உரிமையை நிலைநாட்டுவதை மூன்று கட்டங்களாக முடிப்பது என்ற திட்டத்தில் மேற்கூறிய விழைவு அறிக்கை முதல் கட்டப் பணியாகத் தோற்றுவிக்கப்பட்டது.

**மற்ற இரண்டு கட்டங்கள்**

1. நாடுகளைக் கட்டுப்படுத்தத் தக்க வகையில் தொடர்ச்சி யான பல சாசனங்களை உருவாக்குதல்.

2. அதனை நிறைவேற்றுவதற்குண்டான ஆக்கபூர்வமான அமைப்புக்களைத் தோற்றுவித்தல்.

இம் முயற்சி முதல் கட்டத்தோடு நின்றுவிட்டது. இவ் விழைவு அறிக்கையிலே கூறப்பட்டுள்ள கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான அடுத்த கட்ட முயற்சிகள் மேற் கொள்ளப்படவில்லை. எனவே, இம் மனித உரிமை

விழைவறிக்கை, எழுத்தளவு உரிமையாகவே நின்றுவிட்டது. எனினும் இது இவ் வகையில் ஒரு எடுத்துக்காட்டான முயற்சியாக அமைந்ததை மறுக்க முடியாது.

**4. மனித உரிமைகளையும் அடிப்படைத் தன்னுரிமைகளையும் காப்பதற்கான ஐரோப்பிய மாநாடுகளும், ஏற்பு விதிகளும்** (The European Conventions for the Protection of Human Rights and Fundamental Freedoms)

இம் மாநாடு ஐரோப்பியக் குழுவால் (Council of Europe) கூட்டப்பட்டது. இதன் தரப்பு நாடுகள் 1960 நவம்பர் 4ஆம் தேதி ரோம் நகரில் இதனைக் கையெழுத்திட்டு ஏற்றன. இது இவ் வகையில் ஒரு முக்கியமான வட்டார சாசனம் (Regional Charter). இது மேற்கூறிய மனித உரிமை விழைவறிக்கையைவிட (Declaration of Human Rights) கீழ்க் காணும் வகைகளில் முன்னேற்றமானது.

(i) மனித உரிமை அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல உரிமைகளைப் பாதுகாக்க உள்நாட்டுக் கழுவாய்களை (Local Remedies) இது உருவாக்கியுள்ளது.

(ii) இது உரிமைகளை விளக்கமாகக் கூறி அவற்றிற்கான விதி விலக்குகளையும், வரைமுறைகளையும் தெளிவாகக் கூறியுள்ளது.

(iii) மேலும் இவ் வுரிமைகளை நன்முறையில் செயல்படுத்த மனித உரிமைகள் பற்றிய ஐரோப்பிய ஆய்வுக் குழு (European Commission of Human Rights) என்று ஓர் குழுவையும் உருவாக்கியுள்ளது. இந்த ஆய்வுக் குழு தரப்பு நாடுகள் சரியானபடி இவ் வுரிமைகளைச் செயல்படுத்தவில்லை என்று வரும் முறையீடுகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க வழிவகை செய்து வருகிறது.

(iv) இது மனித உரிமை மீறுதல்களை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதற்கான கட்டாய ஆளுகை பெற்ற (Compulsory Jurisdiction) நீதிமன்றத்தையும் தோற்றுவித்தது. இந் நீதிமன்றத்தின் முதல் தீர்ப்பு, சட்டம் தவறிய (Lawless) வழக்கில் 1960இல் வெளிவந்தது.

5. 1950—52இல் மனித உரிமையை யொட்டி இரு ஏற்பு விதித் தொகுப்புகள் (Draft Conventions on Human Rights)

ஐ. நா. மனித உரிமை ஆய்வுக் குழுவால் வரையப் பெற்றன. முதல் வரைவு பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளைப் பற்றியதும், இரண்டாவது வரைவு அரசியல் உரிமைகளைப் பற்றியதும் ஆகும். ஆனால் இவைகள் வரைவு நிலையிலேயே நின்றுவிட்டன. மேற்கொண்டு செயலுக்கு வரவில்லை.

இவைகளெல்லாம் நேரடியாக நடைமுறைக்கோ செய லுக்கோ வரவில்லை யெனினும் இதையொட்டிப் பல நாடுகள் தங்கள் உள் நாட்டுச் சட்டத்தில் மனித உரிமைகளுக்கு உறுதி யளிக்கும் வண்ணம் சட்டம் செய்ய வழிவகுத்துக் கொடுத்தன என்பதை மறுக்க முடியாது.

# 29. நாடுகள் தங்களிடையே உறவு கொள்வதற்கான உறுப்புகள்

## (Organs of the States for their International Relations)

(அ) நாடுகளின் தலைமையும் (Head of States) அயல் செயல் அலுவலகங்களும் (Foreign Offices).

### 1. நாட்டிடைச் சட்டத்தின் கீழ் நாடுகளது ஆட்சித் தன்மையின் நிலை

ஏராளமான மக்கள் சமுதாயமாக ஒருங்கிணைந்து இறுதியில் அரசு மலர்கிறது. ஒரு நாட்டின் அரசு தனித் தன்மையும் (Independence) மேலாண்மைத் தன்மையும் (Sovereignty) கொண்டிருத்தல் வேண்டும். இத்தகு மேலாண்மை கொண்ட அரசின் சார்பாக அந் நாட்டின் எல்லைகளுக்கு உள்ளும் புறமும் செயல்பட ஆட்சித் தலைமை ஒன்று தேவை. அத்தகைய ஆட்சித் தலைமை இவ் வகையானதாகத்தான் இருக்கவேண்டுமென்று நாட்டிடைச் சட்டத்தில் எதுவும் வரையறை செய்யப்படவில்லை. ஆனால் உலக வழக்கில் இன்று இத் தலைமை, முடி அரசு நாடுகளில் முடிமன்னராகவோ, மக்களாட்சி நாடுகளில் மக்கள் தலைவராகவோ (President) அல்லது செயற்குழுவாகவோ (Council of Executives) இயங்கி வருகிறது.

இவ் வாட்சித் தலைமை அயல் நாடுகளுடன் உறவுகொள்வதில் தன்னாட்டின் சார்பாக முழுமையாகச் செயல்படுகிறது. அத்தகைய பணிகளில் முதன்மையாக வேற்று நாடுகளுடன் உடன்படிக்கை செய்தலும், தூதுக் குழுக்களை அனுப்புதலும்—பெறுதலும், போரினைத் துவங்கலும்—முடித்தலும் ஆகியவற்றைக் கூறலாம்.

ஆனால் இந்த ஆட்சித் தலைமையின் அதிகாரங்கள் ஆட்சித் தலைவர்களை நியமிக்கும் உள்நாட்டுச் சட்டத்திற்குட்பட்ட

தாகும். ஏனென்றால் சில நாடுகளின் அரசியல் சட்டம் ஆட்சித் தலைவர்கள் செய்துகொள்ளும் வெளி உறவு ஒப்பந் தங்கள் நாட்டின் சான்றோர் அவையோ, பேரவையோ ஏற்ற பின்னரே செயல்படத் தக்கது என்று கூறுவதால் அந் நாட்டுத் தலைவர்களுக்கு அவ் வகையில் முழு அதிகாரம் இல்லை.

ஒரு நாட்டின் முழு சார்பாளர் என்கின்ற வகையில் அந் நாட்டின் ஆட்சித் தலைமை சில தகுதிகளையும், சலுகைகளையும், உரிமைகளையும் பெற்றிருக்கிறது. இந்தத் தகுதி, சலுகை, உரிமை ஆகியவைகள் தனி மனித அடிப்படையில் எழுவதல்ல. அவை அந் நாட்டிற்கு மற்ற நாடுகளால் அளிக்கப்படுபவை. அத்துடன் ஆட்சித் தலைமையின் சார்பாகச் செயல்படும் அனைவருக்கும் இவை அளிக்கப்படும். நாட்டிடைச் சட்டத்தில் முடிமன்னர்கள், மக்கள் தலைவர்களைவிட மேன்மையாகக் கருதப்பட்ட போதிலும் நடைமுறையில் இவ் வேறுபாடு வழக்கிழந்துவிட்டது.

### அ. முடிமன்னர்கள்

ஒரு நாட்டின் ஆட்சித் தலைமை முடிமன்னராகவோ மக்க ளாட்சித் தலைவராகவோ அந் நாட்டு அரசியல் சட்ட அமைப் புக்கேற்ப இருக்கலாம் என்பதனை ஏற்கனவே கண்டோம். ஆட்சித் தலைமை முடிமன்னராயிருப்பின் அந் நாட்டின் கோன்மை (Sovereignty) அவர் மூலமாக உணரப்படும். நாட்டிடைச் சட்டத்தின் முன் உலகின் முடிமன்னர்கள் அனைவரும் சம கோன்மையுடையவராவர். அமைதிக் காலத்தில் ஒரு நாட்டின் முடிமன்னர் வேற்று நாட்டின் அழைப்பின் பேரிலோ, அனுமதியின் பேரிலோ அந் நாட்டில் தங்கியிருக்கும்போது சில சலுகைகளையும், உரிமைகளையும் பெறுவதற்குரியவராவார்.

1. அவரது கோன்மையை யொட்டிப் பெறும் நாடு மன்ன ருக்கும், அவரது இல்லத்தினருக்கும் விழா, மரியாதைகள் செய்யக் கடமைப்பட்டது.

2. அவரது மேனியின் புனிதம் காத்தற்பொருட்டு ஏற்கும் நாடு பலத்த பாதுகாப்புத் தரவும், அவரது கண்ணியம் காக்கவும், அவர் தன்னாட்டுடன் எவ்வித இடையூறுமின்றித் தொடர்பு கொள்ளும் வழிவகைகளைச் செய்து தரவும் கடமைப் பட்டது. அத்துடன் அம் மன்னருக்கெதிரான குற்றங்கள் கொடுந் தண்டனைக்குள்ளாக்கப்படுதலுடன் அம் மன்னரும்

அவரது குழுவினரும் ஏற்கும் நாட்டின் குற்ற ஆளுகை வரம்புக்கு (Criminal Jurisdiction) அப்பாற்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

3. (Par in Pareeum non Labet Imperium) சம மன்னர்கள் ஒருவர் மீதொருவர் ஆதிக்கமற்றவர்கள் எனும் கொள்கையை யொட்டி, ஏற்கும் நாடு அம் மன்னரையும், குடும்பத்தினரையும், குழுவினரையும் எல்லா வகையாலும் தன் நாட்டின் ஆளுகைக்கு அப்பாற்பட்டவர்களாகக் கருதல் வேண்டும் (Exterritoriality of Sovereigns).

இத்தகு உயர் சலுகைகள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட அல்லது வெளியேறிவிட்ட மன்னர்களுக்கு அளிக்கப்படுதல் வேண்டியதில்லை. எனவேதான் 1870—72ஆம் ஆண்டுகளில் ஸ்பெயின் நாட்டரசி இஸபெல்லா, நாடு கடத்தப்பட்டு பாரீஸில் வாழ்ந்திருக்கும்போது அவரிடமிருந்து வர வேண்டிய பணத்திற்காக வாதிகள் ஃபிரான்ஸ் நாட்டு நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கை அம் மன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது. ஆனால் ஒரு நாட்டின் முடிமன்னர் மாற்றுடையில் வேற்று நாட்டில் வலம் வரும்போது இச் சலுகைகளை அளித்தற்கு வாய்ப்பில்லை. ஆனால் அம் மன்னர் தனது மாறுவேடத்தைக் களைத்துவிட்டுத் தன் நிலையை வெளிப் படுத்துவாரானால் பெறும் நாடு மேற்கூறிய சலுகைகள் எல்லா வற்றையும் அவருக்கு வழங்கக் கடமைப்பட்டது என்கின்ற கருத்து **'மிகேல்-எ-ஜோகூர் சுல்தான்'** (Mighell-*v*-Sultan of Johore) வழக்கில் வலியுறுத்தப்பட்டது. அதேபோல் ஹாலந்து (Holland) நாட்டு மன்னர் வேற்றுடையில் சுவிட்சர்லாந்து நாட்டில் வலம் வரும்போது ஏதோ சிறியதொரு குற்றத் திற்காக அபராதம் விதிக்கப்பட்டார். பின்னர் அவர் தம் நிலையை விளக்கியவுடன் அவருக்குரிய சலுகைகள் வழங்கப் பட்டு அபராத ஆணை செயல்படுத்தப்படாமல் விடப்பட்டது.

சில வேளைகளில் மழலை மன்னர்களுக்கும் (Infant Kings) இயலா மன்னர்களுக்கும் (Invalid Kings) அரசுச் செவிலியர் (Regents) நியமிக்கப்படுவதுண்டு. இவர்கள் மன்னர் குடியைச் சார்ந்தவராயினும் மற்றவராயினும் மேற்கூறிய சலுகைகளுக் குரியவராவர். ஒரு நாட்டின் இளவரசர்கள் மற்ற நாட்டு அரசின் கீழ் பணிப் பயிற்சி பெறும்போது அந்த அளவிற்குத் தங்கள் சலுகைகளை அவர்கள் பெற முடியாது.

**ஆ. மக்களாட்சித் தலைவர்கள்**

மக்களாட்சியில் நாட்டின் கோன்மை (Sovereignty) மக்களிடமே தங்கும். ஆனால் ஆட்சித் தலைமை மக்கள் தலைவரிடமோ (President), அன்றி ஒரு குழுவிடமோ (Body of Executives of Bundes rath of Switzerland) இருக்கும். அவர்களே தன்னாட்டின் சார்பாக வேற்று நாடுகளுடன் முழுமையாகச் செயல்பட வல்லவர்கள்.

மக்களாட்சித் தலைவர்கள் தன்னாட்டிற்குள்ளும், வெளி நாட்டிலும் முடிமன்னர்களுக்குண்டான சலுகை, மரியாதைகளைப் பெற முடியாதெனினும், அதேபோன்ற சலுகைகளையும், மரியாதைகளையும் பெறுதற்குரியவர்களாவர். இவ் வேறுபாடுகள் எழுத்து வடிவிலேதான். உதாரணமாக, 1918ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அமெரிக்க இணை நாடுகளின் மக்கள் தலைவர் (President of The United States of America) இங்கிலாந்தைப் பார்வையிட்டபோது ஒரு முடிமன்னருக்குண்டான விழா மரியாதைகளுடனேயே வரவேற்கப்பட்டார்.

**இ. அயல் விவகார அலுவலகங்கள்** (Foreign Offices)

நாட்டின் தலைவரே அனைத்து வெளி விவகாரங்களையும் கவனித்துச் செயலாற்றுவதென்பது நடைமுறையில் கடினமானது. எனவே ஒவ்வொரு நாட்டிற்கும் அயல் விவகாரங்களைக் கவனிக்க வெளி விவகார அமைச்சரின் தலைமையிலோ, செயலாளர் தலைமையிலோ ஒரு அலுவலகம் இயங்கி வருகிறது. இவர்கள் நாட்டுத் தலைவரின் ஆணையின் பேரிலோ, சம்மதத்தின் பேரிலோ வெளி நாடுகளுடன் உறவுகளை நெறிப்படுத்துவதிலும் உடன்படிக்கைகள் செய்து கொள்வதிலும் ஈடுபடுகின்றனர்.

வெளி விவகார அமைச்சரே அந் நாட்டுத் தூதுக் குழு இயந்திரத்தின் தலைவர். இவர்தான் உலக விவகாரங்களை யொட்டி வெளி நாடுகளுடன் உறவுப் பரிவர்த்தனையில் (Negotiations) ஈடுபடுகிறார். இவர்கள் தங்கள் நாட்டின் சார்பாளர்கள் என்ற முறையில் வெளியிடும் ஆவணங்கள் (Declarations) அந் நாட்டைக் கட்டுப்படுத்த வல்லவையாகும்.

1933ஆம் ஆண்டு உலக நிலை நீதிமன்றத்தால் சட்டத்தில் **கிழக்கு க்ரீன்லேண்டின் நிலைமை என்ன என்பதுபற்றி நிர்ணயிக்கப்பட்ட வழக்கில்** (Case Concerning the Legal Status of Eastern Greenland) இக் கருத்து வலியுறுத்தப்பட்டது.

மேற்கண்ட வழக்கில் நார்வே நாட்டு வெளி விவகார அமைச்சர் கிழக்கு கிரீன்லேண்டின்மீது டென்மார்க் நாட்டுக்கான கோன்மையை அங்கீகரிப்பதில் தன்னுட்டிற்குத் தடையெதுவுமில்லை என்று டென்மார்க் அமைச்சருக்குக் கொடுத்த விழைவு உறுதிமொழி (Declaration) நார்வே நாட்டினைக் கட்டுப்படுத்த வல்லது என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

1. ஒரு நாடோ அதன் அரசோ இங்கிலாந்து நாட்டால் சட்டபூர்வமாகவோ நடைமுறையிலோ அங்கீகாரம் பெற்றதா? 2. ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பு எந் நாட்டுக் கோன்மைக் குட்பட்டது? 3. ஒரு அரசு அல்லது மன்னரின் கோன்மைத் தன்மை. 4. மற்ற நாடுகளுடன் போர்த் துவக்கமும் முடிவும். 5. மற்ற நாடுகளுடன் இங்கிலாந்தின் போர்க் கோலம் (State of War) நீடிக்கிறதா? முடிவெய்திவிட்டதா? 6. குறிப்பிட்ட அதிகாரி தூதுவராகக் கருதப்படுதல் வேண்டுமா? தூதுமைச் சலுகைகளுக்கு அவர் உரியவரா? என்பனவற்றை யொட்டி யெழும் வினுக்களுக்கு வெளி விவகார அலுவலகம் வழங்கும் விளக்கங்களையே முற்றிலும் ஏற்று இங்கிலாந்து நீதி மன்றங்கள் செயல்படுகின்றன. அச் செய்தியின் அடிப்படை யிலேயே தம் முன்னுள்ள வழக்குகளை முடிவு செய்கின்றன.

### ❖ தூதியல் (Diplomacy)

தூதுவர்கள் என்போர் ஒரு நாட்டின் சார்பாக வெளி நாட்டில் செயல்படும் பொருட்டு நியமிக்கப்படுவார்கள். நிலையான தூதராலயங்கள் வழக்கிற்கு வந்த பின்னரே நிலையான தூதர்கள் நியமனமும் செயலுக்கு வந்தது. இந் நிலையான தூதுவராலயங்கள் 18ஆம் நூற்றுண்டிற்குப் பின்னரே ஐரோப்பிய நாடுகளுக்கிடையே செயலுக்கு வந்தது. ஆனால் தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்பே இம் முறை களில் முன்னேற்றம் அடைந்திருந்ததை 'திருக்குறளில்' அமைச்சியல் அதிகாரத்தில் தூதியல் தலைப்பின் வாயிலாக அறியக்கூடும் என்று பேராசிரியர் திரு. பழனிச்சாமி அவர்கள் (இந்நாள் சட்டக் கல்லூரி இயக்குநர்) அவர்தம் 'சர்வதேச சட்டம்' என்னும் நூலில் 92ஆம் பக்கத்தில் கூறியுள்ளார். இன்று தன்னுட்சி பெற்ற எல்லா நாடுகளுமே அயல் நாடுகளில் தங்களது தூதுவராலயங்களை நிறுவியுள்ளன. இத் தூதுவர்கள்தான் இன்று நாடுகளிடையே நடந்துவரும் எண்ணற்ற இடைபாடு நடவடிக்கைகளை (transactions) இயக்கும் இயந்திர மூலமாக உள்ளனர்.

**உ. தூதுக் குழுவின் வகைகள்**

தூதுவர்களின் தரம் அனுப்பும் நாடு அல்லது ஏற்கும் நாட்டின் தகுதிக்கேற்ப அமையும். சில வேளைகளில் என்ன காரணத்திற்கு நியமிக்கப்படுகிறார்களோ அதையொட்டியும் அமையும்.

ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கு அனுப்பும் தூதுவர்களை இரு பெரும் பிரிவினராகப் பிரிக்கலாம்.

1. அரசியல் தூதுவர்கள் (Political Diplomats).
2. வாணிபத் தூதுவர்கள் (Consuls).

இதில் முன் வகையினரை மேலும் 4 வகையாக அவரவர் தகுதிக்கும், பணிக்குமேற்பப் பிரிக்கலாம்.

நிலையான தூதுக் குழுக்கள் வழக்கத்தில் பதினேழாம் நூற்றாண்டில் நிலை பெறவே, இரு வகையான தூதுவர்கள் வழக்கில் இருந்தனர். இவர்களில் உயர் நிலையினர் அம்பாஸிடர்கள் (Ambassadors) எனவும், இரண்டாம் தரத்தினர் ரெஸிடென்ட்ஸ் (Residents) எனவும் அழைக்கப்பட்டனர். இவர்களுள் அம்பாஸிடர்கள் மற்ற பிரிவினரைவிட முதன்மையும் பெரும் மரியாதைகளும் பெற்றிருந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டில் மற்றொரு பிரிவினரும் தோன்றலாயினர். இவர்கள் மினிஸ்டர்ஸ் ப்ளெனி பொட்டென்ஸியரி (Ministers Pleni Potentiary) என்றழைக்கப்பட்டனர். இறுதியில் 1815இல் வியன்னாவில் கூடிய மாநாட்டில் தூதுவர்களில் மூன்று பிரிவினை பொதுவாக நாடுகள் ஏற்றுக் கொண்டன. அவைகள் 1. அம்பாஸிடர்கள், 2. மினிஸ்டர்ஸ் ப்ளெனி பொட்டன்ஸியரி (Envoys extraordinary), 3. சார்ஜஸ்–டி–அஃபேர்ஸ் (Charges–de-affairs) ஆகும். இத்துடன் 1818ஆம் ஆண்டு ஏக்ஸ்-லா-சேப்பள் (Aix-la-Chaplle) மாநாட்டில் மேலும் மினிஸ்டர்ஸ் ரெசிடென்ட் என்றொரு வகையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவர்கள் மினிஸ்டர்ஸ் ப்ளெனி பொட்டன்சியரி, சார்ஜஸ் - டி - அஃபேர்ஸ் இரண்டுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

**(i) அம்பாஸிடர்கள்**

இவர்கள் நியமன நாட்டுத் தலைமையின் நேரடி அல்லது தனிச் சார்பாளர்கள். இவர்களது குறிப்பிடத் தக்க சலுகை,

பெறும் நாட்டின் ஆட்சித் தலைமையைத் தேவைப்படும்போது நேரில் சந்திக்கவும், நேரிடையாக இடைப்பாடு, பேர நடவடிக்கைகளில் ஈடுபடவும் (Negotiating transactions) கொண்டுள்ள உரிமையாகும். அம்பாஸிடர்கள் தன்னாட்டு ஆட்சித் தலைமையின் நேரடிச் சார்பாளர்கள் என்ற முறையில் அவர்களுக்குச் சில சிறப்புக் கண்ணிமைகள் (Special Honours) உண்டு.

(ii) **மினிஸ்டர்ஸ் ப்ளெனி பொட்டன்ஷியரி, என்வாய்ஸ் எக்ஸ்ட்ரார்டினரி**

இவ் விரு வகையினரும் அம்பாஸிடர்களைப் போலவே நாட்டுத் தலைமையின் நேரடிச் சார்பாளர்களாயிருப்பினும் அம்பாஸிடர்களுக்குண்டான சிறப்புக் கண்ணிமைகளுக்கு உரிமை பெற்றவர்களல்லர். எனினும் மரியாதை கருதி மேதகு (Excellency) என்றழைக்கப்படுகின்றனர். அத்துடன் ஏற்கும் நாட்டுத் தலைமையைத் தேவையான காரணங்களுக்காக மட்டும் காணும் தகுதியுடையவராவர்.

(iii) **சார்ஜஸ்-டி-அஃபேர்ஸ்**

இவர்கள் ஒரு நாட்டுத் தலைமையால் மற்ற நாட்டுத் தலைமைக்கு அனுப்பப்படும் தூதுவரல்லர். ஒரு நாட்டு வெளியுறவு அமைச்சரால் மற்ற நாட்டு வெளியுறவு அமைச்சருக்கு அனுப்பப்படும் தூதுவர்கள்.

(iv) **மினிஸ்டர்ஸ் ரெசிடெண்ட் :**

இவ் வகையினர் தற்போது அதிக வழக்கிலில்லை.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நாட்டிடைச் சட்டக் குழு தூதுமையுறவு தூதுவச் சலுகைகள் பற்றி நடைமுறையில் வழங்கி வரும் விதிகளைத் தேவைக்கேற்ப மாற்றித் திருத்தி அமைத்துத் தொகுப்பொன்றினை ஏற்படுத்தியது. இதனை ஐ. நா. மன்றம் வியன்னாவில் 1961ஆம் ஆண்டு இதற்கென கூடிய மாநாடொன்றில் பங்குகொண்ட 81 நாடுகளில் 45 நாடுகள் உடனடியாகவும் மற்றும் பல நாடுகள் பின்னரும் ஏற்றுக்கொண்டன. இத் தொகுப்பில் வராத பொருள்கள் வழக்கமான விதிகளால் ஆளப்படும்.

இந்த 1961ஆம் ஆண்டு வியன்னா ஏற்பு விதிகள் (1961 Vienna Convention on Diplomatic Relation) முதல் பகுதியில் தூதுமையுறவுகளைப் பற்றிக் கூறுகிறது. (7ஆம் பிரிவு Art. 74.)

தூதுவரை நியமிக்கும் நாடு எச் சமயத்திலும் வேறொருவரை நியமிக்கும் உரிமை பெற்றது எனவும், 8ஆம் பிரிவு தூது வர்கள் அனுப்பும் நாட்டைச் சார்ந்தவராயிருத்தல் வேண்டு மெனவும், ஏற்கும் நாட்டோடு இணையுறவு (Nationality) கொண்டிருந்தால் அந் நாட்டின் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும் எனவும், 9ஆம் பிரிவு ஏற்கும் நாடு எச் சமயத்திலும் தூதுக் குழுவினரில் எவரையும், எக் காரணமும் கூறுமல் தன்னுட்டிற்கு ஏற்றவரல்லர் (Persona-non grata) என்றறி விக்கும் உரிமை பெற்றதெனவும், 20ஆம் பிரிவு, தூதுக் குழு வினர் குழுத் தலைவர் ஆகியோர் வாழ்விடத்திலும் அலுவலகத் திலும் ஊர்திகளின் மீதும் நியமன நாட்டின் கொடியைப் பறக்கவிட உரிமை உண்டெனவும், 11ஆம் பிரிவு, தூதுக் குழுவின் அளவினைத் தேவைக்கும் நிலைமைக்கும் ஏற்ப பெறும் நாடு நிர்ணயிக்கும் உரிமை பெற்றதெனவும் குறிக்கின்றது.

1961ஆம் ஆண்டு தூதியல் வியன்னு ஏற்பு விதிகள்படி தூதுவர்கள் ஏற்கும் நாட்டின் குற்ற ஆளுகையிலிருந்து (Criminal Jurisdiction) முற்றிலும் விடுபட்டவர்கள். ஆனல் இந்த முழுச் சலுகை குடி ஆளுகை (Civil jurisdiction), நிர்வாக ஆளுகை (Administrative jurisdiction) ஆகியவைகளை யொட்டிக் கிடையாது. இவை ஒரு சில கட்டுப்பாடுகளுக்கும் வரைமுறைகளுக்கும் உட்பட்டவை.

1. ஏற்கும் நாட்டின் ஆளுகையிலிருந்து தூதுவராலய உடைமைகள் விடுபட்டவை, எவ்வித ஆதிக்கமும் கூடாது என்றொரு விதி இருந்தபோதிலும் தூதுவரின் தனிப்பட்ட அல்லது வணிக சம்பந்தப்பட்ட சொத்துகளுக்கு அவ்விதச் சலுகை கிடையாது (Art. 31, 42).

2. தூதுவர் ஏற்கும் நாட்டின் எல்லைக்குள் எங்கும் செல்லும் சலுகை இருந்தபோதும் அந்த நாட்டின் பாதுகாக்கப் பட்ட பகுதிக்குள் நுழையும் சலுகை கிடையாது (Art. 26).

(3) தூதுவராலயப் பொருட்கள், நீதிமன்ற சோதனைக்கோ, கைப்பற்றுதலுக்கோ இலக்காக்கப்படுதல் கூடாது (Art. 23-24).

(4) தூதுவரின் ஆவணப் பேழை (Diplomatic Pouches), செய்தித் தொடர்பு இவைகளுக்கும் ஆள் நில ஆதிக்கத்தி லிருந்து எவ்வித இடை ஈடுமின்றி விலக்களிக்கப்படுதல் வேண்டும் (Art. 27).

(5) தூதுவரும் அவரது அலுவலகப் பணியாளர்களும் ஏற்கும் நாட்டின் வரி விதிப்பிற்கு அப்பாற்பட்டவர்கள் (Art. 34-36).

இதுகாறும் வழக்கிலிருந்து வந்த விதிகளை வியன்னு ஏற்பு விதி மாநாடு, சில திருத்தங்களுடனும், வரையறைக்குட்பட்டும் மேற்கண்டவாறு ஏற்றுக் கொண்டுள்ளது.

**நடைமுறையில் தூதுவச் சலுகைகள் பற்றிய வழக்குகள்**

1. (அ) நாடுகளிடையேயான இசைவு முறைத் தீர்வுகளை நிறைவேற்றுவது.

(ஆ) தூதுவர் ஆலயங்களில் பாதிக்காத தன்மை ஆகியவை பற்றிய வழக்குகள்.

(Cases Relating to Enforcement of International Awards and Immunity of Legation Buildings)

இவ் வழக்கில் இசைவு முறைக் குழுவின் தீர்வு ஆணையை செயல்படுத்தும் பொருட்டு செக்கோஸ்லேவேக்கியா நாட்டு வங்கி ஒன்று பிரேகில் (Prague) இருந்த ஹங்கேரி நாட்டுத் தூதுவராலயக் கட்டிடத்தை விற்பதற்கான நடவடிக்கைகளை செக் நாட்டு நீதி மன்றத்தின் வாயிலாக மேற் கொண்டது.

இவ் வழக்குத் தூதியல் சலுகைகளை உட்படுத்தி இருந்ததால் அந் நாட்டு வெளியுறவு அமைச்சகம் தன்னுட்டு நீதி மன்றத்தை, இவ் வழக்கை நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையில் நிர்ணயிக்குமாறு வேண்டிக் கொண்டது. அவ் வேண்டுகோளின் பேரில் செயல்பட்ட செக் நாட்டுத் தலைமை நீதிமன்றம், 'நேரிடையாகவோ மறைமுகமாகவோ வேற்று நாட்டின் தூதுப் பணிக்குப் பயன்பட்டு வரும் கட்டிடங்களை உள் நாட்டுச் சட்ட விதிகளுக்கு உட்படுத்த இயலாது' என்று கூறித் தீர்ப்பு அளித்தது.

2. **பப்ளிக் பிராசிக்யூட்டர்-எ-ஜெம்லெண்ட்டும் பியோங்கும்** (Public Prosecutor-*v*-Hjelmland and Biong.)

இவ் வழக்கில் நார்வே நாட்டில் ஒசோ என்ற இடத்திலிருந்த சோவியத் நாட்டுத் தூதுவராலயத் தோட்டத்தினுள் இருவர் வெடிகுண்டுகளை வீசினர். வழக்கை விசாரித்த நார்வே நாட்டுத் தலைமை நீதிமன்றம் அன்னிய நாட்டுத் தூதுவராலயங்கள் தனிக் கவனத்துடன் பாதுகாக்கப்பட

வேண்டுபவை; எனவே அதற்கு எதிரான குற்றங்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும் என்று தீர்ப்பு அளித்தது.

**தூதுவச் சலுகைக்குரிய அலுவல் வகையினர்**

நாட்டிடை வழக்கு விதிகளில் தூதுக் குழுவினைச் சார்ந்த பணியாளர்கள் அனைவருக்கும் இச் சலுகைகள் உண்டு. ஆனால் சில தென் அமெரிக்க நாடுகள் இச் சலுகைகளுக்குக் குறுகிய பொருள் கொண்டு, முதன்மையான நிலையிலுள்ள தூதுவப் பணியாளர்களுக்கு மட்டுமே இச் சலுகைகளை வழங்கி வந்தன. லத்தீன், அமெரிக்க நாடுகள் இச் சலுகைகளையொட்டி குறுகிய பொருள் கொண்டு செயல்பட்ட போதிலும், பொது நெறி (Common Law) வழங்கும் நாடுகள் இதற்குப் பரந்த பொருள் கொண்டு தூதுக் குழுவினைச் சார்ந்த பணியாளர்கள் அனைவருக்கும் இச் சலுகைகளை அளித்துவருகின்றன.

**கோஷ் - எ - டி ரோஸாரியோ** (Ghosh-*v*-D'Rosario)

இவ் வழக்கில், 'அம்பாஸிடர்களுக்கு என்ன காரணங்களுக்காகச் சலுகைகள் வழங்கப்படுகின்றனவோ, அதே காரணங்களுக்காக அம்பாஸடர்களின் துணைப் பணியாளர்களுக்கும் இச் சலுகைகள் வழங்கப்படுதல் அவசியம்' என நிர்ணயிக்கப்பட்டது.

**ரைன் ஹார்ட்** (In-Re–in hardt): சம்பந்தப்பட்ட வழக்கில் ரோம் நாட்டு நீதிமன்றம் நாட்டிடை வழக்க விதிகளின் அடிப்படையில் (Customary International Law) தூதுவரின் இல்லப் பணியாளருக்கும் இச் சலுகை உரியது என நிர்ணயித்தது.

**அப்பன் ஹாமி - எ - கிரிகோரி** (Appaun Hamy-*v*-Gregory)

இவ் வழக்கில் இலங்கைத் தலைமை நீதிமன்றமும் இச் சலுகைகள் தூதுக்குழுவினரின் குடும்பத்தினர்க்கும் பணியாளர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும் என்று கூறித் தீர்ப்பளித்தது.

இதனை யொட்டிய கருத்து வேறுபாடுகள் வியன்னா மாநாட்டில் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.

தற்போது தூதுவர்க்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கும் இச் சலுகைகள் உண்டு. தூதுப் பணியாளர்கள் ஏற்கும் நாட்டுடன் பிணைப்பு (Nationality) கொள்ளாதவர்களாகவும் தூதுமைத் தகுதியும் (Diplomatic Rank) உடையவர்களாகவும்

இருப்பின் அவர்களுக்கும் இச் சலுகைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

இச் சலுகைகள், தூதுவராக நியமிக்கப்பட்டவர் ஏற்கெனவே ஏற்கும் நாட்டிலிருந்தால், நியமன அறிவிப்பு வெளியிட்டவுடனேயோ அல்லது அந் நாட்டு எல்லையில் நுழைந்தவுடனேயோ துவங்கும். ஏற்கும் நாட்டைச் சென்றடையும் வழியில் இவர்கள் கடந்து செல்லும் நாடுகளும் தூதுவச் சலுகைகள் வழங்கக் கடமைப்பட்டன. தூதுவ நியமனம் திரும்பப் பெறப்பட்டாலோ, அன்றி விலக்கிக் கொள்ளப்பட்டாலோ வெளி ஏறும் தூதுவர் புறப்படுவதற்கு நியாயமாகத் தேவைப்படும் காலம் வரை இச் சலுகைகள் நீடிக்கும். அக் கால முடிவிற்குப் பின் செயலிழந்து போகும். (Art. 39).

தூதுவர்கள் விரும்பினால் இச் சலுகைகளைக் கோரிப் பெருமலேயோ அல்லது விட்டுக் கொடுக்கவோ (Waive) உரிமையுண்டு. ஆனால் இச் சலுகைகளை விட்டுக் கொடுப்பதற்கு முன்னர் தூதுவர்கள் அதுபற்றித் தங்கள் நாட்டின் வெளியுறவு அமைச்சகத்திற்குத் தெரியப்படுத்தி அதன் ஒப்புதலைப் பெறுதல் அவசியம் (Art. 32).

**தூதுவ நியமனத்தை முடிவுக்குக் கொண்டு வரல்**

ஒரு தூதுக் குழு பல்வேறு காரணங்களின் அடிப்படையில் முடிவுக்கு வருதல் உண்டு.

1. அனுப்பிய நாடு தூதுவரைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்.

2. நியமிக்கப்பட்ட தூதுவர் ஏற்கும் நாட்டிற்கு ஏற்புடையவர் அல்ல. (Persona Non Grata) என்கின்ற காரணத்திற்காக அவரை நியமன நாடு விலக்கிக் கொள்ளுதல்.

3. அனுப்பும் நாட்டிற்கும் ஏற்கும் நாட்டிற்கும் இடையே போர் நிகழுமானால் தூதுமை முடிவுக்கு வரும்.

4. தூதுக் குழுவின் நியமன காரணத்திற்கான பணி முடிவடைதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## (ii) வாணிபத் தூதர்கள் (Consuls)

நிலையான அரசியல் தூதுக் குழுக்களைவிட வாணிபத் தூதர்கள் நியமனம் பழமையானது. இது உலக நாடு

களிடையே கடல், நில வாணிபம் பெருகப் பெருக தேவையான அடிப்படையில் தானாக வளர்ந்து நிலைபெற்ற வழக்கம். வாணிபத் தூதர்களை நியமிப்பது 17, 18ஆம் நூற்றாண்டில் நிலையான தூதுக் குழுக்கள் நியமனத்தால் சற்றுக் குறைவுற்ற போதிலும், தொழிற் புரட்சியின் காரணமாக ஓங்கி வளர்ந்த உலக வாணிபம் இத்தகு வாணிபத் தூதர்களின் இன்றியமையாத் தன்மையை உணரச் செய்தது. அது முதல் வாணிபத் தூதர்கள் மீண்டும் முக்கியத்துவம் பெறலாயினர்.

பெருமளவான உலக நாடுகள் தங்களுக்குள் உடன்படிக்கை ஒப்பந்தங்களின் மூலம் வாணிபத் தூதுவரின் சலுகைகள், உரிமைகள், தகுதிகள், பணிகள் ஆகியவற்றை நிர்ணயித்துக் கொண்டன. 19ஆம் நூற்றாண்டு இறுதியில் அனேகமாக உலக நாடுகளனைத்தும் தங்களுடைய வாணிபத் தூதுவர்களை நியமித்திருந்தன. அரசியல் தூதியலும் வாணிபத் தூதியலும் ஒரு நாட்டின் வெளியுறவு அமைச்சகத்தின் கீழ் இயங்கினாலும், ஒன்றின்மீது மற்றொன்றிற்கு ஆதிக்கம் இல்லாதிருந்தது. ஆனால் அண்மைக் காலங்களில் உலக முன்னோடி நாடுகள் இவ்விரு வேறு அமைப்புகளைக் கொள்ளாமல் இரண்டையும் இணைத்துவிட்டன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை இத்தாலி-ஜப்பான், நார்வே-ஃபிரான்ஸ், ரஷ்யா-ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகிய நாடுகளாகும்.

### வாணிபத் தூதர்களின் பணிகள்

இவர்கள் அரசியல் தூதர்களைப்போல் ஒரு நாட்டால் மற்ற நாட்டிற்கு நியமிக்கப்பட்டு நாடுகளிடையேயான உறவுகளைக் காப்பவர்களல்லர். இவர்கள் முற்றிலும் வாணிப வளர்ச்சிக்காகவும், வணிகர்களின் நன்மையைப் பேணவும், வணிகர்களின் குறைகளைக் களைந்து காக்கவும், வணிகர்களுக்காகப் பொதுவாகச் செயல்படும் பொருட்டும் நியமிக்கப்படுபவர்கள். இவர்கள் தன்னாட்டு வணிகர்களின்மீது குற்ற ஆதிக்கமும் (Criminal Jurisdiction) குடிமை ஆதிக்கமும் (Civil Jurisdiction) நிர்வாக ஆதிக்கமும் (Administrative Jurisdiction) பெற்றுச் செயல்பட்டு வந்தனர்.

வாணிபத் தூதர்களைப் பற்றிய 1963ஆம் ஆண்டு வியன்னு ஏற்பு விதிகள் மாநாடு (1963 Vienna Convention on Consular

Relations) இவர்களின் பணியைப் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளது. அம் மாநாட்டின் 5வது ஏற்பு விதி (Art. 5)யின்படி இவர்களது பணிகளாவன :

1. வாணிபப் பாதுகாப்பும் வளர்ச்சியும்.

2. வாணிபத்தில் ஈடுபட்டுள்ள கப்பல், விமானம் ஆகியவற்றைப் பழுது பார்க்கவும், அவற்றின் பணியாளர்களின் உடல் நலம், சுகாதாரம் ஆகியவற்றை உள்நாட்டுச் சட்டத்திற்கொப்பப் பேணுதலும்.

3. பெறும் நாட்டு அதிகாரிகளின் முன்னர் தம் நாட்டு வணிகர்களின் உரிமையையும், நலத்தையும் காத்து உதவுதல்.

4. மேலும் பொதுவாக இரு நாட்டு வணிக நலம் பேணும் பணிகளில் ஈடுபடுதல்.

வாணிபத் தூதர்களின் சலுகைகள் இதனையொட்டிய 1963ஆம் ஆண்டு வியன்னு ஏற்பு விதிகள் மாநாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. சில நிபந்தனைகளுக்குட்பட்டு வாணிபத் தூதர்கள் தங்கள் நாட்டின் சார்பாகச் செய்யும் அலுவல் பணிகள் ஏற்கும் நாட்டின் குடிமை நிர்வாக ஆதிக்கத்திற்கு (Civil Administrative Jurisdiction) உட்படுத்தப்படுதல் கூடாது. (Art. 43).

2. வாணிபத் தூதர்களின் சுதந்திரமும் கண்ணியமும் காக்கப்படுதல் வேண்டும் (Art. 40).

3. வாணிபத் தூதர்கள் கொடுங் குற்றங்களைப் புரிந்தாலொழிய ஏற்கும் நாட்டில் குற்ற ஆளுகைக்கு (Criminal Jurisdiction) உட்படுத்துதல் கூடாது (Art. 41).

4. வாணிபத் தூதர்கள் தம் அலுவலையொட்டி ஆற்றிய பணிகள் பற்றி எவ்விதச் சான்றும் பகர மறுக்கும் உரிமை பெற்றவர்கள். அத்துடன் குடிமை அல்லது குற்ற (Civil or Criminal Cases) வழக்குகளில் வாணிபத் தூதுவர்களைச் சான்றுளர் (Witness) களாக இருக்கும்படி வற்புறுத்துதல்

கூடாது. ஆனால் அவர்கள் விரும்பினால் இதற்கென ஒரு குழு நியமித்து, அவரது இல்லத்திற்கோ, அலுவலகத்திற்கோ சென்று சான்றுதலைப் பெறலாம். (Art. 44).

5. ஏற்கும் நாட்டு அதிகாரிகள் வாணிபத் தூதுவராலயத்தின் தலைவரின் முன் அனுமதியின்றி அக் கட்டிடத்திற்குள் நுழைதல் கூடாது. (Art. 31).

6. வாணிபத் தூதுக் குழுவின் உறுப்பினர்கள் ஏற்கும் நாட்டின் எல்லைக்குள் எங்கும் செல்ல உரிமை பெற்றவர்கள். ஆனால் இவ்வுரிமை உள்நாட்டுச் சட்டத்திற்கும் பாதுகாக்கப் பட்ட பகுதிகளின் வரையறைக்கும் உட்பட்டது. (Art. 34).

## பகுதி V

# 30. உடன்படிக்கைகள்

## (Treaties)

நாடுகளுக்கிடையேயோ அல்லது நாட்டு அமைப்புகளுக் கிடையேயோ (State Organs) அனைத்துலக அரங்கில் சட்ட உரிமைகளையும், கடப்பாடுகளையும் தரப்பினர்களிடையே ஏற் படுத்தும் வகையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களே உடன்படிக்கைகள் ஆகும்.

நாட்டிடைச் சட்டம் தோன்றுவதற்கு முன்பிருந்தே நாடுகள் உடன்படிக்கை செய்துகொள்ளும் வழக்கத்தை மேற் கொண்டு வந்துள்ளன. இவ் வுடன்படிக்கைகள் இருவகைப் படும். நாடுகள் தங்களின் நடத்தையையும் உறவு முறை களையும் நெறிப் படுத்துவதற்காகப் பொதுவான விதிகளை உள்ளடக்கும் வகையில் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் சட்ட மூலங்களாக (Source of Law) அமையும். எனவே இத்தகைய உடன்படிக்கைகள் சட்டம் இயற்றும் உடன் படிக்கைகள் (Law Making Treaties) எனப்படும். இது ஒரு வகை. இம் மாதிரியன்றி நாடுகள் வேறு காரணங்களுக்காகச் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் மற்றொரு வகை ஆகும்.

சில வேளைகளில் பெரும்பாலான நாடுகளைத் தரப்பின ராகக் கொண்டு (Parties) பொது நெறிகளைத் தோற்றுவிக்கும் உடன்படிக்கைகள், உலக சட்டங்கள் (International Legislation) என்று சொல்ல முடியாவிட்டாலும் அத்தகைய தன்மையைப் பெற்றதாகும். இத்தகைய உடன்படிக்கைகள் நீதிமன்றங் களின் அங்கீகாரத்தையும் பெறும்.

மேற்கூறிய கருத்து தென் மேற்கு ஆப்பிரிக்காவின் நிலை பற்றிய வழக்கிலும் (Case Concerning the Status of South-West Africa), ஐ. நா. பணியாளர்கள் துன்புற்றதற்கான இழப்பீட்டு வழக்கிலும் (Advisory Opinion Relating to the Reparations for Injuries Suffered in the service of United Nations) உலக நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பிலும் வலியுறுத்தப்பட்டது.

1969ஆம் ஆண்டுக்கு முன்வரை உடன்படிக்கைகள் பெரும்பாலும் நாட்டிடைச் சட்டத்தின் வழக்கு விதிகளையே (Customary Rules) உள்ளடக்கி இருந்தன. ஆனால் உடன்படிக்கைகளையொட்டிய விதிகள் 1969ஆம் ஆண்டு வியன்னாவில் உடன்படிக்கைகள் சட்டம் பற்றிய மாநாட்டில் சீரமைக்கப்பட்டு, தொகுத்தேற்கப்பட்டுள்ளது. இம் மாநாட்டு விதிகளின் தோற்றுவாய் (Preamble) இதில் கூறப்படாத பொருள்களையொட்டி நாட்டிடைச் சட்டத்தில் முன்பிருந்த வழக்கு விதிகளே தொடர்ந்து வழங்கி வருதல் வேண்டும் என்று கூறுகிறது.

இம் மாநாட்டின் இரண்டாவது ஏற்பு விதி உடன்படிக்கைகள் என்றால் என்ன என்று விளக்குகிறது.

**உடன்படிக்கைத் தரப்பினர்கள்** (Parties to Treaties)

உடன்படிக்கை செய்துகொள்ளும் தகுதி ஒரு நாட்டிற்கு அதன் கோன்மையின் அடிப்படையில் எழுகிறது. எனவே கோன்மை பெற்ற நாடுகள் மட்டுமே (Sovereign States) உடன்படிக்கைக்குத் தரப்பினர்களாக முடியும். சில நேரங்களில் முழுக் கோனுற்றல் பெறாத நாடுகளும் உடன்படிக்கைகளில் ஈடுபடுவது உண்டு. உடன்படிக்கைகள் அதற்குரிய தரப்பு நாடுகளை மட்டுமே கட்டுப்படுத்தும். அதாவது நாடுகளுக்கிடையே ஏற்படும் கடப்பாட்டுடன்படிக்கைகள் (Contractrual Treaties) அவ் வுடன்படிக்கைக்குச் சம்பந்தப்படாத வேற்று நாட்டின்மீது எவ்விதப் பயனையோ பாரத்தையோ சுமத்த வல்லதல்ல. (Pacta-Terties nec-nocent nec Prosunt). இக் கொள்கை வியன்னா மாநாட்டின் 34 முதல் 38 வரையிலான ஏற்பு விதிகளிலும் கூறப்பட்டுள்ளது.

கோன்மை பெற்ற நாடுகளன்றி ஐ. நா. மன்றம், உலக உடல் நல அமைப்பு, உலகக் கல்வி, கலாச்சார அமைப்பு போன்ற ஐ. நா.வின் இணை அமைப்புகளும் தங்களுக்குள் ஒன்றுக்கொன்றோ அல்லது உலக நாடுகளுடனோ உடன்படிக்கை செய்துகொள்ளும் ஆற்றல் பெற்றவையாகும். இக்

கருத்தும் உலக நீதிமன்றத்தால் ஐ. நா. பணியாளர்கள் துன்புற்றதற்கான இழப்பீட்டு வழக்குத் தீர்ப்பில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

சில வேளைகளில் இரண்டு நாடுகள் உடன்படிக்கை செய்து கொள்ளும்போது அவ் வுடன்படிக்கை மூலம் அதற்குத் தரப்பினரல்லாத வேறு சில நாடுகள் உரிமைகள் பெறுவது உண்டு. அவ் வுரிமைகளைத் தரப்பினர் அல்லாத அம் மூன்றும் நாடுகள் செயல்படுத்துமாறு வலியுறுத்திக் கோருவது உண்டு. இதற்கு உதாரணமாகக் கீழ்க்கண்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

1856ஆம் ஆண்டு ஃபிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் ஆலந்துத்(Holland) தீவில் எவ்விதக் கோட்டை கொத்தளங்களையும் எழுப்புவதில்லை என்று கூறி உடன்படிக்கை செய்து கொண்டன. இந்த உடன்படிக்கைக்கு ஸ்வீடன் தரப்பு நாடல்ல என்றாலும் 1920இல் இவ் வுடன்படிக் கையின் கோட்பாடுகள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திற்று. இந்தச் சிக்கல் உலக நிலை நீதிமன்றத்தின் முன்வந்த போது தனது தீர்ப்பில், இவ் வகைப் பிரச்சினைகளை சாதாரணமாக அணுக முடியாதென்றும், உடன்படிக்கை செய்து கொள்ளும் நாடுகள் அவ் வுடன்படிக்கைக்குத் தரப்பினரல்லாத மூன்றும் நாடுகளின்மீது உறுதியான எண்ணத்துடனும் விருப் பத்துடனும் அத்தகைய உரிமைகளை வழங்கும் வகையில் அவ் வுடன்படிக்கைகளைச் செய்து கொண்டிருந்தால் மட்டுமே அவ்வாறு தரப்பினரல்லாத மூன்றும் நாடுகள் அவ் வுரிமைகளை வலியுறுத்தத் தகுதி பெறும் என்றும் கூறியது. ஆனால் தற்போது இவ் வகைப் பிரச்சினைகளை அணுகும் முறைபற்றி வியன்னு மாநாட்டின் 36, 37 ஏற்பு விதிகள் விளக்குகின்றன.

**உடன்படிக்கைகளின் அமைப்பு முறை**

ஓப்பன் ஹைமின் கருத்துப்படி உடன்படிக்கைகள் இவ்வித முறையில்தான் அமைதல் வேண்டும் என்கின்ற முறைகள் எதுவுமில்லை. ஆனால் சில வகைகள் உண்டு. உடன்படிக் கைகள் பெரும்பாலும் எழுத்து மூலமான ஆவணங்களாகவே இருக்கும். சில வேளைகளில் வாய்மொழியான உடன்படிக்கைகள் ஏற்படுவதும் உண்டு. இவ் வகை உடன்படிக்கை 1797 ரஷ்ய நாட்டுப் பேரரசர் பீட்டருக்கும், பிராண்டன்பர்க் தேர்வாளர் மூன்றும் ஃபிரெட்ரிக்குக்கும் இடையே ஏற்பட்டது. நார்வே நாட் டிற்கும் டென்மார்க்குக்குமிடையே கிழக்கு கிரீன்லாந்து நிலை

பற்றி எழுந்த வழக்கில் உலக நீதிமன்றம் இவ் வகை உடன் படிக்கைகளும் செயல் வலிவு உடையவை என்று கூறியது.

மேலும் சில வகைகள் :

1. இரு நாடுகளின் தலைவர்களுக்கிடையே (Head of the States) ஏற்படும் உடன்படிக்கை. இவ் வகை உடன்படிக்கைகள் தற்போது பெருமளவில் எண்ணிக்கையில் குறைந்துவிட்டன. தற்போது மிக முக்கிய பிரச்சினைகள் குறித்து மட்டுமே இவ்வுடன்படிக்கைகள் ஏற்படுகின்றன.

2. அரசுக்களுக்கிடையே (Inter Governmental Forum) ஏற்படும் ஒப்பந்தம். இது மேற்கூறியதிலிருந்து அமைப்பில் தான் மாறுபட்டதே தவிரப் பொருளில் அல்ல.

3. நாடுகளுக்கிடையே (Inter State Forum) ஏற்படும் ஒப்பந்தம். இவைகள் ஏற்பு விதிகளை உருவாக்கும் மாநாடுகளில் நாடுகளைத் தரப்பினராகக் கொண்டு அமையும்.

4. நாடுகளின் துறைகளுக்கிடையே ஏற்படும் உடன் படிக்கை (Inter Departmental Agreement).

நாடுகளுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கைகள், ஒப்பந் தங்கள் ஆகியவற்றின் தன்மை, தகுதி, நோக்கம் இவைகள் பொதுவானவைதான் என்றாலும் சிற்சில வேறுபாடுகளுக் கேற்ப அவ் வுடன்படிக்கைகளின் பெயரும் மாறுகிறது.

1. **மாநாட்டு மூலம் ஏற்கும் விதிகள்** (Convention)

உலகத்தின் பெரும்பான்மையான நாடுகளை உறுப்பினர் களாகக் கொண்ட உலக அஞ்சல் ஒன்றியம் (Universal Postal Union), உலக உடல்நல கழகம் (World Health Organisation) போன்ற உலக அமைப்புக்கள் ஏற்படுத்தும் விதிகளைப் பெரும் பாலான நாடுகள் தரப்பினராக இருந்து ஏற்பதாலும் பல நாடுகள் கூடி ஒரு மாநாட்டின் மூலம் ஏதேனும் தலைப்பை யொட்டி தங்களுக்குத் தேவை என்று உணரும் விதிகளை ஏற்கின்றன. இக் காரணங்களால் இவற்றினை ஏற்பு விதிகள் என்கிறோம்.

2. **துணை ஏற்பு விதிகள்** (Protocal)

ஒரு மாநாட்டில் முதன்மையாக ஏற்படுத்தப்படும் ஏற்பு விதிகளுக்குத் துணை விதிகளாகவோ அல்லது அவற்றிற்குத்

தேவையான இணை விதிகளாகவோ அல்லது அந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறுத விதிகளாகவோ ஏற்படுத்தப்படும் விதிகளைத் 'துணை ஏற்பு விதி' என அழைக்கிறோம்.

### 3. ஒப்பந்தங்கள் (Agreements)

இது உடன்படிக்கை. மாநாடு இவற்றை விடக் குறைந்த மதிப்பைப் பெறும். இது சில நாடுகளை மட்டுமே தரப்பினராகக் கொண்டதாக இருக்கும்.

### 4. ஏற்பாடுகள் (Arrangements)

இடைக்கால அல்லது தற்காலிகமான இயல்புடைய பரிவர்த்தனைகளைச் செய்யப் பயன்படுத்தப்படுகிறது. இதுவும் ஒப்புதலைப் போன்றதே.

### 5. நடப்புக் குறிகள் (Process-verbal)

பல நாட்டு அரசியல் தூதுவர்களைக் கொண்ட மாநாட்டின் நடவடிக்கைகள், முடிவுகள் இவற்றின் குறிப்புச் சுருக்கம் இவை. தற்போது மாநாட்டுத் தரப்பினர்களுக்கிடையே ஏற்படும் கருத்தொற்றுமைகளையும் உள்ளடக்கியதாகும்.

### 6. அமைப்புச் சட்டங்கள் (Statute)

தற்போது உலகில் பல்வேறு உலக அமைப்புக்கள் தோன்றுகின்றன. அவ் வமைப்புக்களைத் தோற்றுவித்து அவற்றின் அதிகாரங்களையும் பணிகளையும் செயல்முறைக்கான குழு அமைப்புக்களையும் விவரிக்கும் அடிப்படைச் சட்டத்தை அமைப்புச் சட்டம் என்று கூறுகிறோம். இதற்கு உதாரணமாக 1945ஆம் ஆண்டில் உலக நீதிமன்றத்தின் அமைப்புச் சட்டத்தைக் கூறலாம்.

### 7. விழைவு அறிக்கைகள் (Declarations)

பல நாடுகள் கூடித் தங்கள் எண்ணத்தையோ கருத்தையோ அல்லது விழைவையோ, அல்லது எதிர்காலத்தில் தாங்கள் நடந்துகொள்ளப் போகும் முறையையோ ஒழுங்குபடுத்தி அறிக்கையாக பொதுவாக மற்ற உலக நாடுகளுக்குத் தங்கள் விழைவினை அறிவிப்பதால் இதனை 'விழைவு அறிக்கை' என அழைக்கிறோம். இவ் விழைவறிக்கைகள் வேறு சில காரணங்களுக்காகவும் வெளியிடப்படலாம். விழைவு அறிக்கைக்கு முதன்மையான எடுத்துக்காட்டாக 1856ஆம் ஆண்டின் பாரீஸ் விழைவு அறிக்கையைக் கூறலாம்.

## 8. செயல்வகைக் குறிப்பு (Modes Vivendi)

நாடுகளுக்கிடையே தற்காலிகமாக ஏற்படும் கருத்தொற்றுமை பின்னர் நிலையானதாகவும் முறையான வகையிலும் ஒப்பந்தமாக மாறும்வரை அந்தத் தற்காலிகக் கருத்து ஒற்றுமையை இடைக் காலத்தில் வழங்கும் பொருட்டுப் பதிவு செய்யப்படும் குறிப்பு ஆவணத்தையே 'செயல்வகைக் குறிப்பு' எனக் கூறுகிறோம்.

## 9. குறிப்பு மாற்றங்கள் (Exchange of Notes)

இது நாடுகளுக்கிடையே அவ்வப்போது நிர்வாக வசதிக்காகவும் நல்லெண்ணத்திற்காகவும் ஏற்படுத்திக் கொள்ளும் கருத்து மாற்றங்கள்.

## 10. இறுதிச் செயல் (Final Act)

ஏற்பு விதிகளைத் தோற்றுவிப்பதற்காகக் கூட்டப்படும் மாநாடு முடிவடைவதைப் பதிவு செய்யும் ஆவணத்தை இத்தலைப்பிட்டு அழைக்கிறோம். எடுத்துக்காட்டாக, 1968 – 69இல் உடன்படிக்கைகள் சம்பந்தப்பட்ட சட்டத்தைத் தோற்றுவிக்க வியன்னாவில் கூடிய மாநாட்டின் இறுதிச் செயல் குறிப்பு மாநாட்டு நடவடிக்கைகள். அதில் பங்கேற்ற நாடுகள் அல்லது நாட்டின் தலைவர்கள், கருத்து வாதத்தில் பங்கேற்ற அனுப்பாளர்கள் (Delegates) போன்ற விளக்கங்களை சுருக்கி உரைப்பதைக் கூறலாம்.

உடன்படிக்கை துவக்கத்திலிருந்து செயலுக்கு வரும் வரை பல கட்டங்களை அடுத்தடுத்துத் தாண்டி முன்னேற வேண்டி உள்ளது.

### 1. சார்பாளர்களை நியமித்தல்

உடன்பாட்டுக்கு உண்டான தரப்பு நாடுகள் உடன்பாட்டுப் பொருள் பற்றிய பேச்சு வார்த்தைகள் நடத்தவும், ஒரு முடிவுக்கு வரவும் தம் நாட்டின் சார்பாகச் செயல் படுவதற்குச் சார்பாளர்களை அனுப்புவது.

### 2. பேச்சு வார்த்தை நடத்தல்

இரண்டாவது கட்டமாக உடன்படிக்கைக்குண்டான பொருள்பற்றி சார்பாளர்கள் பேச்சு வார்த்தை நடத்தல்.

**3. கையெழுத்திடல்** (Signing)

உடன்படிக்கை செய்து கொள்ளுவதற்காகத் தூதுப் பணியாளர்கள் பேச்சு வார்த்தையால் முடிவுக்கு வந்த ஒப்பந்தத்திற்கு உடன்படிக்கை உருவம் கொடுத்து அதன் அடியில் கையெழுத்திடல் வேண்டும். அவ்வாறு அவர்கள் கையெழுத்திட்ட பின்னர்தான் அவ் வுடன்படிக்கை சட்ட பூர்வமாக அத் தரப்பினர்க்கிடையே கட்டுப்படுத்தும் வகையில் கடப்பாடுகளை உருவாக்கும்.

**4. ஏற்பு உறுதி** (Ratification)

கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கை, சம்பந்தப்பட்ட தரப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு உண்டான ஏற்பு விதியை வழங்க வேண்டும். அதன் பின்னரே அவ் வுடன் படிக்கை செயல் ஆக்கத்திற்கு வரும். உடன்படிக்கைகளுக்கு ஏற்பு உறுதி வழங்குவதை ஒவ்வொரு நாட்டின் உள்நாட்டுச் சட்டமும் நெறிப்படுத்தி உள்ளது. கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கைகளைத் தரப்பு நாடுகள் ஏற்பு உறுதி தந்து ஏற்று தான் தீர வேண்டும் என்பதில்லை. கீழ்க்கண்ட காரணங் களுக்காகத் தரப்பு நாடுகள் ஏற்பு உறுதி தருவதைத் தவிர்க் கலாம். அவைகளாவன :

(அ) உடன்படிக்கை செய்து கொள்ளுவதற்காக நியமிக் கப்பட்ட சார்பாளர்கள் தமக்களிக்கப்பட்ட அதிகார வரம்பு களை மீறி உடன்படிக்கை செய்து கொள்வது.

(ஆ) சார்பாளர்கள் எவ்வித சூழ்ச்சியின் காரணங்களால் ஏமாற்றப்பட்டு உடன்படிக்கை செய்து கொள்ளுவது.

(இ) உடன்படிக்கை எப் பொருள் பற்றியதோ அதை நடைமுறையில் செயலாற்ற இயலாமல் போவது.

(ஈ) சார்பாளர்களிடையே மன ஒருமைப்பாடின்றி உடன் படிக்கை செய்து கொள்ளுவது ஆகியவை ஆகும்.

**ஏற்பு உறுதியை மறுப்பதன் விளைவு**

ஏற்பு உறுதி பெறாத உடன்படிக்கை உயிரற்றது. எனவே செயலுக்கு வராது.

**5. ஏற்றல் அல்லது இணைதல்** (Accession or Adhesion)

சில நாடுகளிடையே செய்து கொள்ளப்பட்ட உடன் படிக்கைகளுக்கு வேற்று நாடு ஏதேனும் தரப்பு நாடு ஆக

விரும்பினால் உடன்படிக்கைக்குரிய மூல நாடுகளின் ஒப்புதலோடு தானும் புதுத் தரப்பு நாடாகலாம்.

### 8. செயலுக்கு வரல்

உடன்படிக்கையில் ஏற்பு உறுதி வழங்காமலேயே அவ்வுடன்படிக்கை செயலுக்கு வரலாமென்று ஒப்பந்தம் இருக்குமானால் கையெழுத்து ஆனவுடனே செயலுக்கு வரும். இரு நாடுகளுக்கு இடையே ஆன உடன்படிக்கை என்றால் இரு நாடும் ஒன்றுக்கொன்று ஏற்பு உறுதி வழங்கிய பின் செயலுக்கு வரும். அல்லது அவ் வுடன்படிக்கைக்குப் பல தரப்பு நாடுகள் இருக்குமானால் அவ் வுடன்படிக்கையில் கூறியுள்ளபடி எத்தனை நாடுகள் ஏற்பு உறுதி வழங்க வேண்டுமோ அத்தனை நாடுகளும் ஏற்பு உறுதி வழங்கிய பின் செயலுக்கு வரும்.

### பதிவு செய்தலும் வெளியிடுதலும் (Registration and Publication)

'ஐ. நா. அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளும் தங்களுக்குள்ளே செய்து கொள்ளும் உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும், எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் ஐ. நா. அமைப்பின் செயலகத்தில் பதிவு செய்துகொண்டு வெளி உலகுக்கு வெளியிட வேண்டும்' என்று ஐ. நா. சாசனத்தின் 102வது பிரிவு கூறுகிறது. இவ்வாறு எந் நாடேனும் பதிவு செய்து கொள்ளவில்லையென்றால் அவ் வுடன்படிக்கை ஐ.நா.வின் எந்த அமைப்புகளின் முன்னுமோ அல்லது உலக நீதிமன்றத்திலோ செல்லாது.

ஐ.நா.வின் இப் பிரிவிற்குக் காரணம் ரகசிய ஒப்பந்தங்களைத் தவிர்ப்பதும், ஒப்பந்தம் செய்து கொண்டபின் அவற்றிலிருந்து பின்வாங்குவதைத் தவிர்க்கவுமே ஆகும்.

### பொருத்துதலும் நிறைவேற்றலும் (Application and Enforcement)

இதுவே உடன்படிக்கையை உருவாக்கும் பணியில் இறுதிக் கட்டம். உடன்படிக்கைகளைச் செய்து கொண்டால் மட்டும் போதாது. தரப்பு நாடுகள் அதைச் செயலுக்குக் கொண்டுவரத் தேவையான தொடர்புப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக, அவ் வுடன்படிக்கைகளைச் செயலுக்குக் கொண்டு வரத் தேவையான அளவிற்கு உள்நாட்டு சட்டத்தை உருவாக்கவோ அல்லது மாற்றி அமைக்கவோ தரப்பு நாடுகள் கடமைப்பட்டவை.

**காப்பு ஒதுக்கம்** (Reservations)

ஒரு உடன்படிக்கை செயலுக்கு வரத் தரப்பு நாடுகள் ஏற்பு உறுதி வழங்க வேண்டும் என்று கண்டோம். ஆனால் இவ் ஏற்பு விதி நிபந்தனையின் பேரில் வழங்க இயலாது. ஏனென்றால் நிபந்தனைகளின் பேரில் ஏற்பு உறுதி வழங்குவது மூல உடன் படிக்கையிலிருந்தும் பிறிதானதொரு புதிய உடன்படிக் கையை உருவாக்குவதற் கொப்பாகும். உதாரணமாக, ஹே-பான்சிஃபோட் உடன்படிக்கையை அமெரிக்க நாட்டு சான்றோர் அவை (Senate) ஏற்கும்பொழுது அந்த மூல உடன் படிக்கையில் சில திருத்தங்களைச் செய்து மாற்றி அமைத்தது. இவ் வுடன்படிக்கைக்கு மற்ற தரப்பு நாடான இங்கிலாந்து இவ்வாறு திருத்திய செயலை ஏற்றுக் கொள்ள மறுத்து மூல உடன்படிக்கை மாண்டு போனதாகக் கூறிற்று.

ஆனால் ஒரு நாடு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள சில கோட்பாடுகளுக்குக் கட்டுப்படாமல் மற்றக் கோட்பாடுகளுக்கு மட்டுமே கட்டுப்படும் என்று கூறி ஏற்பு உறுதி வழங்கலாம். இதனை அந்த நாடு தன் பாதுகாப்பையும் நன்மையையும் கருதி ஒதுக்கிவைத்து செயல்படுவதால் 'காப்பு ஒதுக்கம்' என்று அழைக்கலாம். இதனை 1, அம் மூல உடன்படிக்கையிலேயே ஒரு பிரிவில் வெளிப்படையாகக் கூறி செயல்படுத்தலாம். அல்லது,

2. இதற்கென தரப்பு நாடுகள் தனி ஒப்பந்தமும் செய்து கொள்ளலாம். அல்லது,

3. முறைப்படி ஏற்படுத்திக் கொண்ட காப்பு ஒதுக்கத்தின் மூலமும் நிறைவேற்றலாம்.

உலக நீதிமன்றம் காப்பொதுக்கம் பற்றி மனித சிதைவு பற்றிய 1948ஆம் ஆண்டின் ஏற்பு விதிகளை யொட்டிய காப்பு ஒதுக்கம் என்னும் வழக்கில் (Reservations to Genocide convention of 1948), கீழ்க்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளது.

1. மேற்கண்ட மாநாட்டின் ஏற்பு விதிகளில் காப்பு ஒதுக்கத்திற்கு வகை செய்யும் வகையில் எவ் விதியுமில்லை என்றாலும் நாடுகள் தங்கள் நலனைக் கருதி ஒரு பகுதியை விடுத்துப் பிற பகுதியை ஏற்கலாம்.

ஆனால் இந்தக் காப்பு ஒதுக்கம் மாநாட்டுப் பொது விதிகளைப் பாதிக்காததாகவும் ஒத்துப்போகக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

2. அவ்வாறு வாய்ப்பில்லாதவிடத்து எந் நாடேனும் காப்பொதுக்கம் செய்து ஏற்குமானல் அது ஏற்றதாகவும் கருதப்படமாட்டாது. அந்த நாடு தரப்பு நாடும் ஆகாது.

3. பொது மாநாடுகளில் தரப்பு நாடுகளாக இருந்து விட்டு அதற்குக் கையெழுத்திடாமலோ அல்லது ஏற்பு உறுதி வழங்காமலோ இருந்து வரும் நாடு, வேறு எந் நாடேனும் அம் மாநாட்டின் பொது விதிகளைக் காப்பு ஒதுக்கம் செய்து ஏற்குமானல் அத்தகைய காப்பு ஒதுக்கங்களை எதிர்க்க இயலாது.

**உடன்படிக்கைகளின் மறு ஆய்வு** (Revision of Treaties)

உடன்படிக்கைத் தரப்பு நாடுகளிடையே கடப்பாடு உருவாக்குவதனுல் சாதாரணமாக அவற்றை மாற்றி அமைத்தலோ மறு ஆய்வு செய்தலோ இயலாது. ஆனுல் சில நேரங்களில் சில சூழ்நிலைகளின் மாற்றம் காரணமாகத் தரப்பு நாடுகளில் எதுவேனும் தேவையற்ற தொல்லைகளுக்கு உள்ளாவது உண்டு. எனவே நியாய நெறிகளின் அடிப்படையில் அத் தொல்லைகளுக்கு உள்ளான நாடு மற்ற தரப்பு நாட்டை உடன்படிக்கையை மறு ஆய்வு செய்தும் முடிவு செய்யப்பட்ட நாட்டெல்லைகளையும் ஆள் நிலத்தையும் மாற்றியமைக்குமாறும் வேண்டுவது உண்டு. சில வேளைகளில் உடன்படிக்கையிலேயே மறு ஆய்வுக்கான வழிவகைகளை வகுப்பதும் உண்டு. அதன் படி அந்த உடன்படிக்கை வசதிபோல் எந்தக் காலத்திலோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகோ அல்லது குறிப்பிடப் பட்டுள்ள கால கட்டங்களிலோ மறு ஆய்வு செய்யப்படலாம்.

**உடன்படிக்கைகளின் தகுதி**

உள் நாட்டு ஒப்பந்தச் சட்டங்களில் வாணிக ஒப்பந்தங் களில் தரப்பினர்கள் தரும் ஒப்புதல் சட்டப்படி நியாயமானதாக இருந்தால் மட்டுமே அதனை ஒட்டி ஏற்பட்ட வாணிப ஒப்பந்தமும் செல்லத்தக்கதாகும். நாடுகளிடையே ஏற்படும் உடன்படிக்கைகளும் அதைப் போன்றவைகளே. எனவே நாடுகள் தரும் சம்மதமும் எல்லா இயலாமைகளுக்கும் (Incapacities) அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

இதனையொட்டி வியன்ன மாநாடு மாகாணங்களின் அடிப் படையில் உடன்படிக்கைகள் செல்லாமல் போகலாம் என்று கூறி உள்ளது.

1. **உடன்படிக்கையில் ஈடுபடும் ஆற்றலின்மை** (Incapacity to Enter into Treaties.)

உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்காக நியமிக்கப் பட்ட சார்பாளர்கள் தங்கள் அதிகார வரம்பு மீறிச் செய்து கொண்ட உடன்படிக்கைகள் செல்லாது. ஆனால் வியன்னு மாநாட்டின் 46-வது ஏற்பு விதி, இதற்குச் சில நிபந்தனைகளை விதிக்கிறது.

2. **தவறுகள்**

உடன்படிக்கை சம்பந்தப்பட்ட பொருள் பற்றித் தரப்பு நாடு எதுவேனும் தவருன கருத்தின் அடிப்படையிலோ தேவை யான விளக்கங்களைத் தெரிந்து கொள்ளாமலோ செயல் பட்டிருந்தால் அத்தகைய உடன்படிக்கைகளும் செல்லாது. (ஏற்பு விதி-48)

3. **மோசடி** (Fraud)

உடன்படிக்கைக்குண்டான தரப்பு நாடுகளில் எதுவேனும் மற்ற தரப்பு நாட்டை மோசடியாக சில செயல்களைச் செய்தோ அல்லது செய்திகளை நம்பவைத்தோ செய்து கொண்டிருந் தால் அத்தகைய உடன்படிக்கைகள் செல்லாது. (ஏற்பு விதி-49).

4. **ஊழல்** (Corruption)

உடன்படிக்கைக்குண்டான தரப்பு நாடுகளில் ஒரு நாடு மற்ற தரப்பு நாட்டின் சார்பாளருக்குக் கையூட்டுக் கொடுத்து உடன்படிக்கை செய்து கொண்டிருக்குமேயானுல் அதுவும் செல்லாது. (ஏற்பு விதி-50).

5. **வலிமை காட்டல்** (Coercion)

உடன்படிக்கைக்குத் தரப்பு நாட்டுச் செயலாளருக்கு வன் முறை காட்டியோ அல்லது அவ் வுடன்படிக்கைக்கு ஒப்புக் கொள்ளாவிட்டால் ராணுவ பலம் கொண்டு அழிவு ஏற்படுத்து வோம் என்று அச்சுறுத்தியோ செய்து கொண்ட உடன் படிக்கையும் செல்லாது (ஏற்பு விதி 51-52).

6. மக்களால் பொதுவாக ஏற்கப்பட்டு காலப் போக்கில் மக்கள் மாற்றிக் கொள்ள முடியாத வகையில் நன்னெறிகளாக மாறிவிட்ட கொள்கைகளுக்கு முரண்பாடான வகையில் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகளும் செல்லாது.

**உடன்படிக்கைகள் காலாவதி அடைதல்** (Termination of Treaties)

உடன்படிக்கையை இரண்டு விதமாக முடிவுக்குக் கொண்டு வரலாம்.

1. சட்ட மூலமாக செயலிழக்கச் செய்தல்.

2. தரப்பு நாடுகளின் செயல் அல்லது செயல்களின் மூலமாக செயலிழக்கச் செய்தல்.

**1. சட்ட மூலமாக செயலிழக்கச் செய்தல்**

(அ) உடன்படிக்கையின் தரப்பு நாடுகள் இரண்டாக இருந்தால் அத் தரப்பு நாடுகள் எவையேனும் தனது நாட்டுத் தன்மையையும் நபரத்துவத்தையும் இழந்து அழிந்து போதல்.

(ஆ) உடன்படிக்கைக்கு உரிய தரப்பு நாடுகளுக்குள் போர் மூளுதல்.

(இ) மனிதாபிமான காரணங்களுக்கன்றி வேறு காரணங்களுக்காக இரு நாட்டு உடன்படிக்கையில் ஏதேனும் ஒரு தரப்பு நாடு உடன்படிக்கையின் கோட்பாடுகளை மீறுமானால் அவ் வுடன்படிக்கை செயலிழந்துபோகும் (ஏற்பு விதி. 60).

(ஈ) அவ் வுடன்படிக்கையைச் செயல் படுத்துவதற்கு அடிப்படையான பொருள் நிரந்தரமாக மறைந்தோ அல்லது அழிந்தோ போவதன் மூலம் அவ் வுடன்படிக்கையை நிறைவேற்றுவதில் இயலாமை ஏற்படுமானால் அதன் காரணமாக அந்த உடன்படிக்கை செயலிழந்து போகும். ஆனால் இங்குக் கூறப்பட்டுள்ள காரணம் தரப்பு நாட்டின் தவறான நடவடிக்கையினால் நிகழ்ந்திருக்கக் கூடாது. (வியன்னா மாநாட்டு ஏற்பு விதி—61)

(உ) **'உடன்படிக்கை செய்து கொள்ளும்பொழுது அதனையொட்டி அதற்கு ஆதாரமாக நிலவிய சூழ்நிலைகள் எவ்வளவு காலம் தொடர்ந்து இருக்கின்றனவோ அதுவரையில்தான் அவ் வுடன்படிக்கை கட்டுப்படுத்தும் செயலாற்றல் உள்ளது எனும் கொள்கை.'** (Conventio Omnis Intelligitur Rebus - Sic Standibus): மேற் கண்ட கொள்கையின் மூலம் எதன் காரணமாக உடன்படிக்கைகள் செய்துகொள்ளப் படுகின்றனவோ அவற்றில் அடிப்படையான மாறுதல் ஏற்படுமானால் அதைக் காரணமாக வைத்து, அவ் வுடன்படிக்கையை முடித்துக் கொள்ளலாம் என்ற கருத்து உணரப்படுகிறது. இதனையொட்டி உடன்படிக்கைகள் மூலம்

ஏற்படக்கூடிய கடப்பாடுகள் அதற்குண்டான அவசியமான சூழ்நிலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாத வரையில்தான் செயலாற்றல் உடையவை என்றும் மற்ெருரு கொள்கை விளங்கி வருகிறது. (Clausula Rebus - Sic Standibus)

இந்த இரண்டாவது கொள்கையை 1966இல் உலக சட்டக் குழு நிராகரித்து விட்டது. இப் பொருள் தற்போது வியன்னு மாநாட்டின் 62வது ஏற்பு விதியில் ஆளப்படுகிறது. இவ் விதியின்படி மேற் கூறிய கொள்கை தற்போது ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செயல்பட முடியும்.

6. ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குட்பட்டு செய்து கொள்ளும் உடன்படிக்கை அந்த காலகட்டம் முடிந்ததும் செயலிழந்துவிடும்.

**2. தரப்பு நாடுகளின் செயல் அல்லது செயல்களின் மூலமாகச் செயலிழக்கச் செய்தல்**

1. உடன்படிக்கையில் ஏற்கனவே எத் தரப்பு நாடேனும் விலகிக் கொள்ள விரும்பினுல் விலகிக் கொள்ளலாம் என்று கூறியிருக்குமானுல் அதன்படி விருப்பம் அற்ற நாடுகள் மற்றத் தரப்பு நாடுகளுக்குத் தெரிவித்துவிட்டு விலகிக் கொள்ளலாம். (ஏற்பு விதி-54)

2 ஏதேனும் பொருள்பற்றி ஏற்கனவே உடன்படிக்கை இருந்து அதே பொருள்பற்றி அந் நாடுகளுக்கிடையே பொது உடன்படிக்கை ஏற்படுமானுல் பழைய உடன்படிக்கை செயலிழந்ததாகக் கருதப்படும். (ஏற்பு விதி-53).

**உடன்படிக்கைகளுக்குப் பொருள் விளக்குதல்**

உடன்படிக்கைகள் தரப்பு நாடுகளால் நியாயமாக கடமை தவருமல் செயல்படுத்தப்படும்வரை எவ்வித சிக்கலும் இல்லை. ஆனுல் தரப்பு நாடுகள் கடமை தவறும்போதோ கருத்து வேறுபாடு கொள்ளும்போதோ சிக்கல் எழுவதுண்டு. அப்பொழுதெல்லாம் உலக நீதிமன்றத்தாலோ நாடுகளிடையே ஆன தொழில் நுணுக்க அமைப்புகளாலோ அல்லது ஐ. நா. அமைப்புகளாலோ அல்லது அதற்கென நியமிக்கப்படும் சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய குழுக்களாலோ உடன்படிக்கைகளுக்குப் பொருள் விளக்கம் தரவேண்டிய அவசியம் எழுதல் உண்டு. பெரும்பாலான உடன்படிக்கைகளின் பின்னிணைப்புகள் அவ் வுடன்படிக்கைகளுக்கு எவ்வாறு பொருள் விளக்கம்

கொள்ள வேண்டும் என்பது பற்றிக் கூறுவது உண்டு. உடன்படிக்கைகள் பல்வேறு மொழிகளில் இருக்குமானல் எம் மொழியிலுள்ள உடன்படிக்கையைப் பொருள் விளக்கம் கொள்வதற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் அவ் வுடன்படிக்கையிலேயே கூறி விடுவது உண்டு.

உடன்படிக்கைகளைப் பொருள் விளக்கம் கொள்வதில் சில பொதுக் கொள்கைகளைப் பின்பற்றுவது உண்டு. அவைகளாவன:

1. **இலக்கண ரீதியான பொருள் விளக்கம்** (Gramatical Interpretation): இதன்படி உடன்படிக்கையில் வரும் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் நேரிடையானதும், இயற்கையானதுமான பொருளையே கொள்ள வேண்டும். ஆனல் இவ்வாறு முற்றிலும் இலக்கண ரீதியாகப் பொருள் கொள்வது சில வேளைகளில் விபரீதமான அல்லது உடன்படிக்கையின் மற்றப் பகுதிகளிலிருந்து கண்கூடான முரண்பட்ட பொருளைத் தருவதும் உண்டு. அப்பொழுதெல்லாம் தரப்பு நாடுகள் எதை மனதில் கருதி உடன்பாடு செய்து கொண்டனவோ அதனடிப்படையில் பொருள் விளக்கம் கொள்ளுதல் வேண்டும்.

2. **உடன்படிக்கையின் நோக்கமும் சூழ்நிலைகளும்**: உடன்படிக்கையின் பொருள் விளக்கம் கொள்ளுவதில் எதையேனும் பற்றி சந்தேகம் ஏற்படுமானல் உடன்படிக்கை செய்து கொள்ளுவதற்கான நோக்கம், செய்து கொண்ட சூழ்நிலை இவற்றின் அடிப்படையில் பொருள் கொள்ளலாம்.

3. **நியாயமான காரண காரியங்களின் அடிப்படையில் பொருள் விளக்கம் கொள்ளுதல்**: உடன்படிக்கைகளை விளக்கும்போது அதில் கண்டுள்ள சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் நியாயமான தகுந்த பொருள் கொள்வதோடு, உடன்படிக்கைகளின் பல பகுதிகளுக்கும் ஒன்ரோடொன்று முரண்பாடில்லாத பொருளையே கொள்ள வேண்டும். இதனடிப்படையில் நாட்டிடைச் சட்டத்திற்குப் பொருந்தும் வகையில் உடன்படிக்கையின் பொருள் விளக்கம் காண வேண்டும்.

நாடுகள் தங்கள் கோன்மையைக் கட்டுப்படுத்திக் கொள்வதாயின் உடன்படிக்கையிலேயே வெளிப்படை

யாக உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும். அவ்வாறு இல்லாதபோது நாடுகள் தங்கள் கோன்மையைக் கட்டுப்படுத்த ஒப்புக்கொள்ளமாட்டா என்பதே உட்கிடையாக அமைந்த பொருளாகும். எனவே ஆவண வாசகத்தில் பொருள் மயக்கம் காணும்போது, நாடுகளின் கோன்மையை, கட்டுப் படுத்தாத முறையிலும் அவைகள்மீது கடினமான கடப்பாடு களையோ, சுமைகளையோ ஏற்றாத முறையிலும் பொருள் கொள்ள வேண்டும். மேலும் உடன்படிக்கையில் தனித்த வாசகப் பகுதிகள் உண்டாயின், அவை பொதுவான வாசகப் பகுதியைக் கட்டுப்படுத்தும்.

4. **செயற்கூறு பொருள் விளக்கம்:** உடன்படிக்கைகள் சில செயல் வகைகளுக்காகவே செய்துகொள்ளுவது ஆகும். எனவே உடன் படிக்கையின் எப் பகுதியேனும் நோக்கத்திற்கு முரண்பாடாக அர்த்தமற்ற பொருள் தருமானால் அதை ஒதுக்கிவிட்டு ஆக்க பூர்வமான தகுந்த பொருள் கொள்ள வேண்டும்.

**புறப் பொருளின் அடிப்படையில் பொருள் கொள்ளுதல்:** பொதுவாக உடன்படிக்கையின் வாசகத்தின் அடிப்படையிலேயே பொருள் கொண்டபோதிலும் சில வேளைகளில் பொருள் விளக்கம் கொள்வதற்குக் கீழ்க்கண்ட புறப் பொருள்களையும் கருத்தில் கொள்ளலாம்.

1. அவ் வுடன்படிக்கைக்குத் தரப்பு நாடுகளின் இடையி லேயோ அல்லது மூன்றும் நாடுகளுடனோ செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகள், அவற்றின் கடந்த கால வரலாறு, அதை யொட்டி வரலாற்றில் காணும் வழக்காறு இவற்றைக் கருத்தில் கொள்ளுவது.

2. உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்னர் துவக்க நிலையில் நடந்த கருத்து வாதங்கள், திருத்த வரைவுகள் இவற்றைக் கருத்தில் கொண்டு பொருள் விளக்கம் கொள்ளுவது.

## பகுதி VI

# 31. உலக நாடுகள் மன்றம்

## (League of Nations)

இருபதாம் நூற்றாண்டின் துவக்க முதலே உலகின் பல் வேறு நாடுகளில் எல்லா நாடுகளையும் உள்ளடக்கியதும் மனித சமுதாயத்தின் நலனை வளர்க்கக் கூடியதும் பொது வானதுமாகிய அமைப்புத் தேவை என்ற கருத்து உணரப் பட்டு வலிவு பெற்று வளர்ந்து வந்தது. உலகப் பொது அமைப்பு என்பது நாடுகளின் கோன்மையைக் குறைக்க வல்லது. நாடுகளின் கோன்மையின் முழு செயல் திறனைக் கட்டுப்படுத்தாத உலகப் பொது அமைப்புக்கள் முழு வெற்றி பெற முடியாது என்பதனை உலக நாடுகள் மன்றமும், ஐ. நா. அமைப்பும் தங்கள் நோக்கங்களில் முழு வெற்றி பெறாததி லிருந்தே கண்டறியக் கூடும்.

உலகப் பொது அமைப்புக்கள் வெற்றி பெற, நாடுகள் தங்களின் போரிடும் உரிமை, தங்களிடையேயுள்ள சிக்கல்களைத் தாங்களே தம் விருப்பம்போலத் தீர்த்துக்கொள்ளும் உரிமை, நாட்டிடைச் சட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை மறுக்கும் உரிமை இவைகளையாவது உலக சமுதாயத்தின் நன்மைகளைக் கருதி உலகப் பொது அமைப்பினிடம் ஒப்படைக்க வேண்டும். அப்போதுதான் உலகப் பொது அமைப்பு ஆற்றலுடன் செயல்பட முடியும்.

உலகப் பொது அமைப்புக்கள் முழு உலகத்துவம் (Universality) பெற்று இயங்க வேண்டுமானால் அந்த உலகப் பொது அமைப்பில் எல்லா நாடுகளும் உறுப்பினர்களாக இருத்தல் இன்றியமையாதது. அத்துடன் அவை வெளியேறவோ, வெளியேற்றப்படவோ எவ்வித வாய்ப்பும் இருத்தலாகாது.

இத்தகைய கட்டாய உறுப்பினர் தன்மையுடன் தேவையான கடமைகளும் இணைக்கப்படுமேயானால் அந்த உலகப் பொது அமைப்பு வெற்றியுடன் செயல்பட வாய்ப்புண்டு. ஆனால் இத்தகு கருத்துக்கள் நாடுகளின் கோன்மைக்கு முற்றிலும் மாறுபட்டது. எனவே உலக நாடுகள் மன்ற சாசனமோ, ஐ. நா. அமைப்பின் சாசனமோ மேற்கூறிய கருத்துகளின் அடிப் படையில் அமையவில்லை.

உலக நாடுகள் மன்றம் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தை மூப் பிரிவுகளாகப் பிரிக்கலாம் :

1. முதல் பிரிவு, மூன்று நான்கு நூற்றாண்டுகளை உள்ளடக்கியது. இக்காலத்தில் ரோமானியப் பேரரசு என்ற பெயரின் கீழிருந்த நாடுகள் பொதுத் தன்மையிழந்து சிதறித் தனி நாடுகளாயின. இந்த மாற்றங்கள் 1815ஆம் ஆண்டுவரை தொடர்ந்தது.

2. இரண்டாவது பிரிவு, வியன்னா கூட்டம் துவங்கிய 1815 முதல் முதல் உலகப் போர் 1914இல் துவங்கியது வரை உண்டான ஒரு நூற்றாண்டை உள்ளடக்கியது. இக் காலத்தில் போர் ஒழிப்பு முயற்சியில் ஏற்பட்ட வளர்ச்சியைக் கீழ்க் காணும் வகையில் தொகுக்கலாம்.

1. உலகத்துவத்தைத் (Universalism or Internationalism) தோற்றுவிப்பதற்கான சிந்தனைகளும், முயற்சிகளும்.

2. ஐரோப்பிய நாடுகள் கலந்துறவாடி ஆலோசனைகள் செய்து முடிவெடுக்கும் பண்பாட்டின் வளர்ச்சி.

3. மூன்றாவதாக, நாட்டிடைச் சட்டத்தில் ஏற்பட்ட மாறு பட்ட முன்னேற்றமான வளர்ச்சி.

4. அமைதிக் கருத்துக்கேற்பட்ட வளர்ச்சியும் வலிவும்.

மூன்றாவது பிரிவு 1914 முதல் 1918 வரையிலான ஐந்து ஆண்டுகளை உள்ளடக்கியது. இக் காலத்தில் ஏற்பட்ட குறிப் பிடத்தக்க வளர்ச்சிகளாவன:

1. ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடு களில் 1915ஆம் ஆண்டு அமைதி வழிக் கருத்துகள் தோன்றி வளர்ச்சியும், வலிவும் பெற்று பல இயக்கங்களையும் மக்கள்

தோற்றுவித்தனர். 1951ஆம் ஆண்டு மே திங்களில் பிரிட்டிஷ் உலகக் கழகம் (British League of Nations Society) தோற்று விக்கப்பட்டது.

2. 1917ஆம் ஆண்டு கோடை காலத்தில் போப்பாண்டவர் பதினைந்தாம் பெனடிக்ட் போர் நாடுகளுக்கு அமைதி வழி வலியுறுத்தி அறிவிப்பு விடுத்தார்.

3. 1918ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5ஆம் நாள் பிரிட்டிஷ் தலைமை அமைச்சர் லாயிட் ஜார்ஜ் தமது அரசின் போர்க் கொள்கைகளை வெளியிட்டார். அதுவும் குறிப்பிடத் தக்கது.

4. அதேபோல் இக் காலத்தில் ஐக்கிய அமெரிக்க மக்களாட்சித் தலைவர் உட்ரோ வில்சனும் தம் நாட்டு சட்டப் பேரவை (Congress) முன்னர் அமெரிக்க நாட்டின் போர்க் கொள்கைகளென பதினான்கு உட்கோள்களை (Points) அனுப்பி வைத்தார்.

## உலக நாடுகள் மன்றத்தின் தோற்றம்

முதல் உலகப் போர் துவங்கியவுடனே 1915ஆம் ஆண்டில் போரினைத் தவிர்க்கும் பொருட்டு இங்கிலாந்தில் பலர் வைக்கவுன்ட் ப்ரைஸ் (Viscount Bryce) என்பவரின் தலைமையில் கூடி 'போர்த் தவிர்ப்புக் கருத்துகள்' என்று ஒரு துண்டறிக்கையை வெளியிட்டனர். இதேபோல் ஐக்கிய அமெரிக்காவிலும் மற்றொரு இயக்கம் 'அமைதி காணும் மன்றம்' (The League to enforce Peace) எனும் பெயரில் முன்னாள் மக்கள் தலைவர் வில்லியம் டேஃப்ட் (William Taft) அவர்களின் தலைமையில் கூடி இயங்கி வந்தது.

முதல் உலகப் போர் முடிவினையொட்டி நடந்த அமைதி மாநாட்டில் உலக நாடுகள் மன்ற அமைப்பிற்கான சாசன வரைவுகள் (Draft Covenents) ஆராயப்பட்டு இறுதியாக உலக நாடுகள் மன்றத்திற்கான சாசனம் 1919ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ஆம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## உலக நாடுகள் மன்றம், உறுப்பினர் நிலை

உலக நாடுகள் மன்ற சாசனத்தின் 1வது பிரிவின்படி, உலக நாடுகள் மன்றம் துவக்க உறுப்பினர்களையும் (Original Members) பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட உறுப்பினர்

களையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது.

**துவக்க உறுப்பினர்கள்**

துவக்க உறுப்பு நாடுகள் என்பது இம் மன்றத்தைத் தோற்றுவிப்பதில் பங்கு கொண்டு செயல்பட்ட நாடுகளையும், பின்னர் இதன் சாசனத்தை ஏற்கும் விருப்பத்தை வெளியிட்டு சேர்த்துக் கொள்ளப்பட்ட நாடுகளையும்—சுருக்கமாகக் கூறப் போனால் சாசனத்தின் பின்னிணைப்பில்(Annexe) கூறப்பட்டுள்ள நாடுகளாகும்.

**துவக்க உறுப்பினரல்லாதவர்கள்** (Non Original Members)

நன்னுளுகை பெற்ற குடியேற்ற நாடுகளோ மற்ற எந் நாடோ தனது உலகக் கட்டுப்பாடுகளை மதித்து நிறை வேற்றுவதாகவும், உ. நா. மன்றத்தின் கொள்கைகளையும் ஏற்றுக் கருத்தில் கொண்டு செயல்பட உறுதி அளிக்கிறதோ அந் நாட்டினை உ. நா. மன்றப் பேரவையின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் விரும்பினுல் உறுப்பு நாடாக ஏற்கலாம் என்று சாசனத்தின் 1 (2) பிரிவு கூறுகிறது. அதனடிப்படையில் பெருமளவு நாடுகள் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டன வெனினும், ஆர்மீனியா அசர்பெயிஜன் (Azerbaidjan), ஜார்ஜியா (Georgia), லீச்டென்ஸ்டெயின் (Liechtenstein), உக்ரெய்ன் (Ukraine) ஆகிய நாடுகள் உறுப்பு நாடுகளாக ஏற்கப்படவில்லை.

**உறுப்பினர் நிலையினை முடித்தல்**

ஏற்கனவே உ. நா. மன்றத்தில் உறுப்பினராயிருந்த எந் நாடும் மூன்று வகைகளில் தன் உறுப்பினர் நிலையை முடித்துக் கொள்ளலாம். அவையாவன :

1. சாசனப் பிரிவு 1 (3)-ன்படி தன் விருப்பத்திற்கேற்பத் தானுக எந்த உறுப்பு நாடுகளும் விலகிக் கொள்ளலாம்.

2. சாசனப் பிரிவு 16 (4)-ன்படி உறுப்பு நாடுகள் சாசனக் கொள்கைகளையும் மீறினுல், உ. நா. மன்றத்திலிருந்து வெளி யேற்றப்படலாம்.

3. சாசனப் பிரிவு 1 (3)-ன்படி சாசனத்தைத் திருத்தும் போது ஏற்படும் புதுமாற்ற நிலைகளுக்குத் தங்களை உட்படுத்திக்

கொள்ள விரும்பாத உறுப்பு நாடுகள் தாங்கள் விலகிக் கொள்ள விரும்பும் அறிவிப்பைக் கொடுத்துவிட்டு, தான் ஒப்புக் கொண்டுள்ள கடப்பாடுகளை (Obligations) நிறைவேற்றிக் கொடுத்துவிட்டு விலகிக் கொள்ளலாம்.

**சட்டத்தில் உ. நா. மன்றத்தின் தன்மை**

உ. நா. மன்றத்திற்கென்று குறிப்பிட்ட நிலப் பரப்பும் நேரடி ஆளுகைக்குட்பட்ட மக்களும், நாடுகளுக்குண்டான கோன்மையும் இல்லையெனினும் அது ஒரு தன்னியக்கம் பெற்ற உலக நபர் என்பது கீழ்க்காணும் காரணங்களால் அறியலாம்.

1. உ. நா. மன்றம் நாடில்லையெனினும் நாடுகளின் தொகுப்பு.

2. கோன்மை பெற்ற நாடுகள் மட்டுமே பெறக்கூடிய உரிமைகளையும், கடமைகளையும் உ. நா. மன்றம் பெற்றிருந்தது. உதாரணமாக, ஒப்பந்தங்கள் உடன்படிக்கை செய்யும் உரிமை, போர் தொடுக்கும் உரிமை ஆகியவற்றைச் சொல்லலாம். எனவே உ. நா. மன்றம் நாட்டுடைச் சட்டத்தில் ஒரு உலக நபர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**உ. நா. மன்றம் : அமைப்பு**

இம் மன்றம் ஒரு பேரவை (Assembly), ஒரு செயற்குழு (Council), நிலையான செயலகம் இவற்றைக் கொண்டு இயங்கி வந்தது. இவற்றுடன் உலகத் தொழிலாளர் அமைப்பும் (International Labour Organisation) உலக நிலை நீதிமன்றமும் (Permanent Court of International Justice) பெரிதும் தனித் தன்மையுடன் செயல்பட்டு வந்தன.

சாசனப் பிரிவு 26-ன்படி,

செயற் குழு உறுப்பினர்களனைவரையும் உள்ளடக்கி பேரவையின் பெரும்பான்மை உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்ளும் எந்தத் திருத்தமும் உ. நா. மன்ற சாசனத்திற்குத் திருத்தமாக அமையும்.

**பேரவை**

சாசனப் பிரிவு 3-ன்படி இது எல்லா உறுப்பு நாடுகளையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு உறுப்பு நாடும் 3 சார்பாளர்களைப் பேரவைக்கு அனுப்பலாம். ஒரு நாட்டிற்கு ஒரு வாக்குத் தான் உண்டு. பொதுவாகப் பேரவை ஆண்டிற்கு ஒரு முறையும் தேவைப்பட்டால் மேலும் கூடிவந்தது.

**பேரவையின் பணிகள்**

செயற் குழுவின் செயலாக்கத்திற்குட்படாத, சாசனத்தின் படி பேரவையின் செயலாதிக்கத்திற்கு உட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வது மற்றும் உலக அமைதியைக் கெடுக்கும் எச் செயலாயினும் அதையொட்டிய சிக்கல்களைக் களைந்து அமைதி காப்பது ஆகியவை ஆகும்.

**செயற்குழு—உறுப்பினர் நிலை**

சாசனத்தின் பிரிவு 4-ன்படி இதன் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். இதில் இரண்டு வகையான உறுப்பினர்கள் உண்டு. நிலையான உறுப்பினர்கள், நிலையற்ற உறுப்பினர்கள்.

1. **நிலையான உறுப்பினர்கள்:** உ. நா. மன்றத்தின் உறுப்பினர்களாயுள்ள வல்லரசு நாடுகள் செயற் குழுவில் நிலையான உறுப்பினர்கள். செயற்குழு தேவைப்பட்டால் பேரவை பெரும்பான்மை இசைவுடன் மற்ற நிலையான உறுப்பினர்களையும் புதிதாக ஏற்றுக் கொள்ளலாம்.

2. **நிலையற்ற உறுப்பினர்கள்:** நிலையற்ற உறுப்பினர்கள் பதினொரு பேர் இருந்தார்கள். இவர்களுள் ஒவ்வொரு ஆண்டும் மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூன்று ஆண்டுகள் உறுப்பினராயிருப்பர். நிலையற்ற பிரிவினருள்ளும் இரு வகையினர் உண்டு.

(i) மீண்டும் தேர்ந்தெடுக்கும் தகுதியற்ற உறுப்பினர்கள்.

(ii) மீண்டும் தேர்ந்தெடுக்கும் தகுதி பெற்ற உறுப்பினர்கள்.

நிரந்தரமல்லாத உறுப்பினர்களை மூன்றில் இரண்டு பங்கு பேரவை உறுப்பினர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கும் தகுதி பெற்றவர்கள் என்று ஏற்றுக் கொள்வார்களானால் அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட நாடுகள் இந்தத் தகுதியைப் பெறும்.

இதுவன்றி மூன்றாவது வகை உறுப்பினர்களும் உண்டு. சில தேவை ஏற்படும்போது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் சிலரை உறுப்பினர்களாக நியமிப்பதுண்டு. அவர்கள் அத் தேவையும், காலமும் முடிந்ததும் உறுப்பினர் தகுதியை இழந்து விடுவர் (Adhoc Representatives).

**செயலகம்**

செயலகம் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, செயற்குழுவால் நியமிக்கப்பட்ட பொதுச் செயலாளரையும், தேவையான பணியாளரையும் கொண்டிருத்தல் வேண்டுமென அச் சாசனத்தின் 6ஆம் பிரிவு கூறியுள்ளது. இதில் பணியாற்ற ஆண்—பெண் இரு பாலரும் தகுதி பெற்றவராவர்.

செயலகம் ஜெனீவாவில் இயங்கி வந்தது. இதில் பல்வேறு நாட்டைச் சார்ந்தவரும் பணியாட்களாக ஏற்கப் பட்டனர். இதில் பணியாற்றிய மக்கள் தங்கள் தாய்நாட்டுடன் உண்டான குடியுறவு, அரசியலுறவுகளைத் தொடர்ந்து பெற்றிருந்தபோதும், அந் நாடுகளின் தனிப் பலன்களைக் கருதிப் பணியாற்றுதல் கூடாது என்று ஏற்கப்பட்டது. அத்துடன் செயலகத்தின் உயர் மட்டப் பணிகள் எல்லா நாட்டினர்க்கும் முடிந்த அளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டு மென முயற்சி மேற்கொள்ளப்பட்டது. உ. நா. மன்றப் பணி யாளர்கள் அலுவல் பணிகளில் ஈடுபட்டிருக்கும்போது தூதுவச் சலுகைகளையும், உரிமைகளையும் பெறும் தகுதி பெற்றிருந்தனர்.

உ. நா. மன்றத்தின் பணிகள்.

உ. நா. மன்றத்தின் கொள்கைகள் இரண்டு.

1. **முதலாவதாக உலக அமைதி காத்தல்**

உ. நா. மன்ற உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் பிணக்கு களுக்குத் தீர்வு காணப் போர் முறையைக் கையாள்வதை விடுத்து உலக அமைதியையும், பாதுகாப்பினையும் காப்பாற்ற வழி வகுக்கச் செய்வதும், ஒத்துழைப்பினை நல்கச் செய்தலும்.

2. நாட்டிடைச் சட்ட அடிப்படையில் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு உடன்படிக்கைகளை மதித்து செயல்படுத்தி உலக அமைதிக்கு இழுக்கும், தீங்கும் ஏற்படாத நிலைகளை உருவாக்கு வதற்கு உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுதல்.

# 32. உலக அமைப்புக்களும் ஐ. நா. அமைப்பும்

## (International Organisations And United Nations)

**உலக அமைப்புக்கள்**

நாட்டிடைச் சட்டம் தற்போது மான்டேவிடோ மாநாட்டு ஏற்பு விதிகள்படி உலக அமைப்புக்களையும் உள்ளடக்கியது. அவைகளும் நாட்டிடைச் சட்டத்தில் நபர்கள் ஆகும். நாட்டிடைச் சட்டத்தில் உலக அமைப்புக்களின் நிலையைப் பற்றி மூன்று கோணங்களிலிருந்து காணலாம்.

1. உலக அமைப்புக்கள் ஒன்றுக்கொன்று உண்டான உறவுகள்.

2. உலக அமைப்புக்களுக்கும், நாடுகளுக்கும் இடையே யான உறவுகள்.

3. உலக அமைப்புக்களுக்கும், தனி மனிதர்களுக்கு மிடையேயான உறவுகள்.

ஒவ்வொரு உலக அமைப்பும் பல தரப்பினரைக் கொண்ட உடன்படிக்கையால் (Multilateral treaties) உருவாக்கப் பட்டவை. இத்தகைய உடன்படிக்கைகளையும், அவ் வமைப்பு களின் செயல்களை நெறிப்படுத்தும் விதிகளையும் உலக அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதலாம். இவ் வமைப் புக்களின் அமைப்புச் சட்டங்கள் நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து வேறுபட்டிருந்த போதும் பெருமளவு ஒருமைப்பாட்டைக் காணலாம்.

## உலக அமைப்புக்களின் அங்கங்கள் (Organs of International Organisations)

இவ் வமைப்புக்கள் பொதுவாக மூன்று அங்கங்களைப் பெற்றிருக்கின்றன.

1. செயற்குழு (Executive)
2. சட்டமியற்றும் பேரவை (Legislative or Assembly Organ)
3. நீதிமன்றம் (Judiciary)

### 1. செயற்குழு

உலக அமைப்புக்களின் செயற்குழுக்கள் நாடுகளின் செயற் குழுவைப் போன்றவை அல்ல. இவற்றின் நிர்வாகப் பணியை வேறு சில அங்கங்களோ, நாடுகளோ ஆற்றுகின்றன. உலக அமைப்பின் செயல்கள் ஒன்று செயல்பாட்டுத் தன்மைய தாகவோ அல்லது எக் கொள்கைக்காக அவை தோற்றுவிக்கப் பட்டனவோ, அக் கொள்கையை முன்னேற்றி வளர்த்துப் பரப்புவதாகவோ அமையும். பெரும்பாலும் கொள்கையைப் பரப்புவதுதான் அவை மேற்கொள்ளும் நடவடிக்கை. இதனை நாடுகளிடையே ஒத்துழைப்பும், ஒருமைப்பாடும் ஏற்படுத்து வதன் மூலம் இவை நிறைவு செய்கின்றன.

### 2. சட்டமியற்றும் பேரவை (Legislative or Assembly Organ)

அனைத்துலக அரங்கில் தற்போது சட்டமியற்றும் குழுக்கள் இருந்து சட்டத்திற்கிணையான தீர்மானங்களையும் ஏற்பு விதி களையும் தோற்றுவிக்கின்றன. எனினும் இவை சட்டத்தைப் போன்று நேரடியாக நாடுகளைக் கட்டுப்படுத்தும் வன்மை யற்றவை. இத்தகைய அங்கங்களுக்கு உதாரணமாக ஐ. நா. அமைப்பின் பொது அவை, உலக தொழிலமைப்புக் குழு (United Nations General Assembly—International Labour Council), உலக உடல் நல அமைப்பின் பேரவை (World Health Assembly) ஆகியவற்றைக் கூறலாம். ஆனால் இவற்றால் நிறை வேற்றப்படும் ஏற்பு விதிகளோ (Convention) தீர்மானங்களோ (Resolutions) உலகின் சட்டங்களாகக் கருதப்படமாட்டாது. (International Legislation)

### 3. நீதிமன்றம் (Judicial Organ)

உலக நீதிப் பணியை உலக நீதிமன்றம் (International Court of Justice) ஆற்றி வருகிறது. அதுவன்றி மற்றும் பல நியாயக் குழுக்களும் இப் பணியைப் பல்வேறு துறைகளில் ஆற்றி வருகின்றன.

இவ்வுலக அமைப்புக்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகச் செயல்படும் அனைத்துலக மாநாட்டை ஒத்தவையே. ஏனென்றால் மற்றெவ்விதப் பேரதிகாரமும் இவற்றிற்கில்லை. இவை உலக மனித சமுதாயத்தின் பொது நலங் கருதி நாடுகளால் மதிக்கப்படுதலால் சட்டபூர்வமாக உலக நாடுகளை விட மேலதிகாரம் கொண்ட (Super State) நாடுகளாகக் கருதி விடக் கூடாது.

**உலக அமைப்புக்களின் குணங்கள்**

உலக அமைப்புக்களையும் அவற்றின் தன்மை அல்லது குணங்களையும் அவற்றைத் தோற்றுவிக்கும் அமைப்புச் சட்டங்களே (Constitution) நன்ருக விளக்கி விடுகின்றன. அவற்றின் ஆற்றல், அதிகாரம் இவைகள் அமைப்புச் சட்டத்தால் ஒவ்வொரு அமைப்பின் செயல்களுக்குத் தக்க வகையில் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே அவற்றின் ஆற்றல் அவற்றைத் தோற்றுவிக்கும் அமைப்புச் சட்டத்தால் வரையறுக்கப்பட்டவை ஆகும். இவ் வகையில் இவற்றை நாடுகளோடு ஒப்பிட முடியாது. ஏனென்றால் நாட்டிடைச் சட்டத்தால் தடுத்துரைக்கப் படாத எல்லாக் காரியங்களையும், நாடுகள் தங்கள் ஆள் நிலத்திற்கு உள்ளும் வெளியும் செய்யும் ஆற்றல் பெற்றவை.

இவ்வுலக அமைப்புக்கள் நாட்டிடைச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள கடமைகளையும், உரிமைகளையும் கொண்டவை. இவ் வகை அமைப்புக்களின் கடமைகளும் உரிமைகளும் அவை என்ன நோக்கத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்டன என்பதையொட்டி அமையும். அவைகள் பொதுவாக அவற்றின் அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் என்று உலக நீதிமன்றம் இவற்றின் தன்மை பற்றிக் கூறியுள்ளது.

**உலக அமைப்புக்களின் அமைப்புச் சட்டம்**

வெவ்வேறு அமைப்புக்கள் தங்கள் நோக்கத்திற்குத் தகுந்தவாறு தத்தம் அமைப்புச் சட்டங்களைக் கொண்டுள்ளன. என்ருலும் அவை சில பொதுவான குணங்களைக் கொண்டுள்ளன. அவைகளாவன:

1. **தலைமை அலுவலகம் :** அவ் வமைப்புச் சட்டம் தனது அமைப்பின் தலைமை அலுவலகம் எங்கே அமைதல் வேண்டும் என்று குறிக்கும்.

2. **உறுப்பினர் நிலை :** ஒவ்வொரு அமைப்புச் சட்டமும் எந்தெந்த நாடுகள் அவ் வமைப்பின் துவக்க கால உறுப்பினர்கள் (Original Members), எத்தகு நாடுகளெல்லாம் பின்னர் உறுப்பி

னர்களாக சேர்த்துக் கொள்ளப்படலாம்; அதற்குரிய தகுதிகள், துவக்க கால உறுப்பினர்க்கும், பின்னர் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்படும் நாடுகளுக்குமிடையே ஏதேனும் வேறுபாடுகள் உண்டா என்பதை யெல்லாம் விளக்கிக் கூறுகின்றன.

3. **உறுப்பினர்களைச் சேர்க்கும் நிபந்தனை : வெளியேற்றல் - விலக்கல்** இவற்றில் எல்லா அமைப்புக்களும் ஒரே விதமான முறையை மேற்கொள்ளவில்லை யென்றாலும் ஒவ்வொரு அமைப்பின் அமைப்புச் சட்டமும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கான நிபந்தனை, உறுப்பினர்களை விலக்கும் ஆற்றல், வெளியேற்றுவது இவற்றைப் பற்றி விளக்கமாகக் கூறுகின்றன.

4. **அவற்றின் முதன்மையான அங்கங்களும், துணை அங்கங்களும்—**
(அ) **கொள்கை தோற்றுவிக்கும் குழு** : இக் குழு அவ் வமைப்பின் அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக அமையும். இவை தம் கொள்கையையும், அவற்றை நாடுகளிடையே பரப்பவும், ஏற்கச் செய்யவுமான தீர்மானங்களையோ, ஏற்பு விதிகளையோ நிறைவேற்றும். பொதுவாக இவை பேரவை (Assembly) அல்லது கூட்டவை (Congress) என்றழைக்கப்படும்.

(ஆ) **செயற்குழு** : இவை பெரும்பாலும் கொள்கை உருவாக்கும் அமைப்பு அதாவது பேரவையால் தேர்ந்தெடுக்கப்படும்.

(இ) **செயலகம்** : இவ் வமைப்பின் நிர்வாகத்தையும் செயல் பணிகளையும் மேற்கொள்ள ஒரு தலைமைச் செயலகமும் தேவையானால் கிளை அல்லது வட்டாரச் செயலகங்களும் (Regional Secretariates) இருப்பதுண்டு.

5. **வாக்குரிமை:** சாதாரணமாகப் பெரும்பான்மை வாக்கை வைத்தே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவா இல்லையா என்று முடிவெடுப்பது வழக்கம். ஆனால் குறிப்பிட்ட அமைப்பின் அமைப்புச் சட்டம் சில வேளைகளில் சில காரியங்களுக்குச் சிறப்புப் பெரும்பான்மை தேவை எனவும் கூறுவதுண்டு.

6. **செயல்முறை விதிகள்** (Procedural Rules): ஒவ்வொரு அமைப்பின் நிர்வாகத்திற்கும் செயல் பணிகளுக்கும் உதவியாக அமையும் பொருட்டுத் தேவையான துணை விதிகளை உருவாக்கும் ஆற்றலைக் கொள்கை வகுக்கும் குழுவிடம் ஒப்படைப்பதுண்டு. ஆனால் ஆண்டு நிதி அறிக்கை(Budget) யைப் பற்றிய விதி முறைகளை அமைப்புச் சட்டமே விளக்குவதுண்டு.

# 33. ஐக்கிய நாடுகள் அமைப்பு

இரண்டாவது உலகப் போரில் உலக நாடுகள் பெற்ற அனுபவத்தின் காரணமாக நாடுகள் உலக அமைதியைக் காக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தன. அதற்கு உலக நாடுகளை யெல்லாம் உள்ளடக்கும் வகையிலும், நாடுகளிடையே அமைதி காத்திட ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பை நல்கிடும் வகையிலும் ஒரு அமைப்பினை உருவாக்க வேண்டிய தேவை யையும் நாடுகள் உணர்ந்து செயல்படத் துவங்கின.

ஆனால் இவ் வகையில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த உலக நாடுகள் மன்றம் தனது நோக்கங்களில் வெற்றி பெற முடியாமல் போனதால், அதே போன்றதொரு அமைப்பைத் தேவையான மாற்றங்களுடன் திருத்தி யமைத்து ஏற்றுக் கொள்வதா அல்லது கூட்டாட்சி நாடுகளமைப்பில் ஒரு உலக பொதுக் கூட்டாட்சியை (World Federation) தோற்றுவிப்பதா அல்லது புதிதாக ஏற்பட்ட அனுபவங்களினடிப்படையில் புதிய தொரு அமைப்பைத் தோற்றுவிப்பதா என்பதில் பலவிதக் கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தன. இன்றைய ஐ. நா. அமைப்பு தோற்றம் பெறுமுன் பல மாநாடுகளில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளை யொட்டி அவ் வமைப்பு அமைந்தது. ஐ. நா. இறுதி வடிவம் பெறுவதற்கு முன்னர் மேற்கொண்ட முயற்சிகளாவன :

### 1. அட்லாண்டிக் சாசனம்

1941 ஆகஸ்ட் 14ஆம் நாள் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டிற்கும், பிரிட்டன் தலைமை அமைச்சர் சர்ச்சி லிற்கும் இடையே ஏற்பட்ட சாசனம். இதன் மூலம் இவர்கள் இராணுவ நடவடிக்கைகளையும், ஆள் நில ஆக்கிரமிப்புச் செய்வதையும் கண்டித்து, மக்கள் தங்களுக்குத் தேவையான

அரசியலமைப்பைத் தோற்றுவித்துக் கொள்ளும் உரிமை காக்கப்பட வேண்டுமெனவும் வெளியிட்டனர்.

**2. ஐக்கிய நாடுகளின் விளைவறிக்கை** (United Nations Declarations)

ஜப்பான் பசிபிக் கடலில் போர் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டவுடன் 26 நாடுகள் வாஷிங்டனில் கூடி அட்லாண்டிக் சாசனத்தில் கூறியுள்ள கருத்துகளை வலியுறுத்தி ஏற்றுக்கொண்டு மேலும் பகை நாட்டுடன் நாடுகள் போர் நிறுத்த ஒப்பந்தமோ, அமைதியோ ஏற்படுத்திக் கொள்வதில்லை எனவும் உறுதி ஏற்றன.

**3. மாஸ்கோ விளைவறிக்கை** (Moscow Declarations)

இங்கிலாந்து, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகள் மாஸ்கோவில் கூடி 1943 நவம்பர் 1இல் இந்த அறிக்கையை வெளியிட்டன. அனைத்துலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நிறுத்துவதற்கான அனைத்துலக அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டுமெனவும், உறுப்பு நாடுகள் பெரியதாயினும், சிறியதாயினும் சம கோன்மை பெற்ற உறுப்பினர்களாகவும், உறுப்பினராகும் உரிமை எல்லா நாடுகளுக்கும் வழங்கத்தக்க வகையில் இவ் வமைப்பு அமைதல் வேண்டுமெனவும் உணர்த்தின.

**4. டம்பர்ட்டன் ஓக்ஸ் மாநாடு** (Dumbarton Oaks Conference)

மாஸ்கோ விளைவறிக்கைக்குச் செயல் உருவம் தரும் நோக்குடன், இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா, சைனு ஆகிய நாடுகளை உள்ளடக்கிய மாநாடொன்று 1944 செப்டம்பரில் வாஷிங்டனில் கூடியது. இம் மாநாட்டில்தான் தற்போதைய ஐ. நா. வின் அமைப்பு எப்படி இருத்தல் வேண்டும் என்பது பற்றிய கொள்கைகள் வகுக்கப்பட்டன. இக் கொள்கைகள் டம்பர்ட்டன் ஓக்ஸ் கொள்கைகள் என அழைக்கப்பட்டன.

**5. யால்ட்டா மாநாடு** (Yalta Conference)

இம் மாநாட்டில் டம்பர்ட்டன் ஓக்ஸ் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஐ. நா. வின் அமைப்புச் சட்டத்தைத் தோற்றுவிக்க ஐம்பது நாடுகளை உள்ளடக்கிய மாநாடொன்றினைக் கூட்டுவதற்கு ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகியோர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

### 6 சான்ஃபிரான்ஸிஸ்கோ மாநாடு (San Francisco Conference)

இம் மாநாட்டில் ஐம்பது நாடுகள் பங்கெடுத்துக்கொண்டு, டம்பர்ட்டன் ஒக்ஸ் கொள்கைகளையும் யால்ட்டா ஒப்பந்தம் பற்றியும் ஆய்வு செய்த பின்னர் இறுதியாக ஐ. நா. வைத் தோற்றுவிக்கும் வகையில் அதன் சாசனமும் உலக நீதிமன்றச் சட்டமும் உருவாக்கப்பட்டு ஒரு மனதுடன் ஏற்கப்பட்டன. இம் மாநாடு 1945, ஏப்ரல் 25 முதல் ஜூன் 26 வரை இரண்டு மாதங்கள் நடந்தது. உலக நீதிமன்றச் சட்டத்தை உள்ளடக்கிய ஐ நா. வின் சாசனம் 1945, அக்டோபர் 24 ஆம் தேதி முதல் செயலுக்கு வந்தது.

### ஐ. நா. அமைப்பின் நோக்கங்கள்

ஐ. நா. வின் சாசனத் தோற்றுவாய் (Preamble to the Charter) அதன் நோக்கங்களை வெளிப்படுத்துகிறது. அவைக ளாவன:

1. வருங்கால மனிதத் தலைமுறைகளை போரின் கொடுமை யிலிருந்து காப்பது.

2. மனிதன் பயன்பாடுகள், கண்ணியம், மனிதனின் அடிப்படை வாழ்வுரிமைகள் ஆகியவற்றை மேலும் உறுதிப் படுத்தல்.

3. நாடுகள் பெரிதாயினும் சிறிதாயினும் அவற்றிடை யேயும், ஆடவர், மகளிர் இவர்களிடையேயும் சமவுரிமைகளை மேலும் உறுதிப்படுத்தல்.

4. நாட்டிடைச் சட்டம், கடப்பாடுகள் ஆகியவற்றை நாடுகள் மதித்து நடப்பதற்குண்டான சூழ்நிலைகளைத் தோற்று விப்பது.

5. விடுதலைப்பாடுகளின் மேன்மைக்காகவும், மனித வாழ்வின் தரத்தை உயர்த்தவும், சமுதாய நிலையில் முன் னேற்றம் காணவும் பாடுபடுதல்.

6. அனைத்துலகில் அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நிறுத்தத் தேவையான வலிவைத் திரட்டுவது.

7. பொது நன்மைக்காகவன்றி மற்றக் காரணங்களுக்காக ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது.

8. மக்களின் பொருளாதார, சமுதாயத் துறைகளில் வளர்ச்சியும், முன்னேற்றமும் காண்பதற்காக அனைத்துலக அமைப்புக்களைப் பயன்படுத்தியது.

ஐ. நா. சாசனத் தோற்றுவாய், இந் நோக்கங்களை இரு வகையில் நிறைவேற்ற வழி வகுத்துள்ளது. அதாவது அனைத்துலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நிறுத்த இரு வழிகளைக் கூறியுள்ளது. முதலாவதாக, நாடுகள் ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல். இரண்டாவதாக, அனைத்துலக அமைதியை நிலை நிறுத்துவதற்குத் தேவையான சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பது.

இவையன்றி மேலும் சில நோக்கங்களையும், கொள்கைகளையும் கூறலாம்.

1. உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நிறுத்தக் கீழ்க்கண்ட முயற்சிகளை எடுத்தல்:

(அ) அமைதிக்கு ஏற்படும் அச்சுறுத்தலைத் தவிர்க்க வலிவு மிக்கக் கூட்டு நடவடிக்கைகளை எடுத்தல் (Effective Collective Measures)

(ஆ) அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் செயல்களையும், ஆக்கிரமிப்புகளையும் அடக்கி ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது நாடுகளிடையே அமைதி கெடும் வகையில் எழும் பூசல்களையும் நிகழ்ச்சிகளையும் நாட்டிடைச் சட்டத்தினடிப்படையிலோ, பொது நீதி நெறிகளின் அடிப்படையிலோ அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான வழி வகைகளைத் தோற்றுவிப்பது.

2 நாடுகளின் சமத்துவம், மக்களின் தன்முடிவுரிமை ஆகிய கொள்கைகளினடிப்படையில் நாடுகளினிடையே நட்புறவை வளர்த்தலும் மற்றும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுதலும்.

3. அனைத்துலக அரங்கில் நிலவும் பொருளாதார, சமூக, கலாச்சார, மனிதாபிமான சிக்கல்களில் தீர்வு காண்பதற்காக அனைத்து நாடுகளின் ஒத்துழைப்பைத் தோற்றுவித்தலும், மனித உரிமைகளையும், விடுதலைப்பாடுகளையும் மதிக்கும் பண்பை வளர்த்தலும், ஏற்றலுமாகும்.

4. இப் பொது நோக்கங்களில் வெற்றி காணவும் அவைகளை நிறைவேற்றவும் நாடுகளின் செயலாக்கங்களை ஒருமைப்படுத்தும் மைய அமைப்பாக ஐ. நா.வை ஏற்றல்.

**ஐ. நா.வின் கொள்கைகள்** (Principles of the U. N.)

(1) ஐ. நா.வின் அமைப்பு, உறுப்பு நாடுகளின் சம கோன்மைக் கொள்கையை அடித்தளமாகக் கொண்டதென்பது.

(2) ஐ.நா. சாசனத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் ஐ.நா.வின் உறுப்பினர் என்ற முறையில் தங்களை என்னென்ன கடப்பாடுகளுக்கு உட்படுத்திக் கொள்கின்றனவோ அவற்றை அந் நாடுகள் தங்கள் மற்றும் மொத்த நாடுகளின் கடமைகளும், உரிமைகளும் பாதிக்கப்படாமலிருக்க நிறைவேற்ற வேண்டும் என்பது.

(3) எல்லா உறுப்பு நாடுகளும் உலக அமைதிக்குப் பழுதேற்படா வண்ணம் தங்கள் சிக்கல்களை அமைதி வழியில் தீர்த்துக் கொள்வது.

(4) ஐ. நா.வின் எந்த ஒரு உறுப்பு நாடும் மற்ற நாடுகளின் எல்லையின் தனித் தன்மையைப் பாதிக்கும் வகையிலோ, ஆயுத நடவடிக்கைகளில் இறங்கவோ, ஐ. நா. வின் கொள்கைகளுக்கு முரணாகவோ இயங்கக் கூடாது என்பதாகும்.

(5) சாசனத்தின் நோக்கங்களைச் செயல்படுத்தும் வகையில் ஐ. நா எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் எல்லாவித ஆதரவும் நல்கவும், ஐ. நா. எந் நாட்டிற்கு எதிராகக் கீழ்ப்படிய வைக்கும் செயல்களில் (Enforcement Action) ஈடுபட்டிருக்கிறதோ அந் நாடுகளுக்கு எவ்வித உதவி செய்வதைத் தவிர்க்கவும் உறுப்பு நாடுகள் கடமைப்பட்டவை என்பது.

(6) உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நிறுத்தத் தேவையான அளவு, ஐ. நா.வின் உறுப்பு நாடுகளல்லாத உலக நாடுகளையும் செயல்பட வைப்பது ஆகும்.

(7) ஐ. நா. சாசனத்தில் சொல்லப்பட்டுள்ள எதுவும், ஐ. நா.விற்கு உறுப்பு நாடுகளின் இன்றியமையாத உள் நாட்டு ஆதிக்கத்திற்குட்பட்ட விவகாரங்களில் (Matters which are essentially within the domestic jurisdiction of any State) தலையிட அனுமதி வழங்குவதாகவோ, அன்றி அத்தகைய விவகாரங்களை ஐ. நா.வின் தீர்வுக்கு விடவேண்டும் என்பதாகவோ ஆகாது.

**உறுப்பினராதல்** (Membership)

ஐ. நா.வின் உறுப்பினர் தன்மை இரு வகைப்பட்டது.

(1) துவக்க உறுப்பினர்கள் (Original Members).

(2) பின்னர் சேர்க்கப்பட்டவர்கள்.

1. துவக்க உறுப்பினர்கள் என்போர், 1945இல் சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்குத் தரப்பு நாடுகளாக இருந்து ஐ.நா.வைத் தோற்றுவிக்கும் பணியில் பங்குகொண்ட நாடுகளும் அல்லது ஐ. நா. சாசனத்தைக் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்ட நாடுகளும் ஆகும்.

ஐ. நா. சாஸனத்தின் 3, 4 பிரிவுகள் துவக்க உறுப்பினர்கள், அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரைப் பிரித்துக் காட்டிய போதிலும் எவ்வித வேறுபாட்டையும் உருவாக்கவில்லை. 4வது பிரிவின்படி அமைதியை விரும்புவதுடன் சாசனத்தில் கூறப்பட்டுள்ள கடப்பாடுகளை ஏற்கும் நாடு எதுவாயினும், அந் நாடு சாசனக் கடப்பாடுகளைச் செயல்படுத்தும் விருப்பமும், ஆற்றலும் உடையதாயின் அதனை உறுப்பு நாடாக ஏற்கலாம். இவ் வகையில் அனுமதிப்பதற்கு 4 (1) பிரிவின்படி பொது மன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களது தீர்மானத்தின் பேரிலும் பாதுகாப்புக் குழுவின் 5 நிலையான உறுப்பினர் உள்ளிட்ட 9 உறுப்பினர்களுடைய பரிந்துரையின் பேரிலும் புது உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

எந் நாடும் தான் ஐ.நா.வில் அனுமதிக்கப்பட்டே தான் ஆக வேண்டும் என்று கோரும் உரிமையற்றது எனினும் ஐ. நா. அனுமதி மறுப்பதில் நல்லெண்ணத்துடன் செயல்பட வேண்டும். புது உறுப்பினர்களை அனுமதிப்பதில் துவக்க காலத்தில் ஏற்பட்ட சிக்கலை யொட்டி உலக நீதி மன்றம் இரு தீர்ப்புக்கள் வழங்கியது.

(1) ஒரு நாட்டை ஐ. நா. உறுப்பினராக அனுமதிப்பதற்குண்டான நிபந்தனைகள் பற்றிய வழக்கு (Conditions of Admission of a State to Membership in the United Nations).

1948இல் உலக நீதிமன்றம் இவ் வழக்கில்—சாசனத்தின் 4 (1) பிரிவில் கண்டுள்ள நிபந்தனைகளைத் தவிர வேறு எந்த

நிபந்தனைகளையும் புது உறுப்பு நாடுகளை அனுமதிப்பதற்குப் பழைய உறுப்பு நாடுகள் விதிக்கக்கூடாது என்று கூறியுள்ளது.

(2) புது உறுப்பினர்களை அனுமதிப்பதில் பொது மன்றத்திற்குரிய தகுதி பற்றிய தீர்ப்பு (Advisory opinion on the Competence of the General Assembly for the admission of a State to the United Nations).

இத் தீர்ப்பில் உலக நீதிமன்றம் பாதுகாப்புக் குழு ஆதரவான பரிந்துரை செய்தாலன்றி பொதுமன்றம் தானாக எந்த நாட்டையும் புது உறுப்பினராக ஏற்க இயலாது என்று கூறியுள்ளது. 1955இல் புது உறுப்பினராக ஏற்பதில் தீர்வு காண இயலாத வகையில் இருந்து வந்த எட்டு நாடுகள் ஒரே சமயத்தில் புது உறுப்பினர் தகுதி பெற்றன.

**விலக்கி வைத்தலும், வெளியேற்றலும்** (Suspension and Expulsion)

ஐ. நா. சாசன 5 வது பிரிவின்படி எந் நாட்டின்மீது, பாதுகாப்புக் குழு (Security Council) கீழ்ப்படிய வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதோ, அந் நாட்டினைப் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரையின்பேரில் ஐ. நா. பொதுமன்றம் விலக்கி வைக்கும் ஆற்றல் பெற்றது. 6வது பிரிவின்படி எந்த உறுப்பு நாடு தொடர்ந்து சாசனக் கொள்கையை மீறி வருகிறதோ அவ் வுறுப்பு நாட்டினைப் பாதுகாப்புக் குழுவின் பரிந்துறையின் பேரில் ஐ.நா. பொது மன்றம் விலக்கி வைக்கும் ஆற்றல் பெற்றது.

**ஐ. நா.வின் அங்க அமைப்புக்கள்**

கீழ்க்கண்ட அமைப்புக்கள் ஐ. நா.வின் முக்கிய அங்கங்களாகும்.

(i) பொது மன்றம் (General Assembly)

(ii) பாதுகாப்புக் குழு (Security Council)

(iii) பொருளாதார, சமூகக் குழு (Economic And Social Council)

(iv) பொறுப்பாண்மைக் குழு (Trusteeship Council)

(v) உலக நீதிமன்றம் (International Court of Justice)

(vi) செயலகம் (The Secretariat)

1. **பொது மன்றம்** (General Assembly)

இம் மன்றம் உறுப்பினர்களனைவரையும் உள்ளடக்கியது. உறுப்பினர்கள் எல்லோரையும் உள்ளடக்கிய ஐ. நா.வின் அங்கம் இது ஒன்றே.

ஒவ்வொரு நாடும் ஐந்து சார்பாளர்களை இம் மன்றத்திற்கு நியமிக்கலாம். எனினும் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்கு மட்டுமே உண்டு. இம் மன்றம் ஆண்டுக்கொருமுறை கூடும். அவசர காரணங்களுக்காகப் பொதுச் செயலாளரோ அல்லது பாதுகாப்புக் குழுவின் வேண்டுகோளின் பேரிலோ அல்லது பொது மன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோரின் வேண்டுகோளின் பேரிலோ கூட்டலாம்.

**பொது மன்றத்தின் ஆற்றலும் பணிகளும்** : இம் மன்றம் குறிப்பாக விவாதம் செய்யும் குழுவாகும். ஐ. நா.வின் பணிகளை யொட்டி இது கருத்து மாற்றங்கள், பேச்சுவார்த்தைகள், மறு பரிசீலனை, மேற்பார்வை, திறனாய்வு இவைகளில் ஈடுபடலாம். சாசன சம்பந்தப்பட்ட விஷயங்களை ஒட்டியோ, ஐ. நா.வின் அங்கங்களைப் பற்றியோ இவை விவாதிக்கலாம். ஆனால், பாதுகாப்புக் குழுவின் பரிசீலனையிலுள்ள எவ் விவகாரம் பற்றியோ, சிக்கலைப் பற்றியோ உறுப்பு நாடுகளுக்குப் பரிந்துரை செய்யும் ஆற்றல் இம் மன்றத்திற்குக் கிடையாது.

**ஆற்றல்** : (1) அனைத்துலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நாட்ட சம்பந்தப்பட்ட கருத்து வாதங்கள் செய்யவும், பரிந்துரை செய்யவுமுண்டான ஆற்றல்.

(2) பொருளாதார சமூகத் துறையில் ஒத்துழைப்பை மேற்பார்வையிடுதலும் இயக்குதலும்.

(3) பொறுப்பாண்மைக் (Trusteeship Council) குழுவின் பணிகளை மேற்பார்வையிடல்.

(4) தன்னுளுகையற்ற நில நாடுகள் பற்றிய செய்திகளை விசாரணை செய்தலும், பரிசீலித்தலும்.

(5) நிதி நிலை அறிக்கை பற்றிய முழு ஆற்றல்.

(6) நாடுகளைப் புது உறுப்பினராக ஏற்றல், விலக்கல், வெளியேற்றல் ஆகிய ஆற்றல்.

(7) சாசனப் பிரிவு 108-109ன் கீழ் சாசனத்தைத் திருத்தும் ஆற்றல்.

(8) மற்ற அங்கங்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

(9) ஐ. நா. பணியைப் பற்றிய அறிக்கைகளைப் பெற்றுப் பரிசீலிப்பது.

(10) உலக நாடுகளின் மாநாட்டு ஏற்பு விதிகளை முறைப்படுத்தி ஏற்பது.

**2. பாதுகாப்புக் குழு** (Security Council)

இக் குழு பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டு தொடர்ந்து இயங்கி வருவது. அதில் ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்பினர்கள் என்று சாசனம் கூறியுள்ளது. அவைகளாவன: சைனு, ரஷ்யா, அமெரிக்கா, ஃபிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவைகள் ஆகும். மற்றப் பத்து உறுப்பினர்களும் நிரந்தரமற்ற உறுப்பினர்கள். இந் நாடுகள் பொது மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் உறுப்பினராயிருக்கும். உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் நாடுகள் உடனடியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவைகளாகும்.

சாசனத்தின் 31வது பிரிவின்படி நிரந்தரமற்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் நிலவுலகின் பல்வேறு வட்டாரப் பகுதிகளும் சார்பு பெறும் வகையில் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுவன்றி எந்த ஒரு பிரச்சினையிலும் பாதிக்கப்பட்ட நாடுகளோ அன்றிப் பாதுகாப்புக் குழு எச் சிக்கலின் காரணமாகவாவது ஏதேனும் ஒரு நாடு பாதிக்கப்படும் என்று கருதினுல் அந் நாடுகளையும் பிரிவு 31–32ன் கீழ்ப் பாதுகாப்புக் குழு நடவடிக்கைகளில் வாக்களிக்கும் உரிமை இல்லாமல் பங்கு கொள்ள அனுமதிக்கலாம்.

**வாக்கு முறை :** சாசனம் 27(2)வது பிரிவின்படி செயல்முறை விவகாரங்களில் (Procedural Matters) ஒன்பது உறுப்பினர் கொண்ட பெரும்பான்மையான அடிப்படையில் முடிவெடுக்கப்படும். அதுவல்லாத மற்ற விவகாரங்களில் 27(3)வது பிரிவின்படி ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட பெரும்பான்மையினடிப்படையில் முடிவெடுத்தபோதும் இவ் வகையில் ஒன்பது பேரைக் கொண்ட பெரும்பான்மையில் நிரந்தர உறுப்பினர்கள் ஐந்து பேரும் கட்டாயமாக ஒருமை வாக்குக் (Concurrence) கொடுத்திருக்க வேண்டும்.

**ஆற்றலும் பணிகளும் :** சாசனத்தின் 24, 26ஆம் பிரிவுகள் பாதுகாப்புக் குழுவின் ஆற்றல்களையும் பணிகளையும் விளக்குகிறது.

அதன்படி பாதுகாப்புக் குழுவின் முக்கியப் பணி உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நிறுத்துவதாகும். இவ் வகையில் பாதுகாப்புக் குழு பொது மன்றத்திலிருந்து வேறுபடுகிறது. அதாவது பாதுகாப்புக் குழு எடுக்கும் முடிவுகள் எல்லாம் அனைத்து உறுப்பு நாடுகளையும் கட்டுப்படுத்த வல்லது. ஆனால் பொது மன்றத்தின் தீர்மானங்கள் அவ்வாறு உறுப்பு நாடுகளைக் கட்டுப்படுத்தா. பாதுகாப்புக் குழுவின் சிறப்பு ஆற்றல்கள் சாசனத்தின் 6, 7, 8, 12ஆம் பகுதிகளில் (Chapters) கூறப்பட்டுள்ளன.

**பாதுகாப்புக் குழுவின் முக்கிய அதிகாரங்கள் :** (1) 'உலக அமைதிக்கு அச்சுறுத்தும் நிலையுள்ளதா?' என ஆய்தல். இவ் வகையில் உலக அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் இழுக்கு ஏற்படும் சூழ்நிலை நிலவுமானால் அதையொட்டி என்ன நடவடிக்கைகள் எடுப்பது என்பதுபற்றிப் பரிந்துரைகள் செய்வது.

(2) நாடுகளின் பூசல்களை அமைதி வழியில் தீர்த்துக் கொள்ள வழி செய்வது.

(3) வட்டார முகவர்களையும் ஒத்துழைப்பு உடன்படிக்கைகளையும் ஏற்படுத்துவது.

(4) பொறுப்பாண்மைக் குழுவின் பணிகளை மேற்பார்வையிடுதலும் கட்டுப்படுத்துதலும்.

(5) புது உறுப்பினர்களை ஏற்றல், விலக்கல், வெளியேற்றல்.

(6) சாசனத் திருத்தங்களைச் செய்தல்.

(7) பொது மன்றத்துடன் கூடி உலக நீதி மன்றத்திற்குப் பதினைந்து நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பது.

**சாசனத் திருத்தம் :** பொது மன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கினரின் தீர்மானத்தின் பேரிலோ அல்லது பாதுகாப்புக் குழுவின் ஒன்பது உறுப்பினர்களின் வேண்டுகோளின் பேரிலோ சாசனத் திருத்தத்திற்காகப் பொது மாநாடு ஒன்றைக் கூட்டி அதன் மூலம் திருத்தத்தை ஏற்பது.

### 3. பொருளாதார சமூகக் குழு (The Economic and Social Council)

இவ் வமைப்பு ஐ. நா. பொது மன்றத்தின் மேற்பார்வையின்கீழ் இயங்குகிறது. இது மனித நன்மைக்காகவும், மனித உரிமைகள் செயல்படுத்தப்படவும், அடிப்படை விடுதலைப்பாடுகள் காக்கப்படவும், மனித வாழ்வின்

தரத்தினை உயர்த்தவும், பொதுவாகப் பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் முன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் உருவாக்கும் பொருட்டு இயங்கி வருகிறது. நாடுகளிடையே அமைதியும் நட்புறவும் நிலவ இத்தகைய செயல் கூறுகள் மிக அவசியம் என்று ஐ.நா. சாசனம் கூறுகின்றது.

இக் குழு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையுடன் கூடிய உறுப்பினர்களை மூன்று ஆண்டுகள் பதவி வகிக்கும் பொருட்டு ஐ. நா.வின் பொது மன்றம் தேர்ந்தெடுக்கின்றது. இக் குழு 27 உறுப்பினர்களைக் கொண்டது.

இக்குழு ஐ.நா.வின் பல்வேறு சிறப்பு அமைப்புக்களிடையே அவற்றின் பணியை யொட்டி ஒத்துழைப்பையும், ஒருங்கிணைந்த செயல் ஆற்றலையும் தோற்றுவிப்பதையே முதன்மையான பணியாகக் கொண்டதாகும்.

இது மட்டுமல்லாமல் இக் குழு பல்வேறுபட்ட பொருளாதார, சமூக, சுகாதார மற்றும் அவற்றோடு இணைந்த ஆய்வுகள் நடத்துவதும் குறிப்பெடுப்பதும் அறிக்கைகள் தயாரிப்பதும் மாநாட்டு ஏற்பு விதிகளுக்கான வரைவுகளை முன்னமைத்துப் பொது மன்றத்திற்கு அனுப்புதலும் இவற்றினை யொட்டிய மாநாடுகளைக் கூட்டுவதும் ஆன பணிகளிலும் ஈடுபடுகிறது. (ஐ.நா. சாசனத்தின் 62-வது பிரிவு). இக் குழுவின் பணிகளை யொட்டிய தீர்மானங்கள் பெரும்பான்மையால் ஏற்கப்படுகிறது. இக் குழு தன் பணியினை 'பிரிவுப் படுத்தி' செயல்படுகிறது. இதற்கென சிறப்புக் குழுக்களையும் அமைத்துள்ளது.

1. **வட்டார பொருளாதாரக் குழு** (Regional Economic Commission)

இக் குழு ஐரோப்பா, ஆசியா, தூரக் கிழக்கு நாடுகள், ஆப்பிரிக்கா ஆகிய வட்டாரங்களுக்குரிய தனிப் பிரச்னைகளுக்கு ஆங்காங்கே உள்ள அதன் கிளைக் குழுக்களின் மூலம் தீர்வு கண்டு வருகிறது.

2. **பணியாற்றும் குழுக்கள்** (Functional Commissions)

இவைகள் மனித உரிமைகள், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, தீங்கான மருந்துகள், மக்கள் தொகை, பெண்களின் நிலைமை இவற்றினைப் பற்றிய பிரச்னைகளைக் கவனித்து வருகின்றன.

4. **பொறுப்பாண்மைக் குழு** (Trusteeship Council)

இக் குழு பொறுப்பாண்மை நிலப் பரப்பினை மேற்பார்வையிடுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது. இக் குழு (1) பொறுப்

பாண்மை நிலப் பரப்பை நிர்வாகம் செய்யும் உறுப்பினர்களையும், (2) அவ்வாறு எந் நிலப் பரப்பையும் நிர்வாகம் செய்யாத பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்களையும், (3) ஐ. நா. பொது மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாகும்.

### 5. உலக நீதிமன்றம் (International Court of Justice)

உலக நாடுகள் மன்றத்தின் (League of Nations) உறுப்பாகப் பணி ஆற்றி வந்த உலக நிலை நீதிமன்றமும் (Permanent Court of International Justice) உலக நாடுகள் மன்றத்தோடு 1946இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்தே 1946, ஏப்ரல் மாதம் 18ஆம் தேதி உலக நீதிமன்றம் (International Court of Justice) ஐ. நா. வின் உறுப்பாகத் தோற்றுவிக்கப்பட்டது.

இந் நீதிமன்றத்திற்குப் பொது மன்றமும் பாதுகாப்புக் குழுவும் சேர்ந்து நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. இது பதினைந்து நீதிபதிகளைக் கொண்டது. மூன்று ஆண்டுக்கொரு முறை ஐந்து நீதிபதிகள் பதவி விலகுவார்கள்.

இந் நீதிமன்றத்திற்கு வழக்குகளை நிர்ணயிக்கும் ஆற்றலும் சில பிரச்னைகள்மீது அறிவுரை, கருத்து வழங்கும் ஆற்றலும் (Contentions and advisory Jurisdiction) உண்டு.

### 6. செயலகம் (Secretariat)

ஐ. நா.வின் செயலகம் பொதுச் செயலாளரையும் தேவையான அளவு பணியாளர்களையும் உள்ளடக்கியது. இதன் பொதுச் செயலாளர் (Secretary General) பாதுகாப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஐ. நா. பொது மன்றத்தால் நியமிக்கப் படுகிறார். அவரே ஐ. நா. நிர்வாகத்தின் உயர் தலைமை அதிகாரி. பொது மன்றம், பாதுகாப்புக் குழு, பொருளாதார சமூகக் குழு, பொறுப்பாண்மைக் குழு இவை எல்லாவற்றிற்குமே இவர்தான் நிர்வாகத் தலைமை அதிகாரி.

ஐ. நா. மன்றத்தின் பணிகள் பற்றிய ஆண்டறிக்கையை இவர் பொது மன்றத்தின் முன் வைப்பார். அத்துடன் அவரது கருத்தில் உலக அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் குந்தகமான செயல் ஏதேனுமிருக்குமானால் அதனையும் பாதுகாப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

## List of Cases Quoted

1. Advisory opinion in the case concerning Reparations for Injuries Suffered in the Service of United Nations
2. West Rand Central Gold Mining Co. V. R
3 Right of Passage Over Indian Territory Case
4 The Paqueta Habana Case
5. Lotus Case
6. North Sea Continental Shelf Case—1969.
7. Chorzow Factory Case or Indemnity Case
8. Franconia Case i.e. R *vs* Keyn—1876.
9. Dolder *vs* Hurting Field 1805.
10. Wolf *vs* Oxtrolmn—1817.
11. Novello *vs* Toogood—1823.
12. De Voutze *vs* Hendricks 1824.
13. Emperore of Austria *vs* Day—1861
14. Cheng-chi-Chang *vs* R.
15. The Zamora Case
16. Martin-c-Renald Case
17 Hobier *vs* Sigh Sandrina French National Rly & Co.
18. Madras *vs* C. G. Meneur 1954 s.c 517.
19. Luther *vs* Sagar -1921 S K B 532.
20. Advisory Opinions Regarding the Legal Consequences for the States of the Continued Presence of South-Africa in South West Africa (Namibia) June 21, 1971 K. J.

21. Duff Development Co *vs* Kelantan Govt.
22. Trial Smelter Arbitration Case - 1931.
23. Corfui Channel Case—1949.
24. Case of Amelia Island—1817.
25. Case of Caroline—1837
26. Adolph Eichmann's Case—1962.
27. Savarkar's Case or France *vs* Great Britain case—1911.
28. Compania Navinava's Congado *vs* S. S. Chriotina—1938
29. Bank of Toranto *vs* Lambe.
30. Carrick *vs* Hancock.
31. Re Pyriacy Jure Gentium.
32. Anglo Iranian Oil Company Case. (Jurisdiction)
33. North American Dredging Co , Case.
34. El Oro Mining Railway Co. Ltd.
35. Youmen's Case.
36. Chattin Claim—1927.
37. Cutting Case.
38. Ambatielos Atbitration Case—1956.
39. Wimbledon Case.
40. Fisheries Case.
41. Behring Sea seal Fisheries Case.
42. Alaska Boundary Arbitration—1903.
43. Frontier Lands Case.
44. The Case of the Temple of Preah Vihar.
45. Raun of Kutch Arbitration Case —1968.
46. North Atlantic Coast Fisheries Arbitration—1818
47. Nottebohm Case—1955.
48. Kahana *vs* Parisi and Austrian State.
49. Stock *vs* Public Trustee—1930
50. Asylum Case—1950 ie. Columbia *vs* Peru.
51. Tourville Case—1879.

52. In Re Castioni—1890.

53. In Re Mennier—1894.

54. R. *vs* Governor of Brixton Prison—1963. Exparte-Krolczypuski—1963.

55. In Re Govt. of India and Mubarack Ali Ahmed—1952.

56. Factor *vs* Lauben Heimer.

57. Mighell *vs* sultan of Johore.

58. Case Concerning the Legal Status of the Eastern Green-Land.

59. Cases Concerning relating to Enforcement of Inter National Awards and Immunity of Legation Buildings.

60. Public Proseutor *vs* Hyelmland and Biong.

61. Ghosh *vs* D' Rozario.

62. In Re Rein hardt.

63. Appaunhamy *vs* Gregory.

64. Case Concerning the Status of South West Africa.

## மேற்கோள் நூற்பட்டியல்

## (Bibliography)


1. De Jure Belle Ac Pacis 1965—Hugo Grotius
2. Commentaries on the Laws of England By Blackstone.
3. சர்வ தேசச் சட்டம்—பேராசிரியர் திரு. பழனிச்சாமி
4. The Federal Republic of Germany, Art. 26.
5. The Netherlands Constitution.
6. The French Constitution.
7. The Indian Constitution.
8. The Federal Constitution of Austria.
9. The Constitution of Italian Republic.
10. The Polish Constitution—1962.
11. Constitutional Law of India—By H. M. Seervai.
12. International law: By S. K. Agarwala.
13. Public International Law Oppenheim.
14. Manual of Public International Law—By Man Sojensen. J. 771--772

## கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| நாட்டிடைச் சட்டம் | — | International Law or Law of Nations |
| அங்கீகரித்தல், ஏற்பு | — | Recognition |
| உள்நாட்டுச் சட்டம் | — | National Law or Municipal Law |
| உலக நபரத்துவம் | — | International Person |
| நடுநிலை நாடு | — | Neutral Nation |
| தற்பேணுதல் | — | Self Preservation |
| இடையீடு | — | Intervention |
| தன்முடிவுரிமை | — | Right of Self-determination |
| புனித நாடு | — | Holy State |
| நாட்டுப் பொறுப்பு | — | International Responsibility of a State |
| அயலார் | — | Foreigner |
| அடைக்கலம் | — | Asylum |
| தூதியல் | — | Diplomacy |
| அரசியல் தூதுவர் | — | Ambassadors |
| வாணிபத் தூதுவர் | — | Consuls |
| உடன்படிக்கை | — | Treaties |
| உலக நாடுகள் மன்றம், உலக அமைப்பு | — | International Organisation |
| பகுதி | — | Chapter |
| ஆட்சித் தலைமை | — | Head of the Nation |
| ஐக்கிய நாடுகள் அமைப்பு | — | United Nations Organisation |
| வட்டார நாட்டிடைச் சட்டம் | — | Regional International Law |
| அதிக நாடுகள் பின்பற்றும் விதிகள் | — | Body of Rules |
| பொது நாட்டிடைச் சட்டம் | — | General International Law |
| இயற்றிய சட்டம் | — | Enacted Law |
| ஒழுக்க நெறி விதி | — | Moral rules |
| தற்காப்பு | — | Self defence |

| | | |
|---|---|---|
| உலக நாடுகள் மன்றம் | — | League of Nations |
| கோன்மை } தன்மை<br>மேலாண்மை | — | Sovereignty |
| நாட்டிடைச் சட்டத்தின் அடித்தளம் | — | Basis of International Law |
| பொதுவான உடன்பாடு | — | Common Consent |
| வழக்காறுகள் | — | Usages |
| நாட்டிடை நடப்பு | — | International Conduct of a State |
| இயற்கைச் சட்டம் பற்றி எழுதுவோர் | — | Writers on Law of nature |
| பல நாட்டு ஏற்பு விதி | — | International Conventions |
| வழக்கத்தால் நிலைபெற்ற விதி | — | Customary Laws |
| ஆலோசனைக் கருத்து | — | Advisory Opinion |
| தீர்ப்பாயம் | — | Courts |
| உலக அஞ்சல் ஒன்றியம் | — | Universal Postal Union |
| நாட்டிடைச் சட்ட மூலங்கள் | — | Sources of International Law |
| உலக நாடுகளின் மைய மேல் அரசு | — | Central world Government |
| வழக்கம் | — | Custom |
| இசைவுத் தீர்ப்பாயங்கள் | — | Arbitral Tribunals |
| சட்ட வல்லுநர் ஆராய்ச்சிக் கருத்துக்கள் | — | Juristic works |
| தீர்மானம்—தீர்ப்பு | — | Judicial Decisions |
| உறுதிக் கருத்துக்கள் | — | Determinations |
| நாட்டிடை அமைப்புக்களின் உறுப்புகள் | — | Organs of International Institutions |
| உலக நீதிமன்ற அமைப்புச் சட்டம் | — | Statute of International Court of Justice |
| உலக நாட்டிடை உடன் படிக்கைகள் | — | International Treaties |
| நாடுகளுக்கிடையே சட்டத்தின் தன்மைபெற்றதற்கு சான்ருகச் சொல்லத்தக்க உலக வழக்கங்கள் | — | International Custom as evidence of a General Practice accepted as Law |
| பொதுவான சட்ட நெறிக் கொள்கைகள் | — | The General Principles of Law |
| நாகரீகமடைந்த அரசியல் அமைப்புடன் விளங்கும் நாடுகள் | — | Civilised Nations |

| | | |
|---|---|---|
| வெளிப்படை ஒப்புதல் | — | Express consent |
| உட்கிடை ஒப்புதல் | — | Implied consent |
| சட்டங்களை உருவாக்கும் உடன்படிக்கைகள் | — | Law making Treaties |
| ஜெர்மன் கூட்டுறவு அரசு | — | German Federal Republic |
| கடப்பாடு ஒப்பந்த உடன்படிக்கை | — | Treaty contracts |
| மறு தீர்ப்புத் தடைக் கொள்கை | — | Res Judicata |
| மாற்றமர் அடைமான உரிமைக் கொள்கை | — | Principle of subrogation |
| இங்கிலாந்து நாட்டுப் பொது நெறிக் கொள்கை | — | Common Law |
| நீதிப் பேராயம் | — | Highest Forum |
| நாட்டிடைச் சட்ட வழக்கறிஞர் | — | International Lawyer |
| நாட்டிடைத் தீர்ப்பாயங்கள் | — | International Tribunals |
| சிந்தனைப் பிரிவினர் | — | School of thought |
| இரு பொருள் வாதத்தினர் | — | Dualists |
| ஒரு பொருள் வாதத்தினர் | — | Morists |
| நாட்டுச் சட்டம் | — | State Law |
| உட்பொருள்—குடிகள் | — | Subject |
| ஆதாரப் பொருள்கள் | — | Basic Subject |
| செயல்படுத்த ஆற்றல் வழங்கும் சட்டம், செயலுருச் சட்டம் | — | Enabling Act |
| மன்னர் வழக்குக்கான நீதி மன்றம் | — | Court for Crown Cases |
| பொதுநெறி நீதிமன்றம் | — | Common Law Courts |
| இணைப்பு விதி | — | Doctrine of Incorporation |
| கடல் திரை நீதி ஆயங்கள் | — | Prize Courts |
| தன்னியக்க உடன்படிக்கை | — | Self Executing treaties |
| தன்னியக்கமற்ற உடன்படிக்கை | — | Non self executing treaties |
| உள்நாட்டுச் சட்ட மூலம் | — | Source of Municipal Law |
| குடியுரிமைச் சட்டம் | — | The Citizenship Act |
| இந்திய மீட்டொப்படைப்புச் சட்டம் 1962 | — | The Indian Rehabilitation Act |
| நாட்டிடைச் சட்டத் திருத்தம் | | Revision of International Law |
| உலகச் சட்டம் | — | International Legislation |
| பொருள் விற்பனைச் சட்டம் | — | Sale of goods Act |

| | |
|---|---|
| நாட்டிடை வழக்கு அமைதி உடன்படிக்கை ஏற்பு விதி முறைத் தொகுப்பு | Convention for the Pacific settlement of International disputes |
| களப் போர் | Land Warfare |
| உலக நிலை இசைவுத் தீர்ப்புக் குழு | Permanent Court of Arbitration |
| உலக நாடுகள் மன்ற சாசனம் | Covenant of League of Nations |
| நாடுகளிடை நிலை நீதிமன்றச் சட்டம் | Charter of the permanent Court of Internatioal Justice |
| உலக நாடுகள் செயற்குழு | Council of League |
| நாட்டிணையுறவு | Nationality |
| எல்லையோரக் கடல் | Territorial Sea |
| தூதுக் குழுவினர்க்குச் சலுகைகளும் தனிச் சலுகைகளும் | Diplomatic Immunities and Privileges |
| கடற் கொள்ளையர் | Pyrates |
| கடற் கொள்ளை | Pyracy |
| உலக நாடுகளின் பேரவை | Assembly of League of Nations |
| தேசிய இணையுரிமை | Nationality |
| நாடற்ற தன்மை | Statelessness |
| ஏற்பு விதிகள் | Conventions |
| மூச்சுத் திணற வைக்கும் தன்மையுள்ள நச்சு வாயு | Asphixiating gas |
| கண்டத் திட்டு | Continental Shelf |
| பரவலாக வழங்கப்படும் தன்மை | Wide Application |
| பொது மன்றம் | General Assembly |
| பொது ஒப்புதல் | Common Consent |
| நாட்டமைப்பு | Statehood |
| உலக அரங்கு நபர் | International Person |
| பொருண்மை | Fact |
| போரிடும் நாடு | Belligerent Countries |
| நிகழ்வு நிலை அங்கீகாரம் | De facto Recognition |
| இழப்பீடு | Compensation |
| பொருளாதாரக் கடைமைகள் | Financial obligation |
| பாதிக்கப்படாத தன்மை | Exterritoriality |
| போர் நிலையை அங்கீகரித்தல் | Recognition of Belligerency |
| ஆட்சிக்கெதிரான கலகத்தை அங்கீகரித்தல் | Recognition of Insurgency |
| வான் கொள்ளை | Sky Jacking |

| | | |
|---|---|---|
| ஒழுங்குபடுத்து | — | Regulate |
| கடந்த காலத்திருந்தே செயலுக்கு வரும் அங்கீகாரம் | | Recognition with Retrospective Effect |
| சட்டப்படி அங்கீகரித்தல் | — | Dejure Recognition |
| நாட்டுச் செயலாளர் | — | Secretary of State |
| உரிமை கடமை பற்றிய விழைவு அறிக்கை | — | Draft declaration of Rights & Duties |
| முழு வாரிசு உரிமை | — | Universal Succession |
| பகுதி வாரிசு உரிமை | — | Partial succession |
| அரசியல் உரிமைகளும் கடமைகளும் | — | Political Rights and Duties |
| உள் நாட்டு உரிமைகளும் கடமைகளும் | — | Local rights and duties |
| சொத்துக்களும் கடன்களும் | — | Fiscal Properties and debts |
| வாணிப ஒப்பந்தங்கள் | — | Treaty Contracts |
| சலுகை ஒப்பந்தம் | — | Concessionary Contracts |
| குற்றங்கட்கு அறுதியிடாத இழப்பீடு | — | Unliquidated damages for torts and delicts |
| ஒப்பந்த மீறுதல் | — | Breach of Contract |
| தனிக்கோன்மை நாடு | — | Single Sovereign State |
| இணையாட்சி நாடுகள் | — | Federal States |
| தன்னிணைப்பு நாடுகள் | — | Personal Unions |
| கூட்டரசு நாடுகள் | — | Confederate States |
| இயல் இணைப்பு | — | Real Union |
| இணையமைப்பு | — | Union |
| நாடுகளின் கூட்டரசு | — | Confederation |
| தன்னாட்சி பெற்ற மாநிலம் | — | Autonomous State |
| இணையாட்சி, இணைப்பாட்சி | — | Federation |
| ஒருங்காட்சி | — | Condominium |
| இணைக் கோன்மை | — | Joint Sovereignty |
| இணை நிர்வாகம் | — | Joint Administration |
| அடிமை நாடுகள் | — | Vassal States |
| காப்பு நாடுகள் | — | Protectorates |
| மேலாண்மை | — | Suzerainty |
| பொதுநல நாடுகள் | — | Commonwealth Members |
| பொறுப்பு அரசாங்கம் கொண்ட தன்னாட்சி நாடுகள் | — | Dominions |
| ஐரோப்பியப் பொருளாதாரக் குழு | — | European Economic Community |

| | | |
|---|---|---|
| நடுநிலையாக்கப்பட்ட நாடுகள் | — | Neutralised States |
| நடுநிலையாக்கப்படுதல் | — | Neutralisation |
| நடுநிலை | — | Neutrality |
| புனித நாடு | — | Holy State |
| போப்பாண்டவர் | — | Papal State |
| மதத் தலைவர் | — | Spiritual Head |
| அரசியல் தலைவர் | — | Temporal Head |
| உறுதிச் சட்டம் | — | Law of Guarantee |
| சிறப்பமைப்பு—ஐ.நா.வின் சிறப்பமைப்பு | — | Specialised Agency |
| உலக நபரத்துவம் | — | International personality |
| நிலைத்து வாழும் உரிமை | — | Right to existence |
| தற்பேணும் உரிமை | — | Right to self preservation |
| சமத்துவம் | — | Equality |
| தனித்தியங்கும் தன்மை | — | Independence |
| எல்லைகளில் தனிமேன்மைத் தன்மை | — | Territorial Supremacy |
| கோன்மை பெற்ற நாடுகள் ஒவ்வொன்றும் ஒன்றின் ஆதிக்கத்திற்கு மற்றொன்று உட்பட்டதல்ல | — | Par in Pareum Non Habet Imperium |
| வல்லரசுகள் | — | Great powers |
| சிற்றரசு | — | Tiny States |
| மேன்மைத் தன்மை | — | Superiority |
| முதன்மை | — | Primacy |
| பாதுகாப்புக் குழு | — | Security Council |
| செயன்முறை விவகாரம் | — | Procedural Matters |
| இழப்பீடு | — | Damages |
| முற்றுகை | — | Expedition |
| படையெடுப்பு | — | Invasion |
| ஆதிக்க இடையீடு | — | Dictatorial Intervention |
| உரிமைத் தலையீடு | — | Intervention by rights |
| ஒரு நாடு மற்ற நாட்டுப் பிணக்கைத் தீர்க்க ஒத்துழைப்பு நல்க முன் வருதல் | — | Extending Co-operation to reconcile |
| புறத் தன்னியக்க சுதந்திரம் | — | External Independence |
| மேலாண்மைத் தன்மை | — | Supremacy |
| காப்பாட்சி | — | Protectorale |

| | |
|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் சாசனம் | Charter of United Nations |
| அரசுகளின் வலிமைச் சமனுக்கும் பொருட்டு | In the Interest of the Balance of Powers |
| புனித ஒப்பந்தம் | Holy Alliance |
| மன்றோ கொள்கை | Monroe Doctrine |
| விழைவு அறிவிப்பு | Declaration |
| தனிச் சார்பான | Unilateral |
| இருநாட்டுச் சார்பான | Bilateral |
| தன்தேர்வுரிமை | Freedom of Choice |
| சார்பு நிறுவனங்கள் | Dependent entities |
| தனிமேலாண்மை | Independent Sovereign |
| இயற்கைக் கோட்பாளர் | Naturalists |
| தனித்தியங்கும் தன்மை | Independent |
| உள்ளாட்சி நடவடிக்கைகள் | Domestic affairs |
| அயலார் | Aliens |
| ஆள் நில ஆதிக்கம் | Territorial Jurisdiction |
| குடிமைச் செயல்கள் | Civil acts |
| குற்றச் செயல்கள் | Criminal acts |
| எல்லையோரக் கடல் நீர்ப் பகுதி ஆதிக்கச் சட்டம் | Territorial Waters Jurisdiction Act—1828 |
| துறைமுகம் | Ports |
| வெளிநெடுங்கடல் | Open high seas |
| ஆழ் (அ) நெடுங்கடல் விடுதலைக் கொள்கை | Freedom of high seas |
| துரத்திப் பிடித்தல் | Hot pursuit |
| உலக ஆதிக்கக் கொள்கை | Principles of Universal Jurisdiction |
| உலகெதிர்த் தீங்கு | Delict Jure Gentium |
| மனித இனத்திற்கெதிரான குற்றம் | Genocide |
| போர்க் குற்றம் | War crimes |
| பணிக் குழுவினர் | Crew |
| அரசப் பேரவை | Privy Council |
| விமானக்கடத்தல் கொள்ளை | Hijacking |
| உள் நாட்டுக் கடற்கொள்ளை | Piracy in Municipal Law |
| தூதுப் பரிவர்த்தனை | Diplomatic negotiation |
| தீரடைவு | Satisfaction |
| பணத்தில் | Pecuniary |
| ஒப்பந்தக் கடப்பாடுகள் | Contractral Obligations |

| | | |
|---|---|---|
| இணைப்பாட்சி நாடு | — | Federal State |
| காப்பு உடன்படிக்கை | — | Treaty of protection |
| உடன்படிக்கை சட்டப் பிணைப்புகள் | — | Treaty obligations |
| எடுத்துக் கொள்ளப்பட்ட சொத்து, ஈட்டுச் சொத்து | — | Acquired property |
| வேற்றுமை காட்டாமல் | — | Non discriminatory |
| நியாயமான | — | Just |
| ஆக்க பூர்வமான இழப்பீடு | — | Effective compensation |
| நாட்டிடை இசைவுத் தீர்ப்பாயம் | — | International arbitral tribunal |
| கடன்கள் | — | Debts |
| தொடர் பிணை | — | Corollary |
| அனைத்துலகுத் தீங்கு, நாட்டிடைத் தீங்கு | — | International Delinquencies |
| கருதும் கொள்கை | — | Doctrine of imputability |
| கோருரிமை | — | Claim |
| குற்ற அவதூறு | — | Criminal Libel |
| கோரராளர் | — | Claiment |
| உள்நாட்டுக் கழுவாய் இழப்புக் கொள்கை | — | Doctrine of exaustion of Local remedies |
| பொதுக் கோருரிமைக் குழு | — | General Claims Commission |
| உள்நாட்டுக் கழுவாய் | — | Local remedies |
| ஆள்நிலம் | — | State territory |
| குடிமைச் சட்டம் | — | Civil Laws |
| தந்தைமைக் கருத்துகள் | — | Patrimonial rotions |
| குடும்பச் சட்டங்கள் | — | Family Laws |
| ஒரு நாட்டுக் குடிமகன் பிற நாட்டு ஆதிக்கத்திற்குத் தன்னை உட்படுத்தி ஒப்பந்தங் கொள்ளல் | — | Quid Quid este in territories est estiam de territoria and Rin in terrono meo est estiam mens subditus est |
| எந்நாட்டுக்கும் உட்படாத இயற்கைப் பகுதி | — | Res nullius |
| தனியார் உரிமைச் சட்டம் | — | Law relating to private rights |
| பிரிதல், பிரிவினை | — | Cession |
| ஆளுகைக்கு உட்படுத்தல் | — | Occupation |
| நிலப்பெருக்கம் | — | Accretion |
| அடிமைப்படுத்தல், வயப்படுத்தல் | — | Subjugation |
| நெடுங்கால அனுபோக உரிமை(அ) நீண்ட அனுபோக உரிமை வழி நிலம் சேர்த்தல் | — | Prescription |

| | | |
|---|---|---|
| அடியொற்றிய | — | Derivative |
| தன்வகை | — | Original mode |
| ஆள்நில ஆதிக்கம் | — | Territorial Sovereignty |
| இணைத்தல் | — | Annexation |
| படை மூலம் வெற்றி பெறுதல் | — | Conquerring |
| உறுதியான நிர்வாகம் | — | Effective Control |
| நாட்டிமை ஆறுகள், நாட்டு ஆறுகள் | — | National rivers |
| நாட்டிடை ஆறுகள் | — | International rivers |
| கழிவாய் | — | Mouth |
| எல்லை ஆறுகள் | — | Boundary rivers |
| நாட்டிமை அல்லாத ஆறுகள் | — | Non National rivers |
| நாட்டிடை நீர்வழி உரிமை | | International Right to Navigation |
| பயனுரிமை ஒதுக்கம் | — | Cabotage |
| ஆற்றோர நாடுகள் | — | Riparian state |
| கால்வாய் | — | Canal |
| கடலிடைக் கால்வாய் | — | Inter Oceanic Canals |
| செங்கடல் | — | Red Sea |
| மத்தியதரைக் கடல் | — | Mediterranean Sea |
| அறிக்கை | — | Declaration |
| உலக நிலை நீதிமன்றம் | — | Permanent Court of International Justice |
| கடல் இடுக்குகள் | — | Straits |
| கடலோர நாடுகள், கரை நாடு | — | Littoral States |
| தீங்கற்ற வழி உரிமை | — | Right of Innocent passage |
| போர்க் கப்பல்கள் | — | Men of war |
| விரிகுடாக்கள் | — | Bays |
| வளைகுடாக்கள் | — | Gulfs |
| ஆள்நில நீர்ப் பகுதி | — | Territorial waters |
| எல்லையோரக் கடல் | — | Territorial Sea |
| ஆழ்கடல் | — | High Seas |
| கரையோரக் கடல் கச்சை, எல்லையோரக் கடல் கச்சை | — | Territorial Maritime Belt |
| ஆளுகை அதிகார வரம்பு | — | Jurisdiction |
| எல்லையோரக் கடல் கச்சை | — | Territorial Waters belt |
| எல்லைக் கடல் கச்சையின் அகலம் | — | Width of the territorial waters belt |
| வணிகக் கப்பலினர் | — | Merchantmen |

| | |
|---|---|
| நீரடி நிலப் பரப்பு — | Subsoil of the Maritime belt |
| கரையொட்டிய கடல் — | Contiguous zone |
| திறந்த ஆழ்கடல் — | Open high seas |
| கடலின் அடிமணல் தளம் — | Sea bed |
| கடலடிக் குழாயமைப்பு — | Submarine pipelines |
| கடலடி கீழ் மண் தளம் — | Sub soil |
| தூற்றுதல் — | Proclamation |
| கடலடி செய்திப் போக்கு வரத்துக் கம்பி இணைப்புகள் — | Submarine Cables |
| ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்குமிடையே கரையிலிருந்து சமதூரம் — | Medium line |
| நாட்டின் எல்லை — | Boundary |
| எல்லை ஒப்பந்தங்கள் — | Boundary treaties |
| இசைவுத் தீர்வு — | Arbitral awards |
| வசதியுரிமை — | Servitudes |
| மன்று சுட்டிய உரிமை — | Rights in Rem |
| செயலாக்க வசதியுரிமை — | Affirmative achieve or Positive Servitudes |
| மறுதலை வசதியுரிமை — | Negative Servitudes |
| இராணுவ வசதியுரிமை — | Military Servitudes |
| பொருளாதார வசதியுரிமை | Economic Servitudes |
| வான்மண்டலம் — | Air space |
| கோனுற்றல் — | Sovereignty |
| திறந்த வான்மண்டலம் — | Open air space |
| நிலநாடு — | Subjecent state |
| தரப்பு — | Party |
| வானவூர்தி — | Air crafts |
| பதிவு — | Register |
| நாட்டவன் — | National |
| தீங்கிலா வழியுரிமை — | Freedom of Innocent passage |
| வணிக வான்பணி பற்றிய ஏற்பு விதிகள் — | Convention on Commercial Air Navigation |
| ஐந்து வான் மண்டல உரிமைகள் — | Five freedoms of Air |
| வான் பயணுரிமை ஒதுக்கம் — | Air Cabotage |
| வானொலி பரப்பு — | Radio Broadcasting |
| வான் மேன்மண்டலம் — | Upper State of the admosphere |
| விண்வெளி — | Outer Space |
| ஏவுகணைகள் — | Rockets |

| | |
|---|---|
| கோள்கள் | Planets |
| மண்ணடி விதி | Jus Soli |
| குருதியுறவு விதி | Jus Sanguinis |
| ராணுவக் கடப்பாடுகள் | Military obligations |
| இரு நாட்டுரிமை | Double Nationality |
| தற்காலிக ஏற்பு விதி | Special protocal |
| மீட்டொப்படை | extradite |
| வயமைப்படுத்தல் | Subjugation |
| விடுத்தல் | Release |
| புறக்கணித்தல்-விட்டுவிடுதல் | Renunciation |
| பறித்தல் | Deprivation |
| தொடர்ந்து வாழ்பவர் | Contiouous Resident |
| நாடின்மை, நாடற்ற தன்மை | Statelessness |
| அனைத்துலக மனித உரிமை விளைவு அறிவிப்பு | Universal declaration of Human Rights 1948 |
| தொகுப்பு மாநாடு | Codification Conference |
| பொருளாதார நடத்துகை | Fiscal Treatment |
| வாழ்வில்லம் | Domicile |
| அடைக்கலம் | Asylum |
| வட்டார நாட்டிடைச் சட்ட வழக்கம் | Regional International Law in Practice |
| மீட்டொப்படைத்தல் | Extradition |
| முறைமைகள் | Formalities |
| அரசை எதிர்த்த குற்றம் | Treason |
| அரசியல் குற்றம் | Political crimes |
| அரசியின் நீதிமன்றப் பிரிவு | Queen's Bench |
| ஆளைக் கொணர்விக்கும் நீதிப் பேராணை மனு | Writ of Habescorpus |
| தான்தோன்றி வாதி | Anarchist |
| பொய் ஆவணம் புனைதல் | Forgery |
| மோசடி | Fraud |
| இருதலைக் குற்ற விதி | Double Criminality |
| மனித உரிமை | Human rights |
| அடிப்படை விடுதலை உரிமைகள் | Fundamental freedoms |
| உரிமை மூலத் தொகுப்பு | Bill of rights |
| மக்களின் பொதுவான கருத்து | Public Opinion |
| நாட்டிடை உறவுக்கு உகந்த உறுப்புகள் | Organs of the State for their International relations |

| | | |
|---|---|---|
| அயல் செயல் (அ) விவகார அலுவலகங்கள் | -- | Foreign offices |
| செயற்குழு | -- | Council of Executives |
| மக்கள் தலைவர் | — | President |
| குற்ற ஆளுகை வரம்பு | - | Criminal Jurisdiction |
| சம மன்னர் (அ) அரசதலைவர்கள் ஒருவர்மீதொருவர் ஆதிக்கமற்றவர்கள் | --- | par in pareum non habet Imperium |
| ஆளுகைக்கு அப்பாற்பட்ட தன்மை | — | Exterritoriality of Sovereign |
| மழலை மன்னர் | --- | Infant kings |
| இயலா மன்னர் | - | Invalid kings |
| இணை நாடுகள் மக்கள் தலைவர் | -- | President of United States |
| இடைப்பாடு நடவடிக்கைகள் | — | Transactions |
| மேதகு | --- | Excellancy |
| நிர்வாக ஆளுகை | — | Administrative Jurisdiction |
| தூதுவர் ஆவணப் பேழை | — | Diplomatic pouches |
| தூதுமைத் தகுதி | --- | Diplomatic rank |
| விட்டுக் கொடுக்கும் உரிமை | --- | Waiver |
| விரும்பப்படாத தூதுவர் | -- | Persona non grata |
| சட்டமியற்றும் உடன்படிக்கைகள் | -- | Law making treaties |
| உலக சட்டம் | -- | International Legislation |
| நாட்டு அமைப்பு | --- | State organs |
| தோற்றுவாய் | --- | Preamble |
| கட்டுப்பாட்டு உடன்படிக்கை | --- | Contractual Treaties |
| அரசுகளுக்கிடையே ஏற்படும் ஒப்பந்தம் | -- | Inter Governmental Forum |
| துறைகளுக்கிடையேஏற்படும் ஒப்பந்தம் | — | Inter departmental Agreement |
| நாடுகளுக்கிடையே உள்ள ஒப்பந்தம் | - | Inter State treaty |
| உலக உடல் நலக் கழகம் | — | World Health Organization |
| துணை ஏற்பு விதிகள் | — | Protocol |
| ஏற்பாடுகள் | — | Arrangements |
| நடப்புக் குறிப்புகள் | — | Process verbal |
| அமைப்புச் சட்டங்கள் | — | Statute |
| செயல்வகைக் குறிப்பு | — | Modes vivendi |
| குறிப்பு மாற்றங்கள் | --- | Exchange of notes |
| இறுதிச் செயல் | — | Final act |

| | | |
|---|---|---|
| அனுப்பாளர் | — | Delegates |
| கையெழுத்திடல் | — | Signing |
| ஏற்பு உறுதி | — | Ratification |
| ஏற்றல் (அ) இணைதல் | — | Accession or Adhesion |
| பதிவு செய்தல் | — | Registration |
| வெளியிடுதல் | — | Publication |
| பொருத்துதல் | — | Application |
| நிறைவேற்றல் | — | Enforcement |
| காப்பு ஒதுக்கம் | — | Reservations |
| சான்ரேர் அவை | — | Senate |
| உடன்படிக்கைகளின் மறு ஆய்வு | — | Revision of Treaties |
| இயலாமை (அ) ஆற்றலின்மை | — | Incapacity |
| வலிமை காட்டல் | — | Coercion |
| காலாவதி அடைதல் | — | Termination |
| இலக்கண ரீதியான பொருள் விளக்கம் | — | Grammatical Interpretation |
| உலகத்துவம் | — | Universality or Universalism or internationalism |
| அமெரிக்கச் சட்டப் பேரவை | — | Congress |
| உட்கோள் | — | Point |
| துவக்கஉறுப்பினரல்லாதவர் | — | Non original members |
| உலகத் தொழிலாளர் அமைப்பு | — | International Labour Organisation |
| உலக அமைப்பு | — | International Organisation |
| பல தரப்பினர் உடன்படிக்கை | — | Multilateral treaty |
| உலக அமைப்புகளின் அங்கங்கள் | — | Organs of International Organisation |
| செயற்குழு | — | Executive |
| சட்டமியற்றும் பேரவை | — | Legislative organ, Assembly |
| நீதிமன்றங்கள் | — | Judiciary |
| மேலதிகார நாடு | — | Super State |
| அரசியல் அமைப்புச் சட்டம் | — | constitution |
| துவக்க கால உறுப்பினர் | — | Original members |
| வட்டாரச் செயலகங்கள் | — | Regional Secretariat |
| செயன் முறை விதிகள் | — | Procedural Rules |
| நிதி அறிக்கை | — | Budget |
| உலகப் பொதுக் கூட்டாட்சி | — | World Federation |

| | | |
|---|---|---|
| வலிவு மிக்க கூட்டு நடவடிக்கை | — | Effective Collective measures |
| கீழ்ப்படிய வைக்கும் செயல் | — | Enforcement Action |
| உள் நாட்டு ஆதிக்கத்திற் குட்பட்ட விவகாரங்கள் | — | Matters within the domestic Jurisdiction |
| உறுப்பினராதல் | — | Membership |
| அனுமதிப்பதற்குண்டான நிபந்தனைகள் | — | Conditions of admission |
| தகுதி | — | Competence |
| விலக்கி வைத்தல் | — | Suspension |
| வெளியேற்றல் | — | Expulsion |
| பாதுகாப்புக் குழு | — | Security Council |
| பொருளாதார சமூகக் குழு | — | Economic and Social Council |
| பொறுப்பாண்மைக் குழு | — | Trusteeship Council |
| செயலகம் | — | Secretariat |
| ஒருமை வாக்கு | — | Concurrence |
| வட்டார பொருளாதாரக் குழு | — | Regional Economie Commission |
| பணியாற்றும் குழுக்கள் | — | Functional Commissions |
| அறிவுரையும் கருத்துரையும் வழங்கும் அதிகாரம் | — | Contentions and advisory Jurisdiction |